வெளியீடு: 27-08-2008 Issued: 27-08-2008

1555
25-3-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 8, 2008—தொகுதி 46—எண் 1**

**Tuesday, the 8th April, 2008—Volume 46—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...lative Assembly Secretariat, Chennai-600 009

D
V211, 31 P08
P08·46·1.
228405

[Price Rs. 3.00

**8–4–2008**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1, 2-45

2. **முக்கியப் பிரச்சினையை வினாக்கள்–விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்** 1, 2, 3, 4, 5, 6, 9-10

3. **தகவல் கோரல்—**

(அ) திருவட்டாறு தொகுதி, குலசேகரம் பகுதி, இடி, மின்னல் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் 45-46

திருமதி ரா. லீமா றோஸ் 45-46

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 46

(ஆ) பேரவையில் ஏற்பட்ட மின் தடை 46

திரு. சி. ஞானசேகரன் 46

பக்கங்கள்

**4. கவன ஈர்ப்பு—**

உடுமலைப்பேட்டையிலிருந்து கேரளா செல்லும் சாலையில் தனி ரோடு இரயில்வே மேம்பாலத்தை விரைவில் கட்டி முடிக்கக் கோருதல் 47

*மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் 47

**5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) — 48-182

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி 48,85,92,107, 109, 171-181

*மாண்புமிகு திரு. எ.வ. வேலு 65,86,90-91, 104-106, 108-109,115, 118,121-122, 125,141-170, 180

*திரு. எஸ். ஜாண் ஜேக்கப் 86-89, 91-96

திரு. எம். பன்னீர்செல்வம் 96-103

*திரு. வீ.ஏ.டி. கலியவரதன் 103-104,106, 107-108, 110-114





பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—**

(அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) —தொடர்ச்

திருமதி ஜி. லதா 114-115, 116-117, 118-119, 120-121,12

*திரு. எஸ். இராசசேகரன் 123-124, 125-12

திரு. இரா. மாணிக்கம் 128-13

*திரு. விடியல் எஸ். சேகர் 133-14

**6. அறிவிப்பு—**

பேரவை அலுவலில் மாற்றம் 18

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 183-18

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228405
சென்னை-600 008
நூலகம்

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றுப் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை கரும்புத் தீர்வை, கரும் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசன உள்ளிட்ட பாசனம், செயற்திட்ட பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்க

**8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உய கல்வி, மின்னணுவியல், அறிவிய தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்று கனிமங்கள்



**. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**0. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** - **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** - **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| **18. Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| **19. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| **20. Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| **21. Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| **23. Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| **24. Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| **25. Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| **26. Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| **27. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| **28. Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **29. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| **30. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| **31. Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் |



| | |
|---|---|
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ். டபிள்யூ., பி.எட்., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்ஃபி.எல்., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இஎஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த-அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்—1 |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. க.சி.க. | - மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்–2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 26

## 2008 ஏப்ரல் 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். (குறுக்கீடு)

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Madam, பேரவை விதி 32–ன்கீழ் கேள்வி–பதிலுக்குத்தான் முதலிடம். அதற்குப் பிறகுதான் மற்றவற்றைப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) விதி 32–லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் ஆரம்பிக்கும்போது முதலில் கேள்வி–பதில்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படி இல்லையென்றால் ஒட்டுமொத்தமாக, unanimous தீர்மானம் வேண்டும். அப்படி இருந்தால்தான் ஒத்திவைக்க முடியும். (குறுக்கீடு) அந்தமாதிரி இல்லை. அப்படி இல்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**61—[illegible] கிணறு**

***6556—திரு. கே.எல். இளவழகன்:**

மாண்புமிகு [illegible] வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, புதுப்பாடி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து கைப்பம்பு அமைத்துத் தரவும், மாம்பாக்கம் கிராமத்திற்கு ஜீவன்தாரா கிணறு அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்—குழப்பம்)

திருத்திய விடை. ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த புதுப்பாடி கிராமத்தில். . . (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Madam, என்னுடைய பதிலை நான் தெளிவாகச் சொன்னதற்குப் பிறகு நீங்கள் கேட்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதியை மீறி நான் செய்ய முடியாது.

சென்னை-600 008
சென்னை-600 008



(குறுக்கீடுகள்) விதியை மீறி நான் செய்யமாட்டேன், செய்யவும் முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** ஆற்காடு ஒன்றிய பொது நிதியிலிருந்து புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. மத்திய அரசு செயல்படுத்தி வந்த ஜீவன்தாரா கிணறுகள் என்ற திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கிணறு அமைத்துத்தரும் திட்டம் 1999 முதல் செயல்பாட்டில் இல்லை. (கூச்சல்—குழப்பம்) எனவே, மாம்பாக்கம் கிராமத்தில் ஜீவன்தாரா கிணறு அமைக்க வழிவகை இல்லை. (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் புதுப்பாடி ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு அமைத்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவரிடத்திலே ஓர் அன்பான வேண்டுகோள். அந்தக் கிணற்றிலே மின் மோட்டார் அமைத்து, மக்களின் குடிநீர்ப் பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாம்பாக்கம் கிராமத்திலே ஜீவன்தாரா கிணறுகள் அமைக்கும் திட்டம் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு கைவிடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்கள். தமிழகத்திலே கடந்த 10 ஆண்டுகளாக ஜீவன்தாரா கிணறுகள். . (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அவையில் அமைதி காக்கவேண்டும். (குறுக்கீடுகள்) அவை அமைதியாக நடக்க வேண்டும், ஒத்துழைப்புக் கொடுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி—பதில் முடிந்த பிறகு மீண்டும் ஒரு கோரிக்கை வையுங்கள். (கூச்சல்—குழப்பம்)

## 1. வினாக்கள்-விடைகள்—*தொடர்ச்சி*

### உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

**திரு. கே.எல். இளவழகன்:** மேலும், பல்லாயிரக்கணக்கான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் இந்தத் திட்டத்தை மீண்டும் தமிழக அரசு ஏற்று முழுமையாக இந்த ஆண்டிலேயே அமல்படுத்த ஆவன செய்யுமா? சிறு மற்றும் குறு விவசாயிகள் அண்டை மாநிலங்களுக்கு விவசாயப் பிழைப்பைத் தேடிச் செல்வதைத் தடுக்கும் முகமாக இந்தத் திட்டம் இந்த நிதி ஆண்டிலேயே அமல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக கேட்டு அமர்கின்றேன். *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுப்பாடி ஊராட்சியில். . . *(கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)*

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னது வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு கவனிக்கப்படும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். வினாக்கள்—விடைகள் முடிந்ததற்குப் பிறகுதான் அடுத்தது பரிசீலனை செய்யப்படும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

## 1. வினாக்கள்-விடைகள்—*தொடர்ச்சி*

### உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுப்பாடி ஊராட்சியில் ஜி.எம். நகர், எம்.ஜி.ஆர். நகர், பழைய காலனி, புதுப்பாடி ஆகிய குக்கிராமங்கள் இருக்கின்றன. இதில் ஜி.எம். நகரினுடைய மக்கள்தொகை *456* ஆகும். இந்தக் குக்கிராமத்தில் *3,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், ஒரு கைப்பம்பு இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*



*முற்பகல் 9—35*

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—*தொடர்ச்சி*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருகிறீர்களா? எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். வினாக்கள்—விடைகள் முடிந்ததற்கு அப்புறம்தான் மற்றவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதனாலே அமைதியாக உட்காருங்கள். *(கூச்சல்—குழப்பம்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ** *(கூச்சல்—குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 1. வினாக்கள்-விடைகள்—*தொடர்ச்சி*

### உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *62*, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

### உழவர் சந்தை

***30844—திரு. அ. ராஜன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகர்கோவில் தொகுதி, ஈத்தாமொழி, தெங்கம்புதூர், புத்தளம் ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 8

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணப்பன், அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** நாகர்கோவில் தொகுதி, ஈத்தாமொழி, தெங்கம்புதூர், புத்தளம் ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறாரோ, அப்பொழுதெல்லாம் தமிழக விவசாயப் பெருமக்களுக்கு பொற்காலமாக விளங்குகிறது. குறிப்பாக, இந்தத் தடவை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு மிக அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது அதற்கு எடுத்துக்காட்டாகும். 1996—ல் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, விவசாயிகள் வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்காக தமிழகம் முழுவதும் 100 உழவர் சந்தைகளைத் திறந்தார்கள். எனது தொகுதியான நாகர்கோவிலில், வடசேரி பகுதியில் உழவர் சந்தையினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. அ. ராஜன்:** கேள்வி தான். வருங்காலத் தமிழகத்தின் வசந்தம், நம்முடைய தளபதியார் அவர்கள் வந்து திறந்து வைத்தார்கள். மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த அந்த உழவர் சந்தையைப் பிறகு வந்த அ.தி.மு.க. சர்க்கார் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மூடிவிட்டது. மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு அந்த உழவர் சந்தை திறக்கப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. எனது தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலம் ஒன்றியத்திலுள்ள ஈத்தாமொழி, தெங்கம்புதூர், புத்தளம் ஆகிய பகுதிகள் நாகர்கோவில் நகரத்திலிருந்து வெகுதொலைவில் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை நாகர்கோவிலுக்குக் கொண்டுவர தூரம் மிகவும் அதிகமாகிறது. எனவே மேற்கண்ட மூன்று இடங்களிலும் புதிதாக உழவர் சந்தைகள் அரசால் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதி விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மயிலாடி மற்றும் வடசேரி ஆகிய இரண்டு உழவர் சந்தைகள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் இதர பகுதிகளில் உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிக மிகக் குறைவாக உள்ளதாகத் தெரிவித்துள்ளதால், மேற்படி தெங்கம்புதூர், புத்தளம், ஈத்தாமொழி ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. தற்போது தமிழகத்திலே இயங்கி வரும் 104 உழவர் சந்தைகளில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 1,053 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூ.108 இலட்சம் மதிப்பில் 7,800 விவசாயிகள் மூலம் கொண்டுவந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் தினந்தோறும் சுமார் 1,97,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர், அவர் கேட்கின்ற அந்த இடத்திலே சாத்தியம் இல்லை என்று சொல்கிறார்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போதுகூட நாம் 50 உழவர் சந்தைகள் அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கு, முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அது அறிவிப்பாக வெளியிடப்பட்டது. ஆனால், இப்போது அந்தப் பகுதியிலே காய்கறிகள், பழ வகைகள் உற்பத்தி செய்து உழவர் சந்தைக்கு வரக்கூடிய அளவுக்குக் கணிசமாக இருக்கவேண்டும். அதேநேரத்திலே, உழவர் சந்தைக்கு இவை எல்லாம்

வந்தாலும், நுகர்வோர்கள் வாங்கக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான், உழவர் சந்தை தொடங்கப்படுகிறது. சென்ற ஆண்டு அறிவித்ததற்கிணங்க சேலம் அஸ்தம்பட்டியில் ஒரு உழவர் சந்தை தொடங்கப்பட்டது. மேலும் 26 உழவர் சந்தைகள் சேலத்திலே இளம்பிள்ளை, விழுப்புரத்திலே- உளுந்தூர்பேட்டை, திருநெல்வேலியிலே-மேலப்பாளையம், விருதுநகரிலே-காரியாப்பட்டி, இராமநாதபுரத்திலே- கமுதி, ஈரோட்டில்—பெரியார் நகர், கருமாண்டி—செல்லிப்பாளையம், மதுரை—ஆனையூர், திருவண்ணாமலை—வந்தவாசி, செங்கம், தேனி—ஆண்டிப்பட்டி, சின்னமனூர், தேவாரம், தருமபுரி—பாலக்கோடு, அரூர், பெண்ணாகரம், திண்டுக்கல்—வத்தலக்குண்டு, தஞ்சாவூர், பாபநாசம், திருக்காட்டுப்பள்ளி, கரூர்—பள்ளப்பட்டி, காஞ்சிபுரம்—மதுராந்தகம், புதுக்கோட்டை—கீரனூர், வேலூர்—திருப்பத்தூர், பெரம்பலூர்—ஜெயம்கொண்டம், திருவாரூர்—நீடாமங்கலம், சிவகங்கை—சிங்கம்புணரி ஆகிய 26 ஊர்களில் இப்பொழுது பணி நடந்து கொண்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு இடம் தேர்வு ஆய்விலே இருக்கிறது.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. இந்த இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த அவையிலே சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தளம், ஈத்தாமொழி, தெங்கம்புதூர் ஆகிய பகுதிகள் முற்றிலுமாக கிராமங்கள் அடங்கிய பகுதிகளாகும். அப்பகுதி மக்கள் விவசாயத்தையே முழுவதும் நம்பியிருக்கிறார்கள். நாகர்கோவில் நகருக்கு அப்பால் சுமார் 15, 20 கிலோ மீட்டர் தொலைவில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்குப் போதிய விற்பனை நிலையங்கள்கூட இல்லை. எனவே, இந்த ஆண்டு அரசு திறப்பதாக உத்தேசித்துள்ள உழவர் சந்தைகளில் ஒன்றையாவது மேற்குறிப்பிட்ட மூன்று இடங்களில் ஓர் இடத்தில் முக்கியத்துவத்தைக் கருதி, ஈத்தாமொழியிலாவது திறக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிவதோடு, இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 22 முக்கிய உழவர் சந்தைகளில் விற்பனைக்கான காய்கறிகள் மற்றும் பழங்கள்



போன்றவற்றைப் பாதுகாத்திட தேவையான குளிர்பதன வசதிகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதில், ஒன்றை குமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில் உழவர் சந்தையில் அமைக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினருடைய வேண்டுகோளை, அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுகோளை ஏற்றுதான் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்து கேட்கப்பட்டது. அவர் தந்திருக்கின்ற பதிலில் தெங்கம்புதூர், புத்தளம், ஈத்தாமொழி ஆகிய இந்த மூன்று இடங்களிலும் சாத்தியம் இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதை இங்கு வலியுறுத்திய காரணத்தினாலே, மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறையோடு ஆலோசித்து, சாத்தியம் இருக்குமானால் தொடங்குவதற்கு முயற்சி எடுக்கலாம். (குறுக்கீடு)

## 2. முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அந்தப் பிரச்சினைக்குள்ளே போகாமல், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ** அதோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் அதுகூடப் பதியக் கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புதிய உழவர் சந்தைகள் அமைப்பதற்கான . . .

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முக்கியப் பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

[2008 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அவை ஒன்றும் சபைக்கு எதிரான வார்த்தைகள் இல்லையே! அதை எதிர்க்க . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குற்றச்சாட்டு அல்ல, ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது.

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற உழவர் சந்தைகளுக்கு நிதிநிலை அறிக்கையிலே 22 உழவர் சந்தைகளில் பழங்கள், காய்கறிகள் குளிரூட்டப்பட்டு பாதுகாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த 22 இடங்களிலே மன்னார்குடியில் சிறப்பாகச் செயல்படுகிற உழவர் சந்தையாக இருக்கிற காரணத்தினாலே, அந்தத் திட்டத்தை மன்னார்குடி உழவர் சந்தையிலே நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 15 மெட்ரிக் டன் காய்கறி வரக்கூடிய உழவர் சந்தைகளாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, முதற்கட்டமாக, 22 உழவர் சந்தைகளிலே குளிர்பதனீட்டுக் கிடங்கு அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தகுதி அங்கும் வருமானால், அதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 8]

இந்த உழவர் சந்தை தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிற இந்தச் சூழலில், காய்கறிகள் உற்பத்தியினுடைய ஒரு மையப் பகுதியாக விளங்குகிற திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தை மையப்படுத்தி ஒரு மெகா உழவர் சந்தையை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற 1996 ஆம் ஆண்டில், அங்கு மெகா உழவர் சந்தை அமைக்க அனுமதிக்கப்பட்டு, இடையிலே சரியாக அந்தப் பணி வேகப்படுத்தி நடைபெறவில்லை. இப்போது இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, மெகா உழவர் சந்தை அமைக்கப்பட்டு, அது திறக்கக்கூடிய நிலையிலே இருக்கிறது என்பது மட்டுமல்ல—உழவர் சந்தையே கூடாது; அதை எப்படியாவது மூடிவிட வேண்டுமென்று கடந்த ஆட்சியிலே நடவடிக்கை எடுத்துதான் 28 உழவர் சந்தைகளை மூடினார்கள். இப்போது இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, மாண்புமிகு முதலமைச்சருடைய உத்தரவின்பேரில், அந்த 28 உழவர் சந்தைகளும் புதுப்பிக்கப்பட்டு, உண்மையான விவசாயிகள் காய்கறிகள் கொண்டுவரக்கூடிய நிலை ஏற்பட்டு, நுகர்வோர்களுக்கும் வசதி செய்துதர முடிந்த இந்த நல்ல நேரத்தில், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அன்றைக்குப் பேசுகிறபோதுகூட, அ.தி.மு.க.-விலே இருந்த நண்பர்கள், "உழவர் சந்தை வேண்டும்; 50 உழவர் சந்தைகள் ஆரம்பிப்பதாகச் சொன்னீர்களே; ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை? அதனுடைய நிலை என்ன?" என்று கேட்டதிலிருந்து—விவசாயிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் உழவர் சந்தை என்கிற பாதுகாப்பான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1999 ஆம் ஆண்டு ஆரம்பித்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறியினுடைய விலைகள் சில நேரங்களில், பொதுவாக உற்பத்தியாகிறபோது மிகவும் குறைவாகவும், அவை உற்பத்தியில்லாத

காலக்கட்டங்களில் மிக அதிகமான விலைக்கும் விற்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படுகிறது. அதேபோல, அழுகும் தன்மையிருக்கிற காரணத்தினாலே, perishable என்கிற காரணத்தினால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமலே போய்விடுகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய நகராட்சிகளில் குளிரூட்டும் சாதன வசதியைப் பெற்றுத்தந்து, அந்தக் கிடங்குகளில் விவசாயிகள் அவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கு ஏதாவது குறைந்தபட்சக் கட்டணத்தை வசூல் செய்து கொண்டு, அந்தக் காய்கறிகளை அப்படியே பத்திரப்படுத்தி, நல்ல விலைக்கு விற்பதற்கான ஒரு சூழலை உருவாக்குவாரா? குறிப்பாக, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், வேலூர், வாணியம்பாடி, குடியாத்தம், இராணிப்பேட்டை, காட்பாடி போன்ற பகுதிகளிலே அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய கொள்கைகளிலே அதுவும் ஒன்றாக இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் காய்கறிகள், பழ வகைகளைப் பதப்படுத்துகின்ற அளவிற்கு, விலை நல்ல நிலையிலே இருக்கிறபோது அவர்கள் விற்பனை செய்வதற்காக, குளிர்பதனக் கிடங்கு தொடங்கலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி.

**திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றபிறகு, பல இடங்களில் உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே, என்னுடைய திருவோணம் தொகுதிக்குட்பட்ட ஒரத்தநாடு தாலுக்காவில், இதுவரை எந்தவொரு உழவர் சந்தையும் அமையவில்லை. ஒரத்தநாடு தாலுக்காவைச்சுற்றி பல்வேறு கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால், அங்கே பயிரிடப்படுகின்ற காய்கறிகள், பழங்களையெல்லாம் விற்பனை செய்வதற்கு ஒரத்தநாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரத்தநாட்டில் ஓர் உழவர் சந்தையை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கோரிக்கை இதுவரை அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்த வினாவையொட்டி, துறையிலே விவரம் கேட்டுப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக உற்பத்தி செய்து மிளகாய் போன்ற பயிர்களை நீண்டநாட்கள் வைத்திருக்கமுடியாமல் அதனுடைய நிறம் மாறுகிறது. அதனுடைய தன்மை மாறக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருப்பதனால் புளி, மிளகாய் போன்ற நீண்டநாட்கள் வைத்திருக்கக்கூடிய பொருட்களையெல்லாம்—பாதுகாப்பதற்காக தனியார் நிறுவனங்கள் சில இடங்களில், தருமபுரி பகுதியிலே, ஓசூர் பகுதியிலேகூட குளிர்பதனக் கிடங்குகள் மிகப்பெரிய அளவில் வைத்திருக்கிறார்கள். அங்கே உழவர் பெருமக்கள் எல்லாம் வாடகைக்கு எடுத்துச்சென்று வைத்து வாடகை அதிகம் செலுத்தமுடியாமல் நட்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பகுதிவாரியாக எந்தெந்தப் பகுதிகளில் உழவர்கள் என்ன உற்பத்தி செய்கிறார்களோ அந்த நிலைக்கேற்ப—விவசாயிகள் சேமித்து வைப்பதற்கு பெரிய அளவிலான குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்திலே, வாழைப்பழம், காய்கறிகள் போன்ற அழுகும் பொருட்களைப் பாதுகாப்பதற்காக கர்நாடக மாநிலத்தில், பெங்களூரை மையமாகக் கொண்டு மிகப்பெரிய அளவிலான சஃபல் மார்க்கெட் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் அதையே பேசுகிறோம். இந்தியா முழுவதும் அந்த சஃபல் மார்க்கெட்டைப்பற்றிப் பேசுகிறார்கள். அதைப்போல தமிழகத்திலே திருச்சியிலோ அல்லது தமிழ்நாட்டினுடைய மையமான பகுதியில் ஒரு பெரிய வணிக வளாகமான சஃபல் மார்க்கெட் உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், சின்னமனூர் பகுதியில் வாழையை நிரம்பப் பயிரிடுகின்றார்கள். அந்தக் காயைப் பழுக்க வைக்க வேண்டுமானால் அதை பெங்களூருக்குக் கொண்டு சென்று அங்கு சஃபல் மார்க்கெட்டிலே பழுக்க வைத்து எடுத்துவர, அதைக் கொண்டு செல்லுகின்ற செலவு ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் பத்து பைசா ஏற்படுகிறது. அது பழுத்த பிறகு, அதை எடுத்து வந்து விற்பனைக்கு அனுப்புவதற்கு வண்டி வாடகையெல்லாம் சேர்த்தால் 3 ரூபாய் 10 பைசா செலவு ஏற்படுகிறது. இதை உணர்ந்துதான் அந்த சஃபல் மார்க்கெட்டிலே என்ன வசதிகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையில் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் சின்னமனூரில் இந்த ஆண்டு வாழைக்காய் பழுக்கவைக்கக்கூடிய அந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு கால்கோள் விழா செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## மதகு

***11870—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதிக்குட்பட்ட மாமண்டூர் கிராம ஏரியின் கரையை உயர்த்தி, மதகுகளை அதிகரித்தும், பழைய மதகுகளைச் சீர் செய்தும் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதிக்குட்பட்ட மாமண்டூர் கிராம ஏரியின் உயரத்தை உயர்த்தி



மதகுகளை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. பழுதடைந்த மதகு எண் 2 மற்றும் 4 ஆகியவற்றைச் சீர்செய்யும் வகையில் ரூ.2.00 இலட்சம் செலவில் பணி நடந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே மாமண்டூர் ஏரிதான் மிகப்பெரிய ஏரி என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ஏரியை அன்னை இந்திரா காந்தி அவர்கள் நேரிலே சென்று, ஏறிச்சென்று பார்த்தார்கள் என்பதெல்லாம் வரலாறு. இந்தப் பகுதியிலே 4 மதகுகள் இருக்கின்றன. 1, 2 மதகானது தூசி அருகிலே இருக்கின்றது. 3—வது மாமண்டூர் அருகிலே இருக்கின்றது. 4—வது ஏளாச்சேரி, சூரியம்பாக்கம் அருகிலே இருக்கின்றது. இதுவரை இந்த ஏரி தூர் வாரப்படவில்லை. 7 மீட்டர் அளவு தூர் இருக்கின்றது. எனவே, இதைத் தூர்வாரும்பொழுது அதிலிருந்து வருகின்ற பொருளை வைத்து நீங்கள் கரையை உயர்த்திக்கொள்ளலாம்.

மேலும், தண்டரை கால்வாயை அகலப்படுத்த வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை நான் முன்னே வைத்திருக்கின்றேன். அதன்மூலம் இந்த ஏரி நிரம்பக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கிறது. கொள்ளளவு அதிகரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது என்று கூறி, இந்தத் தூர்வாரும் பணியை தயவுசெய்து செய்வார்களா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியே அவர் கேட்டது இதுதான். ஏரியின் உயரத்தை உயர்த்தவேண்டும். கரையின் உயரம் உயர்த்தப்படுமா, உயரத்தை உயர்த்தி மதகுகளை அதிகரிக்கமுடியுமா? மேலும் சில மதகுகளை அமைக்கமுடியுமா, பழைய மதகுகளைச் சீர் செய்ய முடியுமா? இதுதான் அந்தக் கேள்வியினுடைய மூன்று நிலைகள். நான் ஏரியினுடைய கரையை உயர்த்த முடியாது என்று சொன்னேன். ஏனென்று கேட்டால் ஏரியின் கரையை உயர்த்தினால், எதிர்முனையிலே இருக்கின்ற அரியப்பாக்கம், மாமண்டி, சித்தாத்தூர், சோழவரம். மற்றும் அழிஞ்சல்பட்டு ஆகிய கிராமங்களினுடைய

விளைநிலங்கள் நீரிலே மூழ்கிவிடும். அதுமட்டுமல்லாமல் அழிஞ்சல்பட்டு, அரியப்பாக்கம், சோழவரம் கிராமங்களுக்குள்ளே தண்ணீர் போகக்கூடிய அபாய நிலை இருக்கிறது. ஏற்கெனவே அதனுடைய கரை 11 மீட்டர் உயரத்திலே இருக்கிறது. அதை மேலும் உயர்த்துவது சாத்தியப்படாது, அது இருக்கிற இடத்தில்.

*முற்பகல் 9—55*

இரண்டாவது கேள்வி, ஏற்கெனவே நான்கு மதகுகள் இருக்கின்றன, இவை காலங்காலமாக உபயோகத்தில் இருக்கின்றவை, மேற்கொண்டு தேவையில்லை என்பது. மதகுகளைச் சீர் செய்ய வேண்டும் என்பதிலே இப்பொழுது இரண்டு மதகுகளை நாங்கள் சீர் செய்து கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1996—லே வந்தபோது இந்த ஏரியினுடைய கால்வாய்கள் அத்தனையும் சீர்செய்யப்பட்டிருக்கின்றன. தூசிமாமண்டூர் ஏரிக்கு சிறப்புப் பழுதுபார்ப்பு என 1998—1999 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்; தூசிமாமண்டூர் ஏரி புனரமைப்புக்கு 1998—1999 லே 80 இலட்சம் ரூபாய்; ஏரியின் மதகு 2—ன் பின்புறம் உள்ள கலுங்கு சிறப்புப் பழுதுபார்த்தலுக்கு 1 கோடியே 8 இலட்சம் ரூபாய்; அதேபோன்று 4—வது மதகினைச் சீர்செய்வதற்காக 4.40 இலட்சம் ரூபாய்; ஆக, இப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, கடந்த கால ஆட்சியில் அந்த ஏரிக்கு எதையும் செய்யவில்லை. ஆகையினால் இப்போது தேவையென்றால் செய்யப்படும். இப்போது மதகுகளைச் சீரமைப்புச் செய்துகொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. நான் வணங்கும் தமிழ்க் கடவுள் பொதுப் பணித் துறை முருகன் அவர்கள் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையுடன் அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் கோமானேரி பஞ்சாயத்தில் உள்ள கோமானேரிகுளம் மணிமுத்தாறு 4—வது ரீச்சில் உள்ள குளம்.



இந்தக் குளத்தின் கலுங்கும், மதகும் மிகவும் சேதம் அடைந்துள்ளன. இப்பொழுது பெய்த மழையினால் குளம் உடைந்து மதகு வழியாக தண்ணீர் வந்து கலுங்குவிளை ஊர் முழுவதும் தண்ணீர் சூழ்ந்துள்ளது. அந்த ஊரில் உள்ள பாலமும் உடைந்து பேய்க்குளம்—சாத்தான்குளம் சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளத்தின் கரையையும், மதகு மற்றும் கலுங்குகளைச் சீரமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் முடிந்துபோய்விட்டது என்று நினைத்து உட்கார்ந்துவிட்டேன். என்ன கேள்வி?

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் கோமானேரி பஞ்சாயத்தில் உள்ள கோமானேரிகுளம் மணிமுத்தாறு 4—வது ரீச்சில் உள்ள குளம். இந்தக் குளத்தின் கலுங்கும், மதகும் மிகவும் சேதமடைந்துள்ளன. இப்பொழுது பெய்த பெருமழையினால் குளம் உடைந்து, மதகு வழியாகத் தண்ணீர் வந்து கலுங்குவிளை ஊர் முழுவதும் தண்ணீர் சூழ்ந்துள்ளது. அந்த ஊரில் உள்ள பாலமும் உடைந்து, பேய்க்குளம்—சாத்தான்குளம் சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளத்தின் கரையையும், மதகு மற்றும் கலுங்குகளையும் சீரமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குளம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளமா என்பதைப் பார்க்கவேண்டும். இருந்தாலும் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குளங்களைப் பற்றி என்னிடத்திலே எழுதித் தருவார்களேயானால், அவை பொது பணித் துறையின் குளங்களாக இருந்தால் ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கல்பட்டு நகரின், மையப் பகுதியிலே இருக்கிற தண்டூர் ஏரி ஒவ்வோர் ஆண்டும் மழைக் காலங்களிலே கரை

[2008 ஏப்ரல் 8

உடைகிறது, கால்வாயும் அகலப்படுத்தப்படுவதால் நகரத்தினுள்ளே தண்ணீர் புகுந்துவிடுவதால் ஏறக்குறைய பாதி நகரம் ஒவ்வொரு வருடமும் தண்ணீரிலே மூழ்கிக்கொண்டிருக்கிறது. எனவே, அதைச் சரி செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அதேபோன்று மழைக் காலங்களிலே உடைகின்ற ஏரிகள் எங்கே உடைகின்றன என்றால், ஏரிகளின் மதகுகளின் அருகிலேதான் உடைகின்றன. என்னுடைய தொகுதியிலே கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு பெய்த மழையிலே ஏறக்குறைய 15 ஏரிகள் உடைந்தன. அவற்றிலே பெரும்பாலும் அனைத்து ஏரிகளையும் பார்த்தால், மதகுகளின் ஓரம்தான் உடைந்திருக்கின்றன. எனவே, கரைகளைப் பலப்படுத்துகிறபோதும், மதகுகளைக் கட்டுகிறபோதும் அந்தப் பகுதியிலே மதகுகள் ஓரம் பலமாகக் கட்டுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்குமா எனத் தங்கள்மூலம் கேட்க விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகள் தானாக உடைவது என்பது மிகக் குறைவு. உடைக்கப்படுகிறது என்பதுதான் அதிகம். காரணம் ஏரியிலே வீடு கட்டிக்கொண்டிருப்பவர்கள், பயிரிடுபவர்கள், ஏரியிலே நீர்ப்பரப்பு அதிகமானால் தங்கள் வீட்டை அது தொடுகிறது, தாங்கள் இட்ட பயிரை அழிக்கிறது என்ற காரணத்திற்காக கரையின் வழியை வெட்டிவிடுகிறார்கள். அதை நானே நேரிலேயே காஞ்சிபுரத்திலே நாங்கள் முன்பு ஆட்சியில் இருந்தபொழுது, பெரு வெள்ளம் காஞ்சிபுரத்திலே நுழைகிறபோது, அவ்வளவு பெரிய ஏரியை வெட்டிக்கொண்டிருக்கிறபொழுது எங்களுடைய ஆட்கள் பிடித்தார்கள். பொதுவாக நாங்கள் எடுக்கிற கணக்குப்படி பார்த்தால் யார், யார் ஏரிகளை ஆக்கிரமித்திருக்கிறார்களோ, அவர்கள்தான் இந்த உடைப்பு வேலையிலே ஈடுபடுகிறார்கள். அவர்களைத் தண்டிப்பதற்காகத்தான் நாங்கள் ஏரி பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த குண்டூர் ஏரி கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.



2008 ஏப்ரல் 8]

முற்பகல் 10-00

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட முகையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த காரனைப்பெருச்சானூர் ஏரி, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரி. அந்த ஏரியின் மதகு சீர்செய்யப்பட்டு மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. ஆனால், சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையின்போது, அந்த மதகு பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள அந்த மதகினைச் சரிசெய்ய அதிகாரிகள்மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோன்று, வீரசோழபுரம் கிராமத்திற்கு அருகிலே, 15 கண் என்ற பம்பாய் வாய்க்காலினுடைய உபரி நீர் வழிந்து, தென்பெண்ணையாற்றிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary Question ஒன்றுதான் கேட்கவேண்டும். நீங்கள் ஒரு கேள்வியிலேயே இரண்டு, மூன்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் கரை சம்பந்தப்பட்டதுதான். தென்பெண்ணையாற்றிலே கலக்கின்ற அந்த நீர், விவசாய நிலங்களின் வழியாக, அந்தச் சாலையைக் கடந்து செல்கின்றது. அப்போது அந்தச் சாலை சரிந்து, துண்டிக்கப்படுகிறது. எனவே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அந்தச் சாலையினுடைய கரையை உயர்த்தி அதைச் சரிசெய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னிடத்திலே முன்பே சொல்லியிருந்தால், இவ்வளவு நேரத்திற்குள் நடவடிக்கை எடுத்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில், நந்தன் கால்வாய்த் திட்டத்தின்மூலம்,

20-க்கும் மேற்பட்ட ஏரிகள் பாசன வசதி பெறுகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் மேல்மலையனூர் தொகுதியும் பாசன வசதி பெறுகின்றது. ஆனால், இப்போது மழை பெய்ததால் உடைப்பு ஏற்பட்டும், தூர்ந்தும்போயிருக்கின்ற காரணத்தால், பல்வேறு ஏரிகளுக்குத் தண்ணீர் போகாமல் வீணாக ஆறுகளிலே அந்தத் தண்ணீர் செல்லக்கூடிய நிலையும் இருக்கிறது. ஆகவே, அதை நான் அரசுத் துறை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆகவே, விரைவில் அந்த நந்தன் கால்வாய்த் திட்டத்தினுடைய ஏரிகளுக்கெல்லாம் தண்ணீர் போகின்ற வகையிலே ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் திட்டங்களை வகுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற பத்தாம் தேதி பொதுப் பணித் துறையினுடைய மானியம். அன்றைக்கு வெண்திரையில் காண்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**64—**

## சிற்றுண்டிச்சாலை

***35047—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கோத்தகிரி—மேட்டுப்பாளையம் இடையில் குஞ்சப்பனையில் சாலையோர சிற்றுண்டிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதி, கோத்தகிரி—மேட்டுப்பாளையம் சாலையில், குஞ்சப்பனை என்ற இடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்டிற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால், சாலையோரச் சிற்றுண்டிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சாலையோரம் இருக்கின்ற எந்த இடமும் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமானதாக இருப்பதில்லை. அதேவேளையில், மக்களின் நலன்கருதி, அது மலைப்பிரதேசம் என்ற காரணத்தால், வனத் துறை அமைச்சர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆகியோரோடு கலந்தாலோசனை செய்து, அந்தப் பகுதி நீலகிரி மாவட்டத்திற்கு இரண்டாவது மாற்றுப் பாதை என்ற காரணத்தாலும், பொது மக்கள் இயற்கை உபாதைகளைப் போக்கிக்கொள்ள அந்தப் பகுதி மிகவும் அவசியம் என்ற காரணத்தாலும், அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, சிற்றுண்டிச்சாலை மற்றும் பாத் ரூம் வசதிகளைச் செய்து தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தினால் மேட்டுப்பாளையத்திலிருந்து பர்லியாறு, குன்னூர் மற்றும் வெலிங்டன் வழியாக ஊட்டிக்கு 105 பேருந்துகள்மூலம் தினமும் 314 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற குஞ்சப்பனை—மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு குஞ்சப்பனை, கோத்தகிரி வழியாகப் பேருந்துகள் அதிகமாக இயக்கப்படவில்லை. அந்த வழித்தடத்தில் 15 பேருந்துகள்மூலம் 56 நடைகள் மட்டுமே இயக்கப்படுகின்றன. எனவே, அந்த இடத்தில் ஒரு சிற்றுண்டி விடுதி இயக்கக்கூடிய அளவிற்கு பயணிகள் வருவார்களா என்ற சந்தேகமும் இருக்கிறது. அதனால்தான், வழியில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரே முன்வந்து அங்கே ஒரு இடம் பார்த்து, எங்கள் போக்குவரத்துக் கழகத்திற்குத் தருவார்களேயானால், நிச்சயமாக அந்தப் பகுதியிலே ஒரு சிற்றுண்டிச்சாலையைத் திறப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறும் அதேவேளையில், தொகுதி மக்களின் நலன் கருதிக் கேட்பது ஒருபுறம் இருந்தாலும், வனத் துறை அமைச்சர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆகியோரோடு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். கலந்தாலோசித்து, பேருந்துகள் 15–ஆக இருந்தாலும், அங்கே இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தால், நம்முடைய போக்குவரத்துக் கழகப் பயணிகளுக்கு மட்டுமல்லாது, இந்தியாவின் சுற்றுலாத் தலங்களில் முக்கியப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், சிறப்பு விதிவிலக்கு மற்றும் அங்கீகாரத்தைப் பெற்று, அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் முன்வந்து எங்களுக்கு இடம் தருவார்களேயானால், எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. உடனடியாக அந்தச் சிற்றுண்டிச்சாலையைத் திறக்க என்னால் முடியும்.

பொதுவாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற சிற்றுண்டிச்சாலைகள் என்று எடுத்துக்கொண்டால், கோயம்புத்தூர் போக்குவாத்துக் கழகத்திற்கு பர்லியாறு, ஆசனூர் என்ற இரண்டு இடங்களில் மட்டும்தான் சிற்றுண்டிச்சாலைகள் இருக்கின்றன. விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு தொழுதூரிலும், கொட்டாம்பட்டியிலும் இருக்கின்றன. விழுப்புரத்திற்கு மாமண்டூரில் இருக்கிறது.



19,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைகள் என்று சொல்வது இந்த ஐந்து இடங்களில் மட்டும்தான் இருக்கின்றன.

முற்பகல் 10–05

எங்களுடைய பணி என்பது, போக்குவரத்திற்கு மக்களை ஏற்றிச் சென்று இறக்குவது என்பதே தவிர, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதென்பது எங்களைத் தாண்டி அடுத்தபடியான விஷயம். இருந்தாலும், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே நாங்கள் தெரிவித்திருக்கிறோம். விருதுநகருக்கும், மதுரைக்கும் இடையிலே ஒரு இடத்திலும், விழுப்புரத்திலே விக்கிரவாண்டி என்ற இடத்திலும், சேலம் கோட்டம் சார்பாக கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூர் செல்வதற்கு இடையிலும் புதிய சிற்றுண்டிச்சாலைகள் திறப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, இப்பொழுது பணி தொடங்கும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு எங்களுக்கு உதவுவாரேயானால், அந்த இடத்தையும் சேர்த்து சிற்றுண்டிச்சாலை அமைக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அவருடைய ஆட்சிக் கிரீடத்திலே இருக்கின்ற வைரக் கற்களிலே, மரகத கற்களாக போக்குவரத்துத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது. போளூரிலே, திருப்பதியிலிருந்து வருகின்ற கடலூர்–சித்தூர் சாலை தென் பகுதிக்குச் செல்கிறது. அதேபோல, தென் பகுதியிலேயிருந்து வருகின்ற பஸ்கள் எல்லாம் திருப்பதிக்குச் செல்கின்றன. போளூரைப் பொறுத்தமட்டிலே, போளூரிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலே வேலூர் இருக்கிறது; 100 கிலோ மீட்டர் தூரத்திலே சித்தூர் இருக்கிறது; 180 கிலோ மீட்டர் தூரத்திலே திருப்பதி இருக்கிறது. இந்தப் பகுதியை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், கடலூர் 120 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனவே, மையப் பகுதியாக இருக்கின்ற போளூரிலே சாலையோர சிற்றுண்டிச் சாலை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இது எங்களுடைய துறையைத் தாண்டிச் செய்கின்ற பணி என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய இல்லத்திற்குச் செல்கின்றவர்களுக்கெல்லாம் தெரியும். டீயோ, காபியோ குடிக்காமல் அவர்களுடைய இல்லத்திலேயிருந்து வெளியே வரமுடியாது. அப்படிப்பட்ட குணத்திற்குச் சொந்தக்காரரான அமைச்சர், போளூர் தொகுதியிலே ஒரு சாலையோரக் கடையைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்களுக்குச் சொன்ன பதில்தான் உங்களுக்கும். நீங்கள் இடம் பார்த்துத் தருவீர்களானால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஏனென்று கேட்டால், அரசுக்குச் சொந்தமான இடத்திலே, வாடகை ஒப்பந்தத்தின்மூலம் தனியாருக்குத் தரப்பட்டுதான் அந்தச் சிற்றுண்டிச் சாலைகளெல்லாம் நடத்தப்படுகின்றன. அரசே நேரடியாக நடத்துவதில்லை. எனவே, இடம் பார்த்துக் கொடுப்பீர்களானால், அதைப்பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–செங்கோட்டை சாலையில், வடுகப்பட்டி என்ற இடத்தில், நல்ல கட்டட வசதி மற்றும் பார்க் வசதியுடன், போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான ஒரு சிற்றுண்டிச்சாலை செயல்பட்டு வந்தது. இப்பொழுது அந்தக் கட்டடம் பழுதடைந்து செயல்பாடு இல்லாமல் நின்று விட்டது. இட வசதியிருக்கிறது, பார்க் அமைக்கலாம். பேருந்துகள் நிறுத்துவதற்கு இடம் இருக்கிறது. கட்டடம் பூராவும் தற்பொழுது சரியான பராமரிப்பு இல்லாததனால் கொஞ்சம் பாழாகிப் போயிருக்கிறது. அதை நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மதுரை–செங்கோட்டை சாலையில் அழகாபுரி, வடுகப்பட்டி என்ற இடத்திலே சாலையோரத்தில், ஒரு சாலையோர உணவகம்



அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகருக்கும், மதுரைக்கும் இடையிலே இருக்கின்ற தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான, நமது Tourism Development Corporation–க்குச் சொந்தமான Hotel ஒன்று 10 ஏக்கரில் இருக்கிறது. அந்த இடத்தை அவர்களிடம் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அறிவிக்கின்றபொழுது, விருதுநகருக்கும், மதுரைக்குமிடையிலேதான் போக்குவரத்து அதிகமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது, மக்களுக்குத் தேவையாக இருக்கிறதென்று கருதி அந்த இடத்தைத் தேர்வு செய்தோம். ஏற்கெனவே போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யச் சொல்லி, ஏற்கெனவே நடந்திருக்குமானால், போக்குவரத்து எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அங்கும் உணவு விடுதிகளைத் திறப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்கின்ற சாலையில், மூன்றடைப்பு என்ற இடத்தில் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான ஒரு சிற்றுண்டி விடுதி ஆரம்பிக்கப்பட்டு, கடந்தகால ஆட்சியில் அது மூடப்பட்டுவிட்டது. அதை மீண்டும் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சோழன் போக்குவரத்துக் கழகமாக இருந்த கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தில்கூட பாடலூர் என்ற இடத்திலே பெரிய ஓட்டல் ஒன்று நடந்து கொண்டிருந்தது. என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, கடந்த கால ஆட்சியிலே

[2008 ஏப்ரல் 8

அதையெல்லாம் மூடியிருக்கிறார்கள். அதைப்பற்றி, ஒட்டுமொத்தமாகக் கணக்கெடுத்து எந்தெந்தப் பகுதியில், இதுபோல விடுதிகள் இயங்கின: இப்போது ஏன் இயங்கவில்லை என்பதைக் கண்டறிந்து, தகுந்த காரணம் இல்லாமல் அவை மூடப்பட்டிருக்குமானால், அவற்றைத் திறப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

## திருப்பணி

***31169—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் பேரூராட்சி, அருள்மிகு ஆற்றோர வெங்கட்ரமண சுவாமி கோயில் திருப்பணியைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் பேரூராட்சி, அருள்மிகு ஆற்றோர வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் அதன் முதன்மைக் கோயிலான மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம்மூலம் நிதியுதவி பெற்று திருப்பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

அடுத்து, வினா எண் 66, திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.



2008 ஏப்ரல் 8]

**66—**

## தேர்வு மையம்

***26791—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி, அணவயல் ஆகிய பள்ளிகளில் பத்தாம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அணவயல் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பத்தாம் வகுப்புத் தேர்வு மையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மட்டுமல்ல, பிற இடங்களிலும் சரி, நீண்டதூரம் சென்று தேர்வு எழுதுவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, 5 கி.மீ. அளவிற்குள் தேர்வு மையங்களை பொதுவாக உருவாக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் நான் கேட்டிருக்கின்ற அணவயல் மற்றும் வெட்டன்விடுதிக்கு நீண்டகாலமாக தேர்வு மையங்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதைப்போல என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ரெகுநாதபுரம் மேல்நிலைப் பள்ளிக்கும் 10 ஆம் வகுப்புத் தேர்வு மையம் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வியினுடைய முதல்பகுதியாக இருக்கக்கூடிய 5 கி.மீ. சுற்றளவிற்குள்ளே ஒரு தேர்வு மையம் அமைப்பது என்பது, இப்போதைய நிலவரப்படி சாத்தியம் இல்லை. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்கின்ற சக்சஸ் திட்டம் இந்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துகிறபோது, அடுத்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து 5 கி.மீ.க்கு ஒரு உயர்நிலைப் பள்ளி எல்லா இடங்களிலும் வந்துவிடும். எல்லா இடங்களிலும் தேர்வு மையம் அமைப்பது என்பது, 5 கி.மீ.க்குள்ளே சாத்தியமில்லை. இது இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலை. 20 கி.மீ.க்கு மேற்பட்டு செல்லக்கூடிய நிலை இருந்தால், உடனடியாக அங்கு அமைக்க முடியும் அல்லது மாணவர்களுடைய எண்ணிக்கை அது மாவட்டத் தலைநகரமாக இருந்தால் 200 அல்லது கிராமப்புறங்களாக இருந்தால் 150 என்பதுமான ஒரு எண்ணிக்கை இருக்குமானால், நிச்சயமாக அந்த இடத்திலே புதிய தேர்வு மையங்களை அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த வெட்டன் விடுதி, அதேபோல அணவயல் ஆகிய இரண்டு கிராமங்களில் இருக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, வெட்டன்விடுதியிலே ஏறத்தாழ 139 மாணவர்களும் அணவயலில் 122 மாணவர்களும் இருக்கிறார்கள். எனவே, அங்கே தேர்வு மையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால், அங்கிருந்து முறையான முன்மொழிவுகள் அரசுக்கு வரவில்லை. இந்த ஆண்டு புதிதாக தேர்வு மையங்கள் அமைக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கண்டிப்பாகப் பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 10 ஆம் வகுப்புத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நான் கேட்கவில்லை. சென்ற ஆண்டு இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். இந்த ஆண்டு இந்தக் கேள்விக்கு பதில் வந்திருக்கின்றது. அடுத்த ஆண்டு நிச்சயமாக இந்த மையங்களில் தேர்வு மையம் அமைத்துத் தர வேண்டும். அதனைச்





செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் எனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராயக்கோட்டை ஊராட்சி, இராயக்கோட்டையில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளி தொடங்கிய காலம் முதல், 10 ஆம் வகுப்புத் தேர்வு எழுத இராயக்கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டியுள்ளது. தற்போது 254 மாணவிகள் தேர்வு எழுதுகின்றனர். ஆகையால் மேற்படி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 10 ஆம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதேபோல, என்னுடைய தொகுதியில் பல இடங்கள் மலைப் பகுதியாக இருக்கின்றன. அப்பகுதிகளில் முன்னுதாரண அடிப்படையில், தேர்வு மையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல, மலைப் பகுதியாக இருந்தால், அங்கே 50 மாணவர்கள் இருந்தாலே போதும். மற்ற இடங்களில், 200, 150 மற்றும் 125 மாணவர்கள் என்ற ஒரு வரைமுறை வைத்திருக்கிறோம். ஆனால், மலைப் பகுதியாக இருந்தால், அங்கு 50 மாணவர்கள் மாத்திரம் இருந்தால்கூடப் போதும், அந்த இடத்திலே புதிதாகத் தேர்வு மையம் அமைப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த இராயக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தேர்வு எழுதுவதற்குரிய தளவாடங்கள், இருப்பிட வசதிகள் எல்லாம் இருக்கும் என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய மாணவிகளுடைய எண்ணிக்கையும் போதுமான அளவிற்கு இருக்கும் என்று சொன்னால், முறையான

[2008 ஏப்ரல் 8

முன்மொழிவுகளை அங்கேயிருந்து பெற்று அதற்கு ஆவன செய்ய அரசு கருதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பல பகுதிகளில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 50–க்கும் குறைவான மாணவர்கள் எண்ணிக்கையுடன்கூடிய வகுப்பறைகள் உள்ளன. எத்தனை மாணவர்கள் ஒரு வகுப்பறையில் இருந்தால் தேர்வு மையம் வழங்கப்படும் அல்லது எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட விளக்கினார்கள். 150 மாணவர்களுக்குள்ளாக, 20 கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிறப்பு நிகழ்வாக சில பகுதிகளில், 50 மாணவர்களுக்கும் கீழே இருக்கக்கூடிய பள்ளிகளுக்குக்கூட தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்று சிட்லிங், கோட்டப்பட்டி, சித்தேரி போன்ற மலைப் பகுதிகளில், பல ஆண்டு காலமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பகுதிகளுக்கு ஒரு சிறப்பு நிகழ்வாகத் தேர்வு மையத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விடையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். மலைப் பகுதிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவான பள்ளிகள் இருந்தால் அதற்கு சிறப்பு நிகழ்வு என்றுகூடத் தேவை இல்லை; ஏற்கெனவே விதிமுறைகளிலே இடமிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன என்று நீங்கள் தயவுசெய்து என்னிடத்திலே தெரிவிப்பீர்கள் என்று சொன்னால், வரக்கூடிய ஆண்டிலே தேர்வு மையங்கள் அமைக்கக்கூடிய பட்டியலை நாம் தயார் செய்கிறபோது, அத்தகைய இடங்களுக்கு நிச்சயமாக முன்னுரிமை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.



2008 ஏப்ரல் 8]

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தேர்வு மையம் அமைப்பதற்கு சில விதிமுறைகள் இருப்பதைப்போல, புதிதாகத் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசிடம் திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா? கடந்த ஆண்டிலே எவ்வளவு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டன? அஸ்திவாரம் strong-ஆக இருக்க வேண்டும். எனவே, வருகிற ஆண்டிலே தொடக்கப் பள்ளிகளுடைய எண்ணிக்கையை அதிகரிக்க திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, அனைவருக்கும் கல்வி இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக நம்முடைய தமிழகத்திற்கு நிறைய தொடக்கப் பள்ளிகளைக் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த இரண்டு வருட காலத்தில் தொடக்கப் பள்ளிகள், 1 முதல் 5 வகுப்புகளை மாத்திரம் எடுத்துக்கொண்டால், ஏறத்தாழ 500–க்கும் மேற்பட்ட பள்ளிகளை தமிழகமெங்கும் தொடங்கியிருக்கிறோம். இவைதவிர, E.G.S.—Educational Guarantee Scheme என்று சொல்லக்கூடிய கல்விக் காப்புறுதித் திட்டத்தின்கீழே, ஒரு இடத்திலே மாணவர்களுடைய எண்ணிக்கை இருக்கும் என்று சொன்னால், உடனடியாக அந்த இடத்திலே முதலில் E.G.S. தொடங்கி, பின்னாலே தொடக்கப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய முயற்சிகளை எடுத்திருக்கிறோம். ஆனால், இந்த ஆண்டிலிருந்து தமிழகத்திலே ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 300 மக்கள்தொகை இருக்கக்கூடிய இடங்களிலே ஏறத்தாழ நிறைய இடங்களிலே முழுமையாக பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால் மத்திய அரசு இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே புதிய தொடக்கப் பள்ளிகளைத் தருவது இல்லை என்று முடிவெடுத்து, அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டு புதிய தொடக்கப் பள்ளிகள் தருவதற்கு இசைவு கொடுக்கவில்லை. இருந்தாலும்கூட, தமிழகத்திலே 2007 கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சம் பேர் இன்னும் பள்ளிகளுக்கு வந்து சேர்க்கக்கூடிய நிலை இருப்பதாக நாங்கள் கண்டறிந்திருக்கிறோம். எனவே, அத்தகைய இடங்களிலே தேவை

இருக்கும் என்று சொன்னால், தொடக்கப் பள்ளிகள் கண்டிப்பாகத் தேவை என்றிருக்கக்கூடிய ஒரு நிலை இருக்குமென்று சொன்னால், தேவையினுடைய அடிப்படையில் நிச்சயமாக, மாநில அரசு முயற்சி எடுத்து இந்த ஆண்டு தேவைப்படக்கூடிய இடங்களில் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

**சீரமைத்தல்**

***41646—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தடாகம் கிராமத்தில் வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள முனைப்பா ஏரியைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தடாகம் கிராமத்தில் வனத் துறைக்குட்பட்ட முனைப்பா ஏரியை விழுப்புரம் சமூகக் காடுகள் வனக்கோட்டத்தின்மூலம் 2006–2007–ல் தமிழ்நாடு காடு வளர்ப்பு (பகுதி 2) திட்டத்தின்கீழ் தேர்வு செய்து, 2007–2008–லே உடைந்த பகுதியான 40 மீட்டர் நீளமுள்ள கரையில் சுவர் அமைத்து, ரூ.1,24,500/- செலவில் அது நிறைவேற்றப்பட்டது. இப்போது அந்த ஏரியில் தண்ணீர் நிறைந்து காணப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட தடாகம் கிராமத்தில் இருக்கிற முனைப்பா ஏரி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பெய்த பெருமழையின் காரணத்தால், வனத் துறைக்குச் சொந்தமான கரைப் பகுதியானது உடைந்து, கடந்த 2 ஆண்டுகளாக அங்கே வருகிற நீர் அந்த ஏரியில் தேங்காமல், விவசாயத்திற்கும் பயன்படாத ஒரு நிலை இருந்தது; சென்ற ஆண்டிலே இந்தக் கேள்விக்கணையை வினாவாக நான் வைத்தேன். எனவே அதன் அடிப்படையிலே அந்த ஏரியின் கரைகள் இப்போது பலப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மேலும், அந்த ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்துகின்ற விதத்தில், அதைத் தூர்வாரி, கரைகளைச் செப்பனிடுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.



முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முனைப்பா ஏரி 100 ஏக்கர் பாசன வசதி உள்ள ஏரி. அதன் வாய்க்காலின் நீளம் சுமார் 1 கி.மீ. உள்ளது. அந்தப் பகுதியை மேலும் ஆழப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் கரைகள் பலப்படுத்தப்பட்டு, தண்ணீர் தேங்குகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முனைப்பா ஏரி, அந்தப் பகுதியில் இருக்கின்ற போத்துவாய், தடாகம் உள்ளிட்ட ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படவிருக்கின்ற ஓர் ஏரி. அந்த ஏரியை இந்த ஆண்டு தூர் வாரவேண்டும். அதைப்போல தமிழகம் முழுவதும் வனத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற ஏரிகளை, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்ற விதத்தில், அந்த ஏரிகளையெல்லாம் தூர்வாரி, கரைகளைச் செப்பனிடும் திட்டம் துறையின் செயற்குறிப்பில் உள்ளதா, இந்த ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

[2008 ஏப்ரல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 4-வது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே காடு வளர்ப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியோடு தொடங்கப்பட்டு, 8 ஆண்டுக் காலங்களிலே 1,367 கிராமங்கள் எடுக்கப்பட்டு, 23,454 தடுப்பணைகளும் அதைப்போல 2,201 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு பயன்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டமாக, இப்போது இந்த மூன்றாண்டுகளில் தடுப்பணைகள் கட்டுகின்ற பணிகளைப் பொறுத்தவரை, 2005–2006–லே 1,181 தடுப்பணைகளும், 234 கசிவுநீர்க் குட்டைகளும், 2006–2007–லே 998 தடுப்பணைகளும், 235 கசிவுநீர்க் குட்டைகளும், 2007–2008–லே 982 தடுப்பணைகளும், 295 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகள் பயன்படுகின்ற வகையிலே இந்தத் துறை பணியாற்றி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

### இருவழிச்சாலை

***23—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கோட்டநத்தம்பட்டி விலக்கு முதல் வெள்ளலூர் உறங்கான்பட்டி வழியாக மதகுப்பட்டி வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோட்டநத்தம்பட்டி விலக்கு முதல் வெள்ளலூர் உறங்கான்பட்டி வழியாக மதகுப்பட்டி வரை செல்லக்கூடிய சாலை மாவட்ட இதர



2008 ஏப்ரல் 8]

சாலையாகும். இச்சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. காரணம், அந்த அளவுக்குப் போக்குவரத்து செறிவு இல்லை என்பதால் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து கரூர் வரை செல்கின்ற இருவழிப் பாதையில், நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அதை நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன். அதேபோல, கோவையிலிருந்து, சேலத்திலிருந்து செங்கம்பள்ளி வரைக்கும், தேசிய நெடுஞ்சாலையில், நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி இரண்டாண்டுகளுக்கு முன்பு தொடங்கி, இதுவரைக்கும் முடிக்காத காரணத்தினால், ஈரோட்டிலிருந்தும், சேலத்திலிருந்தும் செல்கின்ற பயணிகள் பல்வேறு விதமாக சிரமப்படுகின்றார்கள். அந்தப் பணி எப்போது முடியும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து கொடுமுடி வழியாக கரூர் செல்லக்கூடிய சாலை மாநில நெடுஞ்சாலையாகும். அந்த கொடுமுடி பகுதியில், இந்தச் சாலையில் வயல் பகுதி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே குடியேறிய ஏழை எளிய மக்கள் அதிகமாக சாலையின் ஓரத்தைப் பயன்படுத்தி வீடுகளையும், கடைகளையும் கட்டியிருந்தார்கள். எதிர்காலத்திலே அதிக அளவு போக்குவரத்து ஏற்படுமென்கிற காரணத்தினால், அங்கிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு அவை அகற்றப்பட்டிருக்கின்றன. அதேநேரத்திலே இருவழிச்சாலையில் செல்லக்கூடிய அளவில்தான் அங்கே போக்குவரத்து உள்ளது. எதிர்காலத்தில் அந்தச் சாலையில் போக்குவரத்து அதிகமாகும்பட்சத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

அதேநேரத்திலே, தேசிய நெடுஞ்சாலை எண் 47, அதாவது சேலத்திலிருந்து கொச்சி வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் எடுக்கப்பட்டு, அதை நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற பணி நடைபெற்று வருகின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கோவையிலிருந்து செங்கம்பள்ளி வரை எப்போது பணி நடைபெறும் என்று கேட்டிருக்கிறார். அந்தத் திட்டம் இன்னும் எடுக்கப்படவில்லை. அதாவது செங்கம்பள்ளியிலிருந்து கேரள மாநில எல்லை வரை, வாலையாறு செக்போஸ்ட் வரை, விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. அதற்குப் பிறகு, அந்த ஒப்பந்தப்புள்ளி கோரி, அந்தப் பணி தொடங்கப்படும். ஏற்கெனவே சேலத்திலிருந்து செங்கம்பள்ளி வரை சாலைப் பணி நடந்து வருகிறது. அதை விரைவில் முடிப்பதற்கு இந்தத் துறையின்மூலமாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணி விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சேலத்திலிருந்து கொச்சி வரை செல்கிற தேசிய நெடுஞ்சாலை எண் 47 தற்போது செங்கப்பள்ளி வரையில் பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார்கள். அதை உரிய காலத்தில் விரைவுபடுத்த வேண்டும். ஆனால், செங்கம்பள்ளியிலிருந்து கோவை வரை அந்த நிலம் கையகப்படுத்துவதிலே சில இடையூறுகள், தடைகள் ஏற்பட்டு, அந்தப் பணி தொடங்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, ஏற்கெனவே இருக்கிற பழைய பாதை செங்கம்பள்ளியிலிருந்து கோவை வரை செல்கிற அந்தப் பாதை மிகவும் பழுதடைந்த நிலையில் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. தொடர்ந்து பல விபத்துகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆகவே, அந்த நான்கு வழிச் சாலை அமைகிற வரையில், ஏற்கெனவே உள்ள பாதைகளைப் பழுதுபார்ப்பதற்குரிய நடவடிக்கைகளை நம்முடைய அரசு மத்திய அரசின்மூலமாக விரைவாக எடுத்தால், பல மனித உயிர்களைக் காப்பதற்கு அது வாய்ப்பாக அமையும். அதற்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறைமூலம் முயற்சி மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலையினுடைய நீளம் சுமார் 4,500 கிலோ மீட்டர். இதிலே 3,250 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டிருக்கிறது. மீதி இருக்கக்கூடிய 1,250 கிலோ மீட்டர் நீளமும் நம்முடைய மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினுடைய நிதியைப் பெற்று, மாநில அரசு பராமரித்து வருகிறது. இந்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு எடுக்கப்பட்டு, அது நான்கு வழிச் சாலையாகவும், ஆறு வழிச் சாலையாகவும் மாற்றுகின்ற நேரத்தில், திட்டப் பணி நடைபெறுகின்றபோது ஏற்கெனவே இருக்கிற சாலை பராமரிப்புப் பணியில் தொய்வு ஏற்பட்டது உண்மை. இந்த நேரத்தில் அதை நம்முடைய மத்திய அமைச்சகத்தினுடைய அமைச்சரிடத்தில் தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் அதனுடைய பராமரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், ஏற்கெனவே நம்முடைய திருப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலை எண் 67 கூட மிகவும் பழுதடைந்திருக்கிறது. இப்போது அந்தப் பராமரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. இடையிலே ஏற்பட்ட மழையின் காரணமாக, அந்தப் பணியில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டது. அதேபோல, கோவைக்கும் அவினாசிக்கும் இடையிலே ஏற்கெனவே பழுதடைந்திருக்கின்ற அந்தச் சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதுபோன்ற சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இப்போது பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 20, 25 நாட்களுக்குள் அந்தப் பணி நிறைவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 8

**69—**

## பட்டா

***5550—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகின்றேன். திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி கிராமத்தில், ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா விரைவாக வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பட்டா உடனடியாக வழங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டது 1981 ஆம் ஆண்டில். அப்போது விண்ணப்பித்தவர்கள் எல்லாம் இப்போது வயதாகி அவர்கள் எல்லாம் கிழவர்களாகி விட்டார்கள். வீடு கட்டி வாழலாம் என்று நினைத்தவர்களுக்கெல்லாம் வயதாகி விட்டது. 27 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வயதான காலத்தில் அவர்கள் எப்படி வீடு கட்டி வாழ்வார்கள்? எனவே, வரக்கூடிய காலங்களிலே ஆதி திராவிட மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, என்னுடைய கதிரம்பட்டி ஊராட்சியில், ஸ்ரீரங்கப்பட்டியிலே ஆதி திராவிட மக்கள் இதுவரை பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அருந்ததிய மக்கள் ஏரியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக பட்டா கேட்டு, பட்டா கிடைக்காதபடியால், இருக்கிற ஊரை விட்டு வேறு ஊருக்குப் போய்விடலாமா என்றெல்லாம் அவர்கள் முடிவு



2008 ஏப்ரல் 8]

எடுத்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய ஆதி திராவிட நலத் துறை விரைந்து பட்டா வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நிலம் கையகப்படுத்தப்பட்டு, அவை கோர்ட் கேசில் இருந்ததனால், பட்டா வழங்குவதற்குத் தாமதமாகிவிட்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகு, பயனாளிகள் தேர்வுப் பட்டியலில் 13 நபர்கள், ஏற்கெனவே நிலம் இருந்தவர்களுக்கு அந்தக் கிராம சபை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. தனி வட்டாட்சியர்மூலம் அவற்றை ஆய்வு செய்தபோது 13 நபர்களுக்கு நிலம் இருப்பதாகத் தெரிவித்து, அந்த 13 நபர்களை நிராகரித்து, மீண்டும் புதிய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 40 நபர்களுக்கும் அரசாங்கத்தின்மூலம் கூடிய விரைவில் பட்டா கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், ஸ்ரீரங்கப்பட்டியில் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதற்கும் அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. (குறுக்கீடுகள்) Don't disturb me.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழ்நாடு அளவிலே, ஆதி திராவிட மக்கள் மற்றும் பழங்குடி மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? அதிலே பட்டா வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த ஆண்டில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்களால்

வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 418 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 27.47 இலட்சம் செலவு செய்யப்பட்டு ஆதி திராவிடர்களுக்கு 340 பட்டாக்களும், பழங்குடி இன மக்களுக்கு 113 பட்டாக்களும் ஆக மொத்தம் 453 வீட்டுமனைப் பட்டாக்கள் வேலூர் மாவட்டத்தில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் ஒரு தாலுகா தலைநகரம். அந்த ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற தனி தாசில்தார் அவர்கள், incharge-ஆக அங்கே இருக்கின்றார்கள். காஞ்சிபுரத்தில்தான் அவர்களுடைய பெரும் பகுதியான பணிகள் இருக்கின்றன, மாவட்டத்திலே. ஸ்ரீபெரும்புதூருக்கு என்று தனி தாசில்தார் பதவி ஏற்படுத்தி, ஆதி திராவிட மக்களுக்கு முழுமையாக பட்டா வழங்குவதற்குரிய வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக காஞ்சிபுரம் வட்டாட்சியர்மூலமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 12 இலட்சம் செலவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, 2007–2008 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூபாய் 6.65 இலட்சம் செலவில், தலைவர் கலைஞர் அவர்களால் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தால் அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்தி அவர்களுக்கு அளிக்கும்போது அந்த நிலச்சுவான்தார்கள் தடையாணையை நீதிமன்றங்களிலே வாங்கிவிடுகிறார்கள். இது தமிழகம் முழுவதும் வாடிக்கையாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எப்படி நெடுஞ்சாலைத் துறையிலே தடையாணை வாங்கமுடியாதோ, அப்படி வாங்கினால் அந்தத் தடையாணையை எப்படி அகற்றுகிறார்களோ அப்படி நிரந்தரமாக ஏழையெளிய மக்களுக்கு அரசு நிலம் கையகப்படுத்தும்போது தடையாணையை வாங்கினால் அதை உடனே அகற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் தனியாரிடம் பேச்சு வார்த்தை மேற்கொண்டு அவர்கள் தடையாணை பெறாத அளவிற்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆலோசனையின்படி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு தடையாணை பெறாத அளவிற்கு துறையின்மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், தேவலாபுரம் ஊராட்சியில் உள்ள, இராமச்சந்திராபுரம் பகுதி மக்களும், மேல் சாணாங்குப்பம் ஊராட்சி, பாண்டிச்சேரி பகுதியில் இருக்கின்ற மக்களும் நீண்டகாலமாக வீட்டுமனைப் பட்டா வேண்டி ஏற்கெனவே, மாவட்ட துணை ஆட்சியர் அவர்களிடத்திலும், தனி வட்டாட்சியர் அவர்களிடத்திலும் மனுக்களைக் கொடுத்து கேட்டுவருகின்றார்கள். அவர்களுக்கு இதுநாள் வரையில் அந்த

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால் நிலங்களை கையகப்படுத்தி கொடுக்கவேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்களேயொழிய. இதுவரை நிலங்களை கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, ஏழையெளிய மக்களுக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த தேவலாபுரம் ஊராட்சியில் இருக்கின்ற அந்த மக்களுக்கும், மேல் சாணாங்குப்பம் ஊராட்சியில் இருக்கின்ற மக்களுக்கும் விரைவில் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அந்தப் பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுப்பதற்கு அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும். புறம்போக்கு நிலங்கள் இல்லாத பகுதிகளில் தனியார் நிலம் இருந்தால் பேச்சுவார்த்தை மூலமாக அதைக் கையகப்படுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும், அரசின் வழிகாட்டுதலின்படி அந்த இடம் கையகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் *10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

## மீன்வளக் கூட்டுறவுச் சங்கம்

***8957—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்தில் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மீன் வளத் துறையில் மீனவ மகளிருக்கென கூட்டுறவுச் சங்கங்கள் தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அச்சங்கங்களில் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர வழிவகை உள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவிற்கு மட்டுமே உரிமை உள்ளது எனத் தீர்ப்பு வழங்கியுள்ளதால் வாக்களிப்பது, தேர்தலில் பங்கேற்பது ஆகிய உரிமைகள் இல்லாத இணை உறுப்பினர்களைச் சேர்ப்பது தொடர்பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கடித எண் 30558, நாள் 24–11–2006–ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் மீனவர்களை இணை உறுப்பினர்களாகச் சேர்க்க தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே மீனவ மகளிரும் இணை உறுப்பினர்களாகச் சேர்ந்து உறுப்பினர்களுக்கு உரிய அரசினுடைய நலத் திட்ட உதவிகளையும், கடன்களையும் மற்றும் சேவைகளையும் பெறலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் ஆண்கள் பிடித்து வரும் மீன்களை முழுமையாக விற்பனை செய்வது, பதப்படுத்துவது, காய வைப்பது ஆகிய பணிகளைப் பெண்கள்தான் தலைமேல் சுமந்து செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்தில் பெண்கள் இணை உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவர், அரசு திட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு என்று ஒரு தனி மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து அவர்களை முழு உறுப்பினர்களாக ஆக்க வேண்டும். முழு உறுப்பினர்களாக இணைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்து. அதற்கு நமது அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் இந்த நோத்திலே அறிய விரும்புவதோடு. நல வாரியத்தில் பெண்களையும் முழுமையாகச்

[2008 ஏப்ரல் 8

சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 382 இயங்கி வருகின்றன. அதிலே 1,46,239 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதேபோல உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே 84 இருக்கின்றன. அதிலே மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் 10,784 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளமுடியாது என்கின்ற ஒரு நிலையினை மாற்றித்தான் இணை உறுப்பினர்களாக, தற்காலிக உறுப்பினர்களாக, தேர்தல் நடத்தப்படும் வரை தற்காலிக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு அவர்களும் அரசினுடைய உரிய சேவைகளைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் தேர்தல் வருகிற வரையில் தற்காலிகமாக அவர்களை உறுப்பினர்களாக இணைத்துக்கொள்வதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே முழுக்க முழுக்க அவர்களை முழு உறுப்பினர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் நான் வலியுறுத்தி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக அவர்கள் இணை உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டாலும்கூட, நிரந்தர உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்துச் சலுகைகளுமே அவர்களுக்குக் கிடைக்கும்.



2008 ஏப்ரல் 8]

உயர் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருப்பதனால் அந்தத் தடையாணை நீங்கிய பிறகு அந்தத் தீர்ப்புப்படி, அதாவது தேர்தல் நடந்ததற்குப் பிறகு அவர்கள் நிரந்தர உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கிடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) திருவட்டாறு தொகுதி, குலசேகரம் பகுதி, இடி, மின்னல் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் 7—4—2008 அன்று இடி, மின்னலுடன் பெய்த பெருமழையில் இடி தாக்கி, இருவர் உயிரிழந்து, மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், விதி 55—ன்கீழ் சிறப்புக் கவன ஈர்ப்பாக அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையில், திருவட்டாறு தொகுதியில் குலசேகரம் பகுதியைச் சேர்ந்த திரு. ஏசுராஜ், 26 வயது, திரு. நாகேந்திரன், 40 வயது, ஆகிய இருவர் உயிரிழந்துள்ளனர். ஏழைக் கூலித் தொழிலாளி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், வருமானம் ஈட்டி வந்தவர்கள். மேலும் 3 பேர் ஒரு கல்லூரி மாணவி உட்பட, அனிதா, சஜிதா, ஆசீர்வாதம் ஆகிய மூவரும் படுகாயம் அடைந்து தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே,

உயிரிழந்தவர்கள் இளம் வயதினர்கள் என்பதைக் கணக்கில் எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியில் இருந்து ரூ.1 இலட்சம் என்பதை அதிகரித்து வழங்கவும், மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமாயும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, குமரி மாவட்டத்தில், திருவட்டாறு தொகுதியில் 7-4-2008 அன்று இடி, மின்னலோடு பெய்த பெருமழையில், இடி தாக்கி இருவர் உயிரிழந்து, மூவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டுள்ளார்கள். உயிரிழந்த இருவருடைய குடும்பத்திற்கும், தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் குடும்ப நிதி வழங்கப்படும் என்பதையும், இடி தாக்கி காயமுற்றுள்ள, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டுள்ள மூவருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடிப் பார்வையில் உரிய சிகிச்சைகள் அளித்து, அந்தச் சிகிச்சைக்குத் தேவைப்படுகிற தொகை, நிதியையும் அரசின் சார்பாக வழங்குவார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** நிவாரண நிதியை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

## (ஆ) பேரவையில் ஏற்பட்ட மின் தடை

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்ன விஷயம்? (குறுக்கீடு) சொல்லிவிடுங்கள், சொல்லிவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன், ஒரேயொரு நிமிடம். 10-24 மணிக்கு இந்த அவையிலே திடீரென்று மின் வெட்டு ஏற்பட்டு கடிகாரங்கள் எல்லாம் Light off ஆகியிருக்கின்றன. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருக்கு இது தெரியுமா? ஏன் இந்த மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது? அவைக்கு அவர் விளக்குவாரா?



## 4. கவன ஈர்ப்பு

### உடுமலைப்பேட்டையிலிருந்து கேரளா செல்லும் சாலையில் தளி ரோடு இரயில்வே மேம்பாலத்தை விரைவில் கட்டி முடிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

உடுமலைப்பேட்டை மற்றும் கோமங்கலம் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே கி.மீ. 92/16-17-ல் உடுமலைப்பேட்டை சின்னாறு சாலையில் கி.மீ.1/2-ல் அமைந்துள்ள இருப்புப் பாதை கடவு எண் 95-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு அரசு ஆணை (நிலை) எண் 210, நெடுஞ்சாலை (எச்க்யூ.2) துறை, நாள் 11-10-2006 மூலம் ரூ.12.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. திட்ட விளக்க அறிக்கை தயாரிப்பதற்கு திட்ட ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அந்நிறுவனம் தயாரித்த நெடுஞ்சாலைத் துறையின் நேர்பாட்டு வரைபடமானது இரயில்வே துறைக்கு அனுப்பி இசைவு பெற்ற பின்னர் வடிவமைப்புகள் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. திட்ட ஆலோசகர் இப்பாலத்தின் வடிவமைப்புகளைத் தயாரிப்பதற்கான மண் பரிசோதனையினை முடித்த பின்னர் வடிவமைப்புகள் தயாரிக்கும் பணியையும் நிறைவு செய்துள்ளார். மேலும், இப்பணிக்கு சரிபார்க்கும் ஆலோசகர் (Proof Consultant) நியமிக்கப்பட்டு வடிவமைப்புகள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. வடிவமைப்புகள் சரிபார்க்கும் பணி நிறைவு பெற்றவுடன் மே 2008-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி முடிவு செய்த பின் பணிகள் தொடங்கப்படும்.

[2008 ஏப்ரல் 8

## 5. மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 — கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.85,38,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 12, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 224, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2008 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 959, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2902, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3542, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4376, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4407, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4738, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7262, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 212, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 946, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1135, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1456, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1711, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1778, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2123, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5188, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7302, திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 264, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 394, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 575, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 657, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1013, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2015, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3378, திரு. தி. வேல்முருகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4613, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6133, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6958, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8343, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3101, திரு. ப. டில்லி பாபு.



**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6013, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 90, திரு. டி. இராமச்சந்திரன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 754, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 788, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் தேர்தல்களை உடனே நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 886, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து முறைப்படி தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 968, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1306, திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1374, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1428, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1440, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1575, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 1818, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1871, திரு. தா. மலரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2360, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் வட்டம், மொரசப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை மீண்டும் புனரமைத்திடும் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2431, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2663, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறையில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2696, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3012, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3226, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3499, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியிலுள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் டி.ஏ.பி., சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங்களைத் தட்டுப்பாடில்லாமல் வழங்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3571, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3897, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3961, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4143, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயலாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் மாறுதல் செய்து, நிர்வாகத்தைச் சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4187, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4447, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4472, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு காலதாமதம் இல்லாமல் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4509, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4773, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4928, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அனைத்து விதப் பணியாளர்களையும் வரன்முறை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4972, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் பணியாற்றி வரும் பல்வேறு கூட்டுறவு அமைப்பில் ஊழியர்களாக இருப்பவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5894, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தலை காலதாமதமின்றி நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6051, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6583, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6643, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6688, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6737, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கத்தில் ஏழை எளிய விவசாயிகளின் நலன் கருதி ஆங்காங்கே கூட்டுறவு அங்காடிகளை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7032, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனநாயக முறையில் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7050, திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7175, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7287, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7289, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7528, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7729, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் இருந்த கூட்டுறவுப் பண்டகசாலை கலைக்கப்பட்டுவிட்டது. அதில் பணியாற்றிய ஊழியர்களின் வைப்புத் தொகை மற்றும் இதர உதவித் தொகையை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7792, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7857, திரு. சு. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8029, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணிபுரியும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களுக்கு பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8144, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளிலும் மாணவர்களின் நலன் கருதி கல்விக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8409, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8433, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளுக்குத் தனியாக தேர்தல் ஆணையம் அமைத்து வங்கிக் கடன் வழங்க ஏதுவாக மத்திய அரசு நிதி பெற உடனடியாக கூட்டுறவுத் தேர்தலை தமிழக அரசு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8506, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "H.D.C. மற்றும் D. Co-op. பயிற்சிப் படிப்பு முடித்த ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8792, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 13 — உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

## (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.900,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 13, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 225, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 958, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2875, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4375, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4735, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7260, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 104, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 373, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 383, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 565, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 697, திரு. த.அ. மேகநாதன்.



**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1084, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2011, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3388, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4635, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6370, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6961, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8366, திரு. டி. மூர்த்தி.



**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 947, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1126, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1442, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1457, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1707, திரு. செ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1767, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2243, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5180, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7300, திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3080, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7531, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6015, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 124, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 785, திருமதி பி. பத்மாவதி.



**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்ப அட்டை பெற விண்ணப்பம் அளித்தவர்களுக்கு தாமதமின்றி அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 818, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரிசி கடத்துபவர்கள்மீது மிகவும் கடுமையான தண்டனை அளிக்கும்விதமாக சட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 969, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1228, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1305, திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1366, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1421, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1471, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனி நபர் குடும்ப அட்டை வாபஸ் பெறப்பட்டதைத் தடுத்து மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1492, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, சாத்தாங்காடு ஊராட்சியில் உள்ள வெட்டிக்காடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1752, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1791, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1882, திரு. தா. மலரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1917, திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2102, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2368, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடுமையாக உயர்ந்துவரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திடவும் பொது விநியோக முறைத் திட்டத்தினை வலுப்படுத்திடவும் நியாய விலைக் கடைகளில் மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியமான 14 வகையான பொருட்களை நிரந்தரமாக விநியோகம் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2527, திருமதி இளமதி சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2538, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் நகரில் நியாய விலைக் கடை எண் 1, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நியாய விலைக் கடையை அரசுக்குச் சொந்தமான கட்டடம் கட்டி இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2664, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நுகர்வோருக்கு விழிப்புணர்வை அதிகரிக்கவும் முறைகேடுகளைக் களையவும் விளம்பரம் செய்வதை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2697, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2982, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி பகுதியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3005, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி தாலுகா, சிலட்டூர் கிராமத்தில் இருக்கும் அமுதம் அங்காடிக்குக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3273, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3463, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதி, சோழசிராமணி பகுதி மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் பெற்றிட நியாய விலைக் கடை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3543, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதியில் குடும்ப அட்டைகள் விரைவாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3862, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3907, திரு. சுப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3958, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4140, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து நியாய விலைக் கடைகளிலும் எடை குறையாமல் பொருட்கள் வழங்கும் வண்ணம் பாக்கெட்டுகளில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4409, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, அய்யனூர் பேரூராட்சியில் பாலார் தோட்டம், கக்காவளி, கணவாய்பட்டி உள்ளடக்கிய மலைப் பகுதி மக்களுக்கு கிணத்துப்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4445, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டந்தோறும், மாதத்தில் 1 நாள் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்துவதுபோல், நுகர்வோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4447, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குக்கிராமத்தில் 100 கார்டுகளுக்குக் குறைவாகவும், அதிக தூரத்திலும் இருந்தால் அங்கு பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4517, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4772, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4930, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கும் பொருட்கள் எடை குறையாமல் இருக்க பாக்கெட்மூலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4951, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4955, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோக முறையைப் பலப்படுத்த அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் பாக்கெட்டுகளில் அடைத்து விநியோகம் செய்ய



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5895, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியோதயா அன்னயோஜனா திட்டப் பயனாளிகளின் குடும்ப அட்டையில் இரண்டு நபர்கள் மட்டும் இருந்தால் அந்தத் திட்டம் இரத்துச் செய்யப்படுகிறது. இதைக் கைவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6063, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6531, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6614, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6692, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6925, திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7031, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தொகுதியில் புதிய நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7151, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் புதிய குடும்ப அட்டைகள் மற்றும் தொலைந்துபோன குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7291, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7325, திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7370, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7447, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 7512, திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7703, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, வேடிச்சிக்காடு பகுதியில் பகுதி நேர பொது விநியோகக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7849, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் நிறைய குடும்ப அட்டைகள் உள்ள இடங்களில் கார்டுகளைப் பிரித்து புதிய நியாய விலைக் கடைகளைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7858, திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8084, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8039, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8143, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சிப் பகுதி, மோட்டுப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8371, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8535, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதியில் பல நியாய விலைக் கடைகளில் ஒரே ஒரு விற்பனையாளர் என்பதைத் தவிர்த்து மேலும் கூடுதலாக ஒரு பணியாளர் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8607, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8784, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8962, திரு. எஸ். ஜெயபால்.



**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலமாகச் செயல்படும் பொது விநியோகக் கடைகளில் உதவியாளர்கள் இல்லாததால், பொது விநியோகக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை வாங்கச் செல்லும் நுகர்வோர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. விற்பனையாளர் மட்டுமே இருந்து வாடிக்கையாளர்களுக்கு விரைவில் பொருட்களை வழங்க இயலவில்லை. எனவே, உதவியாளர்கள் இல்லாத பொது விநியோகக் கடைகளில் உடனே உதவியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,59,78,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**@மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

---

@ 185 முதல் 227 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின் என்னுடைய பதிலுரையிலே அவற்றுக்குரிய விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். இருக்கையில் இல்லை. அடுத்து திரு. ஜாண் ஜேக்கப்.

***திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படைத்த, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு கூட்டுறவே நாட்டுறவு, அது மக்களின் இதய உறவு என்பதையும், அதிலே என்னுடைய உணர்வுகளையும் பிரதிபலிக்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துவிட்டு, என்னுடைய கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துவிட்டு, உரையைத் தொடங்குகிறேன்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்ற உயரிய சிந்தனைகளை நம்மிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிற அமைப்பு கூட்டுறவுத் துறை என்பதில் இருவேறு கருத்துகளுக்கு வாய்ப்பில்லை என்பது எனது

@@ 229 முதல் 281 வரையிலான பக்கங்களில் இணைப்பு–II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கருத்து. இந்தக் கூட்டுறவுத் துறையிலே நீண்டகாலமாகவே சில குறைகளும் மிகுந்து வருவதும், இதனால் பல இடங்களில் கூட்டுறவுத் துறையானது நலிவடைந்து வருவதும் வருத்தத்திற்குரிய ஒன்று. நல்ல பல திட்டங்களை அரசு தீட்டினாலும், அரசு செயல்படுத்தினாலும், நெற்பயிர்களுக்கிடையே களைகள் வளர்ந்து நெற்பயிருக்குக் கிடைக்க வேண்டிய உரத்தைச் சாப்பிட்டுவிடுவதுபோல, அரசின் நலத் திட்டங்களை களைகளாக விளங்கும் சிலர் சாப்பிட்டுவிடுவதால் அவை மக்களுக்கு அதுவும், குறிப்பாக தகுதியான மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் அரசின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் களைகளால்தான் அரசுக்கும், அரசின் திட்டங்களுக்கும் நற்பெயரை ஈட்டிட முடியவில்லை என்பதையும், இந்தக் களைகள் நீண்ட காலமாக வளர்ந்துவிட்டதால் உடனே இவற்றை ஒரே நாளில் அல்லது ஒரே மாதத்தில் அல்லது ஒரே ஆண்டில் அகற்றுவது சிரமமான காரியம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கூட்டுறவுக் கொள்கையில் அடிப்படையானதும் முதலாவதாகவும் அமைந்திருப்பது தகுதியானவர்கள் தன்னிச்சையாக தடையின்றி உறுப்பினராகுதல் ஆகும். 18 வயது நிரம்பிய அடிப்படைத் தகுதிகள் படைத்த ஒருவர் இன்று உறுப்பினர் ஆக முடியவில்லை. இதனால் தகுதியான இலட்சக்கணக்கான மக்கள் அரசின் உதவிகளைப் பெற முடியவில்லை. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகளை அறிந்து இதேபோல் செயல்படுத்தத் தொடங்கிய கேரள மாநிலம் இன்று பிற மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய அளவுக்கு வளர்ந்துள்ளது. இதற்கு ஜனநாயக ரீதியிலான அமைப்புகள் இல்லாததும் ஓர் குறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும். எனவே, கூட்டுறவுத் துறைக்கென தனித் தேர்தல் ஆணையம் அமைத்து நேர்மையான முறையில் தேர்தல் நடத்தி கூட்டுறவிலும் ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்ய வேண்டுமென்பது எனது பணிவான கோரிக்கைகளில் ஒன்றாகும்.

குமரி மாவட்டத்தில் 114 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இதில் 75 சதவீத வங்கிகளும் நலிந்த நிலையிலேயே உள்ளன. சில வங்கிகள் மூடுவிழாவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றன. ரீத்தாபுரம், மெதுகும்மல் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வங்கிகள் மூடப்பட்டுவிட்டன. எனவே, அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு நலிவடைந்த வங்கிகள்

சிறப்பாகச் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

குமரி மாவட்டத்தில் தக்கலை, முன்சிறை, தோவாளை, அகஸ்தீஸ்வரம், திருவட்டாறு ஆகிய இடங்களில் ஐந்து நில வள வங்கிகள் செயல்பட்டு வந்தன. தற்போது தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இவ்வங்கிகள் பண்ணைசாராக் கடன்கள் வழங்கி வந்தன. கடந்த பத்து ஆண்டுகளாக எந்தக் கடன்களும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. நகைக் கடன்கூட நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன்களை வசூலித்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. அப்படியானால் இந்தச் சங்கங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதுபோல இம்மாவட்டத்தில் 20 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் நிலையும் இதுபோல்தான் உள்ளது.

தமிழக அரசு வழங்கிய வீட்டு வசதிக் கடன் தள்ளுபடி திட்டத்தில் இத்துறைப் பணியாளர்கள் சிலர் முறைகேடுகள் செய்திருப்பதாக பொதுமக்களால் பேசப்படுகிறது. எனவே, தள்ளுபடித் திட்டத்தில் பயனடைய வேண்டிய பயனாளிகளை இதரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, உண்மையான பயனாளிகள் பயன்பெற அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கியானது, மத்திய அரசு கொண்டு வந்த கல்விக் கடனை இதுவரை யாருக்கும் வழங்கியதாகத் தெரியவில்லை. இதுபோல் வாகனக் கடன், பண்ணைசாராக் கடன்களின் நிலையும் இதுதான். இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் கடன் கொடுத்து வருகிறது. இதற்கு யார் காரணம் என்பதை அறிய மக்கள் மிகுந்த ஆவலாக உள்ளனர்.

கூட்டுறவு ரேஷன் கடைகளில் கிராம நிர்வாக அதிகாரி, தாசில்தார், மாவட்டக் கலெக்டர், கூட்டுறவு அதிகாரி எனப் பல்வேறு துறை அதிகாரிகள் ஆய்வு செய்தும் யாருக்காவது சரியான எடையில் உணவுப் பொருட்கள் கிடைக்கின்றனவா என்றால் அதுதான் இல்லை.



இதுபற்றி ரேஷன் கடை விற்பனையாளர்களிடம் கேட்டால் "நுகர்பொருள் வாணிபக் கிட்டங்கியிலிருந்து ரேஷன் கடைக்கு அரிசி, சீனி வரும்போது ஒரு மூட்டையில் 2 கிலோவிலிருந்து 5 கிலோ வரை எடை குறைவாகக் கிடைக்கிறது. இந்த 5 கிலோ குறைவான அரிசியை அல்லது சீனியை எங்கள் வீடுகளிலிருந்தா கொண்டு வந்து கொடுக்க முடியும்? நாங்கள் பொதுமக்களிடம்தான் வெட்டியாக வேண்டும். இதனால் பயந்து பயந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. எங்கள் கழுத்தின்மீது கத்தி தொங்கிக் கொண்டிருப்பதாக நினைத்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சம்பளமும் மிகக் குறைவு. எங்களது இந்த நிலைமை ஆய்வு செய்ய வரும் அனைவருக்கும் தெரியும். இந்தக் கிட்டங்கியில் இருப்பவர்களுக்கு இவ்வாறு கிடைக்கும் அரிசி வெளி மார்க்கெட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுகிறது" எனக் கூறுகிறார்கள். அதுபோல, சர்க்கரை ஆலையிலிருந்து வரும் சீனியில் மூட்டைக்கு ஒரு கிலோவிற்கு மேல் குறைவாக வருவதாக கிட்டங்கிக்காரர்கள் கூறுகிறார்கள். அரசு இதை ஆய்வு செய்து சம்பந்தபட்டவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதில் சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நுகர்பொருள் வாணிபக் கழக ரேஷன் கடைகளில் வருடத்திற்கு ஒரு நாள்கூட ஆய்வு செய்வார்களா என்பது சந்தேகம். இவர்களுக்கு அரசு ஊழியர் சம்பளம், கூட்டுறவு ரேஷன் கடை பணியாளர்களுக்கு ஐந்து வருட பணிமூப்பு உடையவர்களுக்கும், 35 வருட பணிமூப்பு உடையவர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்கப்படுகிறது. பணிமூப்பு உடையவர்களுக்கு இதர துறைகளைப்போன்று சம்பளம் உயர்த்த வேண்டும். அதுபோல் இவர்களுக்கு மருத்துவ அலவன்ஸ் இல்லாதது வேதனையானது. கூட்டுறவு ரேஷன் கடைக்காரர்களுக்கும், நுகர்பொருள் வாணிபக் கழக ரேஷன் கடைக்காரர்களுக்கும் ஒரே பணிதான். ஆனால், சம்பளம் இருவேறு விகிதங்கள். நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்பதெல்லாம், கூட்டுறவுத் துறை பணியாளர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக்க வேண்டும். இதுபோன்று ரேஷன் கடைப் பணியாளர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்க வேண்டும். உணவுப் பொருட்களைப் பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்ய வேண்டும். இதனால் யாரும் ஊழல் செய்ய முடியாது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கூட்டுறவுத் துறையில் குமரி மாவட்டத்தில் ஏராளமான பணிக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு அறை என்று ஒன்று தொடங்கப்பட்டு இருக்கிறது. அது கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம் அல்லது மாவட்ட வழங்கல் அலுவலகத்திலே ஒரு கட்டுப்பாட்டு அறையை இப்பொழுது தொடங்கியிருக்கிறோம். இதுபோன்று எங்கேயாவது குறைபாடு இருந்தால்—ஏனென்று சொன்னால், நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து நேரடியாக அங்காடிகளுக்கெல்லாம் இப்பொழுது சரியாக அரிசி அளவு கொடுக்கப்படுகிறது. பல இடங்களிலே, மாநில அளவிலே இருக்கிற ஆணையாளர்கள், செயலாளர், நான் முதற்கொண்டு நேரடியாக லாரியிலே போகிற பொருட்களை எடுத்துக்கூட நாங்கள் எடை போட்டுப் பார்க்கிறோம், சரியாக இருக்கிறது. ஆனால், விற்பனையாளர்கள் ஏதாவது சம்பந்தம் இல்லாமல் கூட்டுறவு வங்கியிலேயிருந்து வருகிறது அல்லது நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து குறைவாக வருகிறது என்று சொல்கிறார்கள்.——அதைக் களைவதற்காகத்தான் இப்பொழுது கட்டுப்பாட்டு அறை என்று தொடங்கியிருக்கிறோம். பொதுமக்கள் ஒவ்வொரு கடைகளிலும் பார்த்தால், எண்கள்கூட போட்டு இருக்கிறோம். எந்த அதிகாரியைத் தொடர்புகொள்ள வேண்டுமென்று எண்களும் போடப்பட்டிருக்கின்றன. எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் பொது நிகழ்ச்சிகளுக்குப் போய்ப் பேசுகிறபோது, 'ஒவ்வொரு அங்காடியிலும் இப்படி எண்கள் இருக்கின்றன; ஏதாவது தவறு இருந்தால் உடனே அந்த அதிகாரியைத் தொடர்புகொள்ளுங்கள்' என்று சொல்லலாம். அவற்றை 24 மணி நேரத்திற்குள்ளே இந்தத் துறை பரிசீலனை செய்து உடனே ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–05*

இன்னொன்று, விற்பனையாளர்கள் சம்பளம் குறைவு என்று சொன்னார்கள். அது கடந்த காலங்களிலே இருந்தது. கிட்டத்தட்ட 1,300 ரூபாய்தான் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இதனை ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவின் அறிக்கையின்



அடிப்படையிலே இப்போது கூட்டுறவிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற—15 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள்கூட 1,300 ரூபாய், 1,500 ரூபாய்தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. கோ.க. மணி அவர்களும் சென்றமுறை சட்டமன்றத்திலேகூட இதற்காகக் குரல் கொடுத்தார்கள். அதனால்தான் குழுவே அமைக்கப்பட்டது. குழு அமைத்து கூட்டுறவிலே வேலை செய்கின்ற—விற்பனையாளர்களுக்கு 1,300 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு கிட்டத்தட்ட 3,072 என்றும், 3,000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு வருகிற காலங்களிலே ரூபாய் 5,786 அளவிற்கு சம்பளத்தை அதிகப்படுத்த ஏற்பாடு செய்துவிட்டோம். அதோடு மட்டுமல்ல. அதுகூட கொஞ்சம் குறைவாக இருக்கிறது, 10 ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர்கள், ஓரே மாதிரியாக இருக்கிறது. 5 ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர்களுக்கெல்லாம் ஓரே மாதிரியாக சம்பளம் இருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டைக்கூட நம்முடைய பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதன்விளைவாக 5 ஆண்டு, 10 ஆண்டு, 15 ஆண்டு என்று பணி மூப்பு அடிப்படையிலே, அவர்களுக்கெல்லாம் increment கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு தினங்களிலே இந்தத் துறையின் சார்பாக அதற்கான ஆணை வரவிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** விளக்கம் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கூட்டுறவுத் துறையிலே குமரி மாவட்டத்தில் ஏராளமான காலிப் பணியிடங்கள் உள்ளன. மத்தியக் கூட்டுறவு வங்கி முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வரை அனைத்து கூட்டுறவு வங்கிகளிலும் உள்ள காலிப் பணியிடங்களையும் நிரப்பி, மக்களின் அபரிதமான வாழ்த்துக்களையும் அரசு பெற வேண்டுமென்று மிக்க மகிழ்ச்சியோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அவற்றை எப்படி நிரப்பலாம் என்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தச் சங்கம் அந்தப் பணத்தைச் செலுத்த வேண்டும்; அல்லது அரசாங்கம் செலுத்த வேண்டும். அரசாங்கம் இதுவரை துறைக்காக கொடுத்திருக்கிற தொகையை கணக்கில் எண்ண முடியாது. அவ்வளவு இருக்கும்போது விரைவாக அந்தச் சங்கங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** அடுத்ததாக, அரசாணை 2ட்டி எண் 108, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 31–8–2005 மற்றும் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 14, உட்பிரிவு 1–ன்கீழ் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன. 29 கூட்டுறவு ஒன்றியப் பணியாளர்களையும், கூட்டுறவு மேலாண்மைப் பணியாளர்களுடன் இணைத்து கூட்டுறவின் சிறப்புகளையும் பிரச்சாரம் செய்தால் இத்துறையின் மகத்துவத்தை மக்கள் அறிந்துகொள்வார்கள் என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குமரி மாவட்டத்தில் 70 ஆயிரம் குடும்பங்கள் வாழை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் இயற்கையுடன் போராடும் விவசாயிகள் பட்டியலில் முதலில் இருப்பவர்கள் இவர்கள்தான். அடிக்கடி ஏற்படும் இழப்புகளால் இவர்கள் இத்தொழிலை மறக்கும் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நாளடைவில் குமரி மாவட்டத்தில் பனை விவசாயம் மறக்கப்பட்டதுபோல இந்த விவசாயமும் அழியலாம். இதனால் நம் நாட்டுக்கு கிடைக்கும் பல நூறு கோடி அந்நியச் செலவாணியும் இழப்பு ஏற்படும். காரணம், குமரி மாவட்டத்திலிருந்து நேந்திரன், செவ்வாழை, ரெஸகதளி போன்ற வாழைப்பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே இவர்களுக்குத் தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இலவச வாழைக் காப்பீடு, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், கடன்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'கிட்ஸ்' என்ற தொண்டு நிறுவனத்தின்கீழ் வாழை விவசாயிகள் செயல்பட்டு அரசை வலியுறுத்தி வருகிறார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



குமரி மாவட்டத்தில் 145 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இதில் குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர வேறு எதுவும் இலாபத்தில் இயங்குவதாகத் தெரியவில்லை. இச்சங்கத்திற்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. நகைக் கடன் வழங்குகிறது. ஆனால் பாதுகாப்புப் பெட்டக வசதி இல்லை. சொந்தக் கட்டடம் உள்ளது. ஆனால் எந்நேரத்திலும் இடிந்து விழும் அபாயமான நிலையில் உள்ளது. எனவே, புதியக் கட்டடம் கட்ட வேண்டும். இதர சங்கங்களின் நிலைமை வருத்தமான நிலையில் உள்ளது. பணியாளர்கள் அனைவரும் தினக்கூலிகளாக உள்ளனர். பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை. பணியாளர்களுக்கு சட்டப்படி வழங்க வேண்டிய ஊதியம் வழங்கப்படவில்லை. நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம் இவர்களுக்கு சட்டப்படி வழங்க வேண்டிய ஊதியத்தை வழங்க வேண்டும்.

முற்பகல் 11–10

தமிழக அரசு கூட்டுறவுத் துறையின்மீது தீவிர நடவடிக்கை எடுத்து, கூட்டுறவுத் துறையை தமிழகத்தின் மிளிரும் துறையாக மாற்ற வேண்டும். பல்வேறு சாதனைகள் படைத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழக மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வரும் தமிழக முதல்வர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், கூட்டுறவுத் துறைக்கு அதிக மானியம் வழங்கி இத்துறையை ஜொலிக்கச் செய்ய வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நெசவுத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் வாரத்திற்கு ஒரு நாளாவது கதர்த் துணிகளான வேட்டிகள், சட்டைகள், சேலைகள் கட்டாயமாக அணிய வேண்டுமென்று அறிவுறுத்தலாம். இதனால் தமிழகத்திலுள்ள நெசவுத் தொழில் செய்யும் குடும்பங்களின் வாழ்வில் ஒளியேறும்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் ஐயாயிரமாவது கிடைக்கும் வகையில் ஊதிய நிர்ணயம் செய்தால் இத்துறைப் பணியாளர்களும், அவர்களது குடும்பத்தார்களும் தங்களிடம் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்ததாக, குமரி மாவட்ட மக்களின் குமுறல் குரல் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1-11-1956 ஆம் நாள் நாங்கள் கண்ணீரும், செந்நீரும் சிந்தி தாய்த் தமிழகத்துடன் இணைந்தோம். 11 பேரைப் பலி கொடுத்தோம். துப்பாக்கிக் குண்டுகளையும், தடியடிகளையும் பஞ்சு மெத்தையாக ஏற்றோம். மாவீரன் மார்ஷல் நேசமணி, பொன்னப்ப நாடார் என எண்ணற்ற தியாக சீலர்களின் உழைப்பினால் தாய்த் தமிழகத்துடன் இணைந்தோம். இன்று நாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகிறோமோ என்ற கவலை எங்களுக்கு வந்துள்ளது.

இன்று எத்தனையோ சிரமங்களை ஏற்று கல்வி கற்றாலும் வேலைவாய்ப்பில்லை. தமிழகத்திலே வேலையில்லாத இளைஞர்கள் குமரி மாவட்டத்தில்தான் அதிகமாக உள்ளனர். வேலை வாய்ப்பு வழங்க எந்தத் தொழிற்சாலைகளும் இங்கு இல்லை. பிற மாவட்டங்களுக்குச் சென்று வேலை தேடும் உரிமையும் எங்களுக்கு இல்லை. காரணம், அந்தந்த மாவட்டத்தவர் அந்தந்த மாவட்டத்திலேயே வேலை தேடிக் கொள்ள வேண்டும் என்ற கறுப்புச் சட்டத்தால் குமரி மாவட்ட இளைஞர்கள் வேலை இல்லாமல் தவிக்கின்றனர். எடுத்துக்காட்டாக ஒன்றை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பெற்றவர்கள்கூட பிற மாவட்டங்களில் ஆசிரியர் பணியில் சேர்ந்துள்ளனர். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜேக்கப், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** 1985 ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர். அந்தந்த மாவட்டத்தில் பிறந்தவர்கள்தான் அந்தந்த மாவட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்று ஒரு குரல் எழுப்பினால் நமது மாநில ஒற்றுமைக்கே குந்தகம் ஏற்படும் என்பதை கனத்த இதயத்துடன் இங்கே தெரிவிக்கிறேன். எனவே இடைநிலை ஆசிரியர் பணி உட்பட அனைத்து அரசுப் பணிகளுக்கும் மாநில **seniority** கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அனைத்து மாவட்ட மக்களையும் அரசு ஒரே கண்ணோடு நடத்துகிறது என்ற உணர்வும் மக்களுக்கு ஏற்படும். அதுவும் 1:1 என்ற விகிதாச்சாரப்படி நேர்முகத் தேர்வு நடத்த வேண்டும். அப்படியானால் தமிழக மக்கள், குறிப்பாக வேலை



தேடிக்கொண்டிருக்கும் அத்தனை பேரும், நமது அரசை மிகவும் பாராட்டுவார்கள் என்பதையும் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். நன்றி சொல்லி முடியுங்கள். நன்றி சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கலாச்சாரம் இன்று வேகமாக சுழன்று கொண்டிருக்கிறது. நாமும் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறோம். "பசியோடிருக்கும் ஒருவருக்கு ஒரு மீனைக் கொடுத்து அவரது ஒரு வேளை பசியைப் போக்க முயற்சிக்காதீர். அவருக்குத் தூண்டில் போட்டு மீன் பிடிக்கக் கற்றுக்கொடுத்து அவரது வாழ்நாள் பசியைப் போக்க வழிவகுத்துக் கொடுங்கள்" என்ற தத்துவஞானி உதிர்த்த முத்துக்களின் அடிப்படையில் சில நடைமுறைகளை மாற்றலாம்.

குமரி மாவட்டத்தில் பிறந்தவர்களுக்கு தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களில் வேலை தேட வழியில்லை. பிற மாநிலங்களிலும் சென்று வேலை தேடவும் வழியில்லை. காரணம், இவர்களுக்கு இந்தி மொழியும் தெரியாது. கேரள மாநிலத்தவர்கள் எங்கே 2 பேர் சந்தித்தாலும் அவர்கள் தாய் மொழியிலேயே பேசுகின்றனர். நம்மவர்களோ ஆங்கிலத்தில் பேசுவதையே பெருமையாகக் கொள்கின்றனர். அவர்கள் அத்தனை பேரும் இந்தி மொழியையும் கற்றிருக்கின்றனர். இன்று அவர்கள் அகில இந்தியா முழுவதும் உயர் பதவிகளிலும், உயர் பணிகளிலும் இருக்கின்றனர். என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், இந்தி மொழி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தெல்லாம் இருக்கட்டும். உட்காருங்கள். போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம். (குறுக்கீடு) முடிக்கமாட்டேன் என்கிறாரே! (குறுக்கீடு) ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

முற்பகல் 11-15

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** அடுத்ததாக, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. இதனால் கடல்நீர் உட்புகுந்து கிணறுகளில் உப்புநீர் ஊற்றெடுக்கிறது. இதைத் தடுக்கவும், கடலுக்குச் செல்லும் தண்ணீரைப் பயன்படுத்தவும் வசதியாக, A.V.M. Channel-ஐ ஆழப்படுத்தி, அகலப்படுத்தி,

ஆக்கிரமிப்புகளை அகற்றி, கன்னியாகுமரி முதல் கேரளா எல்லை வரை கொண்டு சென்றால், கரையோர மக்களுக்குக் குளிப்பதற்கும், இதர உபயோகங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்; நீர்வழிப் போக்குவரத்து ஏற்படும்; சுற்றுலாத் துறைக்கும் வருமானம் கிடைக்கும். சிறு channel–களை வெட்டி, நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். குடிநீரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நாகை மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு என்பது,

"காகங்களைப் போல் கூடிக்கரைந்து கலைந்து சென்றுவிடாமல்,
வளங்கொழிக்கக் கூடுகிற மேகங்களைப்போலக் கூடுவோம்;
மேன்மையுறக் கூட்டுறவை நாடுவோம்"

என நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, கூட்டுறவுத் துறை என்பது மக்களுக்காக முறையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்முறையாக முதல்வராகப் பதவியேற்றபோது, மறைந்த சி.பா. ஆதித்தனார் அவர்களைக் கூட்டுறவுத் துறை அமைச்சராக நியமித்து, மேட்டுக்குடி மக்களிடமே இருந்துவந்த கூட்டுறவு நிர்வாகத்தைச் சாதாரண சாமானிய மக்களிடம் ஒப்படைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, மிகப் பெரிய



சமுதாய மாற்றத்திற்கு வித்திட்டவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் நலிவுற்றிருந்த கூட்டுறவைப் பொலிவுறச்செய்து, கூட்டுறவு இயக்கத்தில் முன்னோடியாய்த் திகழ்ந்து, அகில இந்திய அளவில் சிறந்த கூட்டுறவு வங்கியின் தலைவர் என்ற பரிசினைப் பெற்ற நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை, இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய அமைச்சராக நியமித்து, இந்தத் துறையைச் சிறப்பாகச் செயல்பட வைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்.

விவசாயம் செய்யக் கையிலே பணமில்லாமல், அண்டா குண்டானை அடகு வைத்து, கொஞ்ச நஞ்சம் வைத்திருந்த பெண்களின் தங்க நகைகளையெல்லாம் அடகு வைத்து, அடகு வைத்துக் கிடைத்த பணத்தையெல்லாம் விவசாயத்திலே போட்டு, விவசாயம் செய்தும், மழை வெள்ளத்திலே நட்ட நடவு, விளைந்த நெல் எல்லாம் அழிந்துபோனபோது, விவசாயி தான் வாங்கிய கடனை எப்படி அடைக்கப் போகிறோம் என நொந்து, வெந்து, சோர்ந்து உட்கார்ந்திருந்தபோதுதான், கூட்டுறவுத் துறையினுடைய விவசாயக் கடனைச் சுமார் 7,000 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்து, விவசாயிகளைத் தலைநிமிரச் செய்து புதிய அத்தியாயத்தைப் படைத்தவர் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திற்கே விவசாயிகளுக்காக சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய வழிவகுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய சீர்காழி தொகுதியிலே மட்டும், 13,771 விவசாயிகளுக்கு சுமார் 21 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதற்காகத் தொகுதி மக்களின் சார்பிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியாரிடம் அதிகமான வட்டி விகிதத்தில் கடன்பெறும் அவதியிலிருந்து விவசாயிகளை மீட்க கிராமப்புற மக்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்கி, மிகப் பெரிய அமைப்பாக இருந்துவரும் கூட்டுறவுக் கட்டமைப்பை ஏற்படுத்தித் தந்த நமது அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நலிவடைந்து, செயலற்ற நிலையிலிருந்த 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப்

புத்துயிரூட்ட ஒரு சிறப்பான திட்டம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருவது, பாதிக்கப்பட்ட விவசாயிகளிடையே பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2005-2006 ஆம் ஆண்டுவரை, 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைத்துவிட அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. நல்லவேளையாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்புக்கு வந்தவுடன், விவசாயிகளுடைய நிலையைக் கருதி, கூட்டுறவு வங்கிகளைக் கலைக்கக்கூடாது என மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையையேற்று, 197 கூட்டுறவு வங்கிகளை மீண்டும் செயல்பட வைத்தவர் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். அப்படி செயல்பட வைத்ததால்தான் என்னுடைய சீர்காழி தொகுதியிலே கலைக்கப்பட்ட புத்தூர் வங்கி, திருவாலி வங்கி மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சீர்காழி தொகுதியிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இருந்த அங்காடிகளை நிதி நெருக்கடியின் காரணமாக மயிலாடுதுறை மொத்த கூட்டுறவு பண்டகசாலை கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டு இயங்கி வருவதை, மீண்டும் அந்த அங்காடிகளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

சீர்காழி தொகுதியில் பகுதி நேர அங்காடி வேண்டி கீழவாடி, கீழச்சாலை, பட்டியமேடு ஆகிய கிராமங்களின் கோரிக்கை நீண்டநாட்களாக இருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன். பெரம்பூர் பகுதியில் பகுதி நேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றிக்கொடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடனுக்கு 2006-2007-ல் 9 சதவீத வட்டியிலிருந்து 7 சதவீதமாகக் குறைத்தும், 2007-2008-ல் 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் 2008-2009-ல் 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தும் 1,500



கோடி ரூபாயை புதிய பயிர்க்கடனுக்காக வழங்கியும் ஒரு மிகப்பெரிய வரலாற்றைப் படைத்து விவசாயிகளுக்கு உதவியவர். மேலும், பண்ணைசாராக் கடனுக்கு வட்டி குறைப்புத் திட்டம், நகைக் கடன் திட்டம், விவசாயக் கடன் அட்டை திட்டம், நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்கும் திட்டம், சிறு வணிகக் கடன் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவித் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் நிதியுதவித் திட்டம், பணிபுரியும் மகளிர் கடன் திட்டம், மகளிர் பேறுகால கடன் திட்டம், தொழில் கடன் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வட்டியில்லா பங்கு மூலதனத் திட்டம், மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் திட்டம் ஆகிய திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்தியும், செயல்படுத்த இருப்பதும் அனைத்துத் தரப்பு மக்களையும் பொருளாதார நிலையில் முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையின் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்கினால், எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு கடன் திரும்பச் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை இன்றைக்கு விவசாயிகள் உடனுக்குடன் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே, அவற்றைக் கணினிமயமாக்க வேண்டுகிறேன்.

ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன் 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கி, இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். மத்திய அரசு வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழ்பவர்களுக்கு 1 கிலோ அரிசி 5 ரூபாய் 65 காசுகள் என நிர்ணயித்தாலும், ஒரு வருடத்திற்குத் தேவையான 1,950 கோடி ரூபாயை மானியமாக வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது நம்முடைய அரசு. நமது பக்கத்து மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்குகிற திட்டத்தை நேற்றையதினம் தொடங்கவிருப்பதாக செய்தித்தாள்கள்கூட தெரிவிக்கின்றன என்பதைப் பார்க்கிறபோது, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் வழிகாட்டியாக விளங்குகிறார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாமல் அரவாணிகளுக்கு தமிழகத்திலேதான் குடும்ப அட்டைகள் வழங்கி அந்த மக்களின் நிலையை உயர்த்திக்காட்டியவர் நம்முடைய முதல்வர் அவர்கள். குடும்ப அட்டை வேண்டுபவர்களுக்கு உடனடியாக வழங்கிவரும் நம்முடைய அரசு, என்னுடைய சீர்காழி தொகுதியில் விடுபட்டவர்களுக்கு உடனடியாக வழங்கிட வேண்டுகிறேன். புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு, மண்ணெண்ணெய் உடனடியாக வழங்கிட வேண்டுகிறேன்.

1972–ல் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டதுதான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். அந்தக் கழகம் அன்றைக்குத் தொடங்கப்பட்டபோது 12 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்ட கொள்முதல் நிலையங்கள், இன்றைக்கு 1,200–க்கும் மேற்பட்ட நிலையங்களைத் திறந்து 3,441 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதை விவசாயிகள் மனதாரப் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு அதுமட்டுமல்ல, இதுவரை 10 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல்லுக்கு மாநில அரசு ஊக்கத்தொகையாக 50 கோடி ரூபாயும், மத்திய அரசு 100 கோடி ரூபாயும் வழங்கி வருவதை நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், 8 இலட்சம் இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புடன் வழங்க ரூ.160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது பெண்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது ஏற்கெனவே இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய ஊராட்சிகளைத் தேர்வுசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் சுமார் 25,000 ரூபாய்வரை பெற்ற கடனும் வட்டியும் அறவே தள்ளுபடி செய்து நலிவுற்ற பிரிவினருக்கும் சலுகை வழங்கிய தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றை பொதுவிநியோகத் திட்டத்தில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுவது, கிராமப்புற மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.



முற்பகல் ..-25

எனது சீர்காழி தொகுதியில் சீர்காழி நீதிமன்றத்திற்குப் போதிய கட்டட வசதி இல்லாமல் உள்ளது. ஆதலால், ஒருங்கிணைந்த புதிய நீதிமன்றக் கட்டடம் ஒன்று கட்டிக்கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் காரைமேடு, அடிக்காத்துறையில் உடைந்துபோயுள்ள 250 மீட்டர் கரையை cement concrete retaining wall அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

எனது நீண்டநாள் கோரிக்கையான புளியந்துரை ஊராட்சிக்கும், புதுப்பட்டினம் ஊராட்சிக்கும் நடுவில் உப்பனாற்றில் புதிய இணைப்புப் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். சீர்காழி–நாகை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கூப்பிடுவான் உப்பனாற்றின் பழுதடைந்த பாலத்திற்குப் பதில் மாற்று புதிய பாலம் ஒன்றைக் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதி, மாதானம் நேரடி கொள்முதல் நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டடம் இல்லை. போதுமான இடம் உள்ளது. எனவே, புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிக்கொடுக்க வேண்டுகிறேன்.

சீர்காழியிலிருந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லுவதற்கு பொதுமக்கள், மாணவர்கள், அலுவலர்கள் சுமார் 60 கிலோ மீட்டர் சென்று வர நேரடியாகப் பேருந்துகள் இல்லை. இந்த வழித்தடத்தில் காரைக்கால் உள்ளதால், புதுவை அரசுடன் பேசி அனுமதியைப்பெற்று புதியதாக நான்கு பேருந்துகளை இயக்கிக்கொடுக்க வேண்டுகிறேன்.

நாகை மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கும் அரசு பொறியியல் கல்லூரியை சீர்காழி தொகுதிக்குட்பட்ட புத்தூர் சீனிவாசா தொழில்நுட்பக் கல்லூரியில் நிறைய இடமுள்ளதால், அதை சீர்காழி தொகுதியில் அமைத்துக்கொடுக்க வேண்டுகிறேன். நாகை மாவட்டத்தினுடைய தலைமையிடமாக இருக்கக்கூடிய அந்த நாகையிலே அமைத்தால் பக்கத்திலே இருக்கக்கூடிய திருவாரூர் மாவட்டத்திற்கும், நாகை மாவட்டத்திற்கும் இடையிலே 28 கிலோ மீட்டர்தான் இருக்கிறது. எனவே, நாங்கள் சீர்காழியிலிருந்து செல்ல வேண்டுமென்று சொன்னால் 60 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். எனவே, அந்தப் பொறியியல் கல்லூரியை சீர்காழி பகுதியிலே அமைத்துக் கொடுக்க மாண்புமிகு முதல்[illegible] வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228405

இதேபோன்று, நம்முடைய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு கோரிக்கைகள். அ.தி.மு.க. ஆட்சி புறக்கணித்த தி.மு.க. ஆட்சியின் கொள்கை அறிவிப்பான அரசு ஊழியருக்கு இணையான ஓய்வூதியத்தை நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கிட வேண்டுகிறேன்.

அதேபோன்று. Tamil Nadu Civil Supplies Corporation–லே பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்காத 4 தவணைக் கூலி உயர்வை உயர்த்தி நிலுவையுடன் வழங்கிட வேண்டுகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் 30 சதவீதம் தொழிலாளர்களைக் குறைக்க வேண்டும் என்ற திட்டத்தின்கீழ் V.R.S. பணி ஓய்வு, இறப்பு. இராஜினாமா, பணி நீக்கம் போன்ற காரணங்களால் ஏற்பட்ட சுமார் 4,500 பணியிடங்களை நிர்வாகம் தன்னிச்சையாக இரத்து செய்துவிட்டதால் ஒரு தொழிலாளியின்மீது பல தொழிலாளியின் வேலைப்பளு சுமத்தப்பட்டுள்ளது. எனவே, அ.தி.மு.க. அரசு நீக்கிய அப்பணியிடங்களை மீண்டும் உருவாக்கி பணி நியமனம் செய்து வேலைப் பளுவைக் குறைத்திட வேண்டுகிறேன்.

அதேபோன்று, அ.தி.மு.க. ஆட்சியில் பறித்த சலுகையை தொழிலாளர் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், Industrial Tribunal, Labour Court, Quasi Judicial Authority மன்றங்கள், சமரச மன்றங்கள் இன்ன பிற இடங்களில் நடக்கும் வழக்குகள் போன்றவற்றிற்கு அயற்பணி நிமித்தம் கலந்துகொள்ள, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டு வந்ததை அ.தி.மு.க. ஆட்சி இரத்து செய்ததை மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் பணி நியமனம், சுழற்சி முறை நியமனம் இவற்றைக் கண்காணித்துப் பாதுகாக்க அமைக்கப்பட்ட காப்பாளர் கூட்டும் கூட்டங்களில், தொழிற்சங்க சட்டத்தின் நோக்கங்கள் அடிப்படையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத் தொழிலாளர்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாக்க, சட்டக் கடமையாற்றிட ஆவன செய்திட வேண்டுகிறேன். Gratuity–யில் பணப் பிடித்தம் செய்யக் கூடாது என்று Gratuity சட்டம் தெளிவுபடுத்தியும், 'கண்டுமுதல்' குறைவுக்காக நவீன அரிசி ஆலைத் தொழிலாளர்களிடம் Gratuity–யில் பணப்



பிடித்தம் செய்யப்படுகிறது. இதை எதிர்த்து தொழிலாளர்கள் தொடுத்த வழக்கில் அவர்களுக்குச் சாதகமாக கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியும் நிர்வாகம் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து தடையாணை பெற்றதால் சுமார் 100–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதைப் பரிவுடன் பரிசீலனை செய்ய வேண்டுகிறேன்.

சமீபத்தில் நாகை உள்ளிட்ட சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை அனைத்து மாவட்டங்களிலும் கோடையிலே எந்தக் காலத்திலும் வராத அளவுக்கு 15 நாட்களுக்கு மேலே தொடர்ந்து மிகப் பெரிய மழை பெய்த காரணத்தினாலே, வெள்ளம் வந்த காரணத்தினாலே அனைத்துக் கோடைப் பயிர்களும் அழிக்கப்பட்டு விவசாயிகள் படுபாதாளத்திலே தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதையறிந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரசு நிதியொதுக்கினாலுங்கூட, மத்திய அரசினுடைய ஆய்வுக் குழு வந்தாலுங்கூட, அவர்களையெல்லாம் எதிர்பார்க்காமல், முதன்முறையாக 100 கோடி ரூபாயைத் தந்து, அடுத்த முறையாக 75 கோடி ரூபாயைத் தந்து, விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்று சொல்லி, தந்த வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

***திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த எங்கள் சமூக நீதிக் காவலர் தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், வருங்காலத் தமிழகம், இளைஞர்களின் எழுச்சி நாயகன், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பார்கள். கூட்டறவுத் துறை, சமூகப் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் இன்று வேரூன்றி ஆழமாகப் பதிந்துள்ளது. ஆனால், துரதிருஷ்டவசமாக அவை, பல்வேறு காரணங்களினால் நலிவடைந்து வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஆய்வு செய்த அகில இந்திய ஊரகக்

கடன் குழு கூட்டுறவு பற்றிச் சொல்லும்பொழுது, "கூட்டுறவு இயக்கம் தோல்வியடைந்துவிட்டது. ஆனால், அது வெற்றியடைய வேண்டும். தோல்விக்கு மிக முக்கிய காரணம், அது மக்கள் இயக்கம் என்ற நிலையைவிட்டு பெரும் பணக்காரர்கள் கையிலும், அரசியல் கட்சிகளிடமும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலதன அடிப்படையில், கொடுத்த கடன்கள் திரும்பி வராமல் இருப்பதும், அந்தத் துறைக்கு முறையான தேர்தல், சரியான நேரத்தில் நடத்தப்படாததும் முக்கியக் காரணங்களாக இருக்கின்றன" என்று சொல்லியிருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பது குறித்து, ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நலிவடைந்த சங்கங்களை வளப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயக் கடன்களுக்கான வட்டி வீதம், 7 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஜனநாயக அடிப்படையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த, சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் ஆணையம் போன்று, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைத்து ஐந்தாண்டிற்கு ஒருமுறை தேர்தல் நடத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தீர்கள், அதைப் பாராட்டுகிறோம். ஆனால், பல கூட்டுறவு வங்கிகளுக்கு, 10 முதல் 15 சதவீதம் வரைதான் அந்தப் பணத்தை அரசு திருப்பிக் கொடுத்துள்ளது. அவ்வாறு வழங்கப்படும் தொகை, மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கப்பட்ட கடன்களுக்கு வரவு வைத்துக் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதியதாகக் கடன் வழங்குவதில்லை. இந்த இடர்ப்பாட்டைப் போக்க கடன் தள்ளுபடி செய்த முழுத் தொகையை ஒரே தவணையில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்பது, ஏற்கெனவே சென்ற



ஆட்சியிலேதான், அவர்கள் இரண்டு முறை ஆட்சிக்கு வந்து, தேர்தலை நடத்தவில்லை. ஆனால், 1996–2001–லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே, அப்பொழுது கூட்டுறவுத் தேர்தல் நடைபெற்றது. இப்பொழுதும் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய அனைத்துப் பணிகளும் முனைப்போடு நடைபெற்று, தேர்தலெல்லாம் நடைபெற்றது. எப்பொழுதும் தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கையுள்ளவர். எனவே, தேர்தலை நடத்தினார்கள். தேர்தல் நடத்தப்பட்டு, சட்டம்–ஒழுங்கு என்ற அடிப்படையிலே நிறுத்தப்பட்டு, இப்பொழுது கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். இப்பொழுதுகூட தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. வழக்கு உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிற காரணத்தினால், தேர்தலை நடத்துவதற்கு சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர்களையெல்லாம் அழைத்து, தேர்தலைப்பற்றிப் பேசி, தேர்தலை நடத்தலாம் என்று அரசே இப்பொழுது முடிவெடுத்துள்ளது. அதிலேயொன்றும் மாற்றமில்லை.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தீர்கள். ஆனால், எங்குமே பணம் போகவில்லை. 15 சதவீதம்தான் போயிற்று என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; அப்படியல்ல. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவிற்கு, 515.26 கோடி ரூபாய் நேரடியாகப் பணம் போய்விட்டது. அதேபோன்று, மாவட்ட மைய வங்கிகளை பொறுத்த அளவிற்கு, 867.74 கோடி ரூபாய் நேரடியாகப் பணம் போய்விட்டது. அந்தப் பணமெல்லாம் போன காரணத்தினால்தான், இப்பொழுது ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் மிக வலிவோடு இருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்ல நான் விரும்புகின்றேன்.

அதோடுமட்டுமல்ல. சென்ற ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், இனிமேல் நடத்தவே முடியாது என்று ஆணையே போட்டுவிட்டார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது அதற்காகப் பணம் கொடுத்து, அவற்றை மேலே கொண்டுவர வேண்டும் என்ற அந்த நோக்கத்திலே, 199 மட்டுமல்ல, அந்த 199–லே 197 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு

நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், சென்ற ஆட்சியிலே 1,358 சங்கங்கள், இனிமேல் நடத்தவே முடியாது, ஊழியர்களுக்குச் சம்பளமே கொடுக்க முடியாது என்ற நிலை வந்தது. சென்ற மாதம் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்கள் கிட்டத்தட்ட 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு காசுக் கடன் என்கிற பெயரில் 20 இலட்சம் ரூபாய் பணம் கொடுத்து, ஒவ்வொரு மாதமும் 1,60,000 ரூபாய் நேரடியாக அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் வருவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து, இப்பொழுது அந்தச் சங்கங்கள் எல்லாம் முறையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை ஒரே தவணையாகக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

முகையூர் தொகுதிக்குட்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சொந்தக் கட்டடத்தில் நிறைய கட்டடங்கள் ஜம்பை தவிர மற்ற கட்டடங்கள் அனைத்தும் இயங்கி வருகின்றன. ஆனால், ஜம்பை வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. அந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாக நான் கேட்டு வருகின்றேன். அதற்கு எங்களிடத்திலே அதிகாரம் இல்லை, பணம் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வங்கிக்கு உடனடியாக வங்கி நிதி ஒதுக்கீடுமூலமோ அல்லது அரசுமூலமாகவோ கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் நகைக் கடன், கரும்புக் கடன் மட்டுமே வழங்கப்படுகிறது. இதர பயிர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுவதில்லை. இதனால், விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இதைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** விளக்கமாகச் சொல்வது நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கும் முறையினை எளிமைப்படுத்த வேண்டும். வணிகமயமாக்கப்பட்டு, வங்கிகளைப் போன்று எளிமையான முறையில், சொத்து அடமானப் பத்திரமின்றி கடன் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நிலவள வங்கிக் கடன் வழங்குவது அறவே நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் நீண்டகாலக் கடன் பெற்று பயனடைவது முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு நிலவள வங்கியில் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின்மூலம் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்து, நெல் கொள்முதல் செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் சிமெண்ட் விற்பனை செய்தால் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவும், நலிவடைந்த சங்கங்கள் வளம் பெறவும் வாய்ப்பாக அமையும். எனவே, கூட்டுறவு வங்கிகள்மூலம் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

.தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்மூலம் சமையல் எரிவாயு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் 15 நாட்களுக்கு ஒருமுறை பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். கரும்பிற்கு பணம் பட்டுவாடா செய்ய காலதாமதம் ஏற்படுவதால், விவசாயிகள், வங்கிகளில் பெற்ற கடனுக்கு கூடுதல் வட்டி செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. காலதாமதம் ஏற்படும் நேரத்தில் விவசாயிகளுக்கு ஏற்படும் வட்டி இழப்பை ஆலைகளே ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வேலூர் மாவட்டத்தில், கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்ததில் சான்று கொடுத்தது 1,26,773 பேர்கள்; சான்று கொடுக்காதது 32,000 பேர்கள்; கொடுத்த தொகை 3,24,48,000 ரூபாய்; கொடுக்காத தொகை 10,03,000 உள்ளது. இதேபோல், தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் நிலுவைத் தொகை அப்படியே உள்ளது. அதனை உடனடியாக பட்டியல் தயாரித்து வெளியிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

உதாரணத்திற்கு, கிரிசமுத்திரம் கூட்டுறவு வங்கி மோசடி 3 கோடி ரூபாய்; வாணியம்பாடி, செட்டிப்பாளூர் மற்றும் சின்னகள்ளிப்பள்ளி சேர்ந்து 5 கோடி ரூபாய் மோசடி நடைபெற்றுள்ளது. அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

TANCOF-ஐ நிறுத்தி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் தள்ளுபடியைப் பொறுத்த அளவிற்கு தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தள்ளுபடி செய்து சான்றிதழ்கள் எல்லாம் வழங்கப்பட்டுவிட்டன. வேலூர் மாவட்டத்திலே சொல்கிற இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ரொம்ப காலங்களாக அதிலுள்ள கையாடல் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு சில நேரங்களிலே பினாமி பெயரில் கடன் என்ற அடிப்படையிலே இப்பொழுது அதற்கான ஆய்வு செய்து அதற்கு தனிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனால் இந்த இரண்டு இடங்களிலே சரியான சான்று வழங்கவில்லை என்ற



காரணத்தினாலே அனைத்து இடங்களிலும் வழங்கவில்லை என்பது பொருள் அல்ல. ஏனென்றால், நான்கூட ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவன்தான். முழுமையாகக் கடன் தள்ளுபடி செய்து சான்றிதழ்கள் எல்லாம் வழங்கப்பட்டுவிட்டன. அந்த society-யைப் பொறுத்தவரையிலும் அதில் enquiry நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன் அவர்களுக்கெல்லாம் உரிய நேரத்திலே சென்று சேரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன். (குறுக்கீடு)

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அரசு வழங்கவில்லையென்று அரசின்மீது குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய பல செயலாளர்கள் இதைப்போல மோசடி செய்து, அங்கே வழங்காமல் இருப்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறார். வேலூர் மாவட்டத்திலே இரண்டு என்று சொன்னார். தருமபுரி மாவட்டத்திலே வழங்கப்படாத கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு-மூன்று அதிலே இருக்கின்றன, எங்களுக்குத் தெரிந்தவரையிலே. நிறைய சங்கங்கள் இருக்கின்றன. இப்போது கிரிசமுத்திரத்திலே மட்டும் மோசடி செய்தது 3 கோடி ரூபாய் என்று நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள்; வரவேற்கிறோம். இதைப்போல, எங்கெங்கெல்லாம் மோசடி நடைபெற்றிருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்கு ஆய்வு செய்ய வேண்டுமென்பதுதான் கோரிக்கை.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவிலே, இந்த மானியக் கோரிக்கையில் நான் பேசவிருக்கிற பேச்சின் அடிப்படையில் அந்த விவரங்களைத் தெரிவிக்கிறேன். பதிலுரையின்போது தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** அதேபோன்று டான்காப்பை நிறுத்தி, ஊழியர்கள் கிட்டத்தட்ட 2002-லிருந்து பணி நிறுத்தம் செய்து கிடப்பில் உள்ளது. உயர் அதிகாரிகளுக்கு மட்டும் வேறு துறையில் பணி வழங்கப்பட்டுள்ளது. செயலாளர்கள் கிட்டத்தட்ட 120 பேருக்கு பணி வழங்காமல் உள்ளனர். அவர்களுக்குப் பணி வழங்கி சம்பளம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பணி நியமனம் இதுவரையில் 35 வயதாக இருந்தது, இப்போது 30 வயதாக குறைக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் 35 வயதாக உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்குவதற்கு நிபந்தனைகளைத் தளர்த்தி ஒரு கி.மீ.க்கு மேல் உள்ள மதுரா கிராமங்களுக்குப் புதிய பகுதி நேரக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட தேவனூர் புதுநகர், வீரசோழபுரம் காலனி, திருமல்ராயபுரம் ஆகிய பகுதிகளில் கடைகள் திறக்க விண்ணப்பம் பரிந்துரை செய்தும், நீண்ட நாட்களாக அரசு அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியாய விலைக் கடைகள் அனைத்திற்கும் முழு நேரப் பணியாளர்களை நியமனம் செய்து அன்றாடம் பொது விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியாய விலைக் கடைகள்மூலம் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்றவை குறைந்த அளவே விற்கப்படுகின்றன. அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு மேற்கண்ட பொருட்கள் கிடைக்கும் வகையில் கூடுதலாக ஒதுக்கீடு செய்து, விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்துப் பொருட்களையும் பாக்கெட் முறையில் விநியோகம் செய்து, எடைக் குறைவு என்ற குற்றச்சாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரின்போது சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் குழு அமைத்து நியாய விலைக் கடைகள் கண்காணிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதுவரை அந்தக் குழு அமைக்கப்படவில்லை. அக்குழுவினை அமைத்து கடைகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவுக் கடைகளை ஆய்வு செய்தல், ஒரு துறை ஆய்வின்கீழ் கொண்டுவர வேண்டும். தற்போது கூட்டுறவுத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆய்வு நடைபெறுகிறது. இதனைத் தவிர்த்து ஒரு துறை ஆய்வின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியாளர்கள்மீது விசாரணையைக் கூட்டுறவுத் துறை மட்டுமே எடுக்கவேண்டும்.

ஒரே பணி செய்யும் விற்பனையாளர்களுக்கு இருவிதமான ஊதியம் வழங்கப்படுகிறது. தற்போது அரசு அறிவித்த ஊதிய உயர்வு, பணி உயர்வு, பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. இதனை நீக்கி அனைவருக்கும் சமமாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் சுமை தூக்குவோருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூலி உயர்வு முறையாக வழங்கப்படவில்லை. அதை வழங்கி அவர்களைத் தகுதியின் அடிப்படையில் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். அப்பணியாளர்களை அரசுப் பணியாளர்கள் போன்று பணி மாற்றம் செய்ய வேண்டும். அவர்களுக்கு ஓய்வூதியமும் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

கூட்டுறவு பட்டயப் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருப்போரை பதிவு மூப்பு அடிப்படையில் அனைவருக்கும் பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உதாரணமாக விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் சுமார் 150 பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்த அனைவருக்கும் தற்போது அந்தந்த மாவட்டத் தலைநகரிலேயே அச்சிட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மாற்றி தாலுகா அளவில் அச்சிட்டு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பயன்படுத்தி வந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தஞ்சாவூர் முதல் [illegible] வரையிலான சாலை மிகவும் சீர்கெட்டு பழுதடைந்து கிட[illegible]

இந்தச் சாலை பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள சாலையாகும். இந்தச் சாலையினைப் புதுப்பித்து, சாலையின் குறுக்கே மணலூர்பேட்டை என்ற எனது தொகுதியின் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க பல ஆண்டுகளாகக் கோரி வருகிறோம்.

அதேபோன்று, காரணை பெரிச்சானூர் முதல் முகையூர் செல்கின்ற பம்பை வாய்க்கால்மீது மேம்பாலம் ஒன்றும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை. இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** எனது தொகுதிக்குட்பட்ட காரணை பெரிச்சானூர் முதல் முகையூர் செல்கின்ற பம்பை வாய்க்கால்மீது மேம்பாலம் ஒன்று அமைத்துக் கொடுக்கவேண்டுமாயும், கொடுக்கப்பட்டு முதல் வசந்தகிருஷ்ணாபுரம் செல்லக்கூடிய – குறுக்கே இருக்கக்கூடிய துறிஞ்சலாற்றின்மீது மேம்பாலம் ஒன்றும், அமைத்துத் தருமாறு இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுவருகிறேன். அவற்றையும் செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூரிலிருந்து ஆற்காடு வழியாக விழுப்புரம் செல்லும் சாலை சுமார் 50 கிராம மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் நில ஆர்ஜிதம் செய்து இருவழிச்சாலையாக அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டு காலமாகக் கிடப்பில் உள்ள நந்தன் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றவும், இந்த நிதியாண்டிலேயே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக வாடகைக் கட்டடத்தில் நிரந்தர இடமின்றிச் செயல்பட்டு வருகிறது. இதற்கு நிரந்தர இடமும், சொந்தக் கட்டடமும் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

மணலூர்பேட்டையில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 3,000–க்கும் மேல் மாணவ, மாணவிகள் படித்து



தங்கிப் படிக்க விடுதி வசதிகள் வருகிறார்கள். மாணவ, மாணவிகள், தங்கிப் படிக்க விடுதி வசதிகள் இல்லை. எனவே, அவர்களுக்கு விடுதி கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் தாலுகாவில் கலைக் கல்லூரி வேண்டுமென 2 ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேன். எந்தெந்த மாவட்டத்திற்கோ, அருகில் இருக்கின்றவர்களுக்கெல்லாம் கலைக் கல்லூரி தருகிறீர்கள். ஆனால், எங்கள் பகுதி திருக்கோவிலூர் வட்டத்தில் கலைக் கல்லூரியே இல்லை. எனவே, அந்தப் பகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூரிலிருந்து அரகண்டநல்லூர் செல்லும் தரைப்பாலம் பழுதடைந்து பல ஆண்டுகளாக அந்த மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். அந்தத் தரைப் பாலத்தை சரி செய்து தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலியவரதன், உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) எப்போது?

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** 2 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் வேறு உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** 2 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2 நிமிடங்களா?

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** தயவுசெய்து கொடுங்கள். எனது தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூரில் உள்ள அரசு தொழுநோய் பயிற்சிக் கட்டடம் செயல்படாத சூழ்நிலையில் அது பழுதடைந்துள்ளது. அதைச் சரி செய்து சுகாதாரப் பணிகள் தலைமையிடமாக, சுகாதாரப் பயிற்சி நிலையமாக மாற்றித் தருமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட காரணை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி ஜி. லதா (குறுக்கீடு) அதெல்லாம் சொல்லத் தெரியாது, உங்களுக்கு. (குறுக்கீடு) விடுங்கள், அவர் நன்றி சொல்லட்டும்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** கடந்த தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுத் துறையில் தினக் கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்கள், தற்காலிகப் பணியாளர்களை அ.தி.மு.க. ஆட்சியில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஜி. லதா. .

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்துடன், குடியாத்தம் தொகுதியில் தீப்பெட்டித் தொழில் விபத்தில் மரணம் அடைந்த 5 இளைஞர்களுக்கு முதல்வர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து தலா 50,000 ரூபாய் அளித்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் மாவட்ட வளர்ச்சிக்காக, வேலூரில் I.T. PARK-ம், மாநகராட்சியாகத் தரமுயர்த்தல் மற்றும் விமான நிலையத்தைக் கொண்டு வர இருக்கும் முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், வேலூர் மக்களின் சார்பிலும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் ஏழையெளிய மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் வழங்கும்போது பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடத்தப்பட வேண்டும், அதற்கான நிதி ஒதுக்கீடு என்பது அதிகரிக்கப்பட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2006–2007 நிதியாண்டிலும், 2007–2008 நிதியாண்டிலும், இந்த ஆண்டு ஒதுக்கீட்டின்போதும், 1,950 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது எந்த விதத்தில் சரியாக இருக்கும்? அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கையில் தமிழக அரசு அறிவித்துள்ள எண்ணற்ற திட்டங்களின்கீழ், 11 மாதங்களில் 7 இலட்சத்து, 36 ஆயிரத்து 196 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அட்டைகளுக்கான உணவுப் பொருட்கள் ஒதுக்கீட்டிற்கான நிதி என்பது போதாது; மீண்டும் அந்த நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழகத்தில் 28,000 நியாய விலைக் கடைகளில் 197 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தக் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக முறை அடிப்படையில் உணவுப் பொருட்கள்



ஒதுக்கீட்டிற்கான ஒதுக்கீடு என்பது கிராமப்புறங்களிலே 60–லிருந்து 70 சதவீதமும், அதேநேரத்தில் நகர்ப்புறங்களில் 40–லிருந்து 50 சதவீதம் என்றும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. முழுமையாக 100 சதவீத உணவுப் பொருட்கள் ஒதுக்கீட்டை அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தளவுக்கு, அரிசியை வழங்குவது என்பது 100 சதவீதத்தை நாங்கள் ஒதுக்கீடு செய்து விடுகிறோம். உதாரணமாக எடுத்துக்கொண்டால், நம்முடைய வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தளவுக்கு, ஒதுக்கீடு என்பது 18,789 மெட்ரிக் டன்னை நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம், அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து அல்ல; ஆனால், அங்கு 18,611 மெட்ரிக் டன் அரிசிதான் விற்பனையாகி இருக்கிறது. Godown-ல் அரிசி இருக்கிறது; கடைகளில் அரிசி இருக்கிறது. கிட்டத்தட்ட பார்த்தால் 92 சதவீதம் வேலூர் மாவட்டத்திற்கு அரிசி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் 60 சதவீதம், 40 சதவீதம் என்பதல்ல நோக்கம். பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே இதே மாமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அரசைப் பொறுத்தவரைக்கும் அனைத்து கார்டுகளுக்கும் அரிசி வழங்கவேண்டுமென்பதுதான் நோக்கமாக இருக்கிறது. நாம் allotment–ஐயும் அப்படித்தான் போடுகின்றோம். ஆனால் கடைகளுக்கு எடுத்துக்கொண்டு வருகின்றபோது, ஒரு கடை என்று சொன்னால், அந்தக் கடையிலே உள்ள மொத்த அட்டைக்கு வேண்டிய பொருட்களையும் அங்கே கொண்டு போய் வைக்க முடியாது. அங்கே ஒன்றும் godown கிடையாது. ஆங்காங்கே salesmen இருக்கின்ற இடத்தில் சிறிய சிறிய கடைகள்தான் இருக்கும். அதனால் 60 சதவீதத்தை நாங்கள் முதலில் அனுப்புகின்றோம். இரண்டாவது 40 சதவீதத்தை அனுப்புகின்றோம். அவ்வாறு 60 சதவீதத்தை அனுப்புகின்றபோது, சில நேரங்களில் முதன் முதலாகச் செல்பவர்கள், இந்த மாதம் 10 கிலோ வாங்கிக்கொள்கிறோம், பிறகு வந்து மீதியை வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போகிறவர்களும் உண்டு. சில நேரங்களில் பார்க்கின்றபோது 60 சதவீதம்தான் வந்திருக்கிறது, இப்போது 10 கிலோ வாங்கிக்கொள்ளுங்கள், பின்னர் 10 கிலோ வாங்கிக்கொள்ளுங்கள் என்று salesmen சொல்வதை வைத்துக்கொண்டு, அரசு ஒதுக்கவில்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. முழுமையாக அரிசி ஒதுக்கப்படுகின்றது. (குறுக்கீடு)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தொடர்ந்து 100 சதவீதம் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதாக வலியுறுத்தி வருகின்றார்கள். நான் அவரிடத்திலே கேட்க விரும்புவது, அரசாங்கம் ஒதுக்கீடு செய்கிறது என்று சொன்னால், அது நேரடியாக மக்களைப் போய் சேருவதிலே, அதிலே சம்பந்தப்பட்ட ரேஷன் கடைக்கு அல்லது மொத்தமாக விநியோகம் செய்யக்கூடிய கூட்டுறவு நிறுவனங்களுக்குப் போய்ச் சேருவதிலே சிரமங்கள் இருக்கின்றன. நீங்கள் ஏற்கெனவே சொன்னதைப்போல, உதாரணத்திற்கு திருப்பூரிலே நான் ஒரு பட்டியலையே தயாரித்திருக்கிறேன். அதிலே 45–லிருந்து 60 சதவீதம் வரைதான் பொருட்கள் எங்களுக்கு வழங்கப்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதுவும்கூட பல பகுதிகளில் மாதத்தின் பிற்பகுதியில், 20 தேதிக்குப் பிறகு அந்தப் பொருட்கள் கடைகளுக்கு வருகின்றபோது, அவர்களால் அவற்றை முழுமையாக வாங்க முடியாத நிலை இருக்கிறது. அதேபோல பல கடைகளில் 10 கிலோ என்பதுதான் நடைமுறையில் இருந்து வருகின்றது. நீங்கள் நல்ல நோக்கத்தோடு வழங்கலாம். ஆனால் கீழே நடப்பதிலே சில குளறுபடிகள் இருக்கின்றன. ஆகவே அதை இன்னும் நம்முடைய அமைச்சரவர்கள் ஆழமாகப் பார்த்து முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியில் ஏற்கெனவே நீங்கள் வந்து பார்த்திருக்கிறீர்கள். இன்னொரு முறை வாருங்கள். ஒவ்வொரு கடையாகச் சென்று எவ்வளவு பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்று அந்த மக்களையே நான் உங்களிடத்தில் நேரில் வந்து சொல்லச் சொல்கிறேன். 10 கிலோவுக்கு மேல் வழங்க மறுக்கிறார்கள். இருப்பு இல்லை என்று திருப்பி அனுப்புகின்ற நிலைமை இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** பதில் அளித்த அமைச்சருக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். பொது விநியோக முறையில் அவர் கூறிய கருத்துகளோடு, 100 சதவீதம் வழங்குகின்ற கடைகளில், 100 சதவீதம் விற்பனை செய்துவிட்டால் உடனடியாகக் கடைக்காரர்மீது



நடவடிக்கையும், அதேநேரத்தில் 100 சதவீத விற்பனை கூடாது என்ற வாய்வழி உத்தரவையும் போட்டு அதிகாரிகள் செய்கிறார்கள். அதையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பொது விநியோகத் திட்டத்தில் அனைத்துப் பொருட்களையும் packet செய்து வழங்கவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், தமிழக அரசு அறிவித்துள்ள நல்ல பல திட்டங்கள் மக்களைச் சென்றடையாமல் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கை பற்றி அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். விலைவாசி உயர்வுக்கு அடிப்படையான காரணம், முன்பேர வர்த்தகம், online வர்த்தகம். இதை மத்திய அரசு கைவிடவேண்டுமென்று தமிழக அரசு இந்த மன்றத்தில் தீர்மானம் போட்டு online வர்த்தகத்தின்மூலம் நடைபெறும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு சிறப்பான பொது விநியோகத் திட்டத்தின்மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மைதா மற்றும் ரவை போன்ற பொருட்களை வழங்கி வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதே நேரத்தில் 14 விதமான பொருட்களையும் ரேஷன் கடைகளில் வழங்க தமிழக அரசு முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். அத்தனை பொருட்களையும் தமிழகத்தில் ஏறத்தாழ 28 ஆயிரம் நியாய விலைக் கடைகளிலும் வழங்குவதற்கு தமிழக அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான ஒரு தீர்மானத்தை இந்தச் சபையில் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு கடந்த 11 மாத காலத்தில் 7,36,198 குடும்ப அட்டைகள் வழங்கியிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தக் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. புதிய குடும்ப அட்டைகளுக்கு, வழங்கப்பட்ட பல இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நம்முடைய தமிழக அரசு மண்ணெண்ணெயை வழங்குவதற்கு முன்வரவேண்டும். மண்ணெண்ணெய்க்கான ஒதுக்கீட்டை மத்திய அரசிடம் கேட்டுப் பெறவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய் வழங்குவது என்பது சென்ற முறை அவர்கள் வழங்கவில்லை. ஒரு குடும்ப அட்டைக்கு 3 லிட்டர் வழங்கவேண்டும். 39 இலட்சம் கார்டுகளை ஏற்கெனவே முந்தைய அரசில் அவர்கள் வழங்கிவிட்டுப் போய்விட்டார்கள். அதனால் கொடுக்க முடியாத நிலை இருந்தது. இப்போது கிட்டதட்ட ஒன்பதரை இலட்சம் கார்டுகள் வழங்கியிருக்கின்றோம், நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு. இரண்டையும் சேர்த்து இப்போது பொங்கல் தினத்திலிருந்து புதிய கார்டுகளுக்கும் சரி, ஏற்கெனவே 39 இலட்சம் கார்டுகளுக்கும் ஒரு லிட்டர் வழங்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்து, வழங்கிக் கொண்டிருக்கிறோம். அடுத்து, இந்த மார்ச் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து இரண்டாவது லிட்டரும் வழங்கச் சொல்லிவிட்டோம். ஆணை பிறப்பித்தாகிவிட்டது. இப்போது புதிய கார்டுகளுக்கெல்லாம் 2 லிட்டர் வழங்கவேண்டும். பழைய கார்டுகளுக்கு 3 லிட்டர் வழங்குவார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், புதிய கார்டுகளுக்கு மட்டும் 2 லிட்டர் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்தாகிவிட்டது. எங்கேயாவது வழங்கவில்லையென்று புகார் சொன்னால் அதைக் கட்டாயம் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யும்.

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை நாங்கள் உண்மையிலேயே ஒப்புக்கொள்கிறோம். அதேநேரத்தில், மலைப் பிரதேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களைக் கணக்கில்கொண்டு, ஒரு லிட்டர் என்பதை 5 லிட்டர்களாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

நியாய விலைக் கடைகளில் அனைத்துக் கட்சியினரையும் சார்ந்து, சுய உதவிக் குழுக்களையும் உள்ளடக்கி, கண்காணிப்புக் குழுக்களை முழுமையாகச் செயல்படுத்தும்போதுதான் அவற்றில் நடக்கின்ற



முறைகேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். அவற்றை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

ரேஷன் கடைகளில் பணியாற்றும் ஊழியர்களும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களும், சமமான வேலை செய்தாலும், ஊதிய வேறுபாடு உள்ளதைக் களைந்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வழங்குவதைப் போன்று ஊதியம் வழங்கிட தமிழக அரசு உத்தரவிடவேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் சிறப்பாக புதிய கடைகள், 72 முழு நேரக் கடைகளும், 492 பகுதி நேரக் கடைகளும் தொடங்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில், அந்தக் கடைகளுக்குப் புதிய ஊழியர்களை நியமனம் செய்வதில் கவனம் செலுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு, விவசாயிகளுக்கு வழங்குகின்ற வட்டியை இரத்து செய்து 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்ததையும், இந்த ஆண்டு 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரு நிமிடம், 2 நிமிடங்கள் கொடுக்கிறோம், உரையை முடித்துவிடுங்கள். நீங்கள் பேசுங்கள் அம்மா. இன்னொரு 2 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திருமதி ஜி. லதா:** தமிழ்நாட்டில் உள்ள நான்காயிரத்து நானூறு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையினுடைய மரபு, தாங்கள் அனுமதித்த உறுப்பினர் பேசுகின்றபோது, மேலும் ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் வேண்டுமென்று சொன்னால் உங்களுடைய அனுமதியைக் கேட்டுத்தான் அவர் பேசவேண்டும். ஆனால், அந்தந்தக் கட்சி சார்பிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், இல்லை, இல்லை பேசுங்கள், பேசுங்கள் என்று கை காட்டுவது,

இவர்களே 2 நிமிடம், 3 நிமிடம், 5 நிமிடம் என்று நேரத்தை நிர்ணயம் செய்வது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். அதனாலே உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் உறுப்பினர்கள் பேசவேண்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது? (குறுக்கீடுகள்)

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. உங்கள் ஆணையை ஏற்றுத்தான் சட்டமன்றமே நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னாலும், உங்கள் ஆணையைப் பெற்றுத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோது அவர்களுடைய தொகுதியைப் பற்றி பேசுகின்றபோது ஒரு நிமிடம் பேசுங்கள், 2 நிமிடம் பேசுங்கள் என்று உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் சொல்கிறோமே தவிர, அதனாலே எந்தத் தவறும் இல்லை. உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேசுகிறோமே தவிர, இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவிதமான வருத்தப்படவும் அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உறுப்பினரிடம் கை ஜாடை காட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்றவர்களை வளர்த்து எடுப்பதில் முன்னோடிகளுக்கு வழிகாட்டுதல் என்ற அடிப்படையில் எங்களுடைய கட்சித் தலைவர் அதைக் கேட்டார். அதைத் தவறுதலாக எடுத்துக்கொள்ளவேண்டாம்.

தமிழ்நாட்டில் உள்ள 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், அரசு குழு அறிக்கையின்படி வலுவிழந்த நிலையில் உள்ள 1,192 வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை மூடாமல் மீண்டும் வங்கிகள் சிறப்பாகச் செயல்பட, விவசாயிகள் நலன் காத்திட, கடன் வழங்கிட, நிதியொதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய குடியாத்தம்



தொகுதியில் அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்ட முரசப்பள்ளி வங்கி செயலிழந்து இருக்கிறது. அதை மீண்டும் திறப்பதற்கும், செயலிழந்து இருக்கின்ற திருவட்டாறு ரப்பர் கூட்டுறவு வங்கியை மீண்டும் திறக்கச் செய்வதற்கும் அரசு முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் பகுதியில் இருக்கின்ற 17 LAMP சொசைட்டிகள் வலுவிழந்த நிலையில் இருக்கின்றன. தாட்கோ கடனை இரத்துச் செய்ததுபோல் மலைவாழ் மக்கள் வாங்கிய கடனை இரத்துச் செய்து மீண்டும் LAMP சொசைட்டிகளை புனரமைக்கின்ற விதத்தில் நிதியினை உறுதிசெய்ய அரசு முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

கூடுதலாக, வேலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான 22 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து உள்ளாட்சித் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் உள்ளாட்சித் துறை, கூட்டுறவுத் துறைக்கு 22 கோடி ரூபாயை அளிக்க தமிழக அரசு முன்வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் ஏறத்தாழ 46,126 பேர் இருந்தனர். தமிழக அரசு 26 ஆயிரம் பேரை பணிவரன்முறை செய்தது. 20 ஆயிரம் பேருக்கு இன்னும் செய்ய வேண்டியிருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். 480 நாட்கள் பணி செய்த ஊழியர்களுக்கு அரசு நிபந்தனை இல்லாமல் பணிவரன்முறை செய்ய முன்வரவேண்டும் என்பதனைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற பணியாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை, அந்தப் பணிவரன்முறையைப் பொறுத்த அளவிலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 37,666 பேர் ஏற்கெனவே 1980-லிருந்து பணிவரன்முறை செய்யப்படாமல் இருந்தனர். தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடனே 27,510 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டனர். இன்னும் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டியவர்கள் 10,156 பேர்தான் உள்ளனர்.

இதற்குள்ளாக என்ன ஆயிற்று என்றால் உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. உயர் நீதிமன்ற வழக்கிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், வயது வரம்பைப் பார்க்க வேண்டும்; மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வர வேண்டும்; கல்வித் தகுதி வேண்டும்; இவையெல்லாம் இருந்தால்தான் பணி கொடுக்க வேண்டும் என்று சொல்லி அவர்கள் ஓர் ஆணை பிறப்பித்துவிட்டார்கள். அதனால்தான் இந்த எஞ்சியுள்ளவர்களை நாங்கள் பணி நிரந்தரம் செய்ய முடியாமல் இருக்கிறோமேயொழிய ஏற்கெனவே 40 ஆயிரம் பேரில் 27,510 பேரை பணி நிரந்தரம் செய்து முடித்துவிட்டோம். ஆனால் இப்போது எங்களுக்கு உயர் நீதிமன்றத்தினுடைய ஆணை தடையாக இருக்கிறதேயொழிய இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஜி. லதா, நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. பணிக் கொடை சலுகைகள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திருமதி ஜி. லதா:** கேரளாவைப் போன்று ஓய்வூதியம் உள்பட நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கூட்டுறவுத் தேர்தல் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில் தேர்தலுக்கான நடவடிக்கைகளை வேகப்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வைத்தியநாதன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திருமதி ஜி. லதா:** துணைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திருமதி ஜி. லதா:** வாய்ப்புத் தந்த சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சம்பந்தமான இந்த மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை சபைமுன் வைக்க விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இந்த மானியக் கோரிக்கைக்குச் சம்பந்தமில்லாத ஒரு விஷயம். இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் அங்கே இருக்கக்கூடிய வியாபாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள், கட்சி சார்பற்றவர்கள், கட்சியைச் சேர்ந்தவர்கள் பல பேர், ஆயிரக்கணக்கானவர்கள் தாலுகா தலைநகரங்களில் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த உண்ணாவிரத நோக்கத்தைப் பற்றி நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுக்க வேண்டும் என்று அறிவிப்புக் கொடுத்திருந்தேன். அதை எடுக்கவில்லை. அந்த விஷயத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகள். அந்த 6 சட்டமன்றத் தொகுதிகளையும் 4 பாராளுமன்ற தொகுதிகளோடு சேர்த்து புதுக்கோட்டை தொகுதி என்பதையே தொகுதிகளோடு சேர்த்து புதுக்கோட்டை தொகுதி என்பதையே அந்த அட்டவணையிலிருந்து தேர்தல் ஆணையம் எடுத்துவிட்டது. அந்த நிலையை இன்றைக்கு அங்கே உள்ள மக்கள் தங்களுடைய கருத்துகளை வலியுறுத்தி மீண்டும் அந்தத் தொகுதி வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஆதரித்து அதைப்பற்றி ஏதாவது அரசு தெரிவிக்குமா என்று கேட்டு அதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்கின்ற முறையில் முதலிலே உணவுத் துறை சம்பந்தமான ஒருசில விஷயங்களை குறிப்பாக இங்கே சொல்ல விரும்புகிறேன். கலைஞருடைய அரசு வந்ததற்குப் பின்னால் இந்தக் கூட்டுறவுத் துறை அல்லது உணவுத் துறை வளர வேண்டும் என்பதற்காகவே விவசாயக் கடன் 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது.

அடுத்து ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது. இந்த அரிசி கொடுக்கப்படுவதில் சில குளறுபடிகள் இருக்கவே செய்கின்றன. கிராமப்புறங்களில் அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின்கீழ் கொடுக்கப்படுகின்ற அரிசியில் 60 சதவீதத்திற்குமேல் விற்கக் கூடாது என்று சொல்கின்ற ஒரு நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் புழுங்கல் அரிசி விரும்புகின்ற மக்களிடத்தில், பச்சை அரிசியை கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–05*

அடுத்து, பகுதி நேரக் கடைகள் திறப்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. குறிப்பாக பகுதி நேரக் கடைகள் திறக்கின்றபோது, மெயின் கடையில் 500 கார்டுகள் இருக்கவேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. அந்த நியதியைக் கடைப்பிடிக்கின்றபோது, பகுதி நேரக் கடைகள் திறப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது. உதாரணமாக ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நம்முடைய முதல்வர் அவர்கள் விரும்பிக் கட்டிய பெரியார் சமத்துவபுரம். ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஒரு கடை கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், என் தொகுதியில் உள்ள ஒரு சமத்துவபுரத்திலும், கீழாத்தூர் சமத்துவபுரத்திலும் பகுதி நேரக் கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டி 6 ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. ஆனால் 6 ஆண்டுகளாகியும், அந்தக் கடைகள் திறக்கப்படவில்லை. அங்கே ஒரு பகுதி நேரக் கடையாவது திறக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றபோது, மெயின் கடையில் 500 கார்டுகளுக்குக் குறைவாக இருக்கின்றன, அதுவும் சுமாராக 400 கார்டுகள்தான் இருக்கின்றன, இதை மாற்ற முடியாது என்று சொல்லி அதைத் தடுத்துவிடுகின்றார்கள். ஆகவே, 5 ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கின்றேன் அந்தக் கடை வரவேண்டும் என்பதற்காக. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்ற அந்தக் கடைக்குச் சிறப்பு அனுமதியை அரசு தர வேண்டும். குறிப்பாக அந்த மேலாத்தூர் கடைக்கு. மெயின் கடையில் 400 கார்டுகள் இருக்கின்றன. அதற்குப் போக பாக்கி 300 கார்டுகள் அந்தக் கடைக்கு வருகின்றன. ஆக, 700 கார்டுகளுக்கு மேலே இருக்கின்றன. ஆகவே அந்தக் கடைக்கு சிறப்பு அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி இருக்கின்ற கடைகளுக்கு. . .



**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல கருத்தை நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே பார்த்தால் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும், 200 கார்டுகள் இருக்கவேண்டும் என்று இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேதான் 150 கார்டுகள், 1½ கி.மீ. என்கிற நிலைப்பாடு வந்தது. ஆனால், அதேநேரத்தில் என்னவென்று சொன்னால், சமத்துவபுரம் என்று சொல்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு தனிச் சிறப்புச் சலுகை அளித்து கொடுக்க முடியுமா என்பதை முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இந்த மாமன்றத்திலே அறிவிக்கிறேன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** அமைச்சருடைய நல்ல பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, குவிண்டால் நெல்லுக்கு ரூ.850 இப்போது கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசு, கோதுமைக்கு குவிண்டாலுக்கு ரூ.1,000 என்ற ஒரு விலை நிர்ணயித்து, நெல்லுக்குக் குறைவாகக் கொடுத்துத் கொண்டிருப்பதைத் தவிர்த்து, மத்திய அரசு ரூ.1,000 ரூபாய். குவிண்டால் நெல்லுக்கு என்று கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும்.

அதைப்போல புதிய கார்டு வழங்குவதைப் பற்றி அமைச்சர் இங்கே விரிவாகச் சொன்னார், மண்ணெண்ணெய் பற்றி. இப்போது புதிய கார்டுக்கு 2 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதேநேரத்தில் அவர்களுக்கு மேலும் ஒரு லிட்டர் அதிகரித்து 3 லிட்டராக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

எரிவாயு அடுப்பு, இப்போது கலர் டி.வி. வழங்குவதைப்போல வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த எரிவாயு அடுப்பு வழங்குவதில், மிக தாமதம் ஏற்படுகிறது. இப்படி வழங்கினால் இந்த 5 ஆண்டு போதாது. இன்னும் ஓர் ஐந்தாண்டு வரவேண்டும் என்கின்ற நிலையில் இருக்கின்றது. ஆகவே எரிவாயு அடுப்பை

வேகமாக வழங்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

நுகர்வோர் பாதுக்காப்பிற்காக மாதாந்திர மக்கள் கருத்தறிகின்ற கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே கூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஒன்றிரண்டை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக இந்த அரசு இன்றைக்கு 9 சதவீத வட்டியை, 7 சதவீதமாக்கி, 7 சதவீதத்தை 5 சதவீதமாக்கி, இப்போது 4 சதவீத வட்டியாகக் குறைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கெல்லாம் இந்த அரசிற்கு நன்றி செலுத்துகின்றேன்.

நுகர்வோர் பாதுகாப்புத் துறை சம்பந்தமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக, குறைதீர் நீதிமன்றங்கள் 10 இடங்களில் நீதிபதி பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதை நிரப்புவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல கூட்டுறவுப் பணியாளர்கள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 26,000 பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருப்பதாக. இன்னும் 10,000 பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. இந்தப் பணியாளர்களும் நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

பிற்பகல் 12–10

நலிவுற்ற தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 199 மூடப்பட்டன, இன்றைக்கு. . . (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மிகவும் slow ஆக பேசுகிறவன். அதனால் கொஞ்சம் time கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு full ஆகவே மிகவும் slow ஆகத்தான் உங்கள் பேச்சு போய்க்கொண்டிருக்கிறது. நாங்களும் ஆரம்பத்திலிருந்து பார்க்கிறோம். இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் சார்.

**திரு. எஸ். இராசசேகரன்:** 199 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பிறகு 199



வங்கிகள் திறக்கப்பட்டு விட்டன என்றும் சொன்னார்கள். ஆனால் அது உண்மை அல்ல என்பதை இங்கே மறுக்க விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய 8 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் இன்னும் திறக்கப்படவேயில்லை. அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கூட்டுறவு அமைப்புகளை பலப்படுத்துவதற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் வைத்தியநாதன் குழுவினுடைய பரிந்துரைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும்.

மத்திய வங்கிகளில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். இந்த ஓய்வூதியத்தைப் பற்றி 2000 ஆவது ஆண்டில் அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை இங்கே படித்துக் காண்பிக்கிறேன். "முத்தாய்ப்பாக இந்தக் கூட்டுறவுத் துறையிலே இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓய்வூதியத் திட்டத்தை கூட்டுறவுத் துறை பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தச் சொல்லியிருக்கின்றார்கள். (அப்போது மேசையைத் தட்டும் ஒலி எழுப்பப்படுகிறது) அது ஆய்வு செய்யப்பட்டு இந்த ஆண்டு முதல் இந்த ஓய்வூதியத் திட்டம் அமலாக்கப்படும் என்பதையும் நான் விளக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அன்றைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இன்றுவரை அடுத்தபடியாக வந்த ஆட்சி, அதை நிறைவேற்றவில்லை. நம்முடைய ஆட்சி இப்போது வந்திருக்கிறது. தலைவர் அவர்கள் வந்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த ஓய்வூதியத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள் மாற்றப்பட வேண்டும். அதாவது இடமாறுதலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவர்களால் சில வங்கிகள் கெடுகின்றன என்பது உண்மைதான். ரூ. 5 இலட்சத்திற்குக் குறைவாக வாங்கிய பண்ணைசாராக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த அவையின்முன் வைக்கிறேன்.

நில வள வங்கி செயல்படுவதற்கு ஒத்துழைப்பு தந்து நில வள வங்கியைச் செயல்படுத்த வேண்டும். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர இளவரசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரி என்றால் முல்லையும் தேரும், பேகன் என்றால் மயிலும் போர்வையும், அதியமான் என்றால் அவ்வையும் நெல்லியும்; அண்ணா என்றால் அறிவும், ஆற்றலும்; கழகம் என்றால் கடமையும் கண்ணியமும் என்று எல்லோர் நினைவிலும் நிழலாடுவதுபோல், கலைஞர் என்றால் மனிதனும் அரிசியும் நிழலாட வேண்டும் என்பதற்காக, 5–ஆவது முறையாக ஆட்சியில் அமர்ந்த அடுத்த நொடியே அரிசி விலையை இரண்டு ரூபாயாக்கி, தரமான அரிசியை வழங்கி, தமிழகத்தையே தனதாக்கிய தலைவர் ஆட்சியில், அந்த அரிசி விளைவித்திடும் உணவையும் அந்த உணவுக்கான கூட்டுறவையும் இந்த மன்றத்தில் படைக்க விரும்புகிறேன். ஆம். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியங்களிலே அந்தப் படையலைப் போட விரும்பி அப்படிப் போடும் முன் அந்தப் படையலின் தலை வாழைகளையும் கொஞ்சம் தலை தாழ்த்தி வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

எல்லைப் பகுதி முதல் எல்லாப் பகுதிகளும் முல்லைப் பகுதிகளாக வேண்டுமென்ற எண்ணம் கொண்ட என் ஏற்றமிகு தலைவர், ஆலயங்களில் ஆன்மீகம் போல, அறிவாலயத்தில் திராவிடத்தை வளர்த்த அர்ச்சகர், தீக்குச்சி தீபங்களின் திரியைக் கைகளால் தொட்டே விளக்கேற்றும் வித்தகர், அரசியல் வானில் ஆலங்கட்டி மழை பொழியும் வருணர், பண்பாட்டுக் கல்லணை காக்கும் கரிகாலர், தமிழகக் கலைக்கூடத்தின் தலைவாயில், தமிழர்களின் குடும்ப அட்டை, எங்கள் தலைவர் எல்லோர்க்கும் முதல்வர் என விளங்கும் முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களே, 3 வது முறையாக இந்த மாமன்றத்திலே பேசுகிற வாய்ப்பினை வழங்கிய தங்களை நன்றியோடு வணங்குகிறேன்.

இந்தத் தலைமுறையில் அண்ணா, அடுத்த தலைமுறையில் கலைஞர், எங்களின் வியப்புக்குறி, தியாகத் திருவிளக்கு, திராவிடக் குலவிளக்கு, கண்ணின் கருமணி, காலத்தின் கொடை, முன்னோடும் கலைஞரெனும் வரலாற்றுப் பாசிக்குப் பின்னோடும் நூல், ஆயிரம் விளக்கின் அணையா ஜோதி, எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.



பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் என் வணக்கம். அடுத்ததாய்த் தமிழ் வணக்கம் என்ற அதிகார வைப்போடு, முதலில் தலைக் கோரிக்கைகளாய் என் குளித்தலை கோரிக்கைகளை முன்னிறுத்துகிறேன். பிறகு மானியக் கோரிக்கையில் மகிழ்வோடு நுழைய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, கடந்த ஆண்டு கலைக் கல்லூரியைத் தந்தீர்கள். தங்கள் திருப்பெயர் கொண்டு குளித்தலையில் அது திருவிளக்காய்த் திகழ்கிறது. இந்த ஆண்டு, என்ன தரப்போகிறார் என்று உங்கள் முதல் மக்கள், அதாவது உங்கள் முதல் தொகுதி மக்கள் முன்னிறுத்துகிறார்கள். வாகைக் கையோடு வருவதாய்ச் சொல்லியிருக்கிறேன். எனது கை, வாகைக் கையா அல்லது வெறுங்கையா என்பது உங்கள் வளமான கைகளில்தான் இருக்கிறது. எங்கள் கரூர் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி என்பது பொறி வைத்தாலும் கிடைக்காத நிலையில் உள்ளது. மாணவர்கள் எல்லாம் மலைக்கோட்டையை நம்பியே மனக்கோட்டையில் இருக்கிறார்கள். அவர்கள் மனக்கோட்டையைத் தகர்க்க, கோட்டையிலிருந்து ஒரு கோடு காட்டுங்கள். நீங்கள் காட்டும் கோட்டையைக் குளித்தலை மக்கள் பாதையாக்கிக் கொள்வார்கள்.

நீதி இடிந்து போகாத ஆட்சியில் நீதிமன்றம் இடிந்து போகிற காட்சியை குளித்தலை மக்கள் அன்றாடம் காண்கிறார்கள். 'அச்சம் தவிர்' என்று சொல்லும் ஆட்சிக் கலைஞரே, இந்தக் காட்சிக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து, புதிய நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கு கால்கோள் காண, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு வருகை தர வேண்டுமென அதன் வாயிலில் நிற்கின்றேன்.

*பிற்பகல் 12–15*

அடுத்து, போக்குவரத்து மீதான ஒரு போக்கில்லாத கோரிக்கை. குளித்தலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் நேரு அவர்களிடம் வேகத் தடைகள் ஏதும் வேகமாய் இல்லை. தலைவர் தொகுதி என்பதால் தயங்காமல் கேளுங்கள், தட்டாமல் தருகிறேன் என்கிறார். அதன்படி அவர் பேச்சில் இதுவரை முட்டாமலும் இருக்கிறார். புதிய வழித்தடங்கள் பத்தும், பற்றாக்குறைக்கு பற்று வரவு வைக்காமல் இருபது தடங்களை நீட்டித்தும் கொடுத்துள்ளார். வாஞ்சையாய் ஒரு வட்டாரப் போக்குவரத்துக் கழகமும் வழங்கியுள்ளார். அவர் துறையைப் பொறுத்தவரை தொகுதிக்கு ஒரு கொடை வள்ளலாக விளங்குகின்றார்.

ஓய்வறியா தலைவர் கலைஞரைப்போல, தொகுதியில் ஓடுகின்ற அப்பேருந்துகளும் ஓய்வு அறியாமல் உள்ளன. அவற்றின் ஓய்வுக்கு ஒரு பணிமனை வேண்டும். கேட்பது எனது பணி, அதைக் கொடுப்பது தலைவரின் பணி, தலைவருக்காகக் கொடுப்பது அமைச்சரின் பாணி என்பதை பணிவோடு இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

கவுண்டம்பட்டிகுறிச்சி என்பது ஒரு பேரூர், ஊராட்சி எல்லைக்குள் உலா வரும் ஊர். அந்த ஊர் மக்கள் அருகிலுள்ள ஊர்களுக்குப் போக வேண்டுமானால், ஏழு கிலோ மீட்டர் நடந்து செல்ல வேண்டும். மூன்றடியால் உலகை அளந்தது புராணக் கதை. ஏழு கிலோ மீட்டருக்கு எண்ணிலடங்கா அடிகள் அளந்தால்தான் பக்கத்து ஊர்களையே பக்குவமாய் பார்க்க முடியும். இது உண்மைக் கதை. எனவே, அந்த ஊரில், நங்கக்காட்டுவாரியில் ஒரு பாலம் அமைத்தால், அந்தப் பகுதி மக்களின் பாதச் சுவடுகளுக்குக் கொஞ்சம் பரிதவிப்பு குறையும்.

சூரியனூர் ஊராட்சியில் உய்யக்கொண்டான் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் தேவை என்பது அப்பகுதி மக்களின் இருகாலக் கோரிக்கை. நேற்றும், இன்றும் என அது நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மேம்பாலங்கள் காணும் மேன்மைமிகு ஆட்சியிலே, இரு சிறு பாலங்கள் கோருகிறேன். அதுவும் தரைப் பாலங்கள். இதையும், ஆதரிப்பீர். ஆதரித்து அரவணைப்பீர் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தோகைமலை ஊராட்சியில் உள்ள பேருந்து நிலையம் மிகவும் குறுகலாக உள்ளது. அதை விரிவுபடுத்தும் மனமும், அதை விரிவுபடுத்த இடமும் அங்கே விசாலமாக உண்டு. எனவே, அப்பேருந்து நிலையத்தை, அடிப்படை வசதிகளோடு விரிவுபடுத்தித் தர வேண்டுமாய் விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். இனி மானியக் கோரிக்கைக்கு வருகின்றேன்.

'ஒளியில் வாழுங்கள், ஒளிந்து வாழாதீர்கள்' என்கிற விதமாய் அறைகூவல் விடுக்கும் கல்வெட்டாய்க் கூட்டுறவும், உணவும் இந்த நிதிநிலையில் – நாட்டுயர்வை உயர்த்தும் நோக்கில், நன்னெறியாய் விளங்குகிறது. சமத்துவ நிலையை அறியப் பயன்படுத்தும் முதல் படியே கூட்டுறவு என்பதைச் சமத்துவம் கண்ட இந்தப் பெரியார் மறந்தாரில்லை. அதைப் படைத்தபோது மக்களையும் அவர் மறந்தாரில்லை. அதனால்தான் 22 இலட்சம் விவசாயிகள் கடன் சுமையிலிருந்து விடுதலை பெறத்தக்க அளவில் இந்த அரசு



பொறுப்பேற்ற அன்றே விவசாயக் கடன்கள் அனைத்தையும் சுமார் ரூபாய் 7,000 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்தார். இந்த இழப்பீட்டை ஈடுசெய்ய, இந்த நிதியாண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூபாய் 1,150 கோடி ஒதுக்கீடும் செய்துள்ளார்.

இந்தக் கடன்கள் தள்ளுபடியால், விவசாயிகளின் கண்ணீர்த் துளிகளும் தள்ளுபடியானதால் மத்திய அரசும் இதைக் கணக்கில் கொண்டு, இந்த நிதியாண்டில், சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் கடன்கள் ரூபாய் 60,000 கோடியைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்தது. அந்த அறிவிப்பின் வார்ப்படமே நம் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்திய விவசாயிகளின் இதயங்கள் இவரை எப்படி வாழ்த்திக் கொண்டிருக்கும் என்கிற கனவுப் பட்டறைக்குள் இப்போது நான் காலெடுத்து வைக்கிறேன்.

ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என அறிவித்து, மக்கள் உள்ளங்களை மனதிலே இருத்திய இந்த மாமனிதரின் வழிமுறையைத்தான் இப்போது ஆந்திர அரசும் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. அங்கும் இந்தத் திட்டம் அமலுக்கு வந்துவிட்டது. நம் தலைவர் கலைஞர் ஒரு பசிப்பிணி மருத்துவர், உண்டி கொடுத்த கோமகன், உயிர் கொடுத்த தலைமகன் என்றெல்லாம் இங்குள்ள ஏழைப் பராரிகள் இப்போது பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

அடுப்பூதும் பெண்களுக்கு, அப்படி ஊதாதே, இதோ இலவச எரிவாயு அடுப்புகள் என்று சொல்லி, இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டத்தை 14–1–2007–ல் தொடங்கி வைத்து, அதற்கடுத்து அதன் வரிசை விழாக்கள் அடுக்கடுக்காய் அடுக்கப்பட்டு இன்று 8 இலட்சம் வீட்டு அடுப்படிகளிலே இலவச எரிவாயு அடுப்புகள். அத்தனை வீட்டுப் பெண்களின் கண்களிலும் இப்போது புகை இல்லை. அதனால் அத்தனை வீட்டு ஆண்களின் கண்களிலும்கூட இந்த அரசின் மீது பகை இல்லை.

31–3–2006–ல் நிலுவையிலிருந்த விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தும், 1–4–2006–க்குப் பிறகும் விவசாயக் கடன்களை விவசாயிகள் செலுத்தியிருந்தால், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைகள் அவர்களுக்குத் திருப்பித் தரப்படும் என்றும் அறிவித்த ஏருழவர் நலன் காக்கும் இந்தச் சொல்லேருழவர் ஆட்சியில்தான் வேளாண் கடன்களுக்கான வட்டி வீதம்

முதலாமாண்டில் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும், அடுத்த நிதியாண்டில் 5 சதவீதமாகவும், வரும் நிதியாண்டில் 4 சதவீதமாகவும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவது உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த வட்டி சதவீதக் குறைப்பை அன்னை சோனியா காந்தி அவர்களே மனம் திறந்து பாராட்டியிருக்கின்றார்கள்.

*2005–2006* ஆம் ஆண்டுவரை *199* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கலைத்திட அறிவிப்பு செய்யப்பட்டு இருந்தது. அவற்றிற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், அவற்றில் *197* வங்கிகள் இப்போது செயலாக்கத்திற்கு வந்துள்ளன. கூட்டுறவுதானே நாட்டுயர்வின் நாடி, நரம்புகள். அவை அறுந்து போகலாமா, அவற்றை அறுந்து போக விடலாமா என்று அறுந்து போகாத நம் தலைவரின் எண்ணங்கள்தாம் இப்போது அவற்றுக்கு உயிரைத் தந்துள்ளன. அத்தகைய உயிர் காக்கும் தலைவரை உழவர்கள் இன்றும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

*29–2–2008* வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் *17.13* இலட்சம் விவசாயிகளுக்கு விவசாயக் கடன் அட்டைகள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு, குறுகிய காலக் கடன்கள் (மணியடிக்கப்பெற்றது) *4* சதவீதமும், மத்திய காலக் கடன்களில் *30* சதவீதமும் வழங்கும் திட்டம். எவ்விதப் பிணையமும் இன்றி ரூபாய் *5,000*. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மாணிக்கம், உரையை முடித்துவிடுங்கள். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. மாணிக்கம்:** இதோ உரையை முடித்துவிடுகிறேன். குடும்ப அட்டை பெறுவதிலே கால விரயம் இருக்கக் கூடாது என்று நினைத்த முதல்வர் கலைஞர் அவர்கள், அவற்றை அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களிலேயே வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார். அதுவும் இரு மாதங்களிலேயே உரியவருக்கு அது போய்ச் சேர வேண்டும் என்று உத்தரவு. அப்படி முடியாமல் போனால் அதற்கான காரணம் உரியவருக்குப் போய்ச் சேர வேண்டும் என்கிற கட்டாயத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12–20*

கரூர் மாவட்டத்திற்கு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது ஆய்வுக் கூட்டத்திலே அதிகாரிகளிடம் கண்டிப்பாக சொன்னார், அரிசி கடத்தல் இனிமேல் இருக்கக்கூடாது என்று.



அப்படி உத்தரவிட்டதற்குப் பிறகு கரூர் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக உணவுத் துறை அதிகாரிகள் எல்லாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரிசி கடத்தல் இல்லாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று எந்தவொரு மக்கள் பயன்பாட்டிற்கும் தமிழகமே இந்தியாவின் முன்னோடியாக விளங்க வேண்டும் என்பதில் கலைஞரின் எழுதுகோல் எப்போதும் உறங்கியதில்லை. (மணியடிக்கப்பெற்றது) அண்ணே! இதோ நன்றி சொல்லிவிடுகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள். திரு. சேகர், only *10* minutes. *12–30*–க்கு நாங்கள் அமைச்சர் அவர்களை பதிலுரையாற்றக் கூப்பிட்டாக வேண்டும்.

**திரு. இரா. மாணிக்கம்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொன்னதாக எடுத்துக்கொள்கிறோம்.

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்ற *7* ஆயிரம் கோடி கடனைத் தள்ளுபடி செய்தமைக்கும், விவசாயிகளுடைய வாழ்க்கையில் பால்வார்த்த கூட்டுறவுத் துறைக்கும், தமிழக அரசுக்கும் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஏற்பட்ட இழப்புக்காக *2,304* கோடி ரூபாயை இன்றைக்கு பங்கிகளுக்கு வழங்கி, வங்கிகளுடைய டெபாசிட்தாரர்களுக்கு டெபாசிட்டினை திருப்பி வழங்கிய கூட்டுறவுத் துறைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக *1,500* கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கி, அதிலும் வட்டியினை *5*–லிருந்து *4*–சதமாகக் குறைத்தமைக்கு இந்த அரசுக்கு விவசாயிகளுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு மகத்தான திட்டம். இலவச கேஸ் இணைப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

ரேஷன் கார்டுகள் கிடைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி தெரிவித்து, அவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே வழங்கப்படும் என்ற திட்டத்திற்கு வரவேற்பு

அளிக்கிறேன். ஆனால் ரேஷன் கடைகளிலே தேவையான பொருள்கள், கோதுமை எங்கு போனாலும் கிடைப்பதில்லை என்று குரல் கேட்டுக்கொண்டே இருக்கிறது. கோதுமை கிடைப்பதில்லை. மண்ணெண்ணெய் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து வருகிறது, வருகிறது என்று இரண்டு ஆண்டுகளாக காத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்போது மத்தியத் தொகுப்பிலிருந்து வரும்; எப்போது மக்களைச் சென்று அது சேரும் என்ற கேள்வி வினாவாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு நல்ல விடை பதிலுரையிலே கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நடத்துகிற கூட்டுறவுக் கடைகளிலே மக்களுக்கு வினியோக்கப்படுகின்ற பொருள்கள் பாக்கெட்டாக செய்து அளவும், குவாலிட்டியும், தரமான பொருட்களை விற்பனை செய்வதற்கு, பாக்கெட்டாக செய்து விற்பனை செய்ய அரசு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது கடந்த இரண்டு ஆண்டுகளாக கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது.

அதைப்போல விலை, ஏற்றத்தாழ்வு உயர்வுக்கு காரணமாக இருக்கின்ற on line வர்த்தகம் மத்திய அரசின் துறையாக இருந்தாலும், இதிலே மாநில அரசு சற்று கவனம் செலுத்தி இதற்கு விரிவான ஆலோசனைகளை வழங்கி இந்த on line வர்த்தகத்தினை முழுமையாகத் தடை செய்ய நிரந்தரமான ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு கூட்டுறவுத் துறை, உணவுத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு அடமானத்திற்குரிய கடன் வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும். வீட்டை அடமானம் வைத்தவர்கள் வட்டிக்குமேல் வட்டி வைத்துக்கொண்டு அதைக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, அவர்களைக் காக்க வேண்டும். முழுவதுமான கடனை தள்ளுபடி செய்யமுடியுமா என்று தமிழக அரசு யோசிக்கலாம். இன்றைக்கு மத்திய அரசு 60 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கின்ற நேரத்தில், இந்த P.A.C.B. போன்ற வங்கிகளில் ஏழையெளிய விவசாய நண்பர்கள், வீட்டை அடமானம் வைத்து பெற்றிருக்கின்ற கடனுக்காக இன்றைக்கு மிகப்பெரிய வேதனையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



கடன் தள்ளுபடி செய்தாகிவிட்டது. அடுத்து, முறையாகக் கடனைக் கட்டியவர்களுக்கு இந்த அரசு என்ன ஊக்கப் பரிசு தரப்போகிறது? முறையாகக் கடனைக் கட்டியவர்கள் இன்றைக்கு ஏமாளியாக நிற்கின்றார்களே. அவர்களுக்கு ஏதாவது ஊக்கப் பரிசு அல்லது ஊக்கத்தொகை தரவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு கடனைக் கட்ட வேண்டும் என்ற உணர்வு வரும். அவர்களுக்கு Green Card என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தலாம். முறையாகக் கடனைக் கட்டியவர்கள், இதுவரை கட்டியவர்கள், தள்ளுபடிக்கு முன்பு வரை கட்டியவர்களுக்கு ஒரு Green Card Holder என்று அவர்களுக்கு சிறப்புக் கடன், உடனடியாக கடன் திட்டத்திற்கு முன்னுரிமை; அப்படிச் செய்தால் புதிய கடனை வாங்கிக் கட்டவேண்டும் என்ற உணர்வு மக்கள் மத்தியிலே வரும். எனவே இதற்காக அரசு நல்லமுறையிலே பரிசீலிக்கவேண்டும் என்ற கேட்டுக்கொள்கிறேன.

பண்ணைசாராக் கடன் கூட்டுறவு வங்கியிலே ஏழையெழிய விவசாயிகள் படிப்பறிவில்லாதவர்கள் கடனை வாங்குகிறபோது அது பண்ணைச் சார்ந்த கடனா அல்லது பண்ணைசாராக் கடனா என்று வித்தியாசம் பார்க்காமல் அவராகப் பார்த்து—அந்த செகரட்டரியாக பார்த்து—அந்த மேனேஜராகப் பார்த்து, பண்ணைசார்ந்த கடன் என்று எழுதிவிட்டால் அதற்குத் தள்ளுபடி; பண்ணைச்சாராக் கடன் என்று போட்டுவிட்டால் அதற்குத் தள்ளுபடி இல்லை. டிராக்டர் வாங்கியவர்களுக்கெல்லாம் தள்ளுபடி. J.C.P. வாங்கியவர்களுக்கெல்லாம் தள்ளுபடி. ஆனால் விவசாயம் சார்ந்த, பண்ணை சார்ந்தவர்கள் கடன் வாங்கிவிட்டால் அவர்கள் பண்ணைசாராக் கடன் என்ற வார்த்தையை எழுதிவிட்ட காரணத்தினாலே தள்ளுபடி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப்போகிறது? என்ன நீதியைத் தரப்போகிறது என்பதுதான் நமது கேள்வி.

அரிசி கடத்தல் பரவலாக நடந்துகொண்டே இருக்கிறது. தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறோம். இதைத் தடுப்பதற்கு மிகக் கடுமையான சட்டங்கள் இயற்றவேண்டும். அரிசி கடத்தல் மிக மோசமான நிலைமையாக இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு எத்தனை கோடி மானியம் வழங்குகிறது? அத்தனை கோடி, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மானியத்திலே ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே கள்ளக்கடத்தல் பேர்வழிகளை கடுமையான சட்டம் மூலமாகத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினுடைய கடன் தள்ளுபடியை ரூ.25,000 மட்டும் தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறார்கள். நமது வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சரோடுகூட நான் பேசிக் கொண்டிருந்தேன். 25,000 ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அந்தக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் வாங்கிய கடன், வட்டி, அபராத வட்டி என்று கணக்குப் பார்க்கிறபோது, அந்த வீட்டினுடைய விலையைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. எனவே, அந்தத் தள்ளுபடியை ரூ.25,000 என்று இருப்பதை ரூ.2 இலட்சமாக உயர்த்த வேண்டும். 2 இலட்சம் ரூபாய் வரை வாங்கியிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்தால் இந்த நாட்டிலே ஏழையெளிய மக்கள் பிழைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 12–25

அடுத்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே சுமை தூக்குகிற தொழிலாளர்ளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் போடுகிறார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பணிவான கவனத்திற்கு, உணவுத் துறையில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே சுமை தூக்குகிற தொழிலாளர்களாக இருப்பவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் போடப்படுகிறது. 3 வருடங்கள் முடிந்துவிட்டு ஊதிய ஒப்பந்தத்திற்காகக் காத்திருக்கிறார்கள், பேச்சுவார்த்தையோடு. அவர்களுக்கு விடியல் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

அடுத்து, பத்திரிகையிலே புதிய புதிய எரிவாயு இணைப்புகள் கொடுப்பதற்கு விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் முன்வருகிறார்கள். அரசினுடைய துறை அந்த எரிவாயு ஏஜென்சியைப் பெற்றால் அரசுக்கும் வருமானம் இருக்கும். அதைப்போல மக்களுக்கும் சரியான முறையிலே சேவை செய்ய முடியும். அதிகமானவர்களுக்கு நுகர்வோர் வாணிபக் கழகத்தின்மூலமாக எரிவாயு இணைப்பு வழங்குவதற்கு, அந்த ஏஜென்சியைப் பெறுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழகத்திலே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து இயங்கிவரும் நூற்பாலைகள், கூட்டுறவு நூற்பாலைகளில் 13 நூற்பாலைகள் மூடப்பட்டு விட்டன. 13 நூற்பாலைகளிலே கோடிக்கணக்கான சொத்துக்கள் விற்பனை செய்யப்படாமல், பராமரிக்கப்படாமல், மழையிலும், வெயிலிலும்



நனைந்து வீணாகிப் போய்க்கொண்டிருக்கின்றன. இந்தச் சொத்துக்களை யார் ஏற்று நடத்துவது? மீண்டும் எப்படி இந்த நூற்பாலைகளைத் தொடர்ந்து நடத்துவதா, தனியாருக்குக் கொடுப்பதா. நூற்பாலையினுடைய சொத்துக்கள் அரசினுடைய சொத்துக்களோடு இணைக்கப்படலாமா என்று அரசுக்கு ஒரு கேள்வியாக வைத்து அதற்கு நல்ல பதில் அமைச்சரின் பதிலுரையிலே கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

அடுத்து, கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. இதே சட்டமன்ற அவையிலே 3–5–2000–த்திலே நமது இன்றைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்றைய கூட்டுறவு, உணவுத் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகிற ஊழியர்களுக்கு 2,500 ரூபாய் ஊதியம் வழங்கப்படும்; ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கு சட்டமன்றத்தினுடைய குறிப்புகள்கூட இருக்கிறது. இன்றைக்குவரை அறிவித்த அறிவிப்பு "செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்" என்று சொல்கிற அரசு, இந்த ஊழியர்களுடைய ஓய்வூதியத்தை—குடும்ப ஓய்வூதியத்தை எப்பொழுது அளிக்கப்போகிறது என்கின்ற கேள்வியை அரசுக்கு நான் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவு வங்கிகளுக்கு Commercial வங்கிகளைப்போல மத்திய அரசிலே வருமான வரித் துறையிலே 80–B Section–லே வருமான வரி கட்டுவதிலே பல கோடிக்கணக்கான ரூபாயை கூட்டுறவு வங்கிகள் கட்டிக்கொண்டிருக்கின்றன. இந்த கூட்டுறவு வங்கிகள், Commercial–ஆன வங்கிகள் அல்ல; வணிகமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்ல. சேவைக்காக இருக்கப்பட்ட சங்கம். எனவே அதை மறுபரிசீலனை செய்யவேண்டும். அந்த 80–B Section–இலிருந்து நீக்கம் செய்வதற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் இதற்கு முயற்சிகள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேராசிரியர் வைத்தியநாதன் குழு, ஒரு குழுவை நியமித்து கூட்டுறவு வங்கிகளை எப்படி மேம்படுத்துவது என்ற அறிக்கையை அளித்து, அது ஏழு மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே தமிழகமும் அதை ஒத்துக்கொண்டு, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக கையெழுத்திட்டு இருக்கிறது. ஆனால், ஆயத்தப் பணிகள் இன்றுவரை துவக்கப்படவில்லை. பேராசிரியர் வைத்தியநாதனுடைய

கமிஷன் அறிக்கையை விரைவிலே நடைமுறைப்படுத்தினால், மத்திய அரசின் மற்ற உதவிகள் பெறுவதற்கு ஏற்றதாக இருக்கும். Modernization பண்ணுவதற்காக, ஆந்திர மாநிலத்திலே 2,500 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறார்கள். வைத்தியநாதன் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்தி அதன்மூலமாக கூட்டுறவு வங்கிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பெற்றிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக Civil Supplies Corporation ஊழியர்களுக்கு இருக்கிற ஊதியத்தைப் போல கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு இல்லை. இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. Civil Supplies Corporation-ஆக இருக்கிறது. கூட்டுறவு வங்கியாக இருக்கிறது. இரண்டுக்கும் ஒரே வகையான ஊதியத்தை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அமுதம், சிந்தாமணி, காமதேனு போன்ற அங்காடிகளை அதிகம் திறந்தால் தனியார் வர்த்தகங்கள் குறைந்து, விலையைக் குறைத்து விற்பதற்கு ஏதுவாக இருக்கும்.

சுய உதவிக் குழுக்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அந்த அமைப்பை நடத்துவதற்கு franchise மாதிரி தரலாம். ஒரு கிளை அமைப்பைப்போல நடத்துவதற்கு வாய்ப்பைத் தரலாம். டெல்டா பகுதிகளிலே ஒரு நுகர்பொருள் வாணிபக் கழகம்கூட இல்லை. எல்லாக் கடைகளும் கூட்டுறவு வங்கிக் கடைகளாக இருக்கின்றன. காவிரி டெல்டா பகுதியிலே இந்தக் குறையைப் போக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய ஊழியர்களுடைய கோரிக்கை. இன்றைக்கு அவர்களுடைய பென்ஷன் திட்டம், மத்திய அரசினுடைய அறிக்கையின்படி 16-11-1995-லேயிருந்து குறைந்தபட்சமாக அந்த ஓய்வூதியம் ரூபாய் 440-லிருந்து 1,500 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. 1982-லிருந்து கோரிக்கை வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். 1982-லிருந்து இந்தக் கோரிக்கை இன்றுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே, வருங்கால வைப்பு நிதி ஆணையத்திலே இன்றைக்கு 200 கோடி ரூபாய் டெபாசிட் இருக்கிறது. இந்த அரசு இன்னும் 275 கோடி ரூபாய் கட்டினால் 25 ஆண்டுகளுக்கு வைப்பு நிதி பிரச்சினையே இருக்காது. ஆண்டுக்கு நூறு கோடி என்று ஒதுக்கினால்கூட அவர்களுடைய



பிரச்சினை தீர்ந்துவிடும். 25 ஆண்டுகளுக்கு இந்த ஓய்வூதியப் பிரச்சினை தீர்த்துவிடும். அதை அமைச்சர் கருணையோடு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-30

அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே நாங்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் இயக்கத்தினுடைய தொழிற்சங்கம், I.N.T.U.C. I.N.T.U.C. உறுப்பினர்களுடைய சதவீதம் 21. அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் இல்லை. 15 விழுக்காடு இருந்தால் அங்கீகாரம் தரப்படும் என்ற செய்தி இருக்கிறது. ஆனால் 21 சதவீதம் இருக்கிற அந்தச் சங்கத்திற்கு ஏன் அங்கீகாரம் தரப்படவில்லை என்பது தெரியவில்லை. நான் இதுகுறித்து ஒரு கடிதம் எழுதியபோது எனக்குப் பதில் வந்தது. 14.5 சதவீதம்தான் உங்களது சங்கத்திலே உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது பணியில் இருந்து ஓய்வு பெறப்போகிற பணியாளர் ஓய்வு பெறுவதற்கு முந்தைய நாள் suspension-ஐப் போல—14.5 சதவீதம்தான் இருக்கிறது; எப்படி அதைக் கணக்கிட்டார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் சரியாக ஆதாரபூர்வமாக, record-உடன் 21 சதவீதப் பணியாளர்கள் இருக்கிற I.N.T.U.C.-ஐ அங்கீகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

அதைப்போல கூட்டுறவுத் துறையிலே S.C., S.T. பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கு தொழிலாளர்கள் அரசால் தேர்வு செய்யப்பட்டு, இலவசப் பயிற்சி முடித்த ஆதி திராவிடர்கள், பழங்குடி இனப் பட்டதாரிகள் இதுவரை நியமிக்கப்படவில்லை. அவர்களை உடனே நியமிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஓய்வூதிய ஒப்பந்தம் செப்டம்பர் மாதத்தோடு 5 ஆண்டுகள் முடிந்துவிட்டது. அதைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

Co-operative Act-லே Rule Number 149, அதிலே பெரிய பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. விதி 149-ஐ re-consider செய்ய வேண்டும். அதனால் நிறைய பாதிப்புகள் இருக்கின்றன. அதை re-consider செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நுகர்வோர் அமைப்புகளை விரிவுபடுத்தி, நுகர்வோர் உரிமைகளைப் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு வணிகக் கடன், பணிபுரிகிறவர்களுக்குக் கடன், பேறு காலக் கடன் ஆகியவற்றுக்கான ஒதுக்கீட்டைப் பார்த்தால் மிகக் குறைந்த தொகையே ஒதுக்கியிருக்கிறார்கள். ரூ.10 கோடிதான் பணிபுரிகிற பெண்களுக்கான கடன்; சிறு வணிகக் கடனாக ரூ.9 கோடிதான்; பேறு காலக் கடனாக ரூ.35 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

தொழிற் கடன் என்ற தலைப்பிலே கொள்கை விளக்கக் குறிப்பிலே. . . (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். திருப்பூரிலே கூட்டுறவு வங்கிகளிலே ஊழியர்களாக இருப்பவர்கள் வங்கியிலே கடனைப் பெற்று, அந்தக் கடனைச் செலுத்த முடியாமல், அபராத வட்டியெல்லாம் சேர்ந்துகொண்டு பெரிய சுமையாக இருக்கிறது. அதையும் பரிசீலனை செய்து, இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவினுடைய காவலராக, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுத் துறையின் காவலராக இருந்த பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து அவர்கள் சென்னிமலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இங்கே தில்லையாடி வள்ளியம்மை மாளிகையை உருவாக்கியிருக்கிறார்கள். அவர் நினைவுத் தபால் தலை வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை முதலமைச்சரிடத்திலே, நிதியமைச்சரிடத்திலே வைத்திருக்கிறோம். கைத்தறியை உயர்த்திப்பிடித்த எம்.பி. நாச்சிமுத்து அவர்கள் நினைவாக அரசு தபால் தலை வெளியிட்டு பெருமை சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே கடன் தள்ளுபடி செய்து பெருமை சேர்த்த இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னதுபோன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து, ஏழையெளியவர்களை உயர்த்தும்விதமாக, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற உயர்ந்த கொள்கைக்கு வழி அமைத்து, அதை வெற்றி பெறச்



செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு."**

என்று அய்யன் திருவள்ளுவர் அவர்கள் 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பிட்டார்கள். எனவே அவர் வழியில், குறள் வழியில் துணிவோடு செயல்படுதல், குடிகளைப் பாதுகாத்தல், அறநூல்களைக் கற்றல், ஆவன செய்திட அறிதல், அயராது உழைத்தல் ஆக இந்த ஐந்தும் ஒருங்கே பெற்று ஆட்சி நடத்துபவர்தான் எங்கள் தன்னிகரில்லா தலைவர் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 தினங்களுக்கு முன்னால் எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம், ஆரணிக்குப் பக்கத்திலே திருமலை என்கிற ஒரு பகுதியில் சமண முனிவர்கள் சார்பாக, அங்கேயிருக்கிற தவளகீர்த்தி என்கிற ஒரு சாமியார் அவர்கள், கல்வித் துறை சம்பந்தப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைப்பதற்காக என்னை அழைத்தார்கள். அந்தக் கட்டடத் திறப்பு விழாவிற்கு நான் சென்றபோது, அங்கே பெரும்பான்மையாக தமிழ்நாட்டைச் சேர்ந்த, பல மாவட்டங்களைச் சேர்ந்த சமண மதத்தைச் சார்ந்த ஆன்றோர் பெருமக்கள், சான்றோர் பெருமக்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள், 'எங்களது சமண மதம் என்பது எப்பொழுதும் பிறருக்கு இம்சை கொடுக்காமல், பிறர் மனம் மகிழ்கிற அளவிற்கு தொண்டு செய்து கொண்டிருக்கிறது' என்று சொல்லிவிட்டு, 'நம்முடைய பக்தி இலக்கியத்தைப் பொறுத்த அளவில் எங்களுடைய சமண மதம் பல்வேறு நூல்களையெல்லாம் 'எப்பொழுதும், அந்தக் காலத்திலும் நாங்களெல்லாம் யாத்திருக்கிறோம்; சிலப்பதிகாரம், மேருமந்திர புராணம், யசோத காவியம், நன்னூல், நாலடியார், பழமொழி நானூறு, ஏலாதி, ஆசாரக்கோவை, அறநெறிச்சாரம், திருக்குறள் போன்றவற்றை

எல்லாம் எங்களுடைய சமண முனிவர்கள்தான் யார்த்தார்கள் என்று சொன்னார்கள்.

அதோடு மட்டுமல்ல, சொல்லிவிட்டு, இன்னும் ஒரு படிமேலே சொன்னார். எந்த மதத்தையும் சாராமல் வாழ்வின் நெறிமுறைகளை மட்டும் எடுத்துச் சொன்னது திருக்குறள்.

ஏனென்று சொன்னால் திருக்குறள், அத்தனை குறள்களையும் நாம் படிக்கிறபோது, இந்து மதத்திலே இருக்கிற சைவத்தையோ, வைணவத்தையோ, பிற மதங்களையோ சொல்லாமல், வாழ்வியலைப்பற்றியும் எடுத்துச் சொன்னதுதான் திருக்குறள். அதை யார்த்தவர்கள் சமண முனிவர்கள் என்று சொல்லி, அதற்குமேலும் ஒரு படி சென்று சொன்னார்கள்; சமண நூலான சிலப்பதிகாரம் நாட்டு மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக எளிய நடையிலே நாடகத்திலே 'பூம்புகார்' என்று தந்தவர்தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அண்ணன் கலைஞர் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

இன்னொரு சமணர் வந்தார் என் பக்கத்திலே. அவர் வந்து சொன்னார். அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு திருவள்ளுவருக்கு கன்னியாகுமரியில் வானுயர சிலை அமைத்தவரும் அவரே; சென்னையிலே கலைநயத்தோடு வள்ளுவர் கோட்டம் அமைத்தவரும் அவரே; திருக்குறளுக்கு உரை எழுதிப் படித்தவரும் அவரே; அண்ணா காலத்திலே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது பாமர மக்களும் திருக்குறளை அறிய வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பேருந்து வண்டிகளில் எல்லாம் திருக்குறளை எழுத வைத்தவரும் அவரே.

அதோடுமட்டுமல்ல. இந்தச் சட்டமன்றத்திலே இன்றைக்கு திருவள்ளுவருடைய படம் இருக்கிறது என்று சொன்னால் இது வருவதற்குக் காரணமாக இருந்தவரும் நம்முடைய தலைவர் அவரே என்று சொன்னவர்கள், திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் பெருமை சேர்த்த அவர்தான் திருக்குவளை தந்த கலைஞர்தான் திருவள்ளுவராக எங்களுடைய கண்ணுக்குக் காட்சியளிக்கிறார் என்று மெய்சிலிர்த்துச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அந்த சமண முனிவர்கள் சொன்னார்கள், நான் சொல்லவில்லை. எந்தத் திருக்குறளை ஆய்விலே சமணமாக மதித்து சான்று என்று



சொன்னார்களோ, அவர்கள்தான் இன்றைக்கு எங்களுக்குக் கண்ணுக்குத் தெரிந்த திருவள்ளுவராக, அய்யனாக தமிழ்நாட்டிலே கலைஞர் திகழ்கிறார் என்று சமண முனிவர்கள் சொன்னார்கள். எனவே அந்தத் தலைவர் என் கண்ணுக்கு எப்படித் தெரிகிறார் என்று சொன்னால், எனக்குத் தாயாக, தந்தையாக, தத்துவத்தின் இருப்பிடமாக, ஊனாக, உயிராக, உண்மையின் பிறப்பிடமாக, என் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கிற என் தலைவர் கலைஞருடைய திக்கை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய மானியக் கோரிக்கைக்கு நான் பதிலுரையை அளிக்க விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல. இங்கே எங்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையை அளித்து, எங்களுடைய துறைக்காக பணத்தையும் ஒதுக்கி, இங்கே வருகைபுரிந்திருக்கிற நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் பெருமகனார் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, ஆயிரம் விளக்கின் அணையா தீபமாக, இளைஞர்களுடைய எழுஞாயிறாக, வருங்கால தமிழ்ச் சமுதாயத்தினுடைய வழிகாட்டியாக, இன்றைக்கு உள்ளாட்சியிலே என்றைக்கும் இல்லாத அளவிற்கு நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற என் அன்பிற்குரிய மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல்மிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Max New York Life என்கிற ஒரு நிறுவனமும், India Financial Production Survey என்கிற ஒரு நிறுவனமும், இரண்டும் சேர்ந்து ஒரு ஆய்வு நடத்தினார்கள். அந்த ஆய்விலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 100 சதவீதம் என்று எடுத்துக்கொண்டால், அதிலே கல்விக்காக ஒரு குடும்பத்திலே 100 சதவீதத்திலே 7 சதவீதம் செலவிடப்படுகிறது. இன்னொன்று, போக்குவரத்திற்காக, போவதற்காக, வருவதற்காக, பஸ்ஸிலே போவதற்காக, கார்களிலே போவதற்காக, இப்படிப் போக்குவரத்திற்காக 10 சதவீதம் செலவிடப்படுகிறது. நம்முடைய வீட்டிலே திருமணம் ஆவதாக இருந்தாலும், வீடு கட்டுவதாக இருந்தாலும், அல்லது உடல்நிலை சரியில்லை என்று சொன்னால் மருத்துவச் செலவு செய்வதாக இருந்தாலும், இப்படித் திடீர் திடீர் என்று வருகிற செலவும், திட்டமிட்ட செலவும், இதற்காக ஒதுக்கப்படுவது 28 சதவீதம். ஆக, 100 சதவீதத்திலே இவையெல்லாம் போனால், பெரும்பான்மையான சதவீதம் என்பது, 55 சதவீதம்.

இந்த 55 சதவீதம் உணவுக்காகச் செலவிடப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு. அந்த உணவுக்காகச் செலவிடப்படுகிற காரணத்தினால்தான் கிராமத்திலே, நகரத்திலே இருக்கிற ஒவ்வொரு குடும்பத்தினுடைய பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக—ஏனென்று சொன்னால் வருமானத்திலே பெரும்பான்மை 50 சதவீதம் அப்படிப் போகிறது. எனவே அந்த 50 சதவீதத்திலே ஒரு அரசு எந்த அளவிற்கு நாம் அதை எடுத்துக்கொண்டால் அந்தக் குடும்பத்தினுடைய பொருளாதாரம் உயரும் என்ற அந்த நிலையிலே—தலைவர் கலைஞர் அவர்கள் உணவு மானியத்திற்காக பணத்தை ஒதுக்கி, அதற்காக ஒரு குடும்பத்திற்கு நேரடியாகச் செல்கிற அளவிற்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற திட்டத்தை இன்றைக்குச் சிறப்பாகக் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் பார்க்கிறபோது, சென்ற ஆண்டு, 2007–2008 நிதியாண்டிலே 1,950 கோடி ரூபாய் அதற்காக சென்ற ஆண்டு ஒதுக்கி, அதற்காகச் செலவு செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதே நிலையில்தான் இன்றைக்கும் அது செலவு செய்யப்படுகிறது. எனவே அந்த வகையில் பார்த்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காகச் சிரமம் எடுத்துக்கொள்கிற ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகின்றேன்.

ஐம்பெரும் காப்பியங்களிலே ஒன்றாக இருக்கிற மணிமேகலையில்

“ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி;
தீம்பால் சுரப்பாள் தன்மார்பு போன்றே,
நெஞ்சு வழிப்படூம் விஞ்சைப் பாத்திரத்து
அகன் சுரைப்பெய்த ஆருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்”

என்று கூறப்பட்டுள்ளது. அதனுடைய பொருள் என்னவென்று சொன்னால், “ஒரு தாய் இருக்கிறார் என்று சொன்னால், வாடிய முகத்தைக் கண்டவுடன், அந்தக் குழந்தையினுடைய பசியை அறிந்து, ஆருயிரைக் காக்கின்ற மருந்து எது என்று சொன்னால், அது உணவுதான். அந்த உணவை அந்தக் குழந்தை கேட்காமலேயே, தானே மார்பகம் திறந்து சுரக்கிற தாய் எவளோ, அந்தத் தாய்தான் உண்மையான தாய்” என்று மணிமேகலையில் சொன்னார். எனவே அந்தவகையில், சிலப்பதிகாரம் கண்ட எங்களுடைய செம்மல்,



தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தாயாக இருந்து, இன்றைக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்கிற திட்டத்தைக் கொண்டுவந்ததனுடைய பயனாக, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது பசி, பட்டினியே இல்லை. இந்த ஆட்சியிலே யாரும் நரிக் கறியையோ, எலிக் கறியையோ, எதையும் சாப்பிட வேண்டிய அவசியமில்லை என்கிற நிலையை தமிழ்நாட்டிலே உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்கிற திட்டத்தில், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு, 1,85,72,834 குடும்பங்கள் இதன்மூலமாக நேரடியாகப் பயன்பெறுகின்றன. அந்தப் பயனை இன்றைக்கு நாம் பார்க்கிறோம்.

பிற்பகல் 12–40

தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு, இரண்டாவது ஆண்டு நிறைவு செய்கிற இந்த நேரத்தில், பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டியார் அவர்கள்— நேற்றையதினம் 7 ஆம் தேதி, அங்கே வருடப் பிறப்பு; உகாதிப் பண்டிகை என்று தமிழ்நாட்டில் நாம் சொல்வோம்—அந்த உகாதிப் பண்டிகையை முன்னிட்டு, இன்றைக்கு ஆந்திராவிலே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குப் போடுவோம் என்று சொல்லியிருக்கிறார்.

ஆக, இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டுகிற தலைவராகத் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள், இதுபோன்ற நல்லதொரு திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தவகையில், 1,85,72,834 குடும்பங்களுக்கு இந்தப் பொருட்கள் போவதற்காகத்தான், கிட்டத்தட்ட கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக 28,432 கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக 1,179 கடைகளும், ஆகமொத்தம் 29,611 கடைகள்; இதிலே 6,108 பகுதிநேரக் கடைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தக் குடும்ப அட்டைகள் என்று எடுத்துக்கொண்டால், உணவுப் பொருட்களை வாங்காதவர்கள், காவல் துறை அட்டை, தீயணைப்புத் துறை அட்டை, இப்படி அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்தம் தமிழ்நாட்டிலே இதுவரை 1,97,47,517 குடும்ப அட்டைகள் இந்தத் துறையின்மூலமாக நாங்கள் வழங்கியிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல; ஏற்கெனவே, சென்ற ஆட்சியிலே அட்டைகள் வழங்குவதை எல்லாம் நிறுத்திவிட்டார்கள். 'எப்போது அட்டை வழங்கப்படும்? எப்போது அட்டை வழங்கப்படும்?' என்று சட்டமன்ற உறுப்பினர்களின் குரல் இங்கே கேட்டது. அதனுடைய அடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 8–8–2006 அன்று ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள். அதன்மூலமாக, 8,34,456 குடும்ப அட்டைகள் இப்போது தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய தொகுதியிலே, ஏதாவது ஒரு கிராமத்திலே அட்டைகள் வழங்கப்பட்டவுடனேயே, அவருடைய தந்தை பெயர் மாறியிருக்கிறது என்று சொன்னால்—initial என்று சொல்வார்கள். தந்தை பெயர் மாறியிருக்கிறது என்று சொன்னால்—அந்த அட்டை மீண்டும் மாவட்ட வழங்கல் அதிகாரிக்கு வரவேண்டும்; அதற்குப் பின்னால் சென்னையிலே ஆணையாளர் அலுவலகத்திற்கு வரவேண்டும்; அதற்குப் பின்னால் ELCOT நிறுவனத்திற்குப் போகவேண்டும். சாதாரண ஒரு initial தவறு இருந்தால்கூட, அதைச் சரி செய்ய அந்த அட்டை இங்கெல்லாம் போகவேண்டும். இந்தக் குறையைக் களைய வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதியை முன்னிட்டு—உறுப்பினர்களுடைய வசதியை முன்னிட்டு மட்டுமல்ல; அவர்களுக்கு வாக்களித்த பொது மக்களின் வசதியை முன்னிட்டு,—இதற்கு மாநிலம் முழுவதும் செல்லவேண்டிய அவசியமில்லை இது அன்றாடப் பிரச்சினை; அங்கங்கே தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே இவற்றையெல்லாம் வழங்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அந்தவகையில், அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்பு, தமிழ்நாட்டிலே 12,679 குடும்ப அட்டைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

இன்னொன்று; இங்கேகூட நாம் பார்க்கிறோம். சில சட்டமன்ற உறுப்பினர்களே என்னிடத்திலே நேரடியாகக் கடிதங்களைக்



கொடுக்கிறபோது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், "ஆறு மாத காலம் ஆகிறது; மூன்று மாத காலம் ஆகிறது; இன்னும் வரவில்லை" என்று சொன்னார்கள். இந்தத் துறையின் சார்பாக ஒரு நடவடிக்கை எடுத்தோம். ஏற்கெனவே பெற்ற மனுக்களையெல்லாம் வாங்கி, அனைவருக்கும் கார்டுகள் வழங்கவேண்டும். கிட்டத்தட்ட 8 இலட்சம் கார்டுகள் வழங்கிவிட்டோம் என்று நான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். மீதியிருந்த மனுக்கள் எல்லாம் என்ன? தவறான மனுக்கள்; முறையில்லாமல் கொடுக்கப்பட்ட மனுக்கள். அந்தப் பொது மக்கள் எல்லாம் திரும்பத் திரும்ப சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே குடும்ப அட்டை கேட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, என்ன காரணத்திற்காக உங்களுக்குக் கார்டு வழங்கவில்லை என்பதற்குப் பதில் கடிதம் போடவேண்டும் என்று சொல்லி, கிட்டத்தட்ட 9 இலட்சம் கார்டுகளுக்கு இப்போது நாங்கள் பதில் கடிதம் போட்டிருக்கிறோம். அவற்றையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சரி,

அடுத்தபடியாக இது easy ஆகிவிட்டது என்று சொல்கிறோம். எப்படியென்று சொன்னால், (குறுக்கீடு) திரு. கி. ஆறுமுகம் அவர்கள், இல்லை, இல்லையென்று சொல்கிறார்கள். அதற்குத்தான் பதில் சொல்ல வருகின்றேன். ஆக, அவற்றையெல்லாம் முறையாகச் செய்வதில்லை. ஒரு மனு எழுதிக் கொடுப்பார்கள், அல்லது போட்டோ ஒட்டிக் கொடுப்பார்கள். அதில் முகவரி இருக்காது. அலுவலகத்திலிருந்து தலத் தணிக்கைக்குப் போகிறபோது யாரும் ஆள் இருக்கமாட்டார்கள். இப்படிப் பல வகையிலே பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எளிமைப்படுத்துவதற்காகத்தான் இப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின்மூலம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைக் கொடுப்பதோடு மட்டுமல்ல, இன்னொரு ஆணையும் போட்டிருக்கிறோம். என்னவென்று சொன்னால், ஒரு மனு அளித்துவிட்டால் 60 தினங்களிலே அவர்களுக்கு நாம் வழங்குகிற அட்டைகள் போய்ச் சேரவேண்டும்; இல்லையென்று சொன்னால் அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே, இனிமேல் அந்த அட்டைப் பிரச்சினையைப் பொறுத்த அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சென்று இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம். இங்கே சட்டமன்றத்திலே அதற்காக

நேரத்தையும், காலத்தையும் வீணாக்க வேண்டிய அவசியம் நமக்கெல்லாம் வராது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதோடுமட்டுமல்ல. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அரவாணிகளுக்கு அட்டைகள் வழங்கியதேயில்லை. இங்கேகூட நிதிநிலை அறிக்கையிலே பதிலுரை அளிக்கிறபோது நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் பெருமகனார் அவர்களும் இங்கே சொன்னார்கள். அரவாணிகளை யாருமே கண்டு கொண்டதில்லை. இந்தியாவில் இருக்கிற 33 மாநிலங்களிலே எந்த மாநிலமும் அவர்களைக் கண்டு கொண்டதில்லை. ஆனால், மண்ணில் இருக்கிற ஈரத்தைவிட மனதிலே என் தலைவனுக்கு ஈரம் இருந்த காரணத்தினால்தான் தமிழ்நாட்டில் இருக்கிற அரவாணிகளுக்குக்கூட அட்டைகள் வழங்க வேண்டும், அவர்களுக்கு வாரியம் இருக்க வேண்டுமென்று நினைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தவகையில் இன்றைக்கு அரவாணிகளுக்காக இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதை டெல்லியிலே இருக்கிற "Times of India"— இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணாச்சி, பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட அதை இங்கே குறிப்பிட்டார்கள். எனவே, அந்தவகையிலே 16–3–2008–ல் "Times of India" என்கிற அந்த ஆங்கிலப் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட்ட அரவாணிகளை தமிழக அரசு அங்கீகரித்து அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கியுள்ளது என்பது வெகுவாகப் பாராட்டக்கூடியது" என்று அந்தப் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, கணினியைப்பற்றி இங்கே பேசினார்கள். கணினிமயமாக்குவோம் என்று சொன்னீர்களே, என்ன ஆச்சு என்று கேட்டார்கள். இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள்தான் குறிப்பிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். இந்தக் கார்டுகள் எல்லாம்கூட இனிமேல் தாலுகா அளவிலே கொடுத்தால் நன்றாக இருக்கும் என்கிற ஒரு கருத்தை ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். உண்மைதான். (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கலியவரதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது இந்தத் துறையைப் பொறுத்த அளவிற்கு கணினியை வட்ட வழங்கல் அதிகாரி அலுவலகம்வரை சென்ற வாரமே கொண்டு வைத்துவிட்டோம். எனவே, இந்தப்



பிரச்சினைகள் எல்லாம் வட்ட வழங்கல் அதிகாரி அலுவலகம் என்ற அளவில் தீர்ந்துவிடும். எப்படி என்று சொன்னால், திடீரென்று ஒருவர் ஊருக்குச் சென்றுவிடுவார், மாறிவிடுவார். முகவரி மாறிவிடும். இவர்களெல்லாம் எங்கே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் போவது? எனவே அதையும் நாங்கள் மனதில் கொண்டு கொஞ்சம் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே, இன்றைக்கு 205 வட்ட வழங்கல் அலுவலகங்களிலே கணினி வசதி செய்யப்பட்டு, முகவரி மாற்றம், பெயர் மாற்றம் ஆகியவற்றை இணையதளம் மூலமாக செய்துதர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்கிற செய்தியையும் இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கலைஞர் ஆட்சியைப் பொறுத்த அளவிற்கு, 13–5–2007 அன்று திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகள்—பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கேகூட சொன்னார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களிலே நாங்கள் மனு செய்கிறோம். எங்களுக்குப் பகுதி நேரக் கடை கிடைக்கவில்லை என்கிற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். உண்மைதான். ஆனால், நாங்கள் ஏற்கெனவே சொன்னோம். ஏற்கெனவே இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு 200 கார்டுகள் என்கிற நிலை இருந்தது. முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு ஆணை போடச் சொன்னார். 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால்போதும், 150 கார்டுகள் இருந்தால் போதும் என்கிற நிலையை உருவாக்கினார்கள். அதிலே தாய்க்கடையிலே 500 கார்டுகள் இருக்க வேண்டுமென்று சொல்வதற்கு வேறொன்றும் காரணம் அல்ல. நீங்களே இங்கு சொல்லியிருக்கிறீர்கள். பல கருத்துகள் இங்கே வெளிப்படுத்தப்பட்டன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக தமிழ்நாட்டிலே பெரும்பான்மையான கடைகள் நடைபெறுகின்றன. ஆனால், ஒரு Sales man- ஒரு விற்பனையாளர் இருக்கிறாரென்று சொன்னால் அவருக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். ஆக, குறைந்த அளவுக்கு ஒரு 500 கார்டுகள் இருந்தால்தான், மெயின் கடையில் இருந்தால்தான் அதை விற்பனை செய்துவிட்டு வாரத்திற்கு ஒரு நாளோ, இரண்டு நாளோ, குறிப்பிட்ட தினங்களிலே அங்கெல்லாம் board எழுதி வைக்கச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பகுதி நேரக் கடைகளுக்குப் போனால் அங்கு முழுமையாக சம்பளம் தரமுடியும். ஒரு பகுதியிலே சம்பளம் அதிகமாகத் தரவேண்டுமென்று நாம்தான் குரல் எழுப்புகிறோம். இன்னொரு பகுதியிலே 500 கார்டுகளுக்குக் குறைந்து இருக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி முடியும்? எனவே,

அந்தவகையில் இப்போது தாய்க்கடைக்கு 500 கார்டுகள் இருந்தால்தான் அவருக்கு நிரந்தரமாக சம்பளம் தரமுடியும். அந்தவகையில் தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடனேயே—முழு நேர நியாய விலைக் கடைகள் 73–ம், பகுதி நேரக் கடைகள் 856–ம், ஒன்றிரண்டல்ல. எவ்வளவு கொடுத்திருக்கிறோம் பாருங்கள், தலைவர் கலைஞர் ஆட்சியிலே. 856 கடைகள் பகுதி நேரக் கடைகளும், ஆக மொத்தம், கிட்டத்தட்ட 929 பகுதி நேரக் கடைகள், முழு நேரக் கடைகளும் சேர்த்து தலைவர் கலைஞர் ஆட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வை மதித்து இந்த அரசு அளித்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–50*

விலைவாசியைப் பொறுத்த அளவுக்கு இங்கே சொன்னார்கள். Online வர்த்தகத்தைத் தடை செய்யவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் சொன்னார்கள். Online business-லே இரண்டு வகையுண்டு. ஒன்று, யூகத்தின் அடிப்படையிலே வியாபாரம் செய்வது; மற்றொன்று, அன்றன்று வியாபாரம் செய்வது. இரண்டுமே கணினியிலேதான் நடக்கின்றன. அதை இரண்டு வகையாகப் பிரிக்க வேண்டும். யூகத்தின் அடிப்படையில் என்று சொல்லுகிறபோது மூன்று மாதம் கழித்து— எங்கள் அண்ணன் விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுடைய அறிவுரையை ஏற்று, அதற்குப் பின்னால் உரங்கள் எல்லாம் இட்டு, ஏதாவது ஒரு பயிர் வைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்–மூன்று மாதங்களுக்குப் பின்னால் வரவேண்டிய அந்த வருமானத்தை இப்போதே வியாபாரம் செய்துவிடுவார்கள். அது Online business. அது ஒரு வகை. ஆகவே யூகத்தின் அடிப்படையிலே வியாபாரம் செய்வது. அதேபோன்று அன்றன்று, இன்றைக்கு என்ன மார்கெட்டில் என்ன நிலவரம், மும்பையில் என்ன நிலவரம், அங்கிருக்கின்ற நிலைமையை அறிந்துகொண்டு இங்கே விற்பனை செய்வது என்பது இன்னொரு வகை. ஆக இரண்டு வகை. ஆகவே இந்த இரண்டு வகையையும் புரிந்த காரணத்தினால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு 14–3–2007–லே இந்த Online business–ஐத் தடை செய்தால்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்று இந்தியாவிலேயே தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர்தான் முதன்முதலாகக் கடிதம் எழுதியிருந்தார்.



எனவே அந்தவகையில் இப்பொழுது விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியினுடைய அடுத்த கட்டம் என்னவென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11–3–2008–லே சமையல் எண்ணெய் விலையெல்லாம் அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறது, அதையும் குறைக்க வேண்டும் என்பதற்காக கடிதம் எழுதுகிறார்கள். அப்படி கடிதம் எழுதியதினுடைய விளைவு முதலமைச்சருடைய கடிதம் டெல்லி அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு உங்களுக்கே தெரியும், அது உந்து சக்தியாக மாறியது. அப்படி உந்து சக்தியாக மாறியதனுடைய விளைவு மாண்புமிகு பிரதம அமைச்சருடைய தலைமையிலே 31–3–2008 அன்று மத்திய அமைச்சரவை கூடி நல்ல முடிவை எடுத்தது என்பது நாடறிந்த உண்மை. அந்த உண்மையிலே ஒன்றுதான், உங்களுக்கே தெரியும், கச்சா எண்ணெய் வெளிநாட்டிலிருந்து வரவழைத்தால் வரி அறவே ரத்து என்று இன்றைக்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. உள்நாட்டைப் பொறுத்த அளவிற்கு சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் 7.5 என்கிற அடிப்படையிலே இன்றைக்கு அந்த வரிகளும் இங்கே குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். இந்தக் கார்டுகளுக்கு எல்லாம் எப்போது மண்ணெண்ணெய் கொடுக்கப்படும் என்று கேட்டார். நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்குப் பதில் சொன்னேன். ஒரு காலத்திலே நாங்கள் மத்தியத் தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் வரவேண்டுமென்று சொன்னது உண்மை. அதற்காக பலமுறை கடிதம் எழுதியது உண்மை. மாண்புமிகு முதலமைச்சரோடு நேரடியாக மாண்புமிகு முரளி தியோராவை நேரடியாக ஒரு முறையல்ல, மூன்று முறை நான் சந்தித்தது உண்மை. ஆனால் இந்தச் சந்திப்புகள் நடந்தாலும்கூட, இதற்காக அதிகமான மானியம் போகிறது என்று மத்திய அரசாங்கம் சொல்லியது. அதனுடைய விளைவாக நாங்கள் நிறுத்திவிடவில்லை. நம்முடைய அரசாங்கம் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சி, போலி கார்டுகளைக் கண்டுபிடித்ததன் அடிப்படையிலே, திருட்டுகளைக் கண்டுபிடித்ததன் அடிப்படையிலே, மண்ணெண்ணெய் கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்தியதன் அடிப்படையிலே, அதனுடைய savings அதனுடைய நிகர இருப்பு மண்ணெண்ணெய்யை வைத்துதான் இன்றைக்கு தமிழக அரசினுடைய முயற்சியின் காரணத்தினால்

மத்திய அரசாங்கத்திடம் மண்ணெண்ணெய் பெறாமலேயே பொங்கல் தினத்திலிருந்து புதிய கார்டுகளுக்கு எல்லாம் ஒரு லிட்டரும், மார்ச் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து இரண்டாவது லிட்டரும் கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. எங்கேயாவது கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கவில்லை என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், மாவட்டம் முழுவதும் நாங்கள் கட்டுப்பாட்டு அறை வைத்திருக்கிறோம். அங்கு புகார் செய்யுங்கள், இல்லையென்று சொன்னால் அமைச்சர் அலுவலகத்திலே அதற்கென்று ஒரு கட்டுப்பாட்டு அறை அமைத்திருக்கிறேன். அங்கே நீங்கள் புகார் செய்தால் உங்கள் வீடு தேடி அந்தந்தக் கார்டுதாரர்களுக்கு மண்ணெண்ணெய் இரண்டு லிட்டர் கட்டாயம் இந்த ஆட்சியிலே வரும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து இந்தப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிற்கு தமிழக அரசின் பொது விநியோகத் திட்டத்தைப் பற்றி 26-10-2007 இல் Business Line என்கிற பத்திரிகையைச் சார்ந்த அதனுடைய ஆசிரியர் திரு. பி.ஜே. புண்ணதாரா என்பவர் 'ஓஹோ ஓஹோ' என்று வெகுவாகப் பாராட்டியிருக்கிறார். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே கட்டுப்பாட்டு அறை என்று நான் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால் அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இங்கேகூட நம்முடைய எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருப்பார்கள் என்று கருதிதான் இந்த விவரங்களைக் கொண்டு வந்தேன். ஏனோ தெரியவில்லை அவர்கள் எல்லாம் போய்விட்டார்கள். இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும்.

கட்டுப்பாட்டு அறையைப் பொறுத்த அளவிற்கு ஏன் நாங்கள் வைத்திருக்கிறோம் என்றால், பொது விநியோகத் திட்டம் என்பது அன்றாடம் உள்ள மக்கள் பிரச்சினை, பிற துறைகள்போல் அல்ல. உடனுக்குடன் நாம் செய்தியைச் சொல்லியாக வேண்டும். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, சென்னையைப் பொறுத்த அளவிற்குப் பார்த்தால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், சென்னையைப் பொறுத்த அளவிற்கு, தென் சென்னையைப் பொறுத்த



அளவிற்கு 28551025 என்கிற கட்டுப்பாட்டு அறை எண்ணைக் கொடுத்திருக்கிறோம்; வடசென்னையைப் பொறுத்த அளவிற்கு 28551028 என்ற எண்ணைக் கொடுத்திருக்கிறோம்; கோவையைப் பொறுத்த அளவிற்கு 2300569 என்ற எண்ணைக் கொடுத்திருக்கிறோம்; மதுரையைப் பொறுத்த அளவிற்கு 2532501 கொடுத்திருக்கிறோம்; திருச்சியைப் பொறுத்த அளவிற்கு 2418995 கொடுத்திருக்கிறோம். இதுபோன்று அனைத்து மாவட்டங்களிலும், 30 மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு அறையைத் தொடங்கியிருக்கிறோம். பத்திரிகையிலே ஏற்கெனவே செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் இருக்கிறதா என்று கேட்கிறார்கள் நம்முடைய ஊரிலே வேலூருக்கும், திருவண்ணாமலைக்கும் ஓரே பத்திரிகைதான். அதிலே நானே பார்த்திருக்கிறேன். எனவே, இவை எல்லாம் வெளியே வந்திருக்கின்றன. இல்லையென்றாலும், மீண்டும் ஒருமுறை நான் அதைப் பத்திரிகைகளிலே செய்தியாகக் கொடுக்க இருக்கிறேன். அதைப் பயன்படுத்தி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், ஆங்காங்கே பிரச்சினைகள் வருவதைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தக் கட்டுப்பாட்டு அறைகள் ஆரம்பித்தது முதல் நான் சொல்கிறேன். மாநிலம் முழுவதும் 1,230 புகார்கள் வந்தன. அவற்றில், நடவடிக்கை எடுக்கப்பட்டவை 739. விசாரணையில் உள்ளவை 491. உணவு அமைச்சராக இருக்கிற என்னுடைய அலுவலகத்திற்கு நேரடியாக வந்த புகார்கள் 571. இவற்றிலே, கிட்டத்தட்ட 500 புகார்களை நாங்கள் நேரடியாக விசாரணை செய்து, அவற்றிற்குத் தீர்வு கண்டிருக்கிறோம் என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் பெருமையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-55

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்பதும் உணவுத் துறையின்கீழ்தான் இயங்குகிறது. ஆடியிலே விதை விதைத்து, ஐப்பசியிலே அறுவடை செய்யும்போது, இயற்கையாக மழை வந்து, விவசாயப் பெருங்குடி மக்கள் நெல்லை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அந்தக் காலகட்டங்களில், வியாபாரிகளெல்லாம் வந்து, அடிமாட்டு விலைக்கு அந்த நெல்லைக் கேட்டார்கள். இவையெல்லாம், விவசாயிகளுடைய உழைப்பை உறுஞ்சுகின்ற நிலைப்பாடு ஒரு காலத்திலே இருந்தன. "உங்களைவிட்டு விலகுவதுமில்லை; உங்களைக் கைவிடுவதுமில்லை" என்பது பைபிளில் உள்ள ஓர் வாசகம். அந்த வாசகத்தை மெய்யாக்குகின்ற வகையில், "விவசாயிகளே, உங்களைவிட்டு நான்

விலகவும் மாட்டேன். உங்களைக் கைவிடவும் மாட்டேன்" என்று தமிழ்நாட்டு முதலமைச்சர், எங்கள் அண்ணன் கலைஞர் அவர்கள் நினைத்த காரணத்தினால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) 24-4-1972 அன்று, நுகர்பொருள் வாணிபக் கழகம் என்கின்ற அந்த குழந்தையைப் பெற்றெடுத்த தாய் அவர்தான். அவர் பெற்றெடுத்த காரணத்தினால்தான் அந்த நுகர்பொருள் வாணிபக் கழகம், அதுவும் குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகளிலே இன்றைக்குச் சிறப்பானதொரு தொண்டைச் செய்து கொண்டிருக்கிறது.

நேற்றையதினம் ஒரு புத்தக வெளியீட்டாளர் என்னைச் சந்தித்தார். இன்றைக்கு என்னுடைய மானியக் கோரிக்கை இருக்கின்றது என்று நான் அவருடன் பேசிக் கொண்டிருந்தபொழுது, அவர் நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பற்றியும் சொன்னார். ஏனென்றால், அவர் அந்தப் பகுதியைச் சார்ந்தவர். அதைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார். "இதற்குமுன்பெல்லாம் மிகவும் கஷ்டப்படுவோம்; உரிய விலை கிடைக்காது. ஈரத்திலே நெல்லைப் போட்டுவிட்டு, ரோட்டிலே இருப்போம். வியாபாரிகள் வைத்ததுதான் சட்டம் என்கிற நிலைப்பாடு இருந்தது. எனவே, தலைவர் கலைஞர் அவர்கள்தான் இதற்காக முயற்சி எடுத்துச் செய்தார்" என்று சொன்னவர், இன்னொன்றையும் சொன்னார்.

தமிழை வளர்த்தவர்கள் ஆழ்வார்கள் என்று இலக்கியத்திலே—நான் சொல்வது பக்தி இலக்கியத்திலே—சொல்லப்பட்டுள்ளதாம். இவர் பகுத்தறிவாளர், இவர் ஏன் ஆழ்வார்களைப் பற்றிப் பேசுகிறார் என்று நீங்கள் என்னைத் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. நான் பகுத்தறிவாளன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்கள் வழியிலே இருப்பவன். அவர் சொன்னார், ஆழ்வார்களிலே மிகவும் சிறந்த ஆழ்வார் யாரென்று சொன்னால், அவரைப் பொறுத்தவரையிலே, திருமங்கையாழ்வார்தான் மிகச் சிறந்த ஆழ்வார் என்று சொல்லிவிட்டு, அவர் சொன்னார்.

அத்தா! அரியே! என்று உன்னை அழைக்க
பித்தாவென்று பேசுகின்றார் பிறர்என்னை
முத்தே! மணிமாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! உன்னைஎங்ஙனம் நான் விடுகேனே?

என்று திருமங்கையாழ்வார் அவர் நேசித்த ஆண்டவனைச் சொன்னாராம். அதற்கு என்ன பொருள் என்றால்,



திருமங்கையாழ்வார் ஆண்டவனை பெருமையாகவும், சிறப்பாகவும் அப்படிப் பாடினார் என்று சொல்லிவிட்டு, அவர் சொன்னார், அவர், ஆண்டவரைப் பாடினார், ஆனால், தமிழக மக்களை ஆண்டுகொண்டிருப்போரை, எங்கள் ஆண்டவரை நான் நினைக்கின்றேன்.

"ஊருக்கு உழைத்திடல் யோகம்,
பிறர்நலம் ஓங்கத் தன்னை வருத்தல் யாகம்"

என்ற அந்த சொல்லுக்கிணங்க, இன்றைக்கு உயிரோட்டமாக இருந்து, விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் மனங்குளிர, 7 ஆயிரம் கோடி ரூபாயை தமிழ்நாட்டு முதலமைச்சர் விவசாயிகளுக்காகத் தள்ளுபடி செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகள் அகமகிழ, நேரடியாகக் கொள்முதல் நிலையங்கள், தாய்க்குலங்கள் தலைநிமிர இலவச எரிவாயு அடுப்புகள், பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகள், அன்புச் சகோதரிகளுக்கு திருமணத் திட்டங்கள், ஏழைகள் பசியாற ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய், வீடு கட்டக் குறைந்த விலையில் சிமெண்ட் வழங்குதல்—இந்தத் துறைதான்—ஆதி திராவிட விவசாய சகோதரர்கள் பட்ட கடன் அடியோடு தள்ளுபடி ஐந்து கோடி, இப்படிப் பலபல நல்ல திட்டங்களைத் தமிழக மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கிற இவரைவிட்டால், இனி தமிழ்நாட்டில் வேறு யார் உளர்? அவர் சொன்னார், திருமங்கையாழ்வார் கடவுளைப் பற்றி "இவரைவிட்டால் யார் உளர்" என்று சொன்னார். நான் சொல்கிறேன், இவ்வளவு நன்மைகளைச் செய்கிற தமிழ்நாட்டுத் தலைவர் கலைஞரைவிட்டால் வேறு யார் உளர்? அவர்தான் இந்த நாட்டிற்குச் செய்யக்கூடியவர். எனவே, அவரை நாம் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் பசியாற வேண்டுமென்று சொன்னால், விவசாயிகள் குறிப்பிட்ட விலைக்கு நெல்லை விற்கவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு உதவியாக இந்த அரசு இருக்கவேண்டுமென்று சொன்னால், என் தலைவரை, நாம் அனைவரும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். அவருக்கு தாய்மையும், வாய்மையும் ஒருங்கே அமைந்த காரணத்தினால்தான் தமிழ்நாட்டுக்கு பல நல்ல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறார்.

பிற்பகல் 1-00

அந்த வகையிலே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அன்றைக்குத் தொடங்குகிறபொழுது 12 கோடி ரூபாய் வரவு-செலவு. ஆனால், இன்றைக்கு எவ்வளவு தெரியுமா, 2007-2008-லே வரவு-செலவு என்னவென்று சொன்னால், 3,669 கோடி ரூபாய். அதிலே நிரந்தரப் பணியாளர்கள் கிட்டத்தட்ட 8,547 பேர். சுமை தூக்குவோர் 5,376 பேர். பருவகால ஊழியர்கள் 4,092 பேர். ஆக மொத்தம், இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே 18,015 பேர் இப்போது நேரடியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 13-5-2006-லே அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே பணி நியமனம் செய்யவில்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நாமெல்லாம் எதிர்க்கட்சியிலே உட்கார்ந்துகொண்டு கத்துவதற்குத்தான் முயற்சித்தோமேயொழிய ஒரு காரியமும் நடக்கவில்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே இந்தத் துறையிலே கிட்டத்தட்ட 755 பேர்களை பணி நியமனம் செய்தார்கள். அதிலே கருணை அடிப்படையிலே 738 பேர்கள் இப்போது பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்த அளவில், விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல், பொது விநியோகத் திட்டம், அந்தியோதயா அன்னயோஜனா திட்டம், சத்துணவுத் திட்டத்திற்கு உணவு வழங்குதல், காவல் துறைக்கு உணவு வழங்குதல், தீயணைப்புத் துறைக்கு உணவு வழங்குதல், சிறைத் துறைக்கு உணவு வழங்குதல், சம்பூர்ண கிராம யோஜனா திட்டம், அன்னபூர்ணா திட்டம், மாணவ, மாணவிகளுக்கு அரிசி வழங்குதல், முதியோருக்கு இலவச அரிசித் திட்டம், சிறப்புப் பொது விநியோகத் திட்டம், இலவச எரிவாயு வழங்குதல், குறைந்த விலையில் சிமெண்ட் வழங்குதல் போன்ற இத்தனை பணிகளையும் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

கொள்முதல் குறித்து இங்கு இருப்பவர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். அரசைப் பொறுத்த அளவிற்கு விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் வாங்கித் தரவேண்டும் என்பதுதான் எண்ணம். அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை விவசாயிகளைப் பொறுத்த அளவிற்கு. ஏற்கெனவே சென்ற ஆண்டு பார்த்தால்,



விலைவாசியுடைய நிலை என்னவென்று சொன்னால், 675 ரூபாய் சன்ன ரகம். சாதாரண ரகமாக இருந்தால், 645 ரூபாய். நாம் கடிதம் எழுதினோம். மத்திய அரசாங்கத்திற்கு, மாண்புமிகு சரத்பவாருக்கு எழுதினோம். அதனுடைய விளைவுகள், மத்திய அரசாங்கம், அமைச்சரவை கூடி 100 ரூபாய் என்று முடிவு செய்து 775 என்று அறிவித்தது. தமிழ்நாடு முதலமைச்சர் இதெல்லாம் போதாது, மீண்டும் துறையின் சார்பாகக் கடிதம் எழுதச் சொன்னார். எங்களைப் பொறுத்தவரையிலும் 30-1-2008 அன்று நாங்கள் கடிதம் எழுதினோம். அந்தக் கடிதம் எழுதியதனுடைய விளைவு, அவர்கள் வேறு வழியில்லை, இதுதான் எங்களால் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது போதாது என்று முடிவு செய்துதான், இன்றைக்கு தமிழக அரசின் சார்பாக விவசாயிகளுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை கொடுக்கிறோம். அந்த வகையிலே தமிழக அரசு ஏற்றுக்கொண்ட நிதிச் சுமை, 50 கோடி ரூபாயை இன்றைக்கு தமிழக அரசு நேரடியாக இந்த விவசாயிகளுக்காக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வத்திலிருந்து ஆரம்பித்து திரு. கலியவரதன், சகோதரி திருமதி ஜி. லதா, திரு. இராசசேகரன், இறுதியாக நிறைவுரையாற்றிய நம்முடைய விடியல் எஸ். சேகர் வரை தொடர்ந்து இங்கே பேசினார்சள். நான்கு தினங்களுக்கு முன்னால் பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் எங்களைச் சந்தித்தார்கள். இன்னும் சொல்லப்போனால், இரண்டு தினங்களுக்கு முன்னால் நம்முடைய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய அண்ணன் செ. குப்புசாமியுடைய தலைமையிலே சென்னையிலே உள்ளவர்கள், கிட்டத்தட்ட ஒரு 10,000 பேரை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு இங்கே வந்து கொடுத்தார்கள். நானும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் அந்த மனுக்களையெல்லாம் பெற்று, அவர்கள் கொடுத்ததையெல்லாம் படித்துப் பார்த்தோம். ஆனால், இப்பொழுது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி இதற்கு ஒரு முடிவைக் கட்டாயம் இந்த ஆரசாங்கம் எடுக்கும். இந்த அரசாங்கம் எடுக்கவில்லையென்று

சொன்னால், வேறு எந்த அரசாங்கம் எடுக்கும்? எனவே, அந்தவகையில், அதை முதலமைச்சரிடம் கலந்து பேசி அதற்கு நல்லதொரு முடிவை எடுப்போம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். விலைவாசி ஏறவேண்டும், ஏறவேண்டும் என்பதா தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய நோக்கம்? அல்ல. அனைவருடைய நோக்கம், உங்களுடைய நோக்கம், எங்களுடைய நோக்கம், அனைவருடைய் நோக்கமும் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான். ஒரு மாநில அரசு, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். Online business-ஐ நீங்கள் தடை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பிரதமருக்கு நாங்கள் கடிதம் எழுதினோம். பொதுவுடைமைச் சித்தாந்தத்தைச் சேர்ந்த பல தோழர்கள் இதை வலியுறுத்தினார்கள். அவர்களுடைய உணர்வை நாங்கள் மதிக்கிறோம். அந்த அடிப்படையில்தான் கடிதங்கள் எழுதப்பட்டன. நாங்கள் கடிதம் எழுதியதோடு நிறுத்திவிடவில்லை. எப்படியாவது தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களைத் தரவேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை 14-4-2007 அன்று நாங்கள் சென்னையிலே தொடங்கினோம்.

பிற்பகல் 1-05

இதர மாவட்டங்களைப் பொறுத்த அளவிற்கு 1-5-2008-இலே இந்தச் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் தொடங்கப்பட்டது. அதிலே துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், மைதா, ரவா, ஆட்டா போன்றவற்றையெல்லாம் அந்தக் கடைகளில் வைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கியபின்பு, கிட்டத்தட்ட பார்த்தால், துவரம் பருப்பினை எடுத்துக்கொண்டால், 18,976 மெட்ரிக் டன் இதுவரைக்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திலே கொடுத்திருக்கிறோம். உளுத்தம் பருப்பைப் பொறுத்தவரைக்கும் 11,439 மெட்ரிக் டன் கொடுத்திருக்கிறோம். பாமாயிலைப் பொறுத்தவரைக்கும் 2.05 கோடி லிட்டர் கொடுத்திருக்கிறோம். மைதாவைப் பொறுத்த அளவிற்கு 5,864 மெட்ரிக் டன் கொடுத்திருக்கிறோம். ரவையைப் பொறுத்தவரை 1,889 மெட்ரிக் டன் கொடுத்திருக்கிறோம்.



இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், உங்களுக்கே தெரியும். வெளி மார்கெட்டிலே இருக்கிற விலைக்கும், நியாய விலைக் கடை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திலே கொடுக்கிற விலைக்கும் உள்ள வித்தியாசங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். 32 ரூபாய், 36 ரூபாய், 40 ரூபாய், என்று மிகக் குறைந்த விலையில்தான் இவற்றையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், விலைவாசி, வெளி மார்கெட்டிற்கும், நியாய விலைக் கடைகளுக்கும் இடையே வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. அந்த வித்தியாசம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், பொருள் வந்தவுடனேயே, அனைவரும் வந்து வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அதே நேரத்திலே நாம் டெண்டர் போட்டு, வருவதற்குள் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. டெண்டர் என்று சொன்னால், அரசாங்கத்திற்கு பல்வேறு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளை நாங்கள் கடைப்பிடித்து, அதை முறைப்படுத்தித்தான் அந்த டெண்டர்களை நாங்கள் கோர முடியும். அதன்மூலமாக, பொருட்களை வாங்க முடியும். அந்த இடைப்பட்ட காலங்களிலே, டெண்டர் போடுகின்ற அந்த இடைப்பட்ட காலங்களிலே சில நேரங்களிலே கடைகளிலே பொருட்கள் இல்லாமல் இருக்கும். அதுதான் உங்களிடத்திலே சொல்வார்கள். அதுகூட, இனிமேல் இல்லாத அளவிற்கு பொருட்கள் நிரந்தரமாக கடையிலே இருக்கிற அளவுக்கு இந்த அரசாங்கம் மிகவும் முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தளவிற்கு பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த அகில இந்தியத் தலைவர் திருமதி சகோதரி பிருந்தா கரத் அவர்கள், தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை, முன்மாதிரியாக மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று 24-2-2008 ஜனசக்தியில் ஒரு செய்தியே வந்திருக்கிறது. ஆக, இந்தச் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை மத்திய அரசாங்கம் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிற்கு வழிகாட்டுகிற தலைவர் – தலைவர் கலைஞர் என்பதை இதைவிட எப்படி நான் வெளிப்படுத்த முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தவகையில் சிறப்புப் பொது விநியோகத் திட்டம், மிகச் சிறப்பாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எரிவாயுவைப் பொறுத்தவரைக்கும் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு 3 இலட்சம் எரிவாயு அடுப்புகள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு 8 இலட்சம், அடுத்த ஆண்டு 8 இலட்சம் என்று பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த முகவர்கள் – எரிவாயு ஏஜென்சியை நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகமே பெறலாமே என்று சொன்னார். நாங்கள் இரண்டு கடிதங்கள் எழுதினோம். நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும் நீங்கள் ஏஜென்சி கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் கடிதம் கொடுத்தோம். அவர்கள் ஒரு கணக்கை எடுத்துக்கொண்டு—ஏன் என்று சொன்னால் கிராமப் பகுதிகளுக்கு எரிவாயு போகாது என்று சொல்லி, 65 இடங்களை நாங்கள் அடையாளம் கண்டு கடிதம் எழுதினோம். ஒருமுறைக்கு இரண்டு முறை எழுதினோம். நானே மாண்புமிகு திரு. முரளி தியோராவை, மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜா அவர்களை அழைத்துக்கொண்டு நேரடியாக இரண்டு முறை சந்தித்தேன். அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், துறையிலே இருக்கிற சில விதிகள் என்னவென்று சொன்னால்—எவ்வளவு சிலிண்டர்கள் ஒரு ஏரியாவில் இருக்கின்றனவோ, அதற்கு எவ்வளவு கமிஷன் கிடைக்கும், அதை பிசினஸ் ரீதியாக, வியாபார நோக்கத்தோடு, சில விதிகள் இருக்கிற காரணத்தினால், செய்ய முடியாது என்று சொன்னார்கள். இருந்தாலும் தொடர்ந்து நாங்கள் மீண்டும் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம். அதற்கும் நாங்கள் முயற்சி செய்வோம்.

எரிவாயு அடுப்பு கொடுப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். உண்மைதான். டிவி. கொடுப்பது என்று சொன்னால், நேர்மையான டெண்டர்கள் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே குழு போடப்பட்டு, அதிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இடம்பெறுகிறீர்கள், டிவி. எல்லாம் வாங்கி விடுகிறோம். டி.வி. வாங்கிக் கொடுத்துவிட்டால் வேலை முடிந்துவிடுகிறது. இதைப் பொறுத்த அளவிற்கு அப்படி அல்ல. தேர்தல் அறிக்கையிலே தலைவர் கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், இலவச எரிவாயு அடுப்பு கொடுக்கப்படும் என்றுதான் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள்.



ஆனால் இப்போது அப்படி அல்ல. இலவச எரிவாயு அடுப்பும் கொடுக்கிறார். அதற்கு இணைப்பு வாங்கவேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்துப் பேசி, அவர்களிடமிருந்து இணைப்பையும் பெறுகிறார். அதற்கு வேண்டிய டெபாசிட் தொகை 950 ரூபாய் – ஆக, சொன்னது என்னவோ இலவச எரிவாயு அடுப்புதான். ஆனால், இணைப்பையும் வாங்கிக் கொடுக்கிறோம். அதற்குரிய வைப்புத் தொகை கிட்டத்தட்ட 950 ரூபாயும் கட்டுகிறோம். இவற்றையெல்லாம் செய்கிறபோது, இணைப்பு அங்கிருந்து வருகிறது. டெல்லி மிகுந்த தூரத்தில் இருக்கிற ஊர். அங்கேயிருந்து வரவேண்டியதாக இணைப்பு இருக்கிறது. எனவே, அவை எல்லாம் வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. வேறு ஒன்றுமல்ல. ஆக, அதற்கும் நாங்கள் விரைந்து செயல்படுவோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மலிவு விலை சிமெண்ட். மலிவு விலை சிமெண்டைப் பொறுத்த அளவில் மார்கெட்டிலே என்ன விலை விற்கிறது என்று உங்களுக்கு எல்லாம் தெரியும். அதையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறையின்மூலமாக மலிவு விலை சிமெண்டை நீங்கள் விற்க வேண்டுமென்று சொல்லி, அதனுடைய அடிப்படையிலே ஆயிரம் சதுர அடிக்கு 400 மூட்டை கொடுக்கலாம் என்று சொன்னார்கள். இதிலே சிலர் ஏழையாக இருப்பவர்கள் ஏங்க, புளூ பிரிண்ட் எல்லாம் போட்டுக்கொண்டு போய் 400 மூட்டை சிமெண்ட் கொடுங்கள் என்று கேட்டால் கொடுப்பார்கள். ஆனால் பெரு மழை பெய்து எங்கள் வீட்டுச் சுவர் விழுந்துவிட்டது. நாங்கள் எந்த புளூ பிரிண்டை எடுத்துக் கொண்டு போவது? எங்கள் தாத்தா காலத்திலே கட்டிய வீடு இது. நாங்கள் எங்கே போவது என்று கேட்டார்கள்.

இதை முதலமைச்சருடைய கவனத்திற்கு, துறையினுடைய அதிகாரிகள் எடுத்துப் போனவுடனே சொன்னார், அப்படியென்று சொன்னால், 25 மூட்டைகளை நீங்கள் எந்த விதியும் இல்லாமல் மனுக்களை மட்டும் பெற்று, அந்த ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று சொன்னவர்தான் தமிழ்நாட்டினுடைய ஏழைப் பங்காளர், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த வகையில் இப்போது கிட்டத்தட்ட 44,666 மெட்ரிக் டன். இந்த 200 ரூபாய் திட்டத்தின்கீழ் விற்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–10

அதேநேரத்திலே promoters—கட்டடம் கட்டுகிறவர்கள், college கட்டுகிறவர்கள், வீடு கட்டுகிறவர்கள், இவர்களுக்கெல்லாம் குறைந்த விலையில் தர வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே வெளிநாட்டிலிருந்து சிமெண்ட்டை வரவழைத்து, கிட்டத்தட்ட 4,992 மெட்ரிக் டன் அந்த வகையிலே இப்போது விற்கப்பட்டிருக்கிறது. அந்த வெளிநாட்டு சிமெண்ட்டைப் பொறுத்தவரையில் பல பேர் கேட்டார்கள், எங்கெங்கு விநியோகிக்கப்படுகிறது என்று; சென்னை, வேலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இருக்கிற நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கிடங்குகளிலிருந்து இப்போது கொடுக்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நான் ஆரம்பத்திலே ஒன்றைச் சொன்னேன். என்ன சொன்னேன் என்று சொன்னால், மண்ணெண்ணெயை இப்போது இந்திய அரசிடமிருந்து வாங்காமல் நாமே கொடுக்கிறோம் என்று சொன்னோம்; எப்படிக் கொடுத்தோம்? என் கடன் பணி செய்து கிடப்பதே என்கிற அந்த வாக்கியத்திற்கு இப்போது உதாரணபுருஷனாக இருக்கிற என் தலைவர் கலைஞருடைய அறிவுரையை ஏற்ற காரணத்தால், இப்போது குற்றப் புலனாய்வுத் துறையின்மூலமாக இதெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டது. சென்ற ஆட்சியினுடைய புள்ளிவிவரத்தைக் கொடுப்பதற்கு நேரம், காலம் போதவில்லை. ஏனென்று சொன்னால், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் இரண்டு முறை தன்னுடைய கடிகாரத்தைக் காட்டிவிட்டார். அதனால் நான் இன்னும் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, நிறைய கட்டுப்படுத்தி இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். 5 ஆண்டு காலம் ஆட்சியிலே இருக்கிறபோது, அந்தத் துறையின்மூலமாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்? இன்றைக்கு சொல்கிறேன், பத்திரிகை நண்பர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நாங்கள் பிடிக்கிற காரணத்தால் பத்திரிகையில் செய்தி வருகிறது. பிடிக்கவில்லை என்றால் எப்படிப் பத்திரிகையில் செய்தி வரும்? ஓடி, ஓடி இந்தத் துறை பிடிக்கிற காரணத்தால், இந்தத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிற காரணத்தால், மாண்புமிகு முதல்வருடைய அறிவுரையை அன்றன்று ஏற்கிற காரணத்தால், வேகமாகச் செயல்படுகிறோம். அதனால் பிடிக்கிறோம், பத்திரிகையில் செய்தி வருகிறது.



பத்திரிகையில் செய்தியைப் பார்த்தவுடனே, ஓஹோ, அதைவிட இந்த ஆட்சியில் அதிகமாக நடக்கிறது என்று சொல்கிறார்கள்.

அதை அப்படி எடுத்துக்கொள்ளக் கூடாது. அதற்கு ஒரு புள்ளிவிவரம் இருக்கிறது, அதைச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்தவுடனே, 1–4–2007 அன்று, போன நிதியாண்டிலே, கிட்டத்தட்ட பார்த்தீர்களென்றால், 14,037 வழக்குகளை நாங்கள் போட்டிருக்கிறோம்; அந்த வழக்கு போட்டதனுடைய விளைவு, கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? 1,834 பேரைக் கைது செய்து அடைத்திருக்கிறோம். அதிலே கைப்பற்றப்பட்ட வாகனங்கள், லாரிகள் எல்லாம்—8 இலட்சம் ரூபாய் லாரி, 10 இலட்சம் ரூபாய் லாரி, Benz வண்டி, Leyland வண்டி என்று பெருமையாகப் பேசுகிறோமே, அப்படிப்பட்ட வண்டிகள் எவ்வளவு என்று சொன்னால், 938 வண்டிகளை இப்போது கைப்பற்றி இருக்கிறோம். இதனுடைய மொத்த மதிப்பு இந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் இந்தத் துறையின் மூலமாக மிக விழிப்போடு, நான் ஆரம்பத்திலே சொன்னதைப்போல, என் கடன் பணி செய்து கிடப்பதே என்கிற என் தலைவருடைய தாரக மந்திரத்தை ஏற்ற காரணத்தால், இந்தத் துறையைப் பொறுத்த அளவுக்கு கிட்டத்தட்ட 13 கோடியே 81 இலட்சத்து 13 ஆயிரத்து 104 ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களை இந்த ஓராண்டுக் காலத்திலே இந்தத் துறையின்மூலமாக நாங்கள் கைப்பற்றி இருக்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், இதிலே இரண்டு Act இருக்கிறது. B.M. Act என்ற ஒரு Act இருக்கிறது, தடுப்புக் காவல் சட்டம் என்று. இன்னொன்று, E.C. Act என்ற ஒன்று இருக்கிறது. இதற்கு முன்னாலே எத்தனையோ பேர் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள், யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால், காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களை அழைத்து எப்போதுமே கூட்டம் போடுகிற இந்தத் துறை—அது முதலமைச்சருடைய துறை. அதனால்தான் சொன்னேன், அவருடைய அறிவுரையை ஏற்று என்று சொன்னதற்கு என்ன காரணம் என்று சொன்னால், Food Cell என்று ஆங்கிலத்தில் நம்முடைய ஆட்கள் சொல்வார்கள்; Food Cell Inspector என்று; அதுவல்ல. அந்தக் குற்றப் புலனாய்வுத் துறையைப் பொறுத்த அளவுக்கு முதலமைச்சருடைய துறையிலிருந்து அந்தத் துறைக்கு வருகிறார்கள். ஆனால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று யாரும் ஆய்வே செய்வதில்லை. இந்தத் துறையின்மூலம் 20–1–2007 அன்று ஓர் ஆய்வு, 6–11–2007–ல் ஓர் ஆய்வு, 12–11–2007–ல் ஓர் ஆய்வு என்று 3 ஆய்வுக் கூட்டங்களை நடத்தினோம்.

அந்த ஆய்வுக் கூட்டங்களினுடைய வெளிப்பாடு என்னவென்று சொன்னால், B.M. Act என்பது தடுப்புக் காவல் சட்டம், ஒருவன் அரிசியை எடுத்துக்கொண்டு போகிறான் என்றால் லாரி வரும், அவனைப் பிடிக்கிறோம், பிடித்துப் போடுகிறோம், அவன் கோர்ட்டுக்குப் போகிறான், அறிவுரைக் கழகத்திற்குப் போகிறான், அங்கே போய் மனு போடுகிறான், ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி விடுதலை பெற்றுப் போய் விடுகிறான். அப்போது, தப்பு செய்கிறவன் ஏதோ ஒரு வகையிலே சட்டத்தினுடைய நுணுக்கங்களிலே, சந்து பொந்துகளிலே வெளியே போய்விடுகிறபோது, மீண்டும் அவன் தவறு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை உணர்ந்த காரணத்தால், இப்போது அரசாங்கம்—தலைவர் கலைஞர் அவர்கள் எங்களைக் கூப்பிட்டுச் சொன்னதனுடைய விளைவு, அவர் எங்களுக்கு அறிவுரை சொன்னதனுடைய விளைவு, இப்போது என்ன செய்கிறோம் என்று சொன்னால், B.M. Act–லே, தடுப்புக் காவல் சட்டத்திலே யாராவது தப்பித்தால்கூட அதற்குப் பின்னால் அவன் எந்த வகையிலே தவறு செய்தான் என்பதைக் கண்டறிந்து E.C. Act என்று சொல்கிறோமே அந்தச் சட்டத்தின்கீழ் குறைந்தது 3 மாதங்களுக்குக் குறையாமல், 7 ஆண்டுக் காலம் வரை அவனுக்கு சிறைத் தண்டனையை மீண்டும் வாங்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. இதுவரை செய்யாததை இந்தத் துறை இப்போது முதன்முதலாக செய்ததனுடைய விளைவு, மீண்டும் யார் யார் எல்லாம் B.M. Act–லே ஏமாற்றினார்களோ அவர்களை எல்லாம் அழைத்து, கிட்டத்தட்ட 150 பேர் மேலே, criminal சட்டத்திலே அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, charge sheet போட்டு, நீதிமன்றத்திலே வழக்குகள் நடைபெற்று அதன்வாயிலாக, இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால், நான் சொன்னதன் அடிப்படையில், கோவை மாவட்டத்தைச் சார்ந்த சிக்கந்தர் என்பவருக்கு 5 மாதங்கள் 18 நாட்கள் தண்டனை. B.M. Act–இல் நாம் வெளியில் வந்துவிட்டோம், நம்மை ஒன்றும் செய்யமுடியாது என்று அவர் நிம்மதியாகப் போய்விட்டார். அவர்மீது மீண்டும் E.C. Act–ல் கொக்கி போட்டுப் பிடித்து, அவருக்கு 5 மாதங்கள் 18 நாட்கள் சிறைத் தண்டனை. அதே ஊரைச் சார்ந்த அபீப் ரகுமான் என்பவருக்கு 5 மாதங்கள் 3 நாட்கள் கடுங்காவல் தண்டனை. இப்பொழுது என்னவென்றால், B.M. Act–ல் தப்பித்துவிட்டால், இனிமேல் E.C. Act அவர்கள்மீது பாயும். இந்த அரசாங்கம் அவர்களுக்கு அதிகபட்சம் 7 ஆண்டுக் காலம் தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சியை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 1–15

அதோடுமட்டுமல்ல, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் 20–2–2008 அன்று ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். அந்த ஆய்வில் முத்தாய்ப்பான ஒரு முடிவை எடுத்தார்கள். அது என்னவென்று சொன்னால், இனிமேல் அரிசி கடத்துகிறார்கள் என்று சொன்னால், டிரைவர்மீதும், கிளீனர்மீதும் வழக்குப் போடக்கூடாது, யார், யார் லாரி கொடுத்தார்களோ, அவர்கள்மீது வழக்குப் போடுவது என்பதுமட்டுமல்ல, அந்த லாரியின் உரிமத்தையே இரத்துச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, இப்போது 51 லாரிகளின் உரிமம் இரத்துச் செய்வதற்குத் தேவையான கோப்புகள் தயாராக இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 23 ஓட்டுனர்களின் உரிமத்தை இரத்துச் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. ஞானசேகரன்? இன்னோர் அமைச்சர் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். அமைச்சரவர்கள் லாரி டிரைவர், கிளீனர்மீது வழக்கு போடத் தேவையில்லை என்றும், லாரி உரிமையாளர்மீது வழக்குப் போடவேண்டுமென்றும் சொன்னார்கள். அதைவிட, எந்தெந்த ரேஷன் கடைகளில், எங்கெங்கு அந்த ஓட்டை விழுகின்றது என்று பார்த்து அதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான் சொன்ன கருத்தை சரியாக கவனிக்கவில்லை. ஏற்கெனவே போடப்பட்ட பெரும்பான்மையான வழக்குகள், டிரைவர், கிளீனர் என்ற அடிப்படையிலே போடப்பட்டிருந்தன. அவர்கள்மீது மட்டும் போடக்கூடாது. அதேநேரத்திலே அந்த லாரி உரிமையாளர் யார் என்று பார்த்து அதன் அடிப்படையில் அவர் உரிமத்தையும் இரத்துச் செய்தால்தான், முதலில் லாரி கொடுக்கமாட்டார்கள். அடிப்படையே அவன்தான். லாரியை ஏன் கொடுக்கின்றான்? 10 இலட்சம் மதிப்புள்ள லாரியே போய்விடுகிறது, லாரி உரிமமே போகின்றது. அதற்காகத்தான் இன்றைக்கு அதன் அடிப்படையில் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். லாரி டிரைவர், கிளீனர்மீதும் கட்டாயம் வழக்குப் போடப்படும் என்பதை இந்த நேரத்திலே நான்

தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) இதோ உரையை முடித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு நிமிடம். ரொம்ப sensitive–ஆன துறையாக இருக்கிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு என்ற ஒரு பிரிவு இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவைப் பொறுத்தவரைக்கும் 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மொத்தமுள்ள 61 கிடங்குகளில் 51 கிடங்குகள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. 7 வட்டக் கிடங்குகளாகப் பணியாற்றுகின்றன. இந்த 61 கிடங்குகளின் மொத்தக் கொள்ளளவு 6,35,915 டன். மொத்தப் பணியாளர்கள் 487 பேர். இதில் 2006–2007–ல் ஈட்டிய லாபம் 652 கோடியே 22 இலட்சம் ரூபாயாகும். இந்த அளவுக்கு இன்றைக்கு இதன் செயல்பாடு இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தத் துறையைப் பொறுத்தவரை கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆட்சியில் எவ்வளவு ஒதுக்கினார்கள் என்பதற்கு Policy Note-ஐ நாங்கள் உங்களிடம் கொடுத்திருக்கிறோம், நீங்களும் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எவ்வளவு மிக மிகக் குறைவாக அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள்? வெறும் 800 கோடி, 1,000 கோடி என்று ஒதுக்கினார்கள். கடைசியாக அவர்கள் ஒதுக்கியது 1,200 கோடி ரூபாய்தான். தேர்தலுக்குப் போவதற்கு முன்னால் அவர்கள் ஒதுக்கியது, 1,200 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். ஆனால், தேர்தலுக்குப் பின்னர் நாம் வந்தோம். வந்ததும், இன்றைக்கு கிட்டத்தட்ட இரண்டு மடங்காக ரூ.1,950 கோடியை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால், ஈகைக் குணம் உள்ளவர், தலைவர் கலைஞர் என்ற காரணத்தால் இந்தத் துறைக்கு இவ்வளவு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

ஈகை என்று சொல்கின்றபோது எனக்கு நினைவுக்கு வருவதெல்லாம் வள்ளல்களைப் பற்றிதான். ஈகைக் குணம் உள்ளவன் யாரென்று சொன்னால் இன்றைக்கு ஒரே வரியில் வள்ளல் என்று சொல்வார்கள். கடையேழு வள்ளல்களைப் பற்றியெல்லாம் சொல்கிறோம். இந்தக் கடையேழு வள்ளல்களைப் பற்றிப் பார்க்கின்றபோது, எனக்குத் தெரிந்த அளவுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். பாரியைப் பற்றி சொல்கின்றபோது, அவர் முல்லைக்குத் தேர் கொடுத்தார் என்று சொல்கிறோம். முல்லைக்குத் தேர் கொடுத்தவர் வள்ளல். இருப்பதைச் சொல்கின்றோம்.



முல்லைக்குத் தேர் கொடுத்தார், அதனால் வள்ளல். வல்வில் ஓரி, யார் வந்தாலும் பசு நெய் கொடுத்தார், அதனால் அவர் வள்ளல். மலையமான் திருமுடிக்காரி, வருகின்ற புலவர்களுக்கெல்லாம் பொருளை வாரி, வாரிக் கொடுத்தார், அதனால் அவர் வள்ளல். பேகன், குளிர்ந்த மயிலுக்குப் போர்வை கொடுத்தார், அதனால் அவர் வள்ளல். ஆய் அண்டிரன் என்ற வள்ளல் வருகின்றவர்களுக்கெல்லாம் யானையைக் கொடுத்தார், யானையைக் கொடுத்தால் அவற்றுக்கு எப்படிச் சோறு போடுவது? அதற்கு வேண்டியதையெல்லாம் எப்படிச் செய்வது? எப்படித் தீனி போட முடியும்? இருந்தாலும் கொடுத்துவிட்டார். இந்தா என்று கொடுத்துவிட்டார். நல்லி என்பவர் பசித்தவருக்கெல்லாம் உணவு கொடுத்தார். இப்படி இந்த ஏழு வள்ளல்களைப் பற்றிச் சொல்கின்றபோது, இந்தப் பொருட்களைக் கொடுத்தவர்கள் எல்லாம் வள்ளல் என்று அந்தக் காலத்திலே புத்தகங்களிலே படித்திருக்கிறோம்.

பல நேரங்களிலே உதாரணத்தைச் சொல்கின்றபோது, ஈகையை ஒப்பிட்டுச் சொல்கின்றபோது, இவர் என்ன பெரிய வள்ளலா என்று சொல்கின்றோம். ஈகைக் குணத்தைப் பற்றி ஒப்பிடும்போது சொல்கிறோம். அவர்களைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அப்படி ஒரு வெளிப்பாடு. ஒருவரைப் பற்றிச் சொல்லும்போது ஈகைக் குணம் உள்ளவர், தர்ம சிந்தனை உள்ளவர் என்று சொல்கிறோம். இப்போது அருளாளர் என்றால், ஆற்காட்டார் என்றால் என்ன? வருகின்றவர்களுக்கு எல்லாம் என்ன பாக்கெட்டிலிருந்து காசா கொடுக்கிறார்? கையெழுத்துப் போட்டுத் தருகின்றார், அருளாளர் அண்ணன் ஆற்காட்டார். அந்தக் கையெழுத்து போடுவதற்குக்கூட மனசு வேண்டும். மனசு இல்லையென்று சொன்னால் கையெழுத்துப் போடமுடியாது. கையெழுத்துப்போட்டால் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று எண்ணுவார்கள். அதனாலே இந்த ஈகைக் குணம் உள்ளவர்களைத்தான் வள்ளல் என்று எப்போதும் நாம் ஒப்பிடுவோம்.

பிற்பகல் 1–20

ஆக, தேர் கொடுத்தவர், போர்வை கொடுத்தவர் எல்லாம் வள்ளல் என்று சொன்னால், அன்புள்ள நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, ஒரு கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இவர்களெல்லாம் வள்ளல் என்று சொன்னால், பொதுவாக ஒரு அறக்கட்டளையை, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர், நம்முடைய காங்கிரஸ் தலைவர், திரு. சுதர்சனம் நாயுடு இருக்கின்றார், அறக்கட்டளை ஒன்றை

ஆரம்பிப்பார்கள். எப்போதுமே முதலில் ஆயிரம் ரூபாய் போட்டு அறக்கட்டளை ஒன்றை ஆரம்பிப்பார்கள். குடும்ப அறக்கட்டளையையெல்லாம் ஆரம்பிப்பார்கள். அல்லது பொதுவாக ஓர் அறக்கட்டளையை ஆரம்பிப்பார்கள். இப்போது அறக்கட்டளையை ஆரம்பித்தால் ஆயிரம், இலட்சம் என்று (குறுக்கீடுகள்) கணக்கில் போட்டு ஆரம்பிப்பார்கள். அப்புறம் பல இடங்களிலே போய் donation எல்லாம் வாங்கி—எல்லா அறக்கட்டளையையும் பார்த்தால் அன்பளிப்பு அப்படித்தான் இருக்கும். அதற்காகத்தான் சொல்கின்றேன், அறக்கட்டளையைப் பற்றி எனக்குத் தெரியும், அதனாலே சொல்கின்றேன்—அறக்கட்டளையை ஆரம்பித்து பல வகைகளிலே வருமானம் வரும் என்ற அடிப்படையிலே, அன்பளிப்பு என்கிற அடிப்படையிலே அறக்கட்டளையை ஆரம்பிப்பார்கள். (குறுக்கீடுகள்) அறக்கட்டளையை வைத்திருப்பதனால் சொல்கின்றேன். ஆரம்பிப்பார்கள். ஆனால், பல வகையிலே அன்பளிப்பு என்ற பெயரிலே ஆயிரமோ, இலட்சமோ போட்டுவிட்டு அறக்கட்டளை என்று ஆரம்பித்து, அந்தப் பணத்தில் பொதுத் தொண்டுகள் செய்வார்கள். அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. கல்வித் தொண்டு செய்வார்கள், சிலர் கடவுளுக்கு, ஆன்மீகத் தொண்டு செய்வார்கள், அல்லது புத்தகப் பிரியர்களாக இருந்தால் புத்தகம் அடித்துக்கொடுப்பார்கள். இப்படிப் பல உண்டு. இப்படிப் பல அறக்கட்டளைகள் கல்விக்கூடங்கள் நடத்துவார்கள். இப்படிப் பல உண்டு.

ஆனால், என்னைப் பொறுத்த அளவிற்கு, எனக்குத் தெரிந்த அளவிற்கு, தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் பராசக்தி படத்திற்கு திரைக்கதையை எழுதி, கிட்டத்தட்ட 86 திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதி, அதோடு மட்டுமல்ல, திரைப்படத்தையும் எடுத்து, திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதிய வருமானம் ஒன்று, இன்னொன்று தன்னுடைய குடும்பத்தின்மூலமாக ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கி, அதன்மூலமாக பல வெற்றிப் படங்களையெல்லாம் எடுத்து, அதுமட்டுமல்லாமல் 24 மணி நேரத்தில் அரசுப் பணிகளெல்லாம் போக, அதிலே கிட்டத்தட்ட 10 மணி நேரம், 15 மணி நேரம் அதற்காகவே இங்கே இருந்து பல இடங்களிலே, இங்கேயிருந்து கோவா அல்லது ஊட்டி அல்லது வீடு இப்படிப் பல இடங்களிலே உட்கார்ந்து பல புதினங்களை, திருக்குறள், தொல்காப்பியம், பொன்னர் சங்கர், பாயும் புலி பண்டார வன்னியன், தாய் போன்ற பல புதினங்களையெல்லாம்—



நேரம், காலம் இல்லை சொல்வதற்கு. இங்கே இருப்பவர்களெல்லாம் அவர்களுடைய புத்தகங்களை படித்துக்கொண்டிருக்கிற உறுப்பினர்கள் அதனால் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு புதினங்களையெல்லாம்—உருவாக்கியதால் அதனுடைய வெளிப்பாடு, அவருடைய உழைப்பால் 24 மணி நேரம் கண் விழித்து, குனிந்து எழுதி, இப்படி வரப்பெற்ற பணங்களிலே கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் தனது சொந்த வருமானத்தில் அதற்கென்று அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்து, அதை ஏழையெளிய மக்களுக்கு மருத்துவத்திற்கு, கல்விக்குச் செலவு செய்கின்றார் என்று சொன்னால், தமிழ்நாட்டினுடைய எட்டாவது வள்ளல் கலைஞர் என்று சொல்வதைவிட வேறு என்ன சொல்ல முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, வள்ளலாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தத் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாட்டிலே இன்றைக்கு பசியாற உணவருந்திக்கொண்டிருக்கிறார்கள். பசியாற இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த வகையில் கிட்டத்தட்ட இந்தத் துறை ஓராண்டு காலத்திலே 22 சாதனைகளைச் செய்திருக்கிறது. படிப்பதற்கு நேரமில்லை. 22 சாதனைகளை இந்தத் துறை செய்திருக்கிறது. எனவே அந்த வகையில் 22 சாதனைகளோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு இரண்டே இரண்டு அறிவிப்பைச் சொல்லிவிடுகிறேன். மற்றவற்றை அல்ல. இரண்டே இரண்டு அறிவிப்பைச் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் அதைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

தாம்பரம் மண்டலம், ஏனென்றால், சென்னையைப் பொறுத்த அளவிற்கு, தினம் வரி அதிகமாகிக்கொண்டிருக்கிறது, ஆனால், தாம்பரம் மண்டலத்தைப் பொறுத்த அளவிற்கு இந்த ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்படும் என்கிற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

அம்பத்தூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர் ஆகிய மூன்று மண்டலங்களைத் திருத்தி நான்கு மண்டலங்களாக புதிய மண்டலமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

குடும்ப அட்டையில் மாற்றங்கள் பதிவு செய்யவும், பொது விநியோகத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களையவும், மனுக்களின் மீதான நடவடிக்கை நிலைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், வசதியாக ஜூன் மாதத்திலிருந்து இணைய தள வசதிகள் செய்து தரப்படும்.

நியாய விலைக் கடைகளில் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் நிறுவப்படும். மாவட்டந்தோறும், பொது விநியோகத் திட்டத்திற்கென, வட்ட அளவில் குறை தீர்க்கும் கூட்டங்கள் இனி நடத்தப்படும்.

2008–2009 ஆம் நிதியாண்டில் 8 இலட்சம் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்படும்.

19 அறிவிப்புகள் இருக்கின்றன. இறுதியான அறிவிப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சுமை தூக்கும் தொழிலாளிக்கு கூலி 5 சதவீதம் அதிகமாக உயர்த்தித் தரப்படும் என்கிற நல்ல செய்தியும் சொல்லி, இந்த 19 அறிவிப்புகளையும்@ நீங்கள் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 104 சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு வகையிலே நம்முடைய சட்டமன்றத்திலே இல்லையென்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. ஜி.கே. மணி, திரு. சிவபுண்ணியம், திரு. தி. வேல்முருகன், சகோதரி திருமதி பத்மாவதி, திரு. சி. கோவிந்தசாமி, திரு. கலியவரதன், திரு. மகேந்திரன், திரு. காவேரி, திரு. விடியல் எஸ். சேகர், திரு. சி. ஞானசேகரன், திரு. எதிரொலி மணியன், திரு. அருள் அன்பரசு, திரு. டில்லி பாபு, திரு. வீர. இளவரசன், திருமதி கமலாம்பாள் உள்பட கிட்டத்தட்ட 104 சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வகையிலே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நேரடியாக நானும் படித்தேன். அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அவற்றையெல்லாம் கட்டாயம் இந்த அரசு நிவர்த்தி செய்யும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் திரும்பப் பெற வேண்டும். நான் பேசிய பேச்சு அநேகமாக பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மன நிறைவைத் தந்திருக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே அந்த வகையில் இந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டு, நம்முடைய பேரவைத் தலைவருக்கும் நன்றியைச் சொல்லி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

@ 291 முதல் 297 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருடைய பதிலுரை.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன இவன் ஒருவன் கடைசியிலே இருக்கிறானே, என்ன பண்ணப் போகிறான் என்று நினைக்க வேண்டாம். மிகவும் விரைவாக என்னுடைய உரையை நிறைவு செய்வேன். காதுக்கு மட்டும் விருந்தல்ல. வயிறும் பசிக்கிறது என்றே எனக்குத் தெரியும்.

தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக எனக்கு உயிர் கொடுத்த என் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும் ஒப்பற்ற தலைவர், என்னுடைய தலைவர், தமிழினத் தலைவர், தன்னிகரில்லா முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என் உரையை நான் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் 22 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்து நடைமுறைப்படுத்திய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்களின் நடவடிக்கை இந்தியாவிற்கே இத்திட்டம் ஒரு சிறப்பான திட்டம் என்பதை உணர்ந்து மத்திய அமைச்சரும் இதைப் பின்பற்றி நடக்கிறார்கள் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். அத்தகைய தன்னலமற்ற தலைமையின்கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பணிபுரிந்து கொண்டிருப்பதை பெரும் பேறாக நான் கருதுகிறேன்.

கடன் தள்ளுபடிக்காக கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 2,617 கோடியே 56 இலட்சம் ரூபாய் அசலாகவும், 686 கோடியே 86 இலட்சம் ரூபாய் வட்டியாகவும், ஆக மொத்தம், 3,304 கோடியே 42 இலட்சம் ரூபாய் வங்கிகளுக்கு அரசால் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் நலிவுற்றுக் கிடந்த கூட்டுறவு இயக்கத்தைத் தலைதூக்கி நிறுத்த தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்த 2 ஆண்டுகளில் பலவகையான பணிகளை நாங்கள் செய்து கொண்டு வருகிறோம்.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 2,600 கோடி ரூபாய்க்கு மேல் பயிர்க் கடன் வழங்கியுள்ளோம். இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு 2007–2008 ஆம் ஆண்டில் மட்டும் 1,394 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாண்டே பயிர்க் கடன்களின் வட்டியை 9 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாகக் குறைத்தும், சென்ற ஆண்டு கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவோருக்கு 5 விழுக்காடாகக் குறைத்தும், இந்த ஆண்டு அதைவிட ஒன்று குறைத்து 4 விழுக்காடாகக் குறைத்தும் இருக்கிறோம்.

2007–2008 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் பொதுவாக D.A.P. இரசாயன உரம் தட்டுப்பாடு இருந்தபோதிலும்—இப்போதுகூட யாரோ குறிப்பிட்டார்கள் இங்கே. அதற்காகத்தான் நான் அதைச் சொல்கிறேன்—தமிழகத்தில் தட்டுப்பாடான நிலை ஏற்படவில்லை. இதில் கூட்டுறவுத் துறையின் பங்கு மிக முக்கியமானது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு D.A.P. உரக் கொள்முதலுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 கோடி ரூபாயை வட்டியில்லாக் கடனாக நிதியுதவி வழங்கிட அனுமதி அளித்தார்கள். நம்முடைய நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இவர்களெல்லாம் சிபாரிசு செய்ததன் அடிப்படையிலே இப்படிப்பட்ட சில சலுகைகளும் புதிதாகக் கிடைத்திருக்கின்றன.

அதுபோலவே இதன்மூலம் 1,04,400 மெட்ரிக் டன் D.A.P. உரம் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இந்த நடவடிக்கையின்மூலமாக தமிழகத்தில் D.A.P. உரத் தட்டுப்பாடு தவிர்க்கப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் யூரியா, D.A.P., பொட்டாஷ் போன்ற இரசாயன உரங்கள் 213 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் உரத் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்க முன்னேற்பாடான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர, கடந்த 2 ஆண்டுகளில் நகைக் கடன், பண்ணை சாராக் கடன், இதர விவசாயக் கடன்கள் என பல்வேறு வகையான கடன் உதவிகளை 17,050 கோடி ரூபாய்க்கு இந்தக் கூட்டுறவு அமைப்புகள் வழங்கியுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2007–2008 ஆம் ஆண்டு மட்டும் வழங்கப்பட்ட இந்தக் கடன்—இந்தக் கடனுக்கும் அதற்கும் கணக்குப் பார்த்தால். . .



பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகின்றது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** சுமார் 55 விழுக்காடு அதிகம் ஆகும். வங்கியின் சட்டப் பிரிவு 11(i) நிறைவு செய்யாமல் நபார்டில் இருந்து மறு நிதி உதவி பெறத் தகுதி இல்லாமல் இருந்த 12 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், இந்த அரசின் முயற்சியால் 7 வங்கிகள் சென்ற ஆண்டு தகுதி பெற்றுவிட்டன. மீதி உள்ள 5 வங்கிகளும் தகுதி பெற்றுவிடும். இந்தப் பிரச்சினையிலிருந்து மீள முடியாமல் இருந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இன்று கடன் தள்ளுபடியாலும் சிறப்பான நிர்வாகத்தாலும் புத்துயிர் பெற்றுள்ள சாதனைக்கு தமிழினத் தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான் முக்கியக் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதிலே நான் பெருமிதம் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு பொறுப்பேற்றபோது 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைக்க அதற்கு முன்னால் இருந்த அரசு உத்தரவிட்டது. இது எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அது நிறைவுபெறாமல் வங்கிகளைக் கலைப்பதில் இந்த அரசுக்கு உடன்பாடு இல்லை. எனவே, இந்தச் சங்கங்கள் புத்துயிர் ஊட்டப்படும் என அறிவித்தேன். அதன்படி அவற்றில் 197 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்படத் தொடங்கியுள்ளன. இந்த வங்கிகளில் மாத்திரம் கடந்த 2 ஆண்டுகளில் 30 கோடியே 31 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 2 வங்கிகளும் விரைவில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, நலிவுற்றுக் கிடந்த 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நிதி ஆதாரத்தைப் பெருக்க ஒவ்வொரு வங்கிக்கும் குறைந்த வட்டியில் 20 இலட்சம் ரூபாய் காசுக் கடனாக வழங்கும் திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதன் அடிப்படையில் ஒவ்வோர் வங்கியும், ஆண்டு ஒன்றுக்கு 1,60,000 ரூபாய் வருமானம் ஈட்ட முடியும். படிப்படியாக இந்த வங்கிகளின் வருமானம் உயர்ந்து 3 ஆண்டுகளில் முழு அளவில் தன்னிறைவு பெறும் என எதிர்பார்க்கிறோம்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என சில உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ளனர். இந்த அவையிலே இப்போதுகூட பேசும்போது சொன்னார்கள், இந்த அரசு பொறுப்பேற்றபோது பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களினுடைய பணியாளர்களுக்கு சம்பளம்கூட வழங்க இயலாத நிலை இருந்தது. சென்ற ஆட்சியில், பல சங்கங்கள் முறையாகச் செயல்படாத காரணத்தாலும், தேவைக்கு அதிகமான பணியாளர்களாலும், ஒவ்வொரு சங்கத்திலேயும் 4 பேர், 3 பேர், 2 பேர், என்று சில இடங்களில் ஒருவர்கூட இல்லாத சங்கடமான நிலை இருந்தது. பணியாளர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. இந்த அரசின் பல்வேறு முயற்சிகளின் காரணமாக குறிப்பிட்ட விதிமுறைகளில் திருத்தம் செய்து, கூடுதல் பணியாளர்களைத் தேவையான சங்கங்களுக்காக அயற் பணியில் மாறுதல் செய்வது மற்றும் நலிவுற்ற சங்கங்களுக்கு சிறப்புக் கடனுதவி போன்ற நடவடிக்கைகளால், இத்தகைய பிரச்சினைக்குரிய வங்கிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில வங்கிகளில் உள்ள இந்தப் பிரச்சினையை சீர்செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற சமயம், பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை உரிய காலத்தில் திரும்ப வழங்கப்படாமல் இருக்கிறது என்று இப்போதுகூடச் சொன்னார்கள். வைப்புத் தொகையைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை, எல்லா இடங்களிலும் சங்கடமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம். பெறப்பட்ட வைப்புத் தொகையை உரிய காலத்தில் திரும்ப வழங்க இயலாமல் 170 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிலுவையாக இருந்தது. இதைத் திருப்பி வழங்க வேண்டும் என்று இந்த அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக இதுவரையில் 136 கோடியே 84 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் உள்ள 33 கோடியே 78 இலட்சம் ரூபாயும் விரைவில் வழங்கப்பட்டுவிடும். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடுவோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய நடவடிக்கையால், இன்று கூட்டுறவு வங்கிகளின்மீது மக்களின் நம்பிக்கையும் கூடி வருகின்றது. இதன் காரணமாக, கூட்டுறவு வங்கிகளில் இந்த அரசு பொறுப்பேற்றபோது இருந்த வைப்புத் தொகை 14,963 கோடி ரூபாயில் இருந்து, இப்போது



7,371 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையோடு பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அதன்மூலம் குறுகிய காலக் கடன், கூட்டுறவுக் கடன், சங்கங்களுக்கு வழங்குவதற்கும், சீரமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகளையும் சீரமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலும் விவசாய விளைபொருள்களின் விற்பனை 2005–2006 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 200 கோடி ரூபாய் அளவிற்கு அதிகம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் பணி மேலும் சிறந்திட தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 1–35

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் மற்றும் இதர கூட்டுறவு பண்டக சாலைகள்மூலமாக 2005–2006 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது 27 கோடி அளவுக்கு அதிகம் விற்று சாதனை புரிந்திருக்கிறது. அனைத்து நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களின் எடை துல்லியமாக இருக்கவேண்டும் என்பதற்காக 2007–2008 ஆம் ஆண்டில் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் மின்னணு தராசுகள் வாங்கிட 11 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகள் அனைத்திலும் மின்னணு தராசுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. கூடியவிரைவில் அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகளிலும் மின்னணு தராசுகள் பயன்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்காக அத்தியாவசியப் பொருட்கள் பெற அதிக தூரம் பயணம் மேற்கொள்ளக்கூடாது என்பதை மனதில் வைத்து அரசின் சார்பில் அதிக அளவில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றது முதல், நாளது தேதி வரை 759 பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடைகள் புதியதாகத் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் அவர்களின் தாயுள்ளத்தால் கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் பணியாளர்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு குறைந்தபட்சம் 1,350 ரூபாயும், அதிகபட்சம் 4,155 ரூபாயும் தற்போது பெறும் சம்பளத்தைவிட கூடுதலாக சம்பளம் வழங்கப்படுகிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயலாளர்கள் தொடர்ந்து அங்கேயே பணிபுரிவதால் தவறுகள் செய்கின்றனர் என்றும் அவர்களை வேறு வங்கிகளுக்கு மாறுதல் செய்ய வேண்டும் எனவும் சில கருத்துகள் இதே அவையில் தெரிவிக்கப்பட்டன. நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட இதுபற்றிப் பரிசீலனை செய்து, வங்கி பயிற்சி பெற்று நிருவாகம் செய்யக்கூடிய மேலாளர் என்ற தகுதியில் நிர்வாகிகளை நியமிப்பது பற்றித் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் மாறுதலாகிச் செல்கின்ற புதிய இடத்திலும் இவர்கள் தவறுகள் செய்யக்கூடும். இங்கே தவறு செய்கிறார்கள் என்பதற்காக அடுத்த சங்கத்திற்கு அனுப்பினால், அங்கே போயும் சில நாட்கள் கழித்து அதை செய்யத்தான் ஆரம்பிப்பார்கள். அவ்வாறு நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான், தவறு செய்வோர்மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட்டால் மட்டுமே இதற்கு ஒரு தீர்வு ஏற்படுமென்று கருதி, வங்கிகள் கணினிமயமாக்கப்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தப் பணிகள் நிறைவுபெற்றால் வங்கிகளின் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்த முடியும்.

கூட்டுறவு வங்கிகளின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து நிலை பணியாளர்கள் திறமையின் அடிப்படையில் அதைச் செய்திடும்பொருட்டு வங்கியியல் பயிற்சிபெற்ற தகுதியான நபர்களை தேர்வு வாரியம்மூலம் தேர்வு நடத்திப் பணி நியமனம் வழங்கிடவும், அவர்களுக்கு வங்கி மேலாளர் போன்ற பணித் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குவது பற்றியும் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடுகள் நடப்பது பற்றியும் உறுப்பினர்கள் இப்போதுகூட தெரிவித்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் மீது இந்த அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 170 பணியாளர்கள் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, குற்றவியல் நடவடிக்கை எடுத்து 137 பேரைக் கைது செய்தும் இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் எதிர்காலத்தில் சிறிதளவுகூட முறைகேடுகள் நடைபெறக்கூடாது என்பதில் இந்த அரசு மிகுந்த கவனமாக உள்ளது. இதனை உறுதிப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கூடுதல் பதிவாளர் நிலையில் உள்ள ஓர் அலுவலர் தலைமையில் விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவின் கட்டுப்பாட்டில் மண்டலங்கள்



வாரியாக 10 விழிப்புப் பணிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் குற்றங்களைத் தடுக்கும் வகையில் தொடர் கண்காணிப்பு முறையில் ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு முறைகேடுகள் நிகழாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவது பற்றியும் இப்போது கேட்டார்கள், கோரிக்கை வைத்துள்ளனர். தற்போது 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 725 வங்கிகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். ஏற்கெனவே பழைய கட்டடங்கள் சிலவற்றிற்கு இருக்கின்றன. இந்த 725 கட்டடங்களுக்குக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்பதற்குக் காரணம், அவற்றிற்கெல்லாம் வாடகையாக நாளொன்றுக்கு 10 ரூபாய் என்கிறார்கள், ஒரு நாளைக்கு 100 ரூபாய் என்கிறார்கள், அவர்கள் இஷ்டத்திற்கு, வேறு இடம் கிடைக்கவில்லை என்பதற்காகச் சொல்கிறார்கள். அதையெல்லாம் மாற்றுவதற்குத்தான் இன்றைக்குப் போதிய இடம் மற்றும் நிதி நிலையைப் பரிசீலித்து வருங்காலத்தில் உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உதவி செய்யும் பட்சத்தில், இந்தப் பணியை விரைவாக முடிக்க இயலும். கோரிக்கை வைத்ததற்காகச் சொல்கிறேன் என்று தயவுசெய்து கருதாதீர்கள். அதை எவ்வளவு சீக்கிரத்திலே முடிக்கலாமோ அவ்வளவு சீக்கிரத்திலே முடிக்கலாம் என்பதற்காகத்தான் அதைக் கேட்கிறோம். அப்படி இல்லை என்றால்கூட வேறு வகைகளிலே கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

பிற்பகல் 1–40

பண்ணைசாராக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கோரியுள்ளனர். நமது திரு. சிவபுண்ணியம் அவர்கள்தான் அதற்கு முதன் முதலிலே என்னிடம் சொன்னவர். சில உறுப்பினர்கள் கோரியுள்ளனர். அதற்கு ஏற்கெனவே வட்டிச் சலுகைகளை வழங்கி, அந்தத் திட்டம் 31–3–2008 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் காரணமாக 1,13,252 பயனாளிகள் 96 கோடியே 2 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பயன் பெற்றுள்ளனர். அந்த வட்டியைக் குறைத்ததனாலே, அதிலே கடன் பெற்றவர்கள் திருப்பி வழங்கியது, இவ்வளவு ரூபாய் அவர்களுக்குப் பலன் கிடைத்திருக்கிறது. இதனால், வங்கிகளின் நிதிநிலைமை வெகுவாகப்

பாதிக்கப்பட்டிருக்கிறது. சும்மா எல்லாவற்றையுமே தள்ளுபடி, அசலையே தள்ளுபடி செய்தோம் என்று சொன்னால் அந்த வங்கிகள் தாங்கக்கூடிய சக்தியுள்ளவையல்ல. இதற்கு அரசாங்கம் ஏற்கெனவே மற்ற உதவிகளையெல்லாம் செய்திருப்பதால் எல்லாவற்றுக்கும் உதவி செய்யுங்கள் என்று அரசைக் கேட்பதும் அவ்வளவு நல்லதல்ல. இந்த அரசு பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கும். காலக் கெடு நீட்டிக்க வேண்டும் என்று இப்போதுகூட வந்து சொல்லிவிட்டுப் போனார். கொஞ்சம் கெடுவாவது நீட்டிக்க வேண்டும் என்று சொன்னார். அதைச் செய்வதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். அதிலே எந்த மாதத்திலே நிறுத்தியிருக்கிறோமோ அந்த மாதத்திலேயிருந்து கூடுமானவரையிலே இன்னும் இரண்டு மாதமோ அல்லது கூடுதலோ இப்போது நீட்டிக்கப்படும். அதற்குப் பிறகு வேண்டுகோள் வந்தால்கூடப் பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தலைப் பற்றி இங்கே சிலபேர் குறிப்பிட்டார்கள். அதிலே ஒன்றும் யாரும் அவசரப்பட வேண்டாம். உயர் நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் இது சம்பந்தமாக நடந்துகொண்டிருக்கின்றன. அவை முடிந்ததற்குப் பிறகு நாமெல்லாம் பரிசீலித்து அதைப் பற்றி ஒரு நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களின் நலத்தைப் பேணிக் காக்க இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பல இலட்சம் பேர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் செயல்பட்டுவரும் நம்முடைய தலைவர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு கூட்டுறவு இயக்கத்தையும் அதைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்களையும் மென்மேலும் வலுப்படுத்தி, தமிழ்நாட்டில் மிகப் பெரியதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்து பாடுபடும்.

*2008–2009* ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளில், சில முக்கியமானவற்றை அறிவிப்புகளாக உங்கள்முன் புத்தக வடிவிலே நான் கொடுத்துள்ளேன். அந்த அறிவிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ *283* முதல் *289* வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அத்தகைய வெட்டுத் தீர்மானங்களில் சொல்லப்பட்டுள்ளவற்றுக்கு நான் இங்கே சொன்ன பதிலிலே ஓரளவுக்கு உங்களுக்குத் திருப்தியிருக்கும் என்று நினைக்கிறேன். ஆகையினாலே, உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, நன்றி மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், என்ன சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பண்ணைசாராக் கடன் குறித்து இங்கே ஒரு விளக்கத்தை அளித்தார்கள். கால அவகாசம் நீட்டிப்பது குறித்தும் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். கால அவகாசம் மேலும் நீட்டித்துத் தர வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. அதைச் செய்து தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்குக் கடன் முழுமையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் என்றாலும்கூட வட்டி, அபராத வட்டி இவற்றை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, அவர்கள் கட்டியிருக்கிற பணம் என்பது வட்டி, அபராத வட்டியிலே வரவு வைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அதையும் அசலிலே சேர்த்து வரவு வைத்து அவர்களுக்கு நிவாரணம் பெறச் செய்வதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட அல்லாமல், அபராத வட்டி, அதற்குரிய கூடுதல் வட்டி அவற்றையும் நிச்சயமாகத் தள்ளுபடி செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவு

அளித்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அவசரத்திலே ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். ஓராண்டு காலமாக என்னுடைய துறையிலே பல்வேறு வகையிலே என்னோடிருந்து பணியாற்றி இந்த மானியக் கோரிக்கை நிறைவேறுவதற்கு உதவியாக இருந்த துறையினுடைய செயலாளர், அதனுடைய ஆணையாளர், நிர்வாக இயக்குநர்களெல்லாம் சிரமப்பட்டிருக்கிறார்கள். இந்தத் துறையிலே தொடர்ந்து அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்த மாமன்றத்தின்மூலமாக அவர்களுக்கு இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் எப்போதும் எழுந்து நின்றுகொண்டேயிருப்பார்.

பிற்பகல் *1–45*

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தாம்பரத்திற்கு தனியாக ஒரு மண்டலம் அமைத்ததற்கு தாம்பரம் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள், என்ன? போதும். நேரமாகிவிட்டது. மணி *1–45*.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர்களை, அவர்களை மாற்றினால்கூட அவர்கள் அங்கே போனாலும் தவறு செய்யக்கூடும். அதிலும் கணினி மயமாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அரசு விரைவாக



கொள்கை முடிவு எடுத்து, அவர்களை மாற்றலாம் என்று முடிவு எடுத்துவிட்டீர்கள். அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குப் போய் வ க்குப் போட்டு அந்த வழக்கிலும் தோற்றுவிட்டார்கள். இப்போது அந்தச் செயலாளர்களை நீங்கள் மாற்றினால்தான் ஒரு நல்ல நிர்வாகம் தொடக்க வேளாண்மை வங்கியிலே கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரனுடைய கோரிக்கைக்கு சட்டமன்றம் ஏராளமான வரவேற்பைத் தருகிறது. இருந்தாலும் வைத்தியநாதன் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டில் அப்படி மாற்றக்கூடாது என்று சட்டப்படி வந்திருக்கிறது. ஆனால், தேவைப்படின் அவற்றில் சிலவற்றை இப்படி ஞானசேகரன் சொல்கிற ஒன்றிரண்டு இடங்களில் ஏதாவது இருந்தால் அதற்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்து ஏதாவது செய்யலாமே தவிர, முழுமையும் அவர்களை மாற்றுவது முடியாது. அதில் ஒன்றும் தப்பில்லை, மாற்றுவதற்கு. மூன்று வருடத்திற்கு மேற்பட்டுவிட்டால் மாற்றிவிட வேண்டும் என்பது உங்களுடைய கோரிக்கை அவ்வளவுதானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான் எல்லாம். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு

## (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12– கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.379,27,07,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,025,85,20,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.85,38,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத

தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13– உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,167,59,78,000/–, மூலதனக் கணக்கில் ரூ.33,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.900,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



## 6. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 29–4–2008 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 11—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) 8–5–2008 வியாழக்கிழமை அன்று ஏற்கெனவே அறிவித்துள்ள மானியக் கோரிக்கையுடன் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 9–4–2008 (புதன்கிழமை) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.ஜே.1) துறையின் 23–11–2007 ஆம் நாளிட்ட 326 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

37. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை.

[2008 ஏப்ரல் 8

[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

27. மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

28. மானியக் கோரிக்கை எண் 13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

29. வேளாண் பல்துறை தொழில்நுட்பங்களின் களஞ்சியம் என்கிற சிறுநூல். (தமிழ்)



2008 ஏப்ரல் 8]

## இணைப்பு I

(85 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 12 — கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### அத்தியாயம் - 1

### முன்னுரை

பற்பலபேர் சேர்க்கை பலம் சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே
ஒற்றைக் கை தட்டினால் ஓசை பெருகிடுமோ
மற்றும் பலரால் வளம் பெறுமோ தோழர்களே.

- பாவேந்தர் பாரதிதாசன்

"கூடித் தொழில் செய்வோம் தோழர்களே" என்று கூவியழைக்கின்ற பாரதிதாசனின் கூர்மைமிகு வரிகள், மேதினியில் கூட்டுறவு அமைப்புகள் சாதித்த சாதனைகளுக்குக் கட்டியம் கூறிக் களைபூட்டுகிறது. "காகங்களைப்போல் கூடிக் கரைந்து கலைந்து சென்று விடாமல் வளம் கொழிக்க மேகங்களைப்போல கூடுவோம்; மேன்மையுற கூட்டுறவை நாடுவோம்" என்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூட்டுறவுத் தத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். "சிறுகச் சிறுக முதலிடு; உழைத்து உழைத்து பெருக்கிடு; பகிர்ந்து பகிர்ந்து உண்டிடு". இதுதான் கூட்டுறவின் நோக்கம். ஒன்றுகூடுவது அபகரிப்பதற்காக அல்ல; அளிப்பதற்கு. தீர்ப்பதற்காக அல்ல; சேர்ப்பதற்கு. பங்குபோடுவதற்காக அல்ல; பகிர்வதற்கு.

இந்தியத் திருநாட்டில் கூட்டுறவு இயக்கம் அரும்பியது தற்போதைய திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்கின்ற சிற்றூரில்தான். 1904 ஆம் ஆண்டில் அங்கு தொடங்கப்பட்ட முதல் ஊரகக் கடன் சங்கம்தான், இயக்கத்தில் முதல்படியாய் முகிழ்த்தது. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் முதல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் 1904 ஆம் ஆண்டில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கமாக

நிறுவப்பட்டது. பல ஆண்டுகளாக கூட்டுறவு இயக்கத்தால் சமூகப் பொருளாதார நிலையினை மாற்றும் வகையில் பல தரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு கிராமப் பகுதிகளிலுள்ள இலட்சக்கணக்கான ஏழை மற்றும் எளிய நிலையில் உள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களும் 1955 ஆம் ஆண்டு வரையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டன. 1956-57 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுறவு இயக்கத்தின் பெருமளவு விரிவாக்கத்தினால் சிலவகையான சங்கங்கள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு அத்துறைத் தலைவர்களே அவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செயல்முறைப் பதிவாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். நாளது தேதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடன், 15 செயல்முறைப் பதிவாளர்களும் உள்ளனர். எனினும் அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளைப் பொறுத்தவரை விளக்கம் அளிக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமே உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் கிராம அளவில் விவசாயக் கடன்கள் வழங்குவதிலும், நகர்ப்புறங்களில் விவசாயம் சாராத கடன்கள் வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளன. இதுதவிர, வேளாண் விளைபொருள் விற்பனை, நுகர்பொருள் விற்பனை, விவசாயிகளுக்கு உரம் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்குதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளன. இவற்றுடன் கூட்டுறவு அச்சகம், பணியாளர் கூட்டுறவுச் சிக்கன நாணயச் சங்கம் மற்றும் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் போன்ற சிறப்பு வகைச் சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் நலன் பேணும் வகையில் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுக் கடன்கள் வசூல் ஆகாததாலும், வெளிச்சந்தைப் போட்டியைச் சமாளிக்க இயலாததாலும், உறுப்பினர்களின் போதிய ஆதரவின்மையாலும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் கடுமையான பாதிப்புக்குள்ளான நிலையில், 2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்த அரசின் முடிவால் விவசாயிகளின் கடன் சுமை நீக்கப்பட்டதோடு, கூட்டுறவுச் சங்கங்களும் புத்துயிர் பெற்றுள்ளன. இதனால் கூட்டுறவுக் கடன்



சங்கங்களின் நிதி ஆதாரமும் அதிகரித்து, அதிக அளவில் கடன் மற்றும் இதர இடுபொருட்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டு, அவற்றின் செயல்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அரசு கடந்த இரண்டாண்டுகளில் 3,304.42 கோடி ரூபாயினைக் கடன் தள்ளுபடிக்காகக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு விடுவித்துள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் மீதமுள்ள தொகையையும் உறுதி அளித்தபடி விடுவிக்க உள்ளது. இத்திட்டம் விவசாயிகளிடையே பெற்ற மிகப்பெரிய வரவேற்பின் காரணமாக இந்திய அரசும் இதனைப் பின்பற்ற முடிவெடுத்து, 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 60,000 கோடி ரூபாய்க்கு வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது.

விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சியில் கூட்டுறவின் முக்கியப் பங்கினை அரசு நன்கு உணர்ந்துள்ளது. கடன் வழங்குதல், உரம் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகத்துடன் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்யும் பணிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இவை அனைத்துப் பிரிவு மக்களையும் எளிதில் சென்றடையும் வகையில் உள்ளன. எனவே, கூட்டுறவு நிறுவனங்களுக்கு அனைத்து வகையிலும் அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இதனடிப்படையில் தற்போது பேராசிரியர் ஏ. வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று குறுகிய காலக் கடன் கட்டமைப்புகளுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்திற்கு இந்திய அரசு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் மாநில அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களில் 31-3-2004 அன்றுள்ளபடி குவிந்த நட்டத்தினைக் கணக்கிடுவதற்கு சிறப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி முதலீட்டு உதவியின் ஒரு பகுதி 2008-2009 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிதி உதவியின் காரணமாகக் கூட்டுறவுக் கடன் அமைப்புகளின் நிதி ஆதாரம் மீண்டும் வலுப்பெறும். நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்புகளான, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவற்றிற்குப் புத்துயிரூட்ட இதே போன்ற புனரமைப்புத் திட்டத்தினை இந்திய அரசு அறிவிக்கும்போது மாநில அரசு அதனைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[2008 ஏப்ரல் 8

நகர கூட்டுறவு வங்கிகளை மேம்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் கூட்டுறவு இயக்கம் புதிய உத்வேகத்துடன் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

அ. கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

ஆ. வேளாண் உற்பத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

இ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

ஈ. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்

உ. சிறப்பு வகைச் சங்கங்கள்

மேற்குறிப்பிட்ட வகையிலான கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய செயல்பாடு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 8]

## அத்தியாயம் - 2

## கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு

இம்மாநிலத்தில், கடன் வழங்குவதில் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு தன்னிகரற்ற மிகப் பெரிய அமைப்பாகத் திகழ்கிறது. இது மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு நியாயமான வட்டி விகிதங்களில் கடன் வழங்கி வருவதால், தனியாரிடம் அதிகமான வட்டி விகிதத்திற்குக் கடன் பெறும் அவதியிலிருந்து விவசாயிகளை மீட்க உதவுகிறது. இக்கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்கு நெருக்கமாகவும் அவரவர் குடியிருப்புகளுக்கு மிக அருகிலும் செயல்பட்டு விவசாயிகள் எளிதில் அணுகிக் கடன் பெறும் அமைப்பாகவும் திகழ்கிறது.

தமிழ்நாட்டில், கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:—

(அ) மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் உள்ளடக்கிய குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் கட்டமைப்பு.

(ஆ) மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும், வட்டம்/ வட்டார அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கிய நீண்டகால ஊரகக் கடன் கட்டமைப்பு.

(இ) நகர் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பொதுமக்களின் கடன் தேவைகளையும், இதர வங்கி சார்ந்த தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் நகர கூட்டுறவு வங்கிகளை உள்ளடக்கிய நகரக் கடன் கட்டமைப்பு.

### (அ) குறுகிய காலக் கடன் கட்டமைப்பு

தமிழ்நாட்டில், குறுகிய காலக் கடன் கட்டமைப்பு மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 45 கிளைகளுடனும், மாவட்ட அளவில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் 717 கிளைகளுடனும், கிராம அளவில் 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் மூன்றடுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

### (i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாகும். இத்தலைமை வங்கி, நிதி ஆதாரங்களைத் திரட்டி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சாராத் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. மேலும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழியாகப் பெறப்படும் மறு நிதி உதவியைக் குறுகிய மற்றும் மத்திய கால வேளாண்மை மற்றும் அது சார்ந்த தேவைகளுக்காக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாக அளிக்கிறது.

29-2-2008 அன்றுள்ள நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, ரூ.61.07 கோடி பங்குத்தொகை வைத்துள்ளது. இதில் அரசின் பங்குத்தொகை ரூ. 0.26 கோடியும் அடங்கும். இவ்வங்கி, ரூ. 700.48 கோடி அளவிற்குக் காப்பு நிதியையும், ரூ.3,944.98 கோடி அளவிற்கு வைப்புகளையும் கொண்டுள்ளது. முந்தைய ஆண்டின் காப்பு நிதி ரூ. 517.95 கோடி மற்றும் வைப்புகள் ரூ. 3,263.50 கோடி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, நடப்பாண்டின் காப்பு நிதி மற்றும் வைப்புகள் முறையே 35 சதவீதம் மற்றும் 21 சதவீதம் உயர்வு கண்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை, இவ்வங்கி ரூ. 42.80 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

இலாபத்தில் இயங்கிவரும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அளிக்கும் நிதியைக் கொண்டு, தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி என்ற பெயரில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிதி ஒன்றைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி, மாநிலத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்திடப் பயன்படுத்தப்படுகிறது. இதில் 29-2-2008 அன்று நிலவரப்படி ரூ. 29.84 கோடி இருப்பு உள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி நலிவடைந்த நிலையிலுள்ள 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டுவதற்குச் சிறப்புத் திட்டம் ஒன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வங்கிகள், போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையில், கடன் வழங்குவதையும், இதர செயல்பாடுகளையும் நிறுத்திவிட்டதால் செயலற்ற நிலையை அடைந்துள்ளன. அவை மீண்டும் கடன் வழங்க ஏதுவாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் ஒவ்வொரு





வங்கிக்கும் ரூ. 20 இலட்சம் சிறப்புக் காசுக் கடன் சலுகை வட்டி வழங்கப்படுகிறது. பொதுவாக, வழக்கிலுள்ள வட்டி விகிதத்திற்கும், சலுகை வட்டி விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகை இந்த நிதியிலிருந்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் அவற்றின் இயல்பான கடன் வழங்கும் பணிகளை மீண்டும் தொடங்க இயலும். இவை அடுத்த மூன்றாண்டுகளில் வாழ்திறனுள்ள வங்கிகளாக மாறி வணிகத்தைப் பெருக்கி, விவசாயிகளுக்கு உரிய கடன் வழங்கும் பணியைத் தொடர்ந்து செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 29-2-2008 நிலவரப்படி 631 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.126.20 கோடி காசுக் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் 1,192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

### (ii) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 717 கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கிராமப்பகுதி மக்களுக்கும் சேவை ஆற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் நிதி உதவியைக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வேளாண்மை மற்றும் இதர கடன்களை வழங்கி வருகின்றன. மேலும், பால்வளம், கைத்தறி, சர்க்கரை ஆலை மற்றும் இவ்வங்கிகளுடன் இணைந்துள்ள இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி அளித்து வருகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகளின்மூலம் பொதுமக்களுக்குப் பண்ணைசாரா தேவைகளுக்கும் நேரடிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 26-3-2008 அன்று நிலவரப்படி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 1,323.20 கோடி அளவிற்குப் பயிர்க் கடன்கள் வழங்க, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளன. இதில், சொந்த நிதியிலிருந்து ரூ. 985.59 கோடியும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து பெறப்பட்ட மறுநிதியிலிருந்து ரூ. 337.61 கோடியும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 8

**மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள்**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | வைப்புத் தொகை | நேரடிக் கடன்கள் |
|---|---|---|
| 2004-2005 | 6275.78 | 1778.12 |
| 2005-2006 | 6979.34 | 2005.33 |
| 2006-2007 | 7286.62 | 2973.02 |
| 2007-2008* | 7666.70 | 3292.53 |

* 29.2.2008 அன்றுள்ளபடி

கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் பிப்ரவரி வரை மட்டும் வைப்புத் தொகை 5.22 சதவீதம் அதிகரித்துள்ளது. கடன் தள்ளுபடி காரணமாக பெறப்பட்ட போதிய நிதி வரவு, சீரிய முயற்சிகள், திறமையான நிதி மேலாண்மை ஆகியவை காரணமாக, 2006-2007 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கையின்படி, வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டப் பிரிவு 11(1)ஐ நிறைவு செய்ய இயலாத நிலையில் இருந்த 12 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 7 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சட்டப் பிரிவு 11(1)ஐ நிறைவு செய்துள்ளன. மீதமுள்ள 5 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் 31-3-2009-க்குள், அவற்றின் நிகர மதிப்பை உயர்த்தி, சட்டப் பிரிவு 11(1)ஐ நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகளையும் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

தமிழகத்தில் உள்ள 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், விவசாயிகளுக்குத் தேவையான கடன், உரம் போன்ற இடுபொருட்கள் வழங்குவதுடன், பொதுவிநியோகத் திட்டக் கடைகளையும் நடத்தி வருகின்றன. இவ்வங்கிகள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கி வருகின்றன. குறுகிய காலக் கடன்கள் 12 முதல் 15 மாதங்களில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். மத்திய காலக் கடன்கள் 3 முதல் 5 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.



2008 ஏப்ரல் 8]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன்களில் பயிர்க் கடன் முக்கியமான ஒன்றாகும். பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிருக்கு 10 ஏக்கர் வரையும் இதர பயிர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரையும் எவ்விதப் பிணையமும் இன்றி பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. இத்தொகைக்கு மேல் அதிகமாக வழங்கப்படும் கடன்களுக்குச் சொத்து அடமானம் அல்லது நகை அடமானம் பெறப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், பண்ணை சார்ந்த கடன்களான விவசாயப் பண்ணை இயந்திரங்கள் வாங்குவதற்கும், பண்ணைசாராக் கடன்களான நுகர்வோர் கடன், வீட்டு வசதிக் கடன், கல்விக் கடன் மற்றும் தொழிற்கடன் போன்றவற்றிற்கும் கடன்கள் வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகள் 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து வழங்கிய கடன்களின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பயிர்க் கடன்கள் | மற்றைய கடன்கள் |
|---|---|---|
| 2004-2005 | 1080.58 | 2609.07 |
| 2005-2006 | 1132.18 | 2718.69 |
| 2006-2007 | 1250.62 | 3082.20 |
| 2007-2008 | 1323.20 (26-3-2008 வரை) | 3254.68 (29-2-2008 வரை) |

விவசாயத்திற்கு அதிக அளவில் கடன் வழங்கப்பட வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு, 2006-2007 ஆம் ஆண்டு முதல் பயிர்க் கடனுக்கான வட்டியை 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக அரசு குறைத்துள்ளது. வட்டி வித்தியாசத் தொகையை அரசே ஈடு செய்கிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான வட்டி குறைப்புத் தொகையை ஈடுகட்ட ரூ.18.28 கோடியும் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.15.04 கோடியும் மாநில அரசு விடுவித்துள்ளது.

விவசாயிகளிடம் முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தும் வழக்கத்தை ஏற்படுத்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

[2008 ஏப்ரல் 8

அதில் சிறப்பினமாக அனைத்துப் பயிர்க் கடன்களையும் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அரசு மேலும் குறைத்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் இது மேலும் 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு உரிய காலத்தில் பயிர்க் கடன் வழங்கிட அரசு முக்கியத்துவமளிக்கிறது. 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.1,500 கோடி பயிர்க் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டுப் பொறுப்புடைய விவசாயிகளின் குழுக்களை உருவாக்கி அதன்மூலம் கடன் வழங்குவது ஊக்கப்படுத்தப்படும். இந்தக் குழுக்கள்மூலம் ரூ.10 கோடி சுழல் நிதியுதவி விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனால் விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள் வழங்குவது உட்பட விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்பது வரையான செயல்பாடுகளை ஒருமுகப்படுத்தி விவசாயிகள் அதிகப் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அமைப்புகள் விவசாயிகள், வேளாண் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகுக்கும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் செயல் எல்லைகளில் உள்ள விவசாயிகளுக்குச் சேவை செய்வதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதால், எந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியையும் கலைப்பதைக் கொள்கை அளவில் இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. 2005-2006 ஆம் ஆண்டு வரை 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைத்திட அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2006-2007 ஆம் ஆண்டில் இவை புத்துயிரூட்டப்படும் என வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், அவற்றைப் புத்துயிரூட்டி அவற்றின் வழக்கமான பணிகளை மேற்கொள்ள பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 199 வங்கிகளில் 197 வங்கிகள் புத்துயிரூட்டப்பட்டு, 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.17.23 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளன என்பதை அரசு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை ரூ.13.07 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் புத்துயிரூட்டிட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.



2008 ஏப்ரல் 8]

பல ஆண்டுகளாக உரிய கண்காணிப்பின்றிக் கேட்பாரற்றுக் கிடந்ததால் பல சங்கங்களின் செயல்பாடுகள் முடங்கி விட்டன. அதனால் சில சங்கங்கள் அவற்றின் பணியாளர்களுக்குச் சம்பளம்கூட வழங்கிட இயலாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டன. ஆனால், இந்த அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளால் இச்சங்கங்களின் நிலைமையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விவசாயக் கடன் தள்ளுபடி, தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவி, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் மானியம் போன்ற சிறப்பு முயற்சிகளின்மூலமாக இச்சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை கணிசமாகக் குறைந்துள்ளது. அனைத்துச் சங்கங்களும் நிதி நிலைமையில் தன்னிறைவு பெறும் வகையிலும் சம்பளம் பெறாத பணியாளர்கள் எவரும் இல்லை என்கின்ற நிலையை எய்தும் வகையிலும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வரும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொது மக்களிடமிருந்து திரட்டிய வைப்புத் தொகைகளை முதிர்வடைந்த காலத்தில் திரும்ப வழங்கிட இயலாத சூழ்நிலை கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினை தொடர்ந்து இருந்தால் பொதுமக்களிடையே கூட்டுறவு நிறுவனங்கள்மீது உள்ள நம்பிக்கையே தகர்ந்துவிடும் என்ற நிலை ஏற்படலாம். எனவே வைப்புதாரர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக முதிர்வடைந்த வைப்புத் தொகைகளை வட்டியுடன் திரும்ப வழங்கவும் இந்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டது. முதிர்வடைந்து திருப்பித் தரப்படாத வைப்புத் தொகை நிலுவை 30-6-2006 அன்று ரூ. 170.62 கோடியாக இருந்தது. இந்த வைப்புத் தொகைகளை விரைவில் திருப்பித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சட்டமன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டது. அரசு எடுத்த பல்வேறு முயற்சிகள் காரணமாக 29-2-2008 வரை ரூ. 117.68 கோடி அளவிற்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வைப்புத் தொகைகளைத் திரும்ப வழங்கியுள்ளன. மேலும் மீதமுள்ள தொகைகளை வட்டியுடன் வைப்புதாரர்களுக்கு திரும்ப வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடன் வழங்குதல், காப்பீடு, இடுபொருள் விநியோகம், உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்தல் மற்றும் விரிவாக்கப் பணிகள் போன்ற ஒருங்கிணைந்த பணிகளை விவசாயிகளுக்கு அளிக்கும் ஆதார அமைப்புகளாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

[2008 ஏப்ரல் 8

வங்கிகள் செயல்பட வேண்டும் என அரசு கருதுகிறது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கும் அளவு விவசாய உற்பத்தியைப் பெருக்க ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொண்டு மேம்பட்ட பயிர் சாகுபடி முறையையும், தொழில் நுட்ப அறிவையும் பரப்பும் அமைப்புகளாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்படும். இதனால் விவசாயிகளின் வாழ்வு கூடுதல் வளம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய செயல்முறையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைத் துறை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு ஒரே அமைப்பின்கீழ் இடுபொருட்களையும், சேவைகளையும் வழங்கும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நெல் கொள்முதல் செய்யும் முகவராக காவிரி பாசனப் பகுதி அல்லாத இதர மாவட்டங்களில் செயல்பட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்கள் மட்டுமல்லாது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச ஆதார விலையில் நெல் கொள்முதல் செய்யும். மேலும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தேசிய வேளாண் விற்பனை இணையம் ஆகியவை விவசாய விளைபொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உதவி செய்யும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விளைச்சல் நேரங்களில் நியாயமான விலை கிடைக்காமல் நட்டத்திற்கு விற்கும் சூழ்நிலையைப் போக்கிட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதை அதிகரிக்கும். இதற்காக 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும்.

பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பழமையான கணக்குகள் பராமரிக்கும் நடைமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றன. ஆனால், புதிய தலைமுறை தொழில்நுட்ப உத்திகள்மூலம் புதிய அணுகுமுறைகளை பிற வங்கிகள் கையாண்டு செயல்படுவதால் இவ்வங்கிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய அச்சுறுத்தலை எதிர்கொள்ள வங்கியியல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி 2008 ஆம் ஆண்டு



2008 ஏப்ரல் 8]

இறுதிக்குள் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கணினிமயமாக்கப்படும்.

### (ஆ) நீண்டகாலக் கடன் கட்டமைப்பு

நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு, தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும், வட்ட/வட்டார அளவில் செயல்படும் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கடன் வழங்கும் நிறுவனங்கள், சிறுபாசனத் திட்டங்கள், நில மேம்பாடு, தோட்டக் கலை, மலைத்தோட்டப் பயிர்கள், இதர வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில்களைச் செய்ய விவசாயிகளுக்கு முதலீட்டு நிதி உதவியை வழங்குகின்றன.

### (i) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன் வழங்குவதற்குத் தேவையான நிதியினை சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் திரட்டுகிறது. நபார்டு வங்கியானது அரசின் கணக்கிலிருந்து தானாக பற்று வைக்கும் முறைக்கு வலியுறுத்திய காரணத்தினால் அவ்வங்கியிடமிருந்து 2004 ஆம் ஆண்டு முதல் நிதியுதவியைப் பெற முடியவில்லை. இதனால் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலம் கடன் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது. தற்போது இவ்வங்கி அதன் சொந்த நிதியிலிருந்து பண்ணைசாராக் கடன்களை வழங்கத் தொடங்கியுள்ளது. 29-2-2008 அன்று நிலவரப்படி வங்கியில் பங்கு மூலதனமாக ரூ.40.29 கோடியும், காப்பு நிதியாக ரூ. 566.10 கோடியும், வைப்புத் தொகையாக ரூ. 1.19 கோடியும் உள்ளது. கடன் வழங்குவதை நிறுத்தியதன் காரணமாக தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 29-2-2008 அன்றைய நிலவரப்படி ரூ. 143.84 கோடி குவிந்த நட்டத்தில் உள்ளது.

### (ii) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

தமிழ்நாட்டில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்ட/வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக

[2008 ஏப்ரல் 8

வளர்ச்சி வங்கிகள் சிறுபாசனம், நில மேம்பாடு, வேளாண் உபகரணங்கள், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு போன்ற வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்குகின்றன. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் 5 முதல் 15 ஆண்டுகளாகும்.

நபார்டு வங்கியிடமிருந்து மறுநிதி கிடைக்கப் பெறாத காரணத்தால் கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வங்கிகள் கடன்கள் ஏதும் வழங்கவில்லை. 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்குப் புத்துயிரளிக்க, பண்ணைசாராக் கடன்களை வசூலிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலுவையிலுள்ள தவணை கடந்த பண்ணைசாராக் கடன் தொகையான ரூ. 278.43 கோடியில் 1-4-2007 முதல் 29-2-2008 வரை ரூ. 72.91 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் நீண்டகாலக் கடன் அமைப்பிற்குக் கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 42.45 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு தற்போது நிதிப் புழக்கம் ஓரளவு கிடைத்துள்ளது.

இதன் காரணமாக 2007-2008 ஆம் ஆண்டில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மீண்டும் நகைக் கடன் உள்ளிட்ட பண்ணை சாராக் கடன்களை வழங்கத் தொடங்கியுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் நபார்டுமூலம் மறு நிதியுதவி பெற அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தோட்டக்கலை, இயற்கை முறை விவசாயம், உயர் தொழில்நுட்ப விவசாயம், துல்லியப் பண்ணை முறை, நுண்ணீர்ப் பாசனம், திட்ட அடிப்படையிலான தொழில்கள் குறிப்பாக மலர் சாகுபடி, மூலிகைப் பயிர்கள் வளர்த்தல், தரிசு நிலங்களில் தோட்டப் பயிர்களை வளர்த்தல் மற்றும் பண்ணைகளை இயந்திரமயமாக்குதல் போன்ற பணிகளுக்குக் கடன் வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

பேராசிரியர் ஏ. வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நீண்டகாலக் கடன் கட்டமைப்பைப் புனரமைக்க இந்திய அரசு நிதி உதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புனரமைப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்திட கொள்கை அளவில்



2008 ஏப்ரல் 8]

அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் நீண்டகாலக் கடன் கட்டமைப்பு அவற்றிற்கு ஏற்பட்ட குவிந்த நட்டத்தைச் சரி செய்து மீண்டும் விவசாய முதலீட்டுக் கடன் வழங்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (இ) நகரக் கூட்டுறவு வங்கிகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரம் மற்றும் நகர்ப்புறப் பகுதி மக்களுக்கு வங்கியியல் சேவை மற்றும் கடன் வசதிகளை வழங்கி வருகின்றன. தற்பொழுது 120 நகர கூட்டுறவு வங்கிகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதியைத் திரட்டி குறிப்பிட்ட நோக்கங்களுக்காக கடன்கள் வழங்கி வருகின்றன. அவை சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள பிரிவினருக்கு வீட்டுவசதி, வியாபாரம், கல்வி, நுகர்வோர் கடன் மற்றும் பிற பண்ணைசாராத் திட்டங்களுக்கு கடன்கள் வழங்கிவருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 2144.29 கோடி அளவுக்கு மூலதனக் கடன்கள் மற்றும் காலமுறைக் கடன்கள் வழங்கியுள்ளன. இவ்வங்கிகளின் வைப்புத் தொகை, 31-3-2007-ல் ரூ. 2,448.19 கோடியாக இருந்தது. 29-2-2008ல் ரூ. 2,592.29 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வங்கிகள் வழங்கும் மொத்த கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்கு குறையாமல் முன்னுரிமை பிரிவினருக்கும் அம்முன்னுரிமை பிரிவினர் கடன் தொகையில் 25 விழுக்காட்டிற்கு குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கும் கடனாக வழங்கப்பட்டு வருகிறது.

வணிக வங்கிகளுக்கு இணையாக செயலாக்கத் திறனை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு செம்மையாக சேவை புரிவதற்கு ஏதுவாக அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளையும் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கணினிமயமாக்க 2008-2009 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## கூட்டுறவுக் கடன் அமைப்புகள் செயல்படுத்தும் திட்டங்கள்

### (i) கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி

கூட்டுறவு வங்கிகளில் 31-3-2006 அன்று நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்களையும் அரசு தள்ளுபடி செய்தது. இந்த நடவடிக்கையால் இலட்சக்கணக்கான விவசாயிகளின் கடன் சுமை நீங்கியதுடன் கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்கும் புத்துயிர்

[2008 ஏப்ரல் 8

அளிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கடன் தள்ளுபடித் தொகையினை ஈடுசெய்ய 2006-2007 ஆம் ஆண்டு தொடங்கி 5 தவணைகளில் நிதியை விடுவிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரை 22,81,617 விவசாயிகளுக்குத் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடன் தள்ளுபடித் தொகையினை ஈடுசெய்வதற்காக இதுவரை தமிழக அரசால் விடுவிக்கப்பட்ட தொகை விவரங்கள்:—

(ரூபாய் கோடியில்)

| பயன் பெற்ற நிறுவனம் | 2006-2007 | | | 2007-2008 | | |
|---|---|---|---|---|---|---|
| | அசல் | வட்டி | கூடுதல் | அசல் | வட்டி | கூடுதல் |
| இந்திய அரசு | 12.29 | 3.53 | 15.82 | 6.94 | 2.12 | 9.06 |
| நபார்டு | 507.38 | 106.21 | 613.59 | 572.91 | 72.36 | 645.27 |
| தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி | 191.34 | 88.20 | 279.54 | 191.34 | 53.26 | 244.60 |
| மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | 343.78 | 128.67 | 472.45 | 318.33 | 76.96 | 395.29 |
| தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | 172.43 | 60.78 | 233.21 | 215.92 | 66.13 | 282.05 |
| தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 42.45 | 16.98 | 59.43 | 42.45 | 11.66 | 54.11 |
| கூடுதல் | 1269.67 | 404.37 | 1674.04 | 1347.89 | 282.49 | 1630.38 |



2008 ஏப்ரல் 8]

தமிழக அரசின் வரலாறு காணாத இத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றி தற்போது 2008-2009ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 60,000 கோடி அளவிற்கு மிகப் பெரிய அளவிலான விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தினை இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்திய அரசின் இந்தப் பாராட்டத்தக்க திட்டம், தேக்கத்திலிருக்கும் வேளாண் துறையை மீட்டு மேலும் வளர்ச்சியடையத் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் இந்தக் கடன் தள்ளுபடித் திட்டத்தின்மூலம் தமிழக அரசால் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் கடன் தள்ளுபடித் திட்டத்திற்கும் நிதியுதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ii) பயிர்க் கடனுக்கான அரசு வட்டி மானியம்**

2006-2007 ஆம் ஆண்டு முதல் பயிர்க் கடன் வட்டி 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைத்து வழங்கப்பட்டு வருகிறது. தாங்கள் பெற்ற கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தும் வழக்கத்தை விவசாயிகளிடையே ஏற்படுத்தும் பொருட்டு, தமிழக அரசு மேலும் 2 சதவீத வட்டி மானியம் 2007-2008 முதல் வழங்க ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் பெற்ற கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி 5 சதவீதமாக இருந்தது. 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், பயிர்க் கடனுக்கு இந்த வட்டியை 4 சதவீதமாக அரசு மேலும் குறைத்துள்ளது.

**(iii) பண்ணைசாராக் கடன்கள் வட்டி குறைப்புத் திட்டம்**

கூட்டுறவுக் கடன் நிறுவனங்களில் கடன் பெற்று, 31-3-2001 அன்று நிலுவையிலிருந்த அனைத்துத் தவணை தவறிய பண்ணைசாராக் கடன்களுக்கான வட்டியினை 12 சதவீதமாகக் குறைத்ததுடன் அபராத வட்டியினை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து, தவணை தவறிய நிலுவைக் கடனைக் குறைப்பதற்காக அரசு ஆணை வெளியிட்டது. இத்திட்டத்தின்கீழ், கடன்தாரர் மொத்த நிலுவைத் தொகையில் 25 சதவீதத்தைச் செலுத்தி, மீதி 75 சதவீதத்தைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் செலுத்துவதன்மூலம் இத்திட்டத்தின் சலுகையைப் பெறலாம். கடன் தொகையினைத் திரும்பச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 31-3-2007-ல் முடிவடைந்த இத்திட்டம், 31-3-2008 வரை பல்வேறு கட்டங்களில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 29-2-2008 வரை 1,13,252 பயனாளிகள் கடனைச் செலுத்திப் பயனடைந்துள்ளனர். இப்பயனாளிகளுக்கு ரூ. 96.02 கோடி சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

**(iv) நகைக் கடன்**

கூட்டுறவு வங்கிகள், நகை ஈட்டின் பேரில், விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத பணிகளுக்காக கடன்கள் வழங்குகின்றன. மக்களிடையே நகைக் கடன் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு எளிதில் கடன் பெற வசதியுள்ளதாகவும், வங்கிகளுக்கு இக்கடன் பாதுகாப்பானதாகவும் உள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில், 29-2-2008 வரை கூட்டுறவு அமைப்புகள் மூலம் நகைக் கடன் ரூ. 8,409.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(v) விவசாயக் கடன் அட்டை திட்டம்**

விவசாயிகளுக்கான கடன்களைத் தேவையான நேரங்களில் வழங்கி, கடன் வழங்குவதற்கான கால நேரத்தைக் குறைக்க ஏதுவாக விவசாய கடன் அட்டை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 29-2-2008 நிலவரப்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 17.13 இலட்சம் விவசாய உறுப்பினர்களுக்கு விவசாயக் கடன் அட்டைகள் வழங்கியுள்ளன.

**(vi) நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்**

நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் குறுகிய காலக் கடனில் 30 சதவீதத்திற்குக் குறையாமல் சிறு விவசாயிகளுக்கு, அதாவது 5 ஏக்கருக்குக் குறைவாக நிலங்கள் சொந்தமாக அல்லது சாகுபடி செய்பவர்களுக்கு வழங்க வேண்டும் என நிர்ணயம் செய்துள்ளது. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு, குறுகிய காலக் கடன்களில் 14 சதவீதமும் மத்திய காலக் கடன்களில் 30 சதவீதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(vii) சிறு வணிகக் கடன்**

பூ வியாபாரம், காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல் மற்றும் பெட்டிக் கடை நடத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள சிறு வணிகர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்குப் பயனளிக்கும் வகையில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் ஒரு சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றன.



இவர்கள் கந்து வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களின் சுரண்டலுக்கு ஆளாகும் எளிய பிரிவைச் சார்ந்த மக்கள் ஆவர். இவர்களின் கடன் தேவைகள் மிகவும் சிறியதாக இருப்பினும் அவர்களுக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த அரசினால் தொடங்கப்பட்ட இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுச் சீரமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூ.5,000/- வரை எவ்விதமான பிணையமுமின்றி கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை மேம்படுத்தி பயனாளிகளுக்குக் கடன் அட்டைகள் வழங்கி சுய உதவிக் குழுக்களை உருவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை 67,288 பயனாளிகளுக்கு ரூ.27.79 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2008-2009இல் ரூபாய் 50 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(viii) சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி**

சுய உதவிக் குழுக்கள்மூலம் வழங்கப்படும் கடன்கள் அனைவருக்கும் மிக்க பயனுள்ளதாகக் கருதப்படுகிறது. இதனால் பொதுவாகக் கடன் பெற வாய்ப்பில்லாதவர்களுக்கும் கடன் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. இக்கடன்கள் உடனுக்குடன் திரும்பச் செலுத்தப்படுவதாலும் எளிய நடைமுறைகளாலும் வங்கிகளுக்கு நன்மை பயக்கிறது. பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மூலம் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை ரூ.170.13 கோடி அளவில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் ரூ.200 கோடி அளவிற்கு சுய உதவிக் குழுக்கள் மூலம் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(ix) மகளிர் தொழில் முனைவோர் கடன்**

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மகளிர் தொழில் முனைவோர் சிறுதொழில் தொடங்கவும், சேவை மையங்கள் அமைக்கவும் ரூ. 10 இலட்சம் வரை 12 சதவீதம் வட்டியில் கடன்கள் வழங்கி வருகின்றன. இக்கடன் 60 தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை ரூ.9.96 கோடி அளவிற்கு 4,848 மகளிர் தொழில் முனைவோருக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(x) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை 12 சதவீத வட்டியில் கடன்களை வழங்குகின்றன. இக்கடன்களை 36 மாதத் தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும். 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை 5,063 பணிபுரியும் மகளிர் ரூ.11.81 கோடி அளவிற்குக் கடன் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**(xi) பேறுகாலக் கடன் திட்டம்**

கூட்டுறவு வங்கிகள் கர்ப்பமுற்றுள்ள மகளிருக்கு 11 சதவீத வட்டி விகிதத்தில் ரூ.2,000/- வரை பேறுகாலக் கடனாக வழங்கிவருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை 1,929 மகளிருக்கு ரூபாய் 0.39 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**(xii) தொழில் கடன்**

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு 12 சதவீத வட்டியில் ரூ.10 இலட்சம் வரையில் கடன்கள் வழங்கி வருகின்றன. இக்கடனை 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

**(xiii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கடன் பெறும் சக்தியை அதிகரிக்க ஏதுவாக வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.250/- வீதம் ரூ.20 இலட்சமும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.500/- வீதம் ரூ.5 இலட்சமும் பங்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.250/- வீதம்





ரூ. 20 இலட்சமும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.500/- வீதம் ரூ.5 இலட்சமும் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக வழங்கப்படும்.

**(xiv) மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்குதல்**

கூட்டுறவு வங்கிகளில் உள்ள உறுப்பினர்களின் கடன் பெறும் திறன் அதிகப்படுத்தப்பட வேண்டுமானால், அவர்களின் பங்கு மூலதனம் உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது. கிராமப்புறங்களிலுள்ள குறிப்பாக நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த மகளிரின் மோசமான நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு அவர்கள் அதிக அளவில் கடன் பெறும் பொருட்டு வட்டியில்லா பங்கு மூலதனக் கடனை அரசு வழங்குகிறது. இதனால் செலுத்தப்பட்ட மூலதனத்தின் அடிப்படையில் 20 மடங்கிலிருந்து 40 மடங்குவரை கடன்பெற இயலும். இத்தொகை வழங்கப்பட்ட ஆண்டிற்கு மறுஆண்டு முதல் 5 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

2007-2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பங்கு மூலதன உதவி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | ஒருவருக்கு அளிக்கப்படும் கடன் தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை |
|---|---|---|---|---|
| 1 | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | ரூ.500 | 2000 | 10.00 |
| 2 | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | ரூ.1000 | 500 | 5.00 |
| 3 | நகரக் கூட்டுறவு வங்கிகள் | ரூ.500 | 1000 | 5.00 |
| 4 | மேலே குறிப்பிட்ட வங்கிகள் மூலமாக உடல் ஊனமுற்றோருக்கான கடன்கள் | ரூ.500 | 1000 | 5.00 |
| | கூடுதல் | | 4500 | 25.00 |

2008-2009 ஆம் ஆண்டிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 2,000 மகளிருக்கு ரூ. 500 வீதமும், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 500 மகளிருக்கு ரூ.1,000 வீதமும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 மகளிருக்கு ரூ. 500 வீதமும் மற்றும் மேற்படி வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 உடல் ஊனமுற்றோருக்கு ரூ. 500 வீதமும் வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்கப்பட உள்ளது.



## அத்தியாயம் 3

### கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்கள்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்கவும், தேவையான வேளாண் இடுபொருட்களை வழங்கவும், விளை பொருட்களின் ஈட்டின் பேரில் கடன் வழங்கவும், வேளாண் விளை பொருட்களின் மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்யவும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அமைப்பு இரண்டடுக்கு அமைப்பாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலான தலைமைச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. 110 தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மாவட்ட/ வட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு தற்போது வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக உர விற்பனையிலும், இடுபொருட்கள் விற்பனையிலும் ஈடுபட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்திற்குச் சொந்தமான உரக்கலவை ஆலை உள்ளது. இவ்விணையத்திற்கு 28,640 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 38 சொந்தக் கிடங்குகளும், சென்னை கோயம்பேட்டில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கும், பேசின் பிரிட்ஜில் 1,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கும் உள்ளது. இவ்விணையம் அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில் அடிப்படை ஆதார விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராகத் தமிழ்நாட்டில் செயல்பட்டு கொப்பரை மற்றும் மிளகாய் முதலான வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்கிறது. 2007-2008 ஆம் ஆண்டில், 29-2-2008 வரை ரூ.175.67 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்களை விநியோகம் செய்துள்ளது. கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் விநியோகம் செய்யப்பட்ட ரூ.142.30 கோடி மதிப்புள்ள இரசாயன உர விநியோகத்தைவிட இது 23% அதிகமாகும்.

[2008 ஏப்ரல் 8

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிர மூன்று தனி வகை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் பின்வருமாறு செயல்படுகின்றன:

**நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேட்டுப்பாளையத்தில் உருளைக்கிழங்கு ஏல விற்பனைக் களம் ஒன்றையும் நீலகிரியில் விளையும் விளைபொருள்களின் தேவைகளுக்கேற்ப உரக்கலவை நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. மேலும் உறுப்பினர்களுக்குத் தேவையின் அடிப்படையில் விதை பொருட்களையும் கடன் வசதியையும் தேவைப்படும்போது அளித்து வருகிறது.

**தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்**

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் தேவைகளை அதனுடன் இணைக்கப்பட்ட 12 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் நிறைவேற்றி வருகிறது. இச்சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திலிருந்து தனித்துச் செயல்படுகின்றன.

**துடியலூர் கூட்டுறவு விவசாய சேவை நிறுவனம்**

இந்தச் சங்கம் விவசாயிகளுக்குத் தேவையான விதை உற்பத்தி மற்றும் விற்பனை, உர விநியோகம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறது. உறுப்பினர்களுக்கு தேவைக்கேற்பக் கடன் வசதியும் வழங்கி வருகிறது.

**கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணிகள்**

**(i) வேளாண் விளைபொருள் விற்பனை**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பின்வரும் இரு வகைப் பணிகளை ஆற்றி வருகின்றன:

(அ) வியாபாரிகள் மற்றும் விவசாய உறுப்பினர்களின் வணிகத்திற்காக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் ஆகிய வசதிகளை அளித்து முகவராகச் செயல்பட்டு ஏலமுறை விற்பனையை நடத்தி வருகிறது. விற்பனைச் சங்கங்கள் இதற்கென சேவைக் கட்டணம் வசூலித்து வருகின்றன.



2008 ஏப்ரல் 8]

(ஆ) வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுதல்; பதனிடப்பட்ட பொருட்களை நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலமாக விற்பனை செய்து வருகின்றன.

*2007-2008* ஆம் ஆண்டில் *29-2-2008* வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.*907.94* கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உறுப்பினர்களாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்-கடன்தாரர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிகின்றன. இம்முயற்சிகளால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்யவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இத்திட்டத்தின் பயனாக *2007-2008* ஆம் ஆண்டில் *29-2-2008* வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் ரூ.*153.21* இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**(iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இதனால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விளை பொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனை செய்வதன்மூலம் பண்டகசாலைகளுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் ஆதாய விலையும் கிடைக்கிறது.

*2007-2008* ஆம் ஆண்டில் *29-2-2008* வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு ரூ.*16.48* கோடி அளவிற்கு பொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(iv) தானிய ஈட்டுக்கடன் வழங்குதல்**

அறுவடை காலங்களில் விவசாயிகள் பெரும்பாலும் தங்களது அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைபொருள்களை மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இவ்விவசாயிகளின் நலன்களைக் காக்கும் பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. இதன்மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைத்து சாதகமான சந்தை விலை கிடைக்கும்போது ஆதாய விலைக்கு விற்க இயலும்.

2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக் கடனாக வேளாண் உறுப்பினர்களுக்கு ரூ.18.32 கோடி வழங்கியுள்ளன.

**(v) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல்**

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி அவற்றின் மதிப்பைக் கூட்ட, பதனிடும் அலகுகள் நடத்தி வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இவ்வலகுகள்மூலம் நியாயமான விலையில் வேளாண் உறுப்பினர்களின் பொருட்களைப் பதப்படுத்தித் தரும் பணியைச் செய்கின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை கூட்டுறவு பதனிடும் அலகுகள் மூலமாக 16,500 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

**(vi) ஆதார விலை திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல்**

தென்னை பயிரிடும் விவசாய உறுப்பினர்களின் நலன்களுக்காக ஆதரவு விலைத்திட்டத்தின்கீழ் தேசிய வேளாண் விற்பனை இணையத்தின் சார்பாக மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள அடிப்படை ஆதார விலையில் கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆதார விலை 2008 ஆம் ஆண்டில் கிலோ ஒன்றிற்கு ரூ.36.20 லிருந்து ரூ.36.60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு 29-2-2008 வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் 5,676.66 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.





அரசால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும், பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் திறம்பட செயல்படாத நிலையில் உள்ளன. இதனால் இச்சங்கங்கள் எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டதோ அக்குறிக்கோளை அடைய முடியாத நிலையில் உள்ளன. பெரும்பாலான சங்கங்கள் வேளாண் விளைபொருள் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பொது விநியோகத் திட்ட செயல்பாட்டை மட்டுமே செய்து வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடு குறித்து ஒரு சிறப்புக் குழு மூலம் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. ஆய்வறிக்கையின் பரிந்துரைகளை இவ்வரசு பரிசீலித்து மேற்படி சங்கங்களுக்கு புத்துயிரூட்டுவதற்குத் தேவையான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உலகளாவிய பொருளாதார மாற்றங்கள் விளைபொருட்களின் வர்த்தகத்தை உயர்த்தியுள்ளன. தகவல் தொழில் நுட்பத்தால் ஏற்பட்ட இப்பயன்கள் இறுதியில் விவசாயிகளைச் சென்றடைவது அவசியம். விலை விவரங்கள் மற்றும் பெரிய சந்தைகளின் விலை நிலவரம் குறித்தும் விவசாயிகள் அறிவதன் முக்கியத்துவத்தை அரசு அறிந்துள்ளது. இத்தகவல்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதால் அவர்களது விளைபொருட்களை நல்ல விலையில் விற்பனை செய்து பலன் பெற ஏதுவாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

புதிய முயற்சியாக முக்கிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பல கொள்முதல் நிலையங்களிலும் விற்பனைச் சந்தைகளிலும் பொருள்களின் விலை குறித்த தகவல்களைச் சேகரித்து வெளியிடும் தகவல் மையம் அமைக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் எதிர்காலச் சந்தை நிலவரம் குறித்த ஆலோசனையையும் வழங்கும். இது வேளாண் உறுப்பினர்கள் தங்களது பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து சரியான முடிவுகள் எடுக்க வழிகாட்டுதலாக அமையும்.

[2008 ஏப்ரல் 8

## அத்தியாயம் 4

## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

தரமான பொருட்களை நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்வதே நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். வெளிச்சந்தை வணிகத்தில் குறிப்பாக விலைவாசி ஏறுமுகமாக உள்ள காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்கினை ஆற்றி வருகின்றன.

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பு மூன்றடுக்காக அமைந்துள்ளது.

(அ) மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

(ஆ) மாவட்ட அளவில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும்

(இ) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்.

### தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மாநில அளவிலான தலைமைச் சங்கமாகும். தற்போது இவ்விணையம் காகிதம் மற்றும் இதர எழுது பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது. பண்டிகைக் காலங்களில் பட்டாசு கொள்முதல் செய்து, அவற்றை நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இவ்விணையம் தற்போது ரூ. 4.28 கோடி குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வந்தபோதிலும், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ 3.01 கோடி அளவில் வணிகம் செய்து ரூ. 62.00 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. நடப்பு ஆண்டில் சாஃபல் (SAFAL) (காய்கறிகள் மற்றும் பழங்கள் சந்தை) தேசிய இணைப்புச் சந்தை (SNX) மூலமாக வெங்காயம் கொள்முதல் செய்து பொது விநியோகக் கடைகள்மூலம் விற்பனை செய்து வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும்



2008 ஏப்ரல் 8]

பசுமையான காய் மற்றும் கனி வகைகளைக் கொள்முதல் செய்யும் பொருட்டு இந்த நிறுவனத்தின் உறுப்பினராவதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2008-2009ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து பல்வேறு நுகர்பொருட்களை கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்வதன் மூலம் இந்நிறுவனத்தின் செயல்பாட்டினை மேலும் விரிவுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

### கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்

தமிழ்நாட்டில், தற்போது 34 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை நகர்வு செய்து அவற்றைத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட அங்காடிகளுக்கு வழங்கி வருகின்றன. இந்தக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நுகர்வோர் பொருட்களை நேரடியாக உற்பத்தி மையங்களிலிருந்தும், தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும், விற்பனைச் சங்கங்களிடமிருந்தும் மொத்தமாகக் கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்கின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் ரூ. 1,015.71 கோடி அளவிற்கு கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடில்லாத பொருட்களை விற்பனை செய்துள்ளன. இச்சங்கங்களின் விற்பனை 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.1,100 கோடி அளவிற்கு எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமளவில் நட்டத்தில் இயங்கும் சென்னையில் உள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (டியுசிஎஸ்), பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, கோயம்புத்தூர் சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, திருச்சி சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஆகிய 5 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் வியாபார வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் அவற்றிற்கு உள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து வளர்ச்சிக்குரிய மற்றும் புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டம் வகுத்து, அவை முறையாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க உயர்நிலைக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

இக்குழுவின் அறிக்கை விரைவில் பெறப்படும். இந்தக் குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட ஐந்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளைப் புனரமைக்கவும் அவற்றினை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தவும் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்**

தற்போது தமிழ்நாட்டில் மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,550 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிலையில் செயல்பட்டு வருகின்றன. இந்தத் தொடக்க பண்டகசாலைகள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்களை நியாய விலைக் கடைகள்மூலம் வழங்குவதோடு தரம் வாய்ந்த நுகர்வோர் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளன.

இவை 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 318.93 கோடி அளவிற்குச் சில்லறை விற்பனை செய்துள்ளன.



**அத்தியாயம் 5**

**கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி**

1914 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளித்து வருகிறது. மேலும் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளை பொருட்காட்சிகள் மற்றும் பிற விளம்பர முறைகளின்மூலம் பரப்ப ஒன்றியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**கூட்டுறவுப் பயிற்சி**

தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 11 நிலையங்கள் தனித்தும், 9 நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அலகுகளாகவும் செயல்படுகின்றன. இந்த நிலையங்கள் கூட்டுறவில் பட்டயப் பயிற்சியை நடத்தி மாணவர்களுக்கு பட்டயங்கள் வழங்குகின்றன. இந்தப் பயிற்சிக் காலம் 36 வாரங்களாகும். 2007-2008 ஆம் ஆண்டில் 866 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத்துடன் இந்நிலையங்கள், கணினி செயலாக்கம் மற்றும் நகை மதிப்பீடு ஆகியவற்றில் குறுகிய காலப் பயிற்சிகளும் நடத்துகின்றன. நேரடியாகப் பயிற்சி பெற முடியாத கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக் கல்வியும் நடத்தப்படுகின்றது.

**கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி**

புதுடில்லியில் உள்ள தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தால் இரண்டு கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சியினை நடத்தி வருகின்றன. மேலும் கூட்டுறவுத் துறை மற்றும் செயல்முறைப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்திலும் உள்ள பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை, 172 பயிற்சிகளை இவ்விரண்டு நிலையங்களும் நடத்தியுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் 195 பயிற்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 8

**தொழில்நுட்பக் கல்வி**

தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்களும், திருச்சி மாவட்டம் லால்குடியில் ஒரு கூட்டுறவு பல்தொழில்நுட்பக் கல்லூரியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படுகிறது. இந்நிறுவனங்கள் இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கின்றன. ஆண்டுதோறும் சராசரியாக 400 மாணவர்கள் இக்கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரி மூலமாக தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**கூட்டுறவு ஆராய்ச்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ. 5.00 இலட்சம் வைப்பீடு செய்து தனி நிதியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகைமூலம் கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**நிதி ஆதாரங்களைத் திரட்டுதல்**

கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் நிகர இலாபத்தில் 3 சதவீதம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியாகவும், 2 சதவீதம் கூட்டுறவுக் கல்வி நிதியாகவும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பெற்றுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிதிகள் கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி வளர்ச்சிக்காகவும், கூட்டுறவுக் கொள்கைகளை பரப்புவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. 29-2-2008 நாளன்று கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி ஆகியவற்றில் முறையே ரூ. 65.80 கோடி மற்றும் ரூ. 44.15 கோடி இருப்பில் உள்ளது. இந்நிதியங்களின் வருமானம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், புதிய நுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் சங்கங்களின் வளர்ச்சிக்காகவும், தேவைப்படும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், உறுப்பினர் கல்வி திட்டங்கள் நடத்துவதற்காகவும், பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 8]

2008-2009 ஆம் ஆண்டில் அனைத்துக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்களுக்கு பொதுவான வங்கி மென்பொருள் உருவாக்குவதற்கான செலவினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தன்னிறைவு பெறாத, வலுவற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வலுவற்ற பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களை கணினிமயமாக்க கணினிகள் மற்றும் ஏனைய உதிரிப் பாகங்கள் கொள்முதல் செய்யவும் உரிய நிதியுதவி வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 8

## அத்தியாயம் – 6

## சிறப்பு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

### கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 12,645 உறுப்பினர்களைக் கொண்டு, 26 கூட்டுறவு அச்சகங்கள் ரூ. 2.09 கோடி பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகின்றன. இவை கூட்டுறவு நிறுவனங்கள், அரசு, அரசு சார்ந்த துறைகள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான அச்சுப் பணிகளைச் செய்து வருகின்றன.

### உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தற்போது 10 உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 5 சங்கங்கள் ஆதி திராவிடர் நலனுக்காகச் செயல்பட்டு வருகின்றன. அயோடின் உப்பு தயாரித்தல் உட்பட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தாட்கோ திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

### தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

தற்போது தமிழ்நாட்டில் 115 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 34,431 தொழிலாளர் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒப்பந்தப் பணிகள்மூலம் வேலைவாய்ப்பினை அளித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு நிறுவப்பட்டுள்ளன. நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே இடைத்தரகர்கள் தவிர்க்கப்படுவதால் இச்சங்க உறுப்பினர்கள் முழுப்பயனையும் அடைய முடிகிறது. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் மேலாண்மை ஊக்குதவித் தொகை ஆகியவற்றிற்காக மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியிலிருந்து, நிதியுதவி வழங்கப்படுகின்றது.

### முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களான முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 6 முடி திருத்துவோர் கூட்டுறவுச்



2008 ஏப்ரல் 8]

சங்கங்களும், 3 சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

### பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தற்போது ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியில் 17 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், இத்திட்டம் சாராப் பகுதிகளில் 2 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு ஒற்றைச் சாளர முறையில் உற்பத்திக் கடன்கள், நுகர்வோர் கடன், இடுபொருள் விநியோகம், வேளாண் விளை பொருள் விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை ஆகிய பணிகளையும், மற்றும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

இச்சங்கங்களில் 81,955 பழங்குடியின உறுப்பினர்களும், 9,364 பழங்குடியினரல்லாத உறுப்பினர்களும் உள்ளனர். பழங்குடியினர் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக குறுகிய காலப் பயிர்க் கடன்களையும், வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்திய காலக் கடன்களையும் இச்சங்கங்கள் வழங்குகின்றன. இச்சங்க உறுப்பினர்கள் கடன் வசதி பெறுவதற்காக பங்குத் தொகை மானியம் வழங்கப்படுகிறது. மேற்படி கடன்கள் வட்டியில்லாமல் வழங்கப்படுவதால், கடனுக்கான வட்டி நட்டத்தை ஈடு செய்யும் வகையில், வட்டி மானியம் வழங்கப்படுகிறது. மேலும் போக்குவரத்து, வாகன ஓட்டுநர்கள் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பு ஆகிய இனங்களுக்கும் அரசால் மானியம் வழங்கப்படுகிறது. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிற்கும் மேற்காணும் நடவடிக்கைகளுக்காக ரூபாய் 90.00 இலட்சம் இச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல நலிவுற்ற நிலையில் உள்ளன.

பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரூட்டும் வகையில் கொல்லிமலைப் பகுதியில் உள்ள பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலையைச் சீரமைக்கவும், கூடுதல் கடன் வசதி அளிக்கவும், 2007-2008-இல் இப்பகுதியில் அதிக அளவில் உற்பத்தியாகும் மாவள்ளிக்கிழங்கை கொள்முதல் செய்து அவற்றை ஆலைகளுக்கு நேரடியாக விற்பனை செய்யவும், சிறப்பு

நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்காணும் நடவடிக்கைகள்மூலம் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரம் மற்றும் இலாபம் உயர்வதோடு, மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் பழங்குடியினருக்குத் தொடர்ந்து கூடுதல் விலை கிடைக்கவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரவள்ளிக்கிழங்கை கொள்முதல் செய்து அவற்றை ஆலைகளுக்கு நேரடியாக விற்பனை செய்யும் திட்டத்தினைப்போல், அந்தந்தப் பகுதியில் விளையும் இதர உற்பத்திப் பொருட்களை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கொள்முதல் செய்து விற்று அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்த 2008-2009 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### பிற தனி வகைச் சங்கங்கள்

மாணவர்கள், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கும் நோக்கத்திற்காக 35 கூட்டுறவு அருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.



## அத்தியாயம் – 7

### பொது விநியோகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தமுள்ள நியாய விலைக் கடைகளில் 21,630 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இவை மொத்தக் கடைகளில் சுமார் 93 சதவீதமாகும். இக்கடைகள், 86 முதன்மைச் சங்கங்கள், 4,540 இணைப்புச் சங்கங்கள் மற்றும் 434 சுய எடுப்புச் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 5,060 கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நடத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, கூட்டுறவுச் சங்கங்களால், தொலைதூர மற்றும் தொடர்பற்ற பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்காக 5,898 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், மலைப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்குச் சென்று பொருட்களை வழங்குவதற்காக 36 நடமாடும் நியாய விலைக் கடைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெய் வழங்குவதைச் சீரமைக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களால் தற்போது 266 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் விற்பனை செய்வதால் அரசால் அனுமதிக்கப்பட்ட தற்போதுள்ள சில்லறை விளிம்புத் தொகையை விட மிகையாக ஏற்படும் நட்டத்தினை அரசு ஈடுகட்டி வருகிறது. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் முறையே 97.05 கோடி ரூபாய் மற்றும் 106.90 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### விலைவாசியைக் கட்டுப்படுத்த கட்டுப்பாடற்ற பொருட்களை பொது விநியோகத் திட்ட அங்காடிகள் மூலம் விற்பனை செய்தல்

அன்றாடம் உபயோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் கோதுமைப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்து வருகின்றன. இவ்விலைவாசி உயர்விலிருந்து ஏழை மற்றும் நடுத்தர மக்களைக் காப்பாற்றுவதற்காகவும், விலைகளைக் கட்டுப்படுத்தும்

நோக்கத்துடனும் அரசு நியாய விலைக் கடைகள்மூலம் இப்பொருட்களை நியாயமான விலையில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதவிர, சுமார் 20-க்கும் மேற்பட்ட கட்டுப்பாடு விதிக்கப்படாத பொருட்களும் அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், 29-2-2008 வரை கட்டுப்பாடு விதிக்கப்படாத பொருட்கள் விற்பனை மட்டும் ரூ.842.87 கோடியாகும். அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் விற்க இடைப்பட்ட விளிம்புத் தொகைகளைக் குறைத்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் தேவைப்படும் பொருட்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன.

**மின்னணு எடை இயந்திரங்கள் வழங்குதல்**

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் சரியான எடையில் இருக்கவேண்டும் என்பதில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே 2007-2008 ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு எடை இயந்திரங்கள் வழங்குவதற்காக அரசு 11.50 கோடி ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது. இந்த எடை இயந்திரங்களை வாங்கி சம்பந்தப்பட்ட கடைகளில் நிறுவும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் அனைத்து நியாய விலைக் கடைகளும் 2008 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் மின்னணு எடை இயந்திரங்களுடன் செயல்படும்.

**நியாய விலைக் கடைப் பணியாளர்களின் திருத்திய ஊதிய விகிதம்**

கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட சட்டமன்ற கூட்டத் தொடரில், கூட்டுறவுத் துறை மானிய கோரிக்கை விவாதத்தின்போது அறிவிக்கப்பட்டவாறு, நியாய விலைக் கடைப் பணியாளர்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளின் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைத்து அரசு ஆணையிட்டது. இதன் பயனாக பணி வரன்முறை செய்யப்பட்ட அனைத்து விற்பனையாளர்களும் மற்றும் கட்டுநர்களும் முறையான காலமுறை ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.





**ஊட்டி தேயிலை விற்பனை**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை வளர்ப்போர்களின் துயரத்தைத் துடைக்கும் பொருட்டு இன்ட்கோ சர்வ் மூலம் பதப்படுத்தி தயார் செய்யப்படும் ஊட்டி தேயிலையை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் பொருட்டு மாதக் குறியீடாக 250 மெட்ரிக் டன் விற்பனை அளவு அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரை 2673 மெட்ரிக் டன் அளவிற்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**அயோடின் கலந்த உப்பு விற்பனை**

அயோடின் குறைவால் ஏற்படும் ஆரோக்கியக் குறைபாட்டினைக் களையும் பொருட்டு, தமிழ்நாடு உப்புக் கழகத்தால் தயாரிக்கப்படும் அயோடின் கலந்த உப்பின் விற்பனையை அதிகரிக்க அரசு முடிவெடுத்து, அயோடின் உப்பை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டது. தற்போது 1 கிலோ உப்பு ரூ.2.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை 28,562 மெட்ரிக் டன் அளவிற்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**காதி பொருட்கள் விற்பனை**

தமிழ்நாடு காதி மற்றும் கிராம வாரியத்தால் தயாரிக்கப்படும் சோப்பு வகைகள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்படும் என அரசு அறிவித்தது. அதன்படி முதற்கட்டமாக 11 மாவட்டங்களில் மட்டும் 4 வகையான குளியல் மற்றும் சலவைச் சோப்புகள் நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்போது இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 10 வகையான காதி பொருட்கள் நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 29-2-2008 வரை ரூ.152.59 இலட்சம் மதிப்பிற்கான காதி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 8

## அத்தியாயம் 8

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அவற்றிற்கிடையே வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்தி கிராமப்புற மக்களின் தேவைகளைத் திறம்பட நிறைவு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை விரிவாக்கவும் அவற்றை பல்நோக்குப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்பாக மாற்றவும் இத்திட்டத்தில் வழிவகை உள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு கடனாக நிதியுதவி பெற்று அந்நிதி, திட்டச் செயலாக்க முகமைகளாகச் செயல்படும் சம்பந்தப்பட்ட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | காலம் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் | 1989-1995 | 862.51 |
| 2.<br>3. | கடலூர் } ஒருங்கிணைந்த<br>விழுப்புரம் } தென் ஆற்காடு மாவட்டம் | 1992-1997 | 1506.97 |
| 4. | கோயம்புத்தூர் | 1995-2001 | 1080.99 |
| 5. | தருமபுரி | 1995-2001 | 1160.25 |
| 6. | திருவண்ணாமலை | 1996-2001 | 816.58 |
| 7. | காஞ்சிபுரம் | 1998-2005 | 1123.88 |
| 8. | இராமநாதபுரம் | 2000-2004 | 687.03 |
| | மொத்தம் | | 7238.21 |



2008 ஏப்ரல் 8]

தற்போது ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் பின்வரும் 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | மொத்த ஒதுக்கீடு | அரசால் விடுவிக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | 1216.98 | 1216.98 |
| 2. | தஞ்சாவூர் | 1101.09 | 1101.09 |
| 3. | பெரம்பலூர் | 937.81 | 937.81 |
| 4. | திருவாரூர் | 1222.44 | 1222.44 |
| 5. | தேனி | 987.73 | 695.75 |
| 6. | தூத்துக்குடி | 942.08 | 638.49 |
| | மொத்தம் | 6408.13 | 5812.56 |

சேலம், ஈரோடு, மதுரை, மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து திட்ட ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளுக்கு மாநில ஒருங்கிணைப்புக் குழுவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் ஒப்புதல் அளித்துள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் திட்டச் செயலாக்கத்திற்காக நிர்வாக ஒப்புதல் அளிப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அனுமதி அளித்துள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை திண்டுக்கல், கரூர், வேலூர், சிவகங்கை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அடுத்த கட்டத்தில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இத்திட்டச் செயலாக்கத்திற்கு ஒத்திசைவு அளித்துள்ளது. இத்திட்டத்தைச்

செயலாக்குவதற்காக நியமனம் செய்யப்பட்ட திட்ட ஆலோசகர்களால் வரைவு திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நீலகிரி மாவட்டத்தையும் அரசு தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.



## அத்தியாயம் 9

## கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கூட்டுறவு அமைப்புகள் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதே இவ்வரசின் கருத்து. உயர் நீதிமன்றத்தில் கூட்டுறவுத் தேர்தலை இரத்துச் செய்ததை எதிர்த்து அதிக எண்ணிக்கையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இவற்றின்மீது நீதிமன்றத்தின் இறுதி ஆணை எதிர் நோக்கப்படுகிறது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்த பின் சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து தனி தேர்தல் ஆணையம் அமைப்பது பற்றியும் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பற்றியும் முடிவு செய்யப்படும்.

## இணைப்பு II

*(86 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

# மானியக்கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

## (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை)

## (கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009)

### அத்தியாயம் – 1

### முகவுரை

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு — அய்யன் திருவள்ளுவர்

"பசியும், பிணியும், பகைமையும் அற்ற நாடு தான்
சிறந்த நாடு எனப் பாராட்டப்படும்"

இதுவே, இத்திருக்குறளின் அரும்பொருள். அய்யன் திருவள்ளுவர் வகுத்துள்ள இந்த இலக்கண நெறிக்கேற்ப நமது மாநிலத்தை உருவாக்குவதையே கொள்கையாகக் கொண்டு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் தமிழகத்தில் பசிப் பிணியை முழுமையாக அகற்றிட பொது விநியோகத் திட்டத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை, இந்த அரசு 2006-இல் பொறுப்பேற்ற விழா மேடையிலேயே முதலாவது ஆணையாகப் பிறப்பித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் இந்தியாவிலேயே குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டத்தில் அரிசி வழங்கிய முதல் மாநிலம் தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசின் இந்த முன்முயற்சியைப் பிற மாநிலங்களும் தற்போது பின்பற்றத் தொடங்கியுள்ளன.

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முக்கிய நோக்கங்கள்:

(அ) அனைத்துக் குடும்பங்களுக்கும் முழுமையான உணவு பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் உணவுப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் குறைந்த விலையில், அனைவரும் எளிதில் அணுகிப்பெறும் வகையில் வழங்குவது.

(ஆ) நுகர்வோர் மற்றும் பொது மக்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பது.

பொது விநியோகத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கம், அனைத்து மக்களும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் பொருட்களை வாங்கும் திறனுக்கேற்ற விலையிலும், தேவையான பொருட்களைத் தகுதிக் கேற்ற அளவிலும் வழங்குவதுதான். தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இத்திட்டத்தில், அனைவருக்கும் அவரவர் விருப்பத்திற்கேற்ப, தகுதிக்குட்பட்ட அளவில், பாகுபாடின்றி அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும், வருமான வரம்பின்றி அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசு, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் விநியோகிக்கும் அரிசி, கிலோவுக்கு ரூ.5.65/- என நிர்ணயம் செய்திருந்த போதிலும், தமிழக அரசு, கிலோ அரிசி ரூ.2/-க்கு பொது விநியோகத் திட்டத்தில் அனைவருக்கும் பாகுபாடின்றி வழங்குகிறது. தமிழக அரசு பின்பற்றும் எல்லோருக்குமான பொது விநியோகத் திட்டத்தினால், அத்தியாவசியப் பொருட்களின் விலை தமிழ்நாட்டில் நீண்ட காலமாக ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. எனினும் தற்சமயம் பல்வேறு நிபுணர்கள் பருவநிலை மாற்றத்தினால் உலக அளவில் உணவு உற்பத்தி பாதிக்கப்படுமென்று எச்சரிக்கை செய்து வருகின்றனர். எனவே, வரும் காலங்களில், போதிய அளவு உணவுப் பொருட்களை பொது விநியோகத் திட்டத்தில் வழங்கி, ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க சில தீவிர நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ள இந்த அரசு, அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை வழங்கி



புரதச்சத்து, வைட்டமின் போன்ற ஊட்டச் சத்துக்கு உறுதி அளிக்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தை 14-4-2007 முதல் தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்ற பொருட்கள் சந்தை விலையை விடக் குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கும், ஊட்டச்சத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையிலும் குறைந்த விலையில் பருப்பு, சமையல் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றைப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கிய முதல் மாநிலம் தமிழகம் தான். இதனால் ஏழை எளிய மக்கள் முக்கிய ஊட்டச்சத்துக்கள் குறைவு ஏற்படாமல் பாதுகாக்கப்படுகின்றனர். இந்தத் திட்டமானது ஏழை எளிய மக்கள் இப்பொருட்களை நியாயமான விலைக்கு பெற உதவுவதோடு விலைவாசி ஏற்றத்திலிருந்து அவர்களைப் பாதுகாத்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் மாதந்தோறும் விநியோகிக்கப்படும் அரிசி மிகக் கணிசமான அளவாக உள்ளதால், இந்த அரிசியை வெளிச் சந்தையில் சட்டவிரோதமாக விற்பதில் அதிக ஆதாயம் உள்ளதால், ஆங்காங்கே இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கடுமையான சோதனைகள் ஏற்படுகின்றன எனினும், இந்த அரசு இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, எந்தவிதமான தளர்வுமின்றித் திட்டத்தைத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டம் பற்றி மத்திய அரசும், தனித்து இயங்கும் சில நிறுவனங்களும் மேற்கொண்ட ஆய்வின்படி, இத்திட்டத்தின் செயல்பாடுகள், குறிப்பாக தரமான பொருட்கள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும் தன்மை, அங்காடிகளை மக்கள் அணுகிப் பெறுவதற்கான வாய்ப்புகள், பொதுமக்கள் வாங்கும் திறனுக்கேற்ற விலை மற்றும் அவர்களின் மனநிறைவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு, சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று எனக் கருத்துத் தெரிவித்துள்ளன. மத்திய திட்டக் குழுவின்கீழ் இயங்கும் திட்ட திறனாய்வு நிறுவனம் கூட, தமிழக பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளில் மிகக் குறைந்த அளவிலேயே கசிவு உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அடுத்தபடியாக, நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துவது இத்துறையின் மற்றுமொரு முக்கியப் பணியாகும். பொதுவாக, தற்போது நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடையே அதிகரித்து வருகிறது. இந்த அரசும் பல்வேறு முகாம், கருத்தரங்கம் போன்றவற்றைத் தன்னார்வு நுகர்வோர் அமைப்புகளின் உதவியோடு நடத்தி உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், நுகர்வோரைச் சுரண்டி தன்னலத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. பொது மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, இத்தகைய விழிப்புணர்வை, நுகர்வோரிடையே பரவலாக ஏற்படுத்துவது இத்துறையின் முக்கியப் பணியாக உள்ளது.



## அத்தியாயம்–2

## பொது விநியோகத் திட்டம்

உணவு தானியங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நலிவுற்ற மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் என வகைப்படுத்தி இரண்டு வகையினருக்கும் தனித்தனி விலைகளை நிர்ணயித்து, பிற மாநிலங்களில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும், அனைவருக்கும் பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர், வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளோர் என்று வகைப்படுத்தப்படாமல், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் ஒரே விலையில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் நல்ல பயன் அளிப்பதால், தமிழக அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வறுமைக்கோட்டையும், வறுமைக்கோட்டிற்குள் வாழும் குடும்பங்களையும் நிர்ணயிப்பதில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் இல்லாத சூழ்நிலையில் இவ்வாறான கணக்கெடுப்பில் குறைகள் ஏற்படுகின்றன. எனவே, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைத் துல்லியமாகக் கணக்கிடுவது என்பது இயலாத ஒன்றாகும். மேலும், இத்தகைய கணக்கெடுப்பால் பெரும்பாலும் தகுதியுள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் பொது விநியோகத் திட்டத்தில் பயன்பெறும் நிலையிலிருந்து விடுபட்டுப்போக வாய்ப்புள்ளது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களாகக் கருதப்படும் பெரும்பாலான குடும்பங்களின் வருமானத்தில் நிரந்தரமற்ற தன்மை நிலவுவதால், அவ்வப்போது வறுமைக்கோட்டிற்குக்கீழ் தள்ளப்படும் நிலை ஏற்படலாம். குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் வறட்சி, வெள்ளம், இயற்கைப் பேரழிவு போன்றவற்றால் வறுமைக்கோட்டிற்குமேல் உள்ள குடும்பங்கள் கூட வறுமைப்பிடியில் தள்ளப்படும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

[2008 ஏப்ரல் 8

குடும்பத் தலைவரின் இறப்பு மற்றும் அசம்பாவிதங்களால் சில குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குகீழ் செல்ல நேரிடும். ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் திட்டமிடுவதற்கு, இதுபோன்ற நிலைகளை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி பெரும்பாலும் பருவ நிலையைச் சார்ந்தே உள்ளது. அடிக்கடி ஏற்படும் வறட்சி அல்லது வெள்ளம் பெரும்பாலான குடும்பங்களை நலிவுற்ற நிலைக்குத் தள்ளிவிடுகிறது. எனவே, குறிப்பிட்ட பிரிவு மக்களை மட்டும் இலக்காகக் கொண்டு செயல்படாமல் பெரும்பாலான பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ள குடும்பங்களைப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் கொண்டு வருவது அவசியமாகிறது.

மேலும், உணவுப் பொருட்களின் விலை, குறிப்பாக அரிசியின் விலை நியாயமான அளவில் இருப்பதை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாகும். வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கும், நலிவுற்ற மக்களுக்கும் தேவையான அளவு உணவுப் பொருட்களை வழங்குவதன் மூலமாக இதனை உறுதிப்படுத்த இயலும். எனவே தான், தமிழக அரசு அனைத்து மக்களும் பயன்பெறக் கூடிய பொது விநியோகத் திட்டத்தினை நீண்டகாலமாகச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலைப்பாடு சிறந்த வகையில் பயனளிக்கிறது. மேலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் உணவு தானியங்களின் விலை ஓரளவு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பட்டினிச் சாவுகள், பசிக் கொடுமை இம்மாநிலத்தில் இல்லை. இதற்காகத்தான் தமிழக அரசும் பொது விநியோகத் திட்டத்தில் ரூ.2/-க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தை, மத்திய அரசு வழங்கும் மானியத்தைவிட அதிகமாக மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது.

பொது விநியோகத் திட்டம், உணவுப் பொருள் வழங்கல் துறை மூலம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் மாவட்ட வழங்கல் அலுவலரின் கீழும், சென்னையில் துணை ஆணையாளர் கீழும் இத்துறை இயங்குகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் பொது விநியோகத் திட்டத்தை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து கண்காணித்து, செயல்படுத்தும் பொறுப்பில் உள்ளனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த முகவராகச் செயல்பட்டு, இந்திய உணவுக்



2008 ஏப்ரல் 8]

கழகத்திலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று 210 செயல்நிலைக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கிறது. இந்த உணவுக் கிடங்குகளிலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள், முதன்மைச் சங்கங்கள்மூலமாக நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வாறே சர்க்கரையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கூட்டுறவு மற்றும் தனியார் ஆலைகளிலிருந்து பெறப்பட்டு, செயல்நிலைக் கிடங்குகளின்மூலமாக விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல, போக்குவரத்து ஒப்பந்தத்தாரர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இதைப்போலவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பொது விநியோகக் கடைகளுக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல ஒப்பந்தப்புள்ளி மூலமாக, போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுகின்றனர். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்கள், மொத்த வியாபாரிகளின் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து பெற்று, நியாய விலைக் கடைகளுக்கு பீப்பாய்கள் மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் டேங்கர்மூலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. நியாய விலைக் கடைகளுக்கு, உணவுப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்கள்மூலமாக அனுப்பிவைக்கப்பட்டு, இக்கடைகளில் போதுமான அளவு எப்போதும் இருப்பு இருப்பது, மாவட்ட ஆட்சியராலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்களாலும், வருவாய் மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளாலும் கண்காணிக்கப்படுகிறது. தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு மாத இறுதியிலும் இருப்பு கணக்கிடப்பட்டு, நிகரத் தேவை மாவட்ட அளவில், ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது. மேலும், கடைகளில் இருப்புநிலை மற்றும் கடைகளின் சேமிப்பு இடவசதியைப் பொறுத்தும் அவ்வப்போது உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, அத்தியாவசியப் பொருட்கள், பொது விநியோகத் திட்டத்தின் கடைகளில் 100 சதவீத ஒதுக்கீட்டிற்கு அனுமதிக்கப்பட்டு, தேவைக்கேற்ப அனுப்பப்படுகிறது.

[2008 ஏப்ரல் 8

**நியாய விலைக் கடைகள்**

தமிழ்நாட்டில் பெரும்பாலான நியாய விலைக் கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் சில நியாய விலைக் கடைகளை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் தனிநபர்கள்மூலம் நியாய விலைக் கடைகள் நடத்தப்படுவதில்லை. இருப்பினும் அண்மைக் காலமாகத் தமிழக அரசு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நியாய விலைக் கடைகளை நடத்த அனுமதி வழங்கி வருகிறது. 29-2-2008 வரையில் 678 நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறே, கிராம ஊராட்சிகள்மூலமும் நியாய விலைக் கடைகளை நடத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை வெளியிட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த ஊராட்சியும் நியாய விலைக் கடைகளை நடத்த முன் வரவில்லை.

பொது விநியோகத் திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் உரிய காலத்தில் பொருட்களைப் பெற வசதியாக, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில், குடும்ப அட்டைதாரர்கள் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் சென்று பொருட்கள் பெற வேண்டிய அவசியம் இல்லாதவாறு புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம், தொலைதூரம் மற்றும் எளிதில் அணுக முடியாத பகுதிகளிலும் நியாய விலைக் கடைகள் அமைக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கும்போது பொதுமக்கள் பகுதி நேரக் கடை திறக்க வேண்டும் என்று கோரினால் அப்பகுதிகளில் 150 அட்டைகள் இருந்தால் பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் எளிதில் நியாய விலைக் கடைகளை அணுகும் வண்ணம், 1-4-2007 முதல் 29-2-2008 வரை, 492 புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 72 முழு நேர நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. 29-2-2008 நிலவரப்படி, தமிழகத்தில் 29,592 நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. இதில், 23,521 முழு நேர நியாய விலைக் கடைகளும், 6,071 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் அடங்கும்.



2008 ஏப்ரல் 8]

| வரிசை எண் | நிறுவனம் | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,101 | 77 | 1178 |
| 2 | கூட்டுறவுத் துறை | 21,630 | 5,898 | 27,528 |
| 3 | இதர கூட்டுறவு நிறுவனங்கள் | 158 | 14 | 172 |
| 4 | மகளிர் கடைகள் (மகளிர் சுய உதவி குழுக்கள் உட்பட) | 596 | 82 | 678 |
| 5 | நடமாடும் நியாய விலைக் கடைகள் | 36 | 0 | 36 |
| | மொத்தம் | 23,521 | 6,071 | 29,592 |

**குடும்ப அட்டைகள்**

உணவுப் பொருள் விநியோகத்திற்காக, குடும்பங்களை, வறுமைக்கோட்டிற்குகீழ் மற்றும் வறுமைக்கோட்டிற்குமேல் என இந்திய அரசு வகைப்படுத்தியுள்ள போதிலும் தமிழ்நாட்டில் மேற்கூறியவாறு எவ்விதப் பாகுபாடும் செய்யப்படவில்லை, இருப்பினும், மிகவும் ஏழ்மைநிலையில் உள்ள குடும்பங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டு அக்குடும்பங்களுக்கு "அந்தியோதயா அன்ன யோஜனா" (AAY) குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் வழிகாட்டுதலுக்குட்பட்டு, "அந்தியோதயா அன்னயோஜனா" (AAY) குடும்பங்கள் இனம் கண்டு அவற்றின் எண்ணிக்கை அவ்வப்போது அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு, "அந்தியோதயா அன்னயோஜனா" (AAY) திட்டத்தில் 18,64,600 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயனாளிகளின் உண்மைத் தன்மை குறித்துத் தல ஆய்வு செய்ததில், 57,489 பயனாளிகள் "அந்தியோதயா அன்னயோஜனா" (AAY) திட்ட குடும்ப அட்டைபெறத் தகுதியற்றவர்கள் என இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து, தகுதியற்ற பயனாளிகளை இத்திட்டத்தில் இருந்து நீக்கம் செய்து, அவர்களுக்குப் பதிலாக, தகுதி வாய்ந்த பயனாளிகள் சேர்க்கப்பட்டு தற்பொழுது 18,07,111 பயனாளி குடும்பங்கள் உள்ளன.

அந்தியோதயா அன்னயோஜனா (AAY) திட்ட குடும்ப அட்டைகள் தவிர, இதர குடும்ப அட்டைகள் விருப்ப முறையில், அதாவது அரிசி விருப்ப அட்டைகள் பச்சை நிறத்திலும், சர்க்கரை விருப்ப

அட்டைகள் வெள்ளை நிறத்திலும் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, பொது விநியோகத்திட்டத்தின் கீழ் எந்தப் பொருளும் தேவையில்லையெனத் தெரிவிப்போருக்கு, வெள்ளை நிற அட்டைகள் வழங்கப்படுகின்றன. 29-2-2008 தேதி நிலவரப்படி, புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் விவரம் வருமாறு:—

| வரிசை எண். | அட்டை வகை | வழங்கப்படும் பொருட்கள் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பச்சை நிற குடும்ப அட்டைகள் (அரிசி விருப்பம்) | அனைத்துப் பொருட்கள் | 1,85,59,276 |
| 2 | வெள்ளை நிற குடும்ப அட்டைகள் (சர்க்கரை விருப்பம்) | அரிசி நீங்கலாக இதர பொருட்கள் | 10,72,023 |
| 3 | காக்கி நிற குடும்ப அட்டைகள் (காவலர் அட்டை) | மண்ணெண்ணெய் மட்டும் | 42,590 |
| 4 | எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டைகள் (வெள்ளை நிறம்) | எப்பொருளும் இல்லை | 55,513 |
| | மொத்தம் | | 1,97,29,402 |

**அரவாணிகளுக்குக் குடும்ப அட்டைகள்**

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அரவாணிகளுக்குக் குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. இவ்வரசு அரவாணிகளுக்கு 20-3-2008 வரை 219 குடும்ப அட்டைகள் வழங்கியுள்ளது.

குடும்ப அட்டைகள் வழங்கும் முறைகளை எளிதாக்கிட அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கான செயல்முறைகள் முழுவதும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன்படி, தகுதியான குடும்பங்கள் எவ்வித இடையூறுமின்றிக் குடும்ப அட்டைகளை விரைவாகப் பெறமுடியும். இந்தப் பணியை முறைப்படுத்தி, கணினிப் பதிவுகளை வட்ட அளவில் மேற்கொள்வதற்கும், குடும்ப அட்டை அச்சிடுதல் மற்றும் தகவல்கள் சரிபார்த்தல் போன்ற பணிகளை





மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் செய்யவும், சென்னையில் மட்டும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் மேற்பார்வையில் இப்பணியைச் செய்யவும் அரசு ஆணைகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-2007 முதல் 29-2-2008 வரையிலான காலத்தில் 7,36,196 புதிய குடும்ப அட்டைகள் தகுதியான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மின்னணு மின் ஆளுமை திட்டங்களில் ஒரு பகுதியாக இணைய தளம் வாயிலாகக் கடந்த சில ஆண்டுகள் வரை குடும்ப அட்டை விவரத் தொகுப்புகளில் மாற்றம் செய்யப்படாமல் இருந்த திருத்தங்கள் நாளது தேதி வரை குடும்ப அட்டை புள்ளிவிவரங்களில் சரி செய்யும் பணி எல்காட் நிறுவன உதவியுடன் தற்சமயம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திருத்தங்கள் வட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு அகலபரப்பு கணினி வலையம் (TNSWAN) என்ற நேரலைக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் குடும்ப அட்டைப்புள்ளி விவரத் தொகுப்பு நாளது தேதிவரை உள்ள மாற்றங்களை உள்ளடக்கியதாக இருப்பதோடு, அதில் உள்ள விவரங்கள் நம்பகத்தன்மையுடன் இருக்கும். இந்த விவரங்களைக் கொண்டு மாதாந்திர ஒதுக்கீட்டைக்கூட, அலுவலர் குறுக்கீடு இன்றிக் கணினி மூலமாகவே கணக்கிட்டு, ஒதுக்கீட்டை வழங்க முடியும். இந்தத் திருத்தியமைக்கப்பட்ட புள்ளிவிவரத் தொகுப்புகளைப் கொண்டு வீடுவீடாக 100 விழுக்காடு தணிக்கை மேற்கொண்டு, போலி குடும்ப அட்டைகளைப் படிப்படியாகக் களைவதற்கும் அரசு உத்தேசித்துள்ளது.

மேலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளின் கீழ் இயங்கி வரும் பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் முழுமையான அளவில் தன்னிச்சையாகச் செயல்படும் வகையில் மின்னணு அட்டைகள் (smart card) மற்றும் மின்னணு பட்டியல் இயந்திரம் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முன்மொழிவுகள் உலக வங்கியின் கீழ் செயல்படும் தேசிய மின் ஆளுமை செயல் திட்டத்தின் கீழ் தயார் செய்யப்பட்டு இந்திய அரசின் தகவல் தொழில் நுட்பத் துறைக்கு நிதி வழங்கக் கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பொது விநியோகத் திட்டப் பணிகளைக் கணினிமயமாக்க, 2007-2008ஆம் ஆண்டு அரசு தீர்மானித்தது. அதன்படி மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பத் துறையிடம் இருந்து ரூ.4.92 கோடி மானியமாகப் பெறப்பட்டு, இம்மின்னணு சேவைத் திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

[2008 ஏப்ரல் 8

- தமிழகத்தில் உள்ள 205 வட்ட வழங்கல் அலுவலகங்களுக்கும், சென்னையில் உள்ள 14 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
- தற்பொழுதுள்ள தாலுகா அலுவலகத்தின் இணைப்பிலிருந்து வட்ட வழங்கல் அலுவலகத்திற்குத் தமிழ்நாடு அகலப்பரப்பு கணினி வலையம் (TNSWAN) நேரலை மூலம் இணையதள சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- வட்ட அளவிலான குடும்ப அட்டை மேலாண்மை மென்பொருள் தயாரிக்கும் பணி எல்காட் நிறுவனத்தின் மூலமாக விரைவில் முடிவு பெறவுள்ளது.
- 2004ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நிலைகளிலிருந்த குடும்ப அட்டை தகவல்களை ஒருமுகப்படுத்தும் நோக்கத்தோடு, அத்தகவல் தொகுப்பு சென்னை பெருங்குடியில் உள்ள எல்காட் நிறுவனத்தில் உள்ள மாநில தகவல் தொகுப்பு மையத்தில் (State Data Centre) நிறுவப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்படி இணையதள சேவை மூலமாகக் குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் செய்யலாம்.
- நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர்கள் தற்பொழுது பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு கணினி இணைப்புடனான (GPRS) மின்னணு பட்டியல் இயந்திரம் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் நிறுவப்பட்டு மாநில தகவல் மையத்துடன் இணைக்கப்படவுள்ளது. இந்த மின்னணு பட்டியல் இயந்திரம் சோதனை முறையில் சேப்பாக்கம் மண்டலத்தில் இரண்டு நியாய விலைக் கடைகளில் நிறுவப்பட்டுள்ளது.

**வழங்கப்படும் பொருட்களின் அளவு**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன:—

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை மற்றும் விநியோகிக்கப்படும் அளவு விவரம்:—



2008 ஏப்ரல் 8]

| வ எண் | பொருளின் பெயர் | விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு) | வழங்கும் அளவு (மாதம் ஒன்றுக்கு) | காலமுறை |
|---|---|---|---|---|
| 1 | அரிசி | கிலோவிற்கு ரூ.2 /—வீதம் (3–6–2006 முதல்) | பெரியவருக்கு–4 கிலோ சிறியவருக்கு–2கிலோ குடும்ப அட்டை ஒன்றுக்கு குறைந்தபட்ச அளவு 12 கிலோ அதிகபட்ச அளவு 20 கிலோ (நீலகிரி மாவட்டம் நீங்கலாக) | குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |
| | | | நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் குடும்ப அட்டை ஒன்றுக்கு கூடுதலாக 4 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. AAY குடும்பத்திற்கு 35 கிலோ அரிசி | |
| 2 | சர்க்கரை | ரூ. 13.50 | நபர் ஒருவருக்கு 500 கிராம் வீதம் குடும்ப அட்டை ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 2 கிலோ சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 3 கிலோ. | குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |
| 3 | கோதுமை | ரூ. 7.50 | சென்னை நகர்–புறநகர் மற்றும் மாவட்டத் தலைமையிடங்கள் – 10 கிலோ இதர பகுதிகள்–5 கிலோ (இருப்பின் அடிப்படையில்) | குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |
| 4 | மண்ணெண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ. 8.40 முதல் ரூ. 9.00 வரை | இருப்பிடத்திற்கு ஏற்றவாறு ஒரு குடும்ப அட்டைக்கு கீழ்க்கண்டவாறு 3–15 லிட்டர் வரை வழங்கப்படும் | குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |

[2008 ஏப்ரல் 8

**மண்ணெண்ணெய் வழங்கப்படும் அளவு விபரம்**

| இடங்கள் (ஊர்) | சமையல் எரிவாயு இணைப்பு இல்லாதவர்கள் (லிட்டரில்) | ஒரு சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்பு உள்ளவர்கள் (லிட்டரில்) | இரு சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்பு உள்ளவர்கள் (லிட்டரில்) |
|---|---|---|---|
| சென்னை, மாவட்டத் தலைமையிடங்கள், காரைக்குடி, ஒசூர் கும்பகோணம் மற்றும் பழனி நகராட்சிப் பகுதிகள் | 10 | 3 | 0 |
| இதர நகராட்சிப் பகுதிகள் | 6 | 3 | 0 |
| நகரியங்கள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகள் | 5 | 3 | 0 |
| கிராமப் பகுதிகள் | 3 | 3 | 0 |
| நீலகிரி மாவட்டம் மாவட்டத் தலைமையிடம் | 15 | 3 | 0 |
| இதர நகராட்சிப் பகுதிகள் | 15 | 3 | 0 |
| நகரியங்கள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகள் | 10 | 3 | 0 |
| கிராமப் பகுதிகள் | 5+5 | 3 | 0 |

"அந்தியோதயா அன்னயோஜனா" திட்டத்தின் கீழ் மத்திய அரசு உணவு தானியங்களை ஒரு கிலோ மூன்று ரூபாய்க்கு வழங்குகிறது. ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் அரிசி அளவு 35 கிலோ. தமிழக அரசு இதற்கு மேலும் மானியம் வழங்கி ஒரு கிலோ அரிசி ரூபாய் 2/- வீதம் வழங்குகிறது.

**(i) அரிசி**

தமிழ்நாட்டில் மக்களின் முக்கிய உணவு அரிசி. அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ அரிசி ரூ. 2.00 என்ற விலையில் வழங்கும் திட்டம் 3-6-2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 8]

இத்திட்டம் மக்களிடம் சிறந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மைய அரசிடமிருந்து அரிசி ஒதுக்கீடு பெறப்படுகிறது. தற்போது இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியும் இதற்கென இந்திய உணவுக் கழகத்திற்கு செலுத்தப்படும் விலையும் பின்வருமாறு:—

| வகைப்பாடு | மாதாந்திர ஒதுக்கீடு (மெட்ன்னில்) | இந்திய உணவுக் கழகத்திற்குச் செலுத்தும் விலை கிலோ ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|
| அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம் | 65,262 | 3.00 |
| வறுமைக்கோட்டிற்குக்கீழ் ஒதுக்கீடு | 1,04,936 | 5.65 |
| வறுமைக்கோட்டிற்கு மேல் ஒதுக்கீடு | 2,25,953 | 8.30 |

அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தினையும் சேர்த்து அனைத்து நலத் திட்டங்கள் மற்றும் பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றிற்கான இம்மாநிலத்தின் மாதாந்திர அரிசி தேவை சுமார் 3 இலட்சம் டன்களாகும். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கான அரிசி ஒதுக்கீடு மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா திட்ட அரிசி ஒதுக்கீட்டினை முழுமையாக எடுத்துப் பயன்படுத்தி வருவதோடு மீதமுள்ள தேவைக்கு வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளோர்க்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டிலிருந்தும் பயன்படுத்தி வருகிறது. மைய அரசின் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லில் இருந்து அரவை செய்து அதன்மூலம் பெறப்படும் அரிசியினை இம்மாநில அரசு பொது விநியோகத் திட்டத்தில் பயன்படுத்தி மத்தியத் தொகுப்பு ஒதுக்கீட்டில் இதனை ஈடுசெய்து கொள்கிறது. தற்போது பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசி நல்ல தரமானதாக உள்ளதைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

[2008 ஏப்ரல் 8

அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தினையும் சேர்த்து இம்மாநிலத்தின் தற்போதைய மாதாந்திர நுகர்வு சுமார் 2.80 முதல் 2.85 இலட்சம் மெ.டன்களாகும். 1-4-2007 முதல் 29-2-2008 வரை சுமார் 30,96,285 மெ.டன் அரிசி பொது விநியோகத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### (ii) கோதுமை

கடந்த மே 2006 வரை ஒவ்வொரு மாதமும் மைய அரசு 10,000 மெ.டன் கோதுமையை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்து வந்தது. ஜூன் 2006 முதல் இவ்வொதுக்கீடு 3,783 மெ.டன்களாகக் குறைக்கப்பட்டது. இவ்வரசு மைய அரசை கூடுதல் ஒதுக்கீடு செய்யுமாறு தொடர்ந்து வலியுறுத்தியதன் விளைவாக ஒவ்வொரு மாதமும் தற்காலிகக் கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டு வருகிறது. மேலும் மாநில அரசு மைய அரசிடம் ஏற்கெனவே பெற்று வந்த மாதாந்திர ஒதுக்கீடான 10,000 மெ.டன் கோதுமையைத் தொடர்ந்து வழங்க வேண்டும் எனக் கோரி வலியுறுத்தி வருகிறது. மாதந்தோறும் 2,500 மெ.டன் கோதுமையை வைட்டமின் 'ஏ', போலிக் அமிலம் மற்றும் இரும்புச்சத்து ஆகிய ஊட்டச்சத்துக்களுடன் சேர்த்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக மாற்றி அதனை அடக்க விலையில் நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யவும் மைய அரசிடமிருந்து தனி ஆணை பெறப்பட்டு தற்போது செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுவிநியோகத் திட்ட கோதுமை பிற வழிகளில் கடத்தப்படுவது தவிர்க்கப்படுவதோடு பொது மக்களுக்கும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு நியாய விலையில் கிடைப்பதும் உறுதிசெய்யப்படுகிறது. 1-4-2007 முதல் 29-2-2008 வரை 85,700 மெ.டன் கோதுமை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய மாதாந்திர சராசரி நுகர்வு 7,790 மெ.டன் ஆகும்.

### (iii) சர்க்கரை

மைய அரசு, சர்க்கரை ஆலைகளிடமிருந்து பெறப்படும் லெவி சர்க்கரையை மாதந்தோறும் ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வொதுக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சர்க்கரையினை நகர்வு செய்து நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. தற்போது மைய அரசு 10,832 மெ.டன் சர்க்கரை மட்டுமே லெவிமுறையில் ஒதுக்கீடு



2008 ஏப்ரல் 8]

செய்து வருகின்றது. மைய அரசு வழங்கும் லெவி சர்க்கரை போதுமானதாக இல்லாததால் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையினைத் தொடர்ந்து வழங்குவதற்கு இவ்வரசு கூட்டுறவு இணையத்திடமிருந்து வெளிச்சந்தை விலையில் சர்க்கரையினைக் கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது. தற்போது சர்க்கரையின் மாதாந்திர சராசரி நுகர்வு சுமார் 24,140 மெ.டன் ஆகும். வெளிச்சந்தை விலைக்கும் நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை உணவு மானியத்திலிருந்து ஈடுசெய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 29-2-2008 வரை, சுமார் 2,65,600 மெ.டன் சர்க்கரை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளது.

### (iv) மண்ணெண்ணெய்

மைய அரசு, இம்மாநிலத்திற்கு விடுவிக்கும் எரிவாயு உருளை இணைப்புகளுக்கு ஏற்ப, 2002 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்ட மாதாந்திர ஒதுக்கீடான 81,108 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயின் அளவினைப் படிப்படியாகக் குறைத்து தற்போது 2008-ல் 59,852 கிலோ லிட்டர் ஆக வழங்கி வருகிறது.

1-1-2001 முதல் மத்திய அரசு மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியபோதும் இந்த வித்தியாசத் தொகையான 60 காசு என்ற அளவை நுகர்வோர் மீது சுமத்தாமல் மாநில அரசின் உணவு மானியத்திலிருந்து ஈடுசெய்து வருகிறது. எண்ணெய் நிறுவன நிலையங்களிலிருந்து மண்ணெண்ணெய் மொத்த வணிக இடங்களுக்கு இடையேயான தொலைவிற்கேற்ப லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை சில்லறை விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகிறது. தமிழக அரசு மண்ணெண்ணெய் மொத்த வணிகர்களுக்கான ஆதாய விளிம்புத் தொகை மற்றும் போக்குவரத்துக் கட்டண ஆதாய விளிம்புத் தொகையினை 23-5-2007 முதல் திருத்தியமைத்துள்ளது, இதற்கென ஆகும் கூடுதல் செலவினத்தை நுகர்வோர் மீது சுமத்தாமல் மானியமாக வழங்குகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கு ஒரு வருட மானியம் ரூ.4.29 கோடியாகும்.

எரிவாயு சிலிண்டர் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் எரிவாயு இணைப்புகளை முத்திரையிட்டு அதன்மூலம் ஏற்படும் மண்ணெண்ணெயைச் சேமிப்பாகக் கொண்டு கடந்த ஆண்டுகளில் புதிதாக வழங்கப்பட்டுள்ள 42,39,652 குடும்ப அட்டைதாரர்களுக்கு

மண்ணெண்ணெயை வழங்கிட உரிய முயற்சிகள் பெருமளவில் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கையிருப்பு சேமிப்பைக் கொண்டு தலா ஒரு லிட்டர் வீதம் பொங்கல் 2008 முதல் மாதந்தோறும் இப்புதிய அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கவும் இவ்வரசு ஆணையிட்டுள்ளது. போலி குடும்ப அட்டைகளைக் களைவதன் மூலமும் கிடைத்த சேமிப்பைக் கொண்டு கூடுதலாக ஒரு லிட்டர் சேர்த்து மொத்தம் 2 லிட்டர் மண்ணெண்ணெய் இந்த 42,39,652 புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மார்ச் 2008 முதல் மாதந்தோறும் வழங்கிடவும் இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதைத்தவிர 2,286 கைவண்டிதாரர்கள்மூலம் பொது விநியோகத் திட்ட விலையில் வெளிச்சந்தையில் மண்ணெண்ணெய் விற்கப்படுகிறது. உயர் நீதிமன்ற ஆணையின்படி இந்த கைவண்டிதாரர்களை குறிப்பிட்ட கடைகளுடன் இணைத்து மண்ணெண்ணெயினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிடச் செய்யவும் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் மண்ணெண்ணெய் முறைகேடாக திருப்பி விடப்படுவது தடுக்கப்பட்டு இதன்மூலம் கிடைக்கும் கூடுதல் சேமிப்பு, தகுதியுள்ள குடும்பங்களுக்கு வழங்க வாய்ப்பு ஏற்படும். மேலும் குடும்ப அட்டைகளைச் சரிபார்ப்பதன்மூலம் எரிவாயு சிலிண்டர் உள்ள குடும்ப அட்டைகளை இனங்கண்டு முத்திரையிடுவதால் கிடைக்கும் மண்ணெண்ணெய் மூலமும், கடத்தல் போன்ற கசிவுகளைத் தடுப்பதன் மூலமும் ஏற்படும் சேமிப்பைக் கொண்டு இந்தப் புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் குறைந்தபட்சம் 3 லிட்டர் மண்ணெண்ணெயாவது வழங்க வேண்டும் என்ற இவ்வரசின் நோக்கம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

மண்ணெண்ணெய் வழங்கப்படுவதைச் சீரமைக்கும் வகையில் இந்த அரசு முந்தைய பதவிக் காலத்தில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்மூலம் விநியோகம் செய்யவும் ஆணை பிறப்பித்தது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையமானது ஏறத்தாழ 5,000 முதல் 15,000 குடும்ப அட்டைகளுக்குத் தேவைப்படும் மண்ணெண்ணெய் கொள்ளளவினைக் கொண்டுள்ளது. இதன்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் முழுவதும் மண்ணெண்ணெய் இருப்பு வைத்து விநியோகம் செய்வதை உறுதிசெய்வதுடன் உரிய நேரத்தில் மண்ணெண்ணெய் வழங்குவதை உறுதிப்படுத்தவும் இயலும். தற்போது இயங்கி வரும் 312 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களில் 269 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 43 தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்



கழகம் பொறுப்பிலும் செயல்பட்டு வருகின்றன. இவை கணினிமயமாக்கப்பட்டு வருவதால் அதன்மூலம் மண்ணெண்ணெய் முறைகேடாகத் திருப்பிவிடப்படுவது தடுக்க வாய்ப்பு ஏற்படும்.

**உணவு மானியம்**

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மைய அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட மிகக் குறைவாக உள்ளது. எனவே இதற்கென தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டுக்கு உணவு மானியமாக ரூ.1,950 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு முதல் 2008 வரை உணவு மானியத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பின்வருமாறு :—

(ரூபாய் கோடிகளில்)

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2003 - 2004 | 800 |
| 2004 - 2005 | 1035 |
| 2005 - 2006 | 1200 |
| 2006 - 2007 | 1950 |
| 2007 - 2008 | 1950 |
| 2008 - 2009 | 1950 |

## அத்தியாயம் – 3

## விலைக் கட்டுப்பாடு மற்றும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள்

அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் கவலை அளிப்பதாக உள்ளது. பொருளாதாரம் விரைவாக வளர்ந்து வரும் நிலையிலும் பணவீக்கத்தின் பாதிப்பாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. ஒரு பக்கம் விவசாயிகள் தம் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கக் கோரிக்கை வைத்துவரும் நிலையில் மறுபக்கம் நுகர்வோர் நலன் கருதி அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தி இருசாராரின் நலனையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. சர்வதேச மற்றும் தேசிய சந்தைகளில் பொருட்களின் தேவை மற்றும் கிடைக்கும் அளவு ஆகியவை அடிப்படையில் விலை ஏற்ற இறக்கத்திற்கு உட்படுவதால், விலைவாசியைக் கட்டுப்படுத்திட விவசாயப் பொருட்களின் விலையை அதிக காலங்களுக்கு செயற்கையாக அரசு தலையிட்டு குறைந்த அளவில் வைத்திருக்க இயலாது. எனினும், இந்த அரசு விலை மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரை விலை உயர்விலிருந்து பாதுகாத்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்திட கடந்த 14-4-2007 முதல் ஒரு சிறப்பு பொது விநியோகத் திட்டம் சென்னை நகரில் தற்காலிகமாகத் தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு போன்ற பருப்பு வகைகள் குடும்ப அட்டை ஒன்றிற்கு ஒரு கிலோ வீதமும், பாமாயில் ஒரு லிட்டர் வீதமும் அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய அரசிடம் சிறப்பு ஒதுக்கீடாக 15,000 மெட்ரிக் டன் கோதுமை வெளிச்சந்தை விலையில் பெறப்பட்டு ரவை மற்றும் மைதாவாக மாற்றப்பட்டு நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ மைதா ரூ.16/-க்கும், ஒரு கிலோ ரவை ரூ.17/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதில் ரவைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.1/- வீதம் மானியமாகத் தமிழக அரசு வழங்கியது. மத்திய அரசிடம் கோதுமை இருப்பு இல்லாத காரணத்தினால் வெளிச்சந்தை விலையில் மேலும் கோதுமை ஒதுக்கீடு பெற இயலவில்லை. எனினும் மத்திய அரசிடம்





பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சிறப்பு ஆணை பெற்று இரும்புச்சத்து, போலிக் அமிலம் மற்றும் வைட்டமின் 'ஏ' சேர்த்து செறிவூட்டப்பட்ட வழங்கப்படும் கோதுமையின் ஒரு பகுதியினை கோதுமை மாவாக (ஆட்டா) மாற்றி அடக்க விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது. 31-3-2008 நிலவரப்படி 18,976 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 11,439 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், 2.05 கோடி லிட்டர் பாமாயிலும், 1813 மெட்ரிக் டன் ரவை மற்றும் 5,459 மெட்ரிக் டன் மைதாவும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

வெளிச் சந்தையில் தொடர்ந்து விலை உயர்வு உள்ள காரணத்தினால் இச்சிறப்புத் திட்டத்தை 31-7-2008 வரை நீட்டிக்க இவ்வரசு உத்தரவிட்டுள்ளது. வெளிச் சந்தையில் ஏறிவரும் விலை உயர்விலிருந்து ஏழை எளிய மக்களைப் பாதுகாத்திடவும் அவர்களுக்கு ஊட்டச் சத்துக்கான பாதுகாப்பினை வழங்கிடவும் இத்திட்டம் பேருதவியாக உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் விலையில் பொருட்கள் வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| துவரம் பருப்பு | ரூ. 32/– கிலோ ஒன்றுக்கு |
| உளுத்தம் பருப்பு | ரூ. 36/– கிலோ ஒன்றுக்கு |
| பாமாயில் | ரூ. 40/– கிலோ ஒன்றுக்கு |
| செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு | ரூ. 11/– கிலோ ஒன்றுக்கு |

சாதாரண ஏழை மக்களை விலை ஏற்றத்திலிருந்து பாதுகாத்திட மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்துள்ளது.

### மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள்

**கோதுமை**

- 2006 ஜூன் முதல் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.
- 2006 ஜூன் முதல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி வரியின்றி கோதுமை இறக்குமதி செய்திட மத்திய அரசு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

[2008 ஏப்ரல் 8

- வெளிநாடுகளிலிருந்து கோதுமை இறக்குமதி செய்துகொள்ள தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**பருப்பு வகைகள்**

- 2006 ஜூன் முதல் பருப்பு வகைகள் ஏற்றுமதி செய்திட தடை விதிக்கப்பட்டது. இத்தடை 31-3-2008 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2006 ஜூன் முதல் இறக்குமதி வரியின்றிப் பருப்பு வகைகள் இறக்குமதி செய்திட மத்திய அரசு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
- அதுபோல் தனியாரும் இறக்குமதி வரியின்றி பருப்பு வகைகள் இறக்குமதி செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.

**சமையல் எண்ணெய்**

- 17-3-2008 முதல் ஓராண்டு காலம் வெளிநாடுகளுக்கு சமையல் எண்ணெய் ஏற்றுமதி செய்திட தடை விதிக்கப்பட்டுள்ளது.
- சமையல் எண்ணெய் வகைகளுக்கு 1-4-2008 முதல் இறக்குமதி வரி விகிதம் பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளது:—

| கச்சா சமையல் எண்ணெய் (Crude edible oil) | சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் (Refined edible oil) |
|---|---|
| முழு வரி விலக்கு | 7.5 சதவீதம் |

**அரிசி**

- 2009 மார்ச் 31 வரை இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- பாசுமதி அல்லாத அரிசியினை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 8]

**பொது**

- முன்பேர வர்த்தகத்திலிருந்து அத்தியாவசியப் பொருட்களான உளுத்தம் பருப்பு மற்றும் துவரம் பருப்பு வகைகள் 2007 பிப்ரவரி முதல் தடை செய்யப்பட்டது. அதுபோல் அரிசி, கோதுமை மைதா மற்றும் ரவை ஆகிய பொருட்களும் 1-3-2007 முதல் முன்பேர வர்த்தகத்திலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.
- உணவு உற்பத்தியைப் பெருக்க, மத்திய அரசின் தேசிய உணவுப் பாதுகாப்பு அமைப்பின் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்ட 16 மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் அடுத்துவரும் நான்காண்டுகளில் அரிசி உற்பத்தி 10 மில்லியன் டன் அதிகரித்திடவும், அதுபோல் கோதுமை 8 மில்லியன் டன்னும், பருப்பு வகைகள் 2 மில்லியன் டன்னும் உற்பத்தியினை உயர்த்துவதாகும்.

**தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்**

- பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் 3-6-2006 முதல் கிலோ ரூ.2/-க்கு அரிசி வழங்கப்படுகிறது.
- பின்வரும் அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் பொதுமக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் சிறப்புத் திட்டப்படி வழங்கப்பட்டு வருகிறது:

(கிலோவில் / லிட்டரில்)

| பொருட்களின் பெயர் | 14-04-07 முதல் 20-06-07 வரை | 21-0-2007 முதல் |
|---|---|---|
| துவரம் பருப்பு | ரூ. 36 | ரூ. 32 |
| உளுத்தம் பருப்பு | ரூ. 40 | ரூ. 36 |
| மைதா | ரூ. 16 | ரூ. 16 |
| ரவை | ரூ. 17 | ரூ. 17 |
| பாமாயில் | ரூ. 40 (லிட்டர் ஒன்றுக்கு) | ரூ.40 (லிட்டர் ஒன்றுக்கு) |

- இச்சிறப்புத் திட்டம் கடந்த 31-1-2008 உடன் முடிவடைந்த நிலையில் மேலும் 6 மாத காலத்திற்கு அதாவது 31-7-2008 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி கோதுமைக்கான விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
- துவரம் பருப்பு, கடலை பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாசிப் பருப்பு மீதான 4 சதவீத விற்பனை வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியினை கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி இரத்துச் செய்யப்பட்டது.
- கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி இதர பருப்பு வகைகளான மொச்சை, காராமணி, கொள்ளு மற்றும் கொண்டைக்கடலை ஆகியவற்றின் மீதான விற்பனை வரி இரத்துச் செய்யப்பட்டது.
- சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் மற்றும் சோயா எண்ணெய் வகைகளுக்கு கடந்த 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி ஏற்கெனவே இருந்த விற்பனை வரி 1 சதவீதம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.
- மஞ்சள், தனியா மற்றும் மிளகாய் வகைகளுக்கு ஆண்டுக்கு ரூ.500 கோடி வரை விற்பனை அளவு உள்ளவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அதே நிபந்தனையுடன் மஞ்சள் பொடி, தனியா பொடி மற்றும் மிளகாய் பொடி வகைகளுக்கும் 1-4-2008 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 1-4-2008 முதல் நட்சத்திர அந்தஸ்து இல்லாத உணவகங்கள் கொள்முதல் செய்யும் சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், மஞ்சள், மிளகாய், தனியா ஆகிய பொருட்களுக்கு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் பிரிவு 12-ன் கீழ் கொள்முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 2008 பிப்ரவரி முதல் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு கிலோ ஒன்று ரூ.11/-க்கு வழங்கப்படுகிறது.



- 1-1-2007 முதல் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் வகைகளுக்கு 1 சதவீத விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டது.
- பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பாமாயில் வழங்கிட ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இறக்குமதி வரியின்றி பாமாயில் இறக்குமதி செய்திட அனுமதிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை நிலவரம் குறித்து எச்சரிக்கையுடன் கண்காணித்து, தேவையான நடவடிக்கைகளை அவ்வப்போது தொடர்ந்து எடுத்து வருகிறது.

[2008 ஏப்ரல் 8

## அத்தியாயம் – 4

## பொது விநியோகத் திட்டத்தின் அமலாக்கம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தினை நெறிமுறைப்படுத்தி, ஒருங்கிணைத்து, செயல்படுத்தி வருகின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் கள்ளச்சந்தையில் விற்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, மாவட்ட அளவில் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வெளிச் சந்தையில் விற்கப்படுவதைத் தடுக்க, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின்கீழ் சிறப்புக் காவல் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநரைத் தலைவராகவும், அவரின் கீழ், காவல் துறைத் தலைவர் நிலையில், மூத்த காவல் துறை அதிகாரி ஒருவரையும் கொண்டுள்ளது. இப்பிரிவு மாநிலம் முழுவதும் 236 காவலர்களைக் கொண்டு 16 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை முறைகேடாகக் கடத்துவதைத் தடுக்க, காலமுறையிலான ஆய்வுகளும் திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டம், குண்டர் தடுப்புச் சட்டம் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றியமையாப் பொருட்களை கடத்தும் சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுத்தும், நடவடிக்கை எடுக்கத் தேவையான முக்கியத் தகவல்கள் சேகரிக்கும் பணியினையும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மேற்கொண்டு வருகின்றது.

போலி குடும்ப அட்டைகளைக் களைய குறிப்பிட்ட நியாய விலைக் கடைகளில் அவ்வப்போது ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1-4-2007 முதல் இவ்வரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்மூலம், 99,161 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு, நீக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 8]

எனினும் புழக்கத்திலுள்ள போலி குடும்ப அட்டைகளை ஒட்டு மொத்தமாகத் தீவிர ஆய்வு மேற்கொண்டு களைய இவ்வரசு நடவடிக்கை எடுத்திடத் திட்டமிட்டுள்ளது. இந்நடவடிக்கைக்குப் பின்னர், குடும்ப அட்டைகள் விவரங்கள் நாளது தேதிவரை மாற்றங்களை உள்ளடக்கியதாக இணைய தளத்தில் நேரடியாகவே சேர்த்தல், நீக்குதல், விலாச மாற்றம் ஆகிய பொதுமக்களின் கோரிக்கைகளை மேற்கொள்ள எல்காட் நிறுவனம் தயாரித்துள்ள மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்படும்.

பொது விநியோகத் திட்டத்தின் கண்காணிப்பினை வலுப்படுத்தும் வகையில், மாவட்டம் மற்றும் கோட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் மையங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள் நிலையிலிருந்து, ஊராட்சி, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் நிலைவரை தங்கள் எல்லைக்குட்பட்ட பொது விநியோகக் கடைகளுக்குச் சென்று ஆய்வு செய்யவும், அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய சேவை சென்றடைவதை உறுதி செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில், தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் சிறப்புச் சுற்றுக் காவல் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சுற்றுக் காவல் படைகள், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய இருவரது கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் செயல்படும் பறக்கும் படைகளின் திறமையை மேம்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில் 18 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டு அனைத்து மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலர்களுக்கும் தீவிர கண்காணிப்பிற்காகத் தகவல் தொடர்பு வசதிகளை அதிகரிக்க கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகளுக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையை மறு சீரமைத்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், தூத்துக்குடி மாவட்டங்களில் 4 கூடுதல் அலகுகளை ஏற்படுத்துவதுடன், அம்மாவட்டங்களில் கண்காணிப்புப்

பணிகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு 40 கூடுதல் பணியாளர்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1-4-2007 முதல் 29-2-2008 வரை 2,397 நபர்கள் 1955 ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். 57 கடத்தல்காரர்கள் கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டம் 1980-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இத்தகைய திடீர் ஆய்வுகள் மற்றும் சோதனைகள் காரணமாக கடந்த 1-4-2007 முதல் 29-2-2008 வரை 2,050 வாகனங்கள் மற்றும் 20,023 டன் அரிசி மற்றும் 562 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக, சட்டத்திலிருந்து தப்பித்து வரும் கடுங்குற்றவாளிகள் 7 நபர்கள் 2007-2008-ல் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நபர்கள்தான் அத்தியாவசியப் பொருட்கள் பெருமளவில் கள்ளச் சந்தைக்குச் செல்வதற்குக் கேந்திரமாகச் செயல்பட்டு வந்துள்ளனர். மேலும் 1980 ஆம் ஆண்டின் கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தீவிரமாக தொடரப்பட்டு வருகின்றன.

பின்வரும் புள்ளி விவரங்கள்மூலம் அரசின் தீவிர கண்காணிப்புப் பணிகளின் விவரம் புலனாகிறது:

| வ.எண் | வருடம் | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் பராமரிப்பு சட்டம் (குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ்க்காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | பொது விநியோகத் திட்ட அரிசி கைப்பற்றுகை (மெட்.டன்) | பொது விநியோகத் திட்டம் மண்ணெண்ணெய் கைப்பற்றுகை (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 2004 | 250 | 1 | 4,712 | 222 |
| 2 | 2005 | 793 | 7 | 6,395 | 608 |
| 3 | 2006 | 1969 | 75 | 13,014 | 525 |
| 4 | 2007 | 2399 | 63 | 20,036 | 595 |





கடத்தலைத் தடுக்கப் பின்வரும் நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன:

- மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்களால் ஒவ்வொரு வாரமும் திடீர் இரவு ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பொது விநியோகப் பொருட்கள் கடத்தல் மற்றும் புகார்கள் தொடர்பான தகவல்கள் பெறுவதற்காக சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொது விநியோக அங்காடிப் பணியாளர்கள் மீது குற்ற நடவடிக்கை தொடர்தல் மற்றும் கைது செய்தல்.
- கடத்தும் பொருட்களைப் பிடிக்க உதவும் ஒவ்வொரு சரியான தகவலுக்கும் ரூ.500/— வீதம் பரிசு வழங்குதல்.
- மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களின் விற்பனையைப் படிப்படியாக 100 சதவீதம் தீவிர தலத் தணிக்கை செய்தல்.
- கூடுதல் நுகர்வு காணப்படும் நியாய விலைக் கடைகளின் பட்டியல்களையும் குடும்ப அட்டைகளையும் வீடுதோறும் சென்று 100 சதவீதம் ஆய்வு செய்தல்.
- தடுப்புக் காவலில் வைக்கப்படுபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.
- குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மூலமாக கடுங்குற்றவாளிகளுக்கு சட்டத்தின் கீழ் தண்டனை வாங்கிக் கொடுத்தல்.
- போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து, இரத்துச் செய்யும் வகையில் தகவல் அளிப்போருக்கு ரூ.200/- பரிசு வழங்குதல்.
- அரிசி கடத்தலில் ஈடுபடும் லாரிகளின் உரிமம் இரத்துச் செய்யப்படுகிறது. ஓட்டுநரின் உரிமமும் இரத்துச் செய்யப்படுகிறது.

[2008 ஏப்ரல் 8

- இத்துறை வரலாற்றில் முதல்முறையாக தன்னுடைய உயிருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது சிறப்பாக அமலாக்கப் பணிபுரிந்த கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. நடராஜன் அவர்களுக்கு, "அண்ணா விருது" வழங்கப்பட்டுள்ளது. அமலாக்கப் பணியில் ஈடுபடும் நேர்மையான துணிச்சலுள்ள அதிகாரிகளுக்கு இது ஊக்கமளிப்பதாக உள்ளது.



2008 ஏப்ரல் 8]

## அத்தியாயம்–5

## பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்

மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் மத்திய அரசின் சார்பாக இம்மாநிலத்தில் 1-10-2002 முதல், மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லானது நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகள் மூலமாகவும், தனியார் அரவை முகவர் மூலமாகவும் அரைக்கப்பட்டு அரிசி பெறப்படுகிறது. இந்த அரிசியினை மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மத்தியத் தொகுப்பு ஒதுக்கீட்டில் ஈடுசெய்து பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு 2007-2008ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் மத்திய அரசு நெல்லுக்குண்டான ஆதார விலையாகக் கிரேடு 'ஏ' ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.675 என்றும் சாதாரண நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.645/- என்றும் விலை நிர்ணயம் செய்தது. இந்தப் பருவத்தில் 1-10-2007 முதல் 30-9-2008 வரை கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு ஊக்கத் தொகையாகக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100/- கூடுதலாக மைய அரசு வழங்கியுள்ளது. ஆனால், கோதுமைக்கு வழங்கப்படும் கொள்முதல் விலைக்கு ஈடாக நெல்லுக்கும் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்ததை அடுத்து இம்மாநில அரசும், இக்கோரிக்கை சம்பந்தமாக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுச் சென்றது. இருந்தபோதிலும், விவசாயிகள் தங்களது நெல்லினை நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் விற்பதை ஊக்கப்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு அரசு தனது நிதி ஆதாரத்திலிருந்து நெல்லுக்குக் கூடுதல் ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/- வழங்கியுள்ளது. தற்போது நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் செய்யப்படும் விலை கிரேடு 'ஏ' ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.825 மற்றும் சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.795 வழங்கி வருகிறது.

நடப்பு கரீப் 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1,297 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத்

திறந்துள்ளது. இப்பருவத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 16.5 இலட்சம் மெ.டன்னை விடக் குறைவாகவே கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளது. அதாவது 31-3-2008 வரை 9.87 இலட்சம் மெ.டன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு கரீப் பருவத்திற்கான கொள்முதல் 30-9-2008 வரை நடைபெறும். வெளிச்சந்தையில் நிலவும் நெல் கொள்முதல் விலையைவிடத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் விலையானது குறைவாக உள்ளதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அண்மைக் காலமாக நெல்வரத்து குறைந்துள்ளது. இதனால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 16.5 இலட்சம் மெ.டன் என்பதை அடைவது கடினமாக உள்ளது.



## அத்தியாயம்–6

## இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்குதல்

எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் பயனடையும் வகையில் இரட்டை எரிப்பான்களுடன் கூடிய இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் 2006-2007 இல் தொடங்கப்பட்டது. கிராமப் பகுதியில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு விறகு, வறட்டி போன்ற பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் சிரமங்களிலிருந்து விடுவித்து எரிபொருள் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 2006-2007 இல் முதற்கட்டமாக ரூபாய் 60 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சம் இரட்டை எரிப்பான்களுடன் கூடிய அடுப்புடன் எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்கு குறியீடு நிர்ணயித்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டிற்கு 8 இலட்சம் இணைப்புகள் வழங்க ரூ. 160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31-3-2008 நிலவரப்படி 4.59 இலட்சம் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எண்ணெய் நிறுவனங்களிலிருந்து எரிவாயு உருளைகள் மற்றும் சாதனங்கள் பெறுவதில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சிரமங்களினால் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், ஏப்ரல் 2008-க்குள் இவ்வாண்டின் முழு இலக்கினை முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் மேலும் 8 இலட்சம் எரிவாயு இணைப்புடன் இரட்டை எரிப்பான்கள் கொண்ட அடுப்புகள் ரூ.160 கோடி செலவில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-7

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டில் இந்திய நிறுமச் சட்டம், 1956-ன் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் தமிழக அரசின் பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைத்து, நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வது ஆகியவை தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியப் பணிகளாகும். தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்கும் தேவையான பருப்பு மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகிறது,

இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் குழுவைத் தமிழக அரசு நியமனம் செய்கிறது. நிருவாக வசதிக்காக இந்நிறுவனம் 31 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்/துணை ஆட்சியர் தகுதியில் உள்ளவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 8,543 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

### பொது விநியோகத் திட்டம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி மற்றும் கோதுமையினை இந்திய உணவு சேமிப்புக் கிடங்குகளிலிருந்தும் சர்க்கரையை சர்க்கரை ஆலைகளிலிருந்தும் வைப்பிடத்திலிருந்தும் பெற்று 210 கிடங்குகள் மூலம் பொது விநியோகத் திட்டத்திற்கு முகவராகச் செயல்பட்டு வருகிறது.

### பருப்பு, எண்ணெய் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்கும் சிறப்புத் திட்டம்

14-4-2007 முதல் இச்சிறப்புத் திட்டம் துவக்கப்பட்டது. தற்போது அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாலின் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றை கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளுக்கு



மானிய விலையில் வழங்கி வருகிறது. 29-2-2008 வரை 31,759 மெ.டன் துவரம் பருப்பு, 16,475 மெடன் உளுத்தம் பருப்பு மற்றும் 274 இலட்சம் லிட்டர் பாமாலின் எண்ணெய்யை 1 லிட்டர் பாக்கெட்டுகளாக கொள்முதல் செய்யப்பட்டு நியாய விலைக்கடைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 29-2-2008 வரை 1,070 மெடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு, உருளை மாவு ஆலைகளிலிருந்து அரவை செய்யப்பட்டு பொது விநியோகக் கடைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### நெல் கொள்முதல்

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் நேரடி கொள்முதல் நிலையங்கள்மூலம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஆதார விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப் படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தனியார் அரவை முகவர்கள்மூலம் அரவை செய்து பெறப்படும் அரிசியினை மத்தியத் தொகுப்பு ஒதுக்கீட்டில் ஈடுசெய்து பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. 2002-2003 முதல் 2006-2007 வரை கொள்முதல் செய்யப்பட்ட நெல், அரவை செய்யப்பட்ட நெல், அரவை செய்து பெறப்பட்ட அரிசி மற்றும் பயன்படுத்தப்பட்ட அரிசி ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு.

(மெ. டன்னில்)

| கரீப் பருவம் | கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு | அரவைசெய்யப்பட்ட நெல் | | பெறப்பட்ட (மற்றும்) பயன்படுத்தப் பட்ட அரிசி |
|---|---|---|---|---|
| | | நவீன அரிசி ஆலை | தனியார் அரவை முகவர் | |
| 2002-2003 | 159362 | 158055 | – | 108250 |
| 2003-2004 | 309579 | 162130 | 145846 | 208486 |
| 2004-2005 | 972630 | 272602 | 684568 | 646581 |
| 2005-2006 | 1381570 | 229150 | 1143888 | 930265 |
| 2006-2007 | 1607803 | 239943 | 1358364 | 1079300 |

[2008 ஏப்ரல் 8

## நேரடி கொள்முதல் நிலையங்களில் மின்னணு எடை தராசு

நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படும்போது சரியான எடையை உறுதி செய்ய 200 கி.கி எடையுள்ள 1,100 மின்னணு எடை தராசுகளை ரூ.77 இலட்சம் செலவில் வாங்குவதற்கு 2007-2008 இல் அரசு அனுமதி அளித்துள்ளது. 31-3-2008 வரை 960 மின்னணு எடை தராசுகள் பெறப்பட்டு நேரடி கொள்முதல் நிலையங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## நவீன அரிசி ஆலை மற்றும் நெல் அரவை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 23 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றின் சராசரி அரவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 35,000 மெட்ன் ஆகும். 2006-2007 ஆம் ஆண்டில் இந்த நவீன அரிசி ஆலையில் 2,39,943 மெட்ன் நெல் அரவை செய்யப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2008 வரை 1,48,725 மெட்ன் நெல் அரவை செய்யப்பட்டுள்ளது.

## விலைவாசியைக் கட்டுப்படுத்த சிமெண்ட் விற்பனை

சிமெண்ட் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஒரு மூட்டை சிமெண்ட் சலுகை விலையில் ரூ.200/— வீதம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. 31-3-2008 வரை 48,486 மெட்ன் விற்கப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் 10,597 மெட்ன் சிமெண்ட் இருப்பில் உள்ளது. மேலும், ஒரு இலட்சம் மெட்ன் சிமெண்டை தமிழ்நாடு கனிம வள நிறுவனம் மூலம் பாகிஸ்தானிலிருந்து பெற்று ஒரு மூட்டை சிமெண்ட் ரூ.220/— வீதம் விற்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. 31-3-2008 வரை 5,806 மெட்ன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 31-3-2008-ல் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் 2,313 மெட்ன் இருப்பில் உள்ளது.

## கிடங்குகள் மற்றும் சேமிப்பு வசதி

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 210 கிடங்குகள் செயல்முறைக் கிடங்குகளாக இயங்கி வருகின்றன. இவற்றில் 4.79 இலட்சம் மெட்ன் கொள்ளளவு கொண்ட 167 கிடங்குகள் விஞ்ஞான ரீதியாகக் கட்டப்பட்ட சொந்தக் கிடங்குகள் ஆகும். வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 43 கிடங்குகளில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான



2008 ஏப்ரல் 8]

கட்டடங்களில் உள்ள 10 கிடங்குகள் விஞ்ஞான ரீதியாக அமைக்கப்பட்டுள்ள கிடங்குகளாகும். மீதமுள்ள 33 கிடங்குகள் விஞ்ஞான ரீதியாக அமைக்கப்படாத கிடங்குகளாகும். இவை விஞ்ஞான ரீதியான கிடங்குகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தகுந்த நிலங்களைக் கையகப்படுத்தி, படிப்படியாக விஞ்ஞான ரீதியான கிடங்குகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. விஞ்ஞான ரீதியாக அமைக்கப்படாத கிடங்குகளைப் பயன்படுத்தும் கீழ்க்கண்ட இடங்களில் விஞ்ஞான ரீதியான சொந்த கிடங்குகள் கட்டும்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது:—

| வ.எண் | மண்டலம் | கிடங்குகள் கட்டப்படும் இடம் | கொள்ளளவு (மெடன்களில்) |
|---|---|---|---|
| 1 | மதுரை | பேரையூர் | 1,000 |
| 2 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | 1,500 |
| 3 | கோயம்புத்தூர் | வால்பாறை | 1,000 |
| 4 | ஈரோடு | பவானி | 1,500 |

தற்பொழுது வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் 1,500 மெட்ன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. சென்னை நகர்ப் பகுதியில் உள்ள கிடங்குகளில் பொருட்கள் கொண்டு செல்வதில் ஏற்படும் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு சென்னையை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளில் உரிய நிலம் தேர்வு செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிடங்குகளில் சரக்கினை எளிதாக ஏற்றுவது, இறக்குவது மற்றும் சரக்குகளை ஏற்றுவதற்காக காத்திருக்கும் நேரத்தினைக் குறைக்கும் பொருட்டு தானியங்கி இழுவை இயந்திரம் மதுரை மாவட்டம், வி.கே.புரம் மற்றும் சென்னையில் அண்ணா நகர் ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விழுவை இயந்திரம் பயனுள்ள முறையில் செயல்படுவதால், அனைத்துக் கிடங்குகளிலும் படிப்படியாக இவ்வியந்திரத்தினை அமைத்து இதன்மூலம் 50 விழுக்காடு கையாளும் நேரத்தினை மிச்சப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 8

**அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைக் கண்காணித்தல்**

**(i) குறுந்தகவல் சேவை மூலம் கண்காணித்தல்**

இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்
கழகக் கிடங்குகளுக்கு அரிசி ஏற்றிச் செல்லும்போது, அதன் சரியான
நகர்வு மற்றும் வழித்தடமாற்றம் ஆகியவற்றை கண்காணிக்கும்
பொருட்டு, குறுந்தகவல் சேவைத் திட்டம் 2007-2008-ல்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய உணவுக் கழகக்
கிடங்குகளிலிருந்து சரக்குகள் ஏற்றிச் செல்லும் லாரிகளைக்
கண்காணிக்கும் பொருட்டு நகர்வுப் பணி மேற்கொள்ளும் அனைத்து
இந்திய உணவுக் கழக கிட்டங்கியில் உள்ள நுகர்பொருள் வாணிபக்
கழகப் பணியாளர்களுக்கு 24 கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் உள்ள
229 பணியாளர்களுக்கும் சரக்குகள் ஏற்றிச் செல்லும் லாரிகளின்
நகர்வு குறித்தும், சரக்கினைப் பெற்றுக் கொண்ட விவரம்
தெரிவிப்பதற்கும், கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. நகர்வு விவரம்
இந்நிறுவனத்தின் 31 மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை
அலுவலகங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.
இத்திட்டத்தால் காலதாமதம் மற்றும் கடத்தல் போன்ற தவறுகள்
நடைபெறாவண்ணம் கண்காணிக்கப் பயன்படுகிறது. இவ்விவரங்கள்
இணையதளத்தில் பதிவாக்கப்பட்டு பல்வேறு அறிக்கைகளைப் பெற
வசதி செய்யப்பட்டுள்ளது.

**ஜி.பி.எஸ் (Global Positioning System) இயக்கக் கருவி மூலம் கண்காணித்தல்**

வாகனங்களின் நகர்வினை ஜி.பி.எஸ் (GPS) கருவிகள் மூலம்
கண்காணிக்கும் முன்னோடித் திட்டத்தினை விரைவில்
நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
இத்திட்டத்தின்கீழ் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு அரிசி
நகர்வு செய்யப்படுவதைக் கண்காணிக்கும் பொருட்டு ஒரு
முன்னோடித் திட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர்
மாவட்டங்களில் 40 லாரிகளில் ஜி.பி.எஸ் கருவிகள் பொருத்த
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கருவிகள்மூலம் லாரிகள்
செல்லும் பாதைகளையும், அவை எப்பகுதியில் உள்ளன என்பதையும்
கண்டறிய இயலும். இதன்மூலம் லாரி செல்லும் பாதை, தேவையற்ற
இடங்களில் நிறுத்துதல், பாதை மாறிச் செல்லுதல் (கடத்தல்) ஆகியவை
கண்காணிக்கப்படும்.



2008 ஏப்ரல் 8]

இத்திட்டத்தின் பயன்பாடுகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு
மாநிலத்தின் மற்ற இடங்களுக்கு உரிய நேரத்தில் விரிவுபடுத்தப்படும்.

**இதர செயல்பாடுகள்**

தமிழக அரசால் நடத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களான
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், முதியோர்
ஓய்வூதியத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து
வளர்ச்சித் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ
மாணவிகள் விடுதிகள் போன்றவற்றுக்குத் தேவையான அரிசி மற்றும்
இதர உணவுப் பொருட்களை மாதந்தோறும் இந்நிறுவனம்
வழங்குகிறது. காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை
மற்றும் வனத் துறை ஆகியோருக்குத் தேவைப்படும் அத்தியாவசியப்
பொருட்களையும் இக்கழகம் கொள்முதல் செய்து விநியோகம்
செய்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத்
திட்டத்தின்கீழ் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும்
மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் ஆகியவற்றைச்
செயல்படுத்தி வருகிறது. மேலும், கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர்
ஆகிய மாவட்டங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை
நிலையங்களும் மற்றும் திருவண்ணாமலை, திருச்சி நீலகிரி,
இராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் எரிவாயு
அலகுகள் போன்றவையும் இந்நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு
வருகின்றன.

அமுதம் பல்பொருள் அங்காடிகளின்மூலம் தரமான இதர
அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து நியாயமான
விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மத்திய
அரசின் நலத்திட்டங்களான சம்பூர்ண கிராமின் ரோச்கர் யோஜனா
திட்டம், அன்னபூர்ணா திட்டம், அந்தியோதயா அன்ன யோஜனா
திட்டம் போன்ற நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசியினை
இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து வழங்கி வருகிறது.

**நிதி ஆதாரம்**

31-3-2008 நிலவரப்படி இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்
ரூ.50 கோடி ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.38.68 கோடி ஆகும்.
2007-2008 இல் இக்கழகத்திற்கு மாநில அரசு ரூ.1,950 கோடி
மானியமாகவும் நெல் கொள்முதல் பணிக்காக ரூ.900 கோடி வழிவகை
முன்பணமாகவும், (Ways and Means Advance) இதுவரை
வழங்கியுள்ளது.

## அத்தியாயம் – 8

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனம் சட்டம் 1956-ன்படி தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. பிறகு மேற்படி சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம், 1962 என மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2-5-1958 ஆம் ஆண்டு முதல் சேமிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில் சென்னையைத் தலைமை இடமாகவும் மற்றும் 7 மண்டல அலுவலகங்களை முறையே கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறது.

**இந்நிறுவனம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:-**

(1) உணவு தானியங்களில் ஏற்படும் சேமிப்பு இழப்பினைத் தவிர்த்திடும் பொருட்டு சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து தேவையான இடங்களில் அறிவியல் ரீதியாகக் கிட்டங்கிகளை அமைத்தல். தற்போது இந்நிறுவனத்தின் கீழ் 61 சேமிப்புக் கிடங்குகள் விஞ்ஞான முறைப்படி கட்டி பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(2) விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு வங்கிகளில் கடன் வசதியினைப் பெறும் தகுதியுள்ள பற்றுச் சீட்டுகளை வழங்கி வருகிறது.

(3) சரக்குகள் வைப்பாளர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரக்குகளை ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரத்துப் பணிக்கு ஒப்பந்தக்காரர்களை இந்நிறுவனம் நியமிக்கிறது.

(4) இந்நிறுவனம் தனது சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும் அரசு மற்றும் தனியார் கட்டடங்களிலும் பூச்சித் தாக்குதல் தடுப்புப் பணியினை மேற்கொண்டு வருகிறது.





**நிர்வாகக் கட்டமைப்பு**

இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமம் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணியை மேற்கொள்கிறது. இயக்குநர் குழுமத்தின் ஐந்து இயக்குநர்கள் மத்திய சேமிப்புக் கிடங்கு மூலமும், ஐந்து இயக்குநர்கள் தமிழக அரசாலும் நியமிக்கப்படுகின்றனர். இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளில் ஒருவர் (உயர்நிலை ஊதிய விகிதம்) இந்நிறுவனத்திற்குத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக அரசால் நியமிக்கப்படுகிறார். மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழக அரசால் அவ்வப்போது பொது நலன் கருதி எடுக்கப்படும் கொள்கை முடிவுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கருத்திற்கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது.

ஒவ்வொரு சேமிப்புக் கிடங்கும் தகுதி வாய்ந்த தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற சேமிப்புக் கிடங்கு மேலாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது. சேமிப்புக் கிடங்குகளின் பணியினை நேரடியாக மேற்பார்வையிட முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள் முறையாக ஆய்வு மேற்கொள்கின்றனர். மேலும், நிறுவனப் பணியானது திறம்படக் கட்டுப்பாடுடன் செயல்பட விழிப்புப் பணி பறக்கும் படை மற்றும் உள்தணிக்கைப் பிரிவு அதிகாரிகளால் முறையான மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இருப்பு வைப்பு கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாடு**

தமிழ்நாடு முழுவதுமாக, 61 இடங்களில் உள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளின் இடவசதி இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை வாரியம் (NAFED) தொலை தொடர்புத் துறை, சர்க்கரை ஆலைகள், கனிமம் மற்றும் உலோகங்கள் வர்த்தகக் கழகம் (MMTC) உரம் தயாரிக்கும் நிறுவனங்கள், சிமெண்ட் உபயோகப்படுத்தும் துறைகள், தேர்தல் துறை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், வணிகர்கள், வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர ஏறக்குறைய 50 தனியார் சரக்கு வைப்பாளர்கள் 2007-2008 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்கு வசதியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

14-3-2008 தேதி நிலவரப்படி இந்நிறுவனத்தின் சேமிப்புக் கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:

| | (மெட்ன்) |
|---|---|
| சொந்தக் கிடங்குகள் சேமிப்பு கொள்ளளவு | 6,05,404 |
| வாடகைக் கிடங்குகள் சேமிப்பு கொள்ளளவு | 30,511 |
| மொத்தம் | 6,35,915 |

ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரையிலான இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகளின் மாதாந்திர சராசரி பயன்பாட்டுக் கொள்ளளவு 87 விழுக்காடு ஆகும்.

**வியாபார விரிவாக்கம் மற்றும் புதிய வியாபார முயற்சிகள்.**

டிசம்பர் 2007லிருந்து, "சேவரட் இந்தியா" நிறுவனமானது மேலாண்மை முறையில் சரக்குகளைக் கையாளும் பணியினை இந்நிறுவனம்மூலம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சிறப்பான பணியினை கருத்திற் கொண்டு சென்னை பெட்ரோலியக் கழகமானது ஈக்காட்டுதாங்கலில் உள்ள அதன் கிடங்கிலிருந்து சரக்குகளை சென்னையில் உள்ள பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்றிடும் போக்குவரத்துப் பணியினை ஒப்பந்தம் மூலம் 1-7-2006 முதல் மேலும் இரு ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இப்பணியில், பாரபின் மெழுகு என்ற பொருளையும் மணலியில் உள்ள அதன் தொழிற்சாலையில் இருந்து ஈக்காட்டுதாங்கல் சேமிப்புக் கிடங்கில் இருப்பு வைத்து, சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியும் உள்ளடங்கியதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய எண்ணெய் கழகம், அந்நிறுவனத்தின் சரக்குகளை எடுத்துச் செல்லுதல் மற்றும் அனுப்பும் முகவராக (Carrying and Forwarding Agents) மதுரையில் பணியாற்ற, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒப்பந்த ஆணை அளித்துள்ளதால், இதன்படி இந்திய எண்ணெய் கழகத்தின் எண்ணெய் பொருட்களை, இதற்காக வடிவம் மாற்றியமைக்கப்பட்ட கிடங்குகளில் இருப்பில் வைத்து அவற்றை மதுரை, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் காரைக்காலிலும் உள்ள



விநியோகஸ்தர்களுக்கு வழங்கிடும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், இந்த ஒப்பந்தப் பணி 1-7-2005-ல் தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டு காலம் வரை அமலில் இருக்கும்.

**புதிய / கூடுதல் கிடங்குகள் கட்டுதல்**

தருமபுரியில் 6,250 மெட்ன் கொள்ளளவு உள்ள கூடுதல் கிடங்கு கடந்த 31-1-2008 இல் கட்டிமுடிக்கப்பட்டு, இப்புதிய கிடங்கு 1-2-2008 முதல் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வைப்புதாரருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும், பல்லடம் சேமிப்புக் கிடங்கில் 3,400 மெட்ன் கொள்ளளவு கொண்ட கிடங்கினையும், அவினாசியில் 2,000 மெட்ன் கொள்ளவு கொண்ட கிடங்கினையும் கட்டுவதற்கான இரண்டாம் கட்ட அடிப்படைப் பணிகள் (Tie Beam level) முடிவுற்று விட்டன. மேற்குறிப்பிட்ட கிடங்கு 2008-2009 முதல் காலாண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். மேலும் சரக்கு வைப்பாளர்களின் கிடங்குத் தேவையினைக் கருத்தில் கொண்டும், இதுவரை பயன்படுத்தப்பட்ட சேமிப்புக் கிடங்குகளின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டும், திண்டுக்கலில் 2,000 மெட்ன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்கு ரூ.77 இலட்சம் செலவில் 2008-2009 ஆம் ஆண்டில் கட்டப்படும்.

**நிதி ஆதாரங்கள்**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மூலதனம் ரூ.800 இலட்சமாகும். தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 50:50 இரு சம பங்குதாரர்களாக உள்ளனர். 2006-2007 ஆம் ஆண்டில் இந்நிறுவனமானது உயர்ந்த பட்ச இலாபமாக ரூ.652.68 இலட்சம் ஈட்டியுள்ளது. இயக்குநர் குழுவானது, பங்குதாரர்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக 6 விழுக்காடு அளித்திடத் தீர்மானித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக ரூ.45.66 இலட்சம் (முறையே ரூ. 22.83 இலட்சம் தமிழ்நாடு அரசுக்கும், ரூ.22.83 இலட்சம்

மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கும்) கடந்த 14-01-2008 அன்று வழங்கப்பட்டது. மேலும், கடந்த 9 மாத கால செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு 2007-2008 ஆம் ஆண்டிற்கும் கடந்த ஆண்டைப் போலவே லாபம் ஈட்ட இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பயிற்சி மற்றும் கணினிமயமாக்கல்**

*2007-2008* ஆம் நிதியாண்டில், பல்வேறு ஊழியர்கள், ஐதராபாதிலுள்ள இந்திய தானிய மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம், புதுடில்லி மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர். இந்நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் கணினி மூலம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தில் காகித உபயோகத்தைக் குறைப்பதற்காக, தன் பதிவேடு மற்றும் இதர பணிகளும் கணினிமூலம் பராமரிக்கும் முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்னணு அஞ்சல் வசதி அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் மின் அஞ்சல் மேலாண்மை தகவல் செயல்பாட்டினை திறன்பட மேற்கொள்ள, இணையதள வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் அரசிற்கும் இடையே மின் அஞ்சல் மூலம் நிருவாகத் தொடர்பு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





## அத்தியாயம்–9

## நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர்களுக்கு சட்ட விதிகளின்படி, உரிய விலையில், நல்ல தரத்துடன் பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதே, நுகர்வோர் கொள்கையின் அடிப்படைக் கொள்கையாக மாநில அரசு கொண்டுள்ளது. வணிகச் சந்தையின் சிக்கலான போக்கு, தொடர்ந்து மாறிவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் உலகமயமாக்கல் கொள்கை ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகளிலிருந்து நுகர்வோர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அவசியமாகிறது. வணிக நடைமுறைகளை இனங்கண்டு முறைப்படுத்துதல் மூலம், எளிதில் ஏமாறும் நுகர்வோர்களைச் சுரண்டுவதைத் தடுத்து, அவர்களைப் பாதுகாக்க இயலும். அதிகாரம் பெற்ற நுகர்வோர் என்கிற காலகட்டம் அமைவதற்கு, பழமையான சட்டங்கள் மற்றும் குறியீடுகளைத் திருத்தியமைப்பது இன்றியமையாததாகும்.

நுகர்வோர் மன்றங்கள் நிறுவுதல், மாவட்ட நுகர்வோர் தகவல் மையங்கள் அமைத்தல், விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சித் திட்டங்கள், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் கட்டமைப்பு போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, மைய அரசு மானியத் தொகை வழங்கி வருகின்றது. மேலும், 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநில அளவிலான நுகர்வோர் உதவி தொலைபேசிச் சேவை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே நுகர்வோர் கல்வி மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. *2007-2008* ஆம் நிதியாண்டில் இவ்வகையான திட்டச் செயலாக்கத்திற்காக, மாநில அரசு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்காக சிறப்பு நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களுக்காகவும், கல்விக் கூடங்களில் நுகர்வோர் மன்றங்கள் செயல்படுத்தவும், மைய அரசிடமிருந்து ரூ.2.67 கோடி மானியத் தொகையை மாநில அரசு பெற்றுள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில் மத்திய அரசு வழங்கிய மானியத் தொகையைக் கொண்டும், மாநில அரசின் நிதி உதவியைக் கொண்டும் பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

[2008 ஏப்ரல் 8

## நுகர்வோர் மன்றங்கள்

- அனைத்து உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நுகர்வோர் மன்றங்கள் (Consumer Clubs) அமைப்பதற்கு மிகுந்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. இம்மன்றங்கள் திறன்மிக்க அமைப்பாக வளர்ச்சி அடைந்து செயல்படும்வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. மோசடிகள் மற்றும் கலப்பட விளக்க முகாம்கள், நுகர்வோர் கல்விக் கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்திக் காட்ட, அருகிலுள்ள இடங்களுக்கு மாணவ உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று செயல்விளக்கம் அளிக்க, பள்ளி நுகர்வோர் மன்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதனைச் செயல்படுத்தும் வகையில், 2005-2006 ஆம் ஆண்டில், 500 பள்ளிகளில் நிறுவப்பட்ட நுகர்வோர் மன்றங்களுக்கு நிதியுதவியாக மொத்தம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது. இரண்டாவது மற்றும் கடைசி தவணைத் தொகையாக, 2007-2008 இல் வழங்கப்பட்ட ரூ.10,000/-ஐ சேர்த்து, இதுவரை மொத்தம் ரூ.20,000/- ஒரு நுகர்வோர் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2007-2008 ஆம் நிதியாண்டில், கூடுதலாக 500 பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் நிறுவுவதற்காக, முதல் தவணை நிதியுதவியாக ஒரு பள்ளிக்கு ரூ. 10,000/- வீதம் மொத்தம் ரூ. 50 இலட்சம் வழங்கிட அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில், 1,000 நுகர்வோர் மன்றங்கள் செயல்பாட்டிற்கென மொத்தம் ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மைய அரசு வழங்கிய மானியத் தொகை ரூ.36.25 இலட்சத்தைக் கொண்டு, மைய அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளைப் பின்பற்றி, பத்திரிகைகள், துண்டு பிரசுரங்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நுகர்வோர் கல்வி தொடர்பான புதிய அணுகுமுறைத் திட்டங்கள் ஆகியவை மூலம் கிராமங்களில் உள்ள அடித்தட்டு மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வுத் தகவல்களைப் பரப்புவதற்காக, சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களுக்கு, தலா ரூ.1.25 இலட்சம் வழங்கப்பட்டது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 மற்றும் பிற சட்டங்கள் பற்றியும், நுகர்வோர் உரிமைகளை முன்னிலைப்படுத்தும் முறைகள்



2008 ஏப்ரல் 8]

பற்றியும், அரசு சாரா அமைப்புகள், அரசுப் பணியாளர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் ஆகியோர் நுணுக்கங்களை அறிந்து செயல்படும் வகையில் போதிய பயிற்சி அளிப்பது, நுகர்வோர் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு முக்கியமானதாகும். இது, நுகர்வோர் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும், நன்முறையில் செயலாக்கம் செய்வதற்கும் ஏதுவாகிறது. இதற்காக, மைய அரசிடமிருந்து மானியத் தொகையாக ரூ.10.92 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், நுகர்வோர் சேவை தொடர்புடைய பல்வேறு துறைகளின் செயலாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் தலா ரூ.36,400/- வழங்கப்படவுள்ளது.

- சமுதாயப் பணியில் ஈடுபாடுள்ள, நுகர்வோர் நண்பனாக விளங்குகின்ற மற்றும் அறிவுசார்ந்த ஆர்வலர்கள் அடங்கிய குழுக்களை உருவாக்கிட வழிவகை செய்வதற்காக, அப்பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் இத்தகைய அமைப்புகளான, சுய உதவிக் குழுக்கள், அருகாமை தன்னார்வக் குழுக்கள், விவசாய மன்றங்கள், தண்ணீர் உபயோகிப்பாளர்கள் சங்கங்கள், பகுதி மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு பயிற்சி அளிப்பதற்கு திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டது. இதற்காக, மைய அரசிடமிருந்து மானியத் தொகையாக ரூ.69.90 இலட்சம் பெறப்பட்டது. வட்டார அளவில் இப்பயிற்சி சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அளிக்கப்படும். அவர்கள்மூலம் பிற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் பரப்பப்படும். இத்திட்டத்தின் கீழ் 300 வட்டாரங்களில் இயங்கும் 9,000 சுய உதவிக் குழு உறுப்பினர்கள்/பஞ்சாயத்து அமைப்புகளின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி, 2008 ஜூலையில் நிறைவுபெறும்.

## தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி

மத்திய, மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அளித்த மூலதனப் பங்களிப்புத் தொகை தலா ரூ.50 இலட்சத்தைக் கொண்டு, தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தும் வழிமுறைகள் விரிவாக வகுக்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி விதிகள் உருவாக்கப்பட்டு, அவ்விதிகள்

அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. அவ்விதிகளில் அந்த நல நிதியைப் பயன்படுத்தும் வழிமுறைகளும், மாவட்ட குறைதீர் மன்றங்கள் மற்றும் மாநில குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடுக்கும் நுகர்வோர் செலுத்தும் வழக்குக் கட்டணம் மற்றும் அந்தந்தக் குறைதீர் மன்றங்களின் தீர்ப்பாணைகளில் விதிக்கும் அபராதக் கட்டணம் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி தொகுப்பில் சேர்த்திடவும், வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி விதிகளில் கண்டுள்ள வழிகாட்டுதலுக்குட்பட்டு, நுகர்வோர் அமைப்புகள் மற்றும் ஊடகங்கள்மூலம் நுகர்வோர் கல்வியினை ஊக்குவிக்கவும், நுகர்வோர் நலன் தொடர்புடைய ஆராய்ச்சிக்காகவும், இந்த நிதி பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தப்படும். தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு நல நிதி தொகுப்பில் இருப்பில் உள்ள ஒரு கோடி ரூபாயில், ரூ.32 இலட்சம் நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்களைப் பரப்பும் வகையில் குறும்படங்கள் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு வாயிலாகத் தயாரிக்கப்படும் இக்குறும்படங்கள் தொலைக்காட்சிமூலம் 2008-2009 ஆம் ஆண்டில் ஒளிபரப்பப்படும்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் நுகர்வோர் உரிமை குறித்த அறிவு ஊட்டப்படவேண்டும். நுகர்வோர்கள், குறிப்பாக, கிராமப்புற நுகர்வோர்களுக்கிடையே காணப்படும் அறியாமைதான் அவர்கள் சுரண்டப்படுவதற்குக் காரணமாக அமைகிறது. வெவ்வேறு துறைகளில் நுகர்வோருக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக, கடந்த பல ஆண்டுகளாக கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கருத்தரங்கங்களில், பொது நல நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சேவையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டுள்ளனர். கைபேசி தொடர்புகள், கடன் அட்டைகள், மருந்துகள், நிலவுடைமை, மற்றும் நேர்மையற்ற வணிக நடைமுறை ஆகியவை குறித்து கருத்தரங்குகள் துறையினால் நடத்தப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் சார்புடைய நிறுவனங்களுக்கு கருத்தரங்குகளில் எடுக்கப்பட்ட கொள்கைப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதுபோன்ற கருத்தரங்குகளை தொடர்ந்து 2008-2009 ஆம் ஆண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர்கள் அவர்களது உரிமைகள் பற்றி பொதுவாகவும், சட்டங்கள், தரங்கள், விதிகள் மற்றும் குறியீடுகள் பற்றிய விவரங்களை பத்திரிகைகள் மூலம் தெரிந்துகொள்வதற்காக, புதிதாக வடிவமைக்கப்பட்ட "நுகர்வோர் கவசம்" என்ற காலாண்டு பத்திரிகை,



உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரால் வெளியிடப்பட்டு வருகின்றது. அதன் பிரதிகள் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகளின் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொது நூலகங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. தற்போது 6,500 பிரதிகளைக் கொண்டுள்ள இப்பத்திரிகையின் எண்ணிக்கையை உயர்த்தவும், அதனை 2008-2009 ஆம் ஆண்டில் மாதாந்திரப் பத்திரிகையாக வெளியிடவும், பிரதிகளுக்கு விலை நிர்ணயம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நுகர்வோர் அமைப்புகளுக்கு பரிசுகள்**

- நுகர்வோர் பாதுகாப்பிற்காக சிறந்த சேவை புரியும் தன்னார்வ அமைப்புகளின் ஆர்வலர்களுக்கு, ஒவ்வோர் ஆண்டும் பரிசுகள் வழங்கி மாநில அரசு அவர்களைப் பாராட்டி வருகின்றது.

நுகர்வோர்களின் பயன்பாட்டிற்காக, நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய www.consumer.tn.gov.in என்ற தனி இணையதளம் ஒன்றைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது. இந்த இணையதளம் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த தகவல்களைக் கொண்டுள்ளது. மேலும், நுகர்வோர் தங்களது புகார்களை நேரடியாகப் பதிவு செய்திடவும் இந்த இணையதளத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலக நுகர்வோர் தின விழா ஆண்டுதோறும் மார்ச் மாதம் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. மாநில அளவிலான உலக நுகர்வோர் தின விழா திருவண்ணாமலை மாவட்டத்தில் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான தேசிய நுகர்வோர் தின விழா மதுரை மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.

**இதர திட்டங்கள்**

2008-2009 இல் கீழ்க்கண்ட திட்டங்களை அரசு செயல்படுத்தவுள்ளது:

(I) மாநில அளவிலான பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கருத்து பட்டறைகள் நடத்துதல், ஊடகங்கள்மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளுதல், மாதாந்திரப் பத்திரிகை அச்சிட்டு வெளியிடுதல், தகவல்கள் அடங்கிய விளம்பர பலகை அமைத்தல்.

(2) சென்னையில் மாநில நுகர்வோர் தகவல் மையமும், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகத்தில் மாவட்ட நுகர்வோர் தகவல் மையமும் நிறுவுதல்.

(3) உலக மற்றும் தேசிய நுகர்வோர் தினங்களின் மாநில அளவிலான விழாக்களை, குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் கொண்டாடுதல்.

(4) உணவுப் பொருட்கள் மற்றும் இதர நுகர்வோர் பொருட்களின் தரத்தை அந்தந்த இடங்களிலே உடனடியாக பரிசோதனை செய்யும் வகையில், உரிய உபகரணங்களுடன் கூடிய நடமாடும் பரிசோதனைக் கூடம் துவங்குதல்.

(5) பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல் மற்றும் துரித உணவு (Junk Food) வகைகளைத் தவிர்ப்பது ஆகியன குறித்து மாவட்ட அளவிலான பயிற்சி அளித்தல்.

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்**

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், நுகர்வோர் குறைகளை விரைவாகவும் எளிதாகவும் தீர்க்கும் பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவில், கீழ்க்காணும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

**தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னையில் இயங்கி வருகிறது. ரூ.20 இலட்சத்திற்கு அதிகமாகவும் ரூ.1 கோடிக்கு குறைவாகவும் நஷ்ட ஈடுகோரும் நுகர்வோர்கள் இம்மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடரலாம். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் செயல்படுகிறது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் ஒருவர் ஆண் மற்றவர் பெண். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் மீது மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேல் விசாரணை செய்யப்பட்டு, தீர்வு செய்யப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் பின்வருமாறு:



| மாதம் | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | | அசல் மனுக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாத துவக்கத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மொத்தம் | தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மாத இறுதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை | நிலுவை | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மொத்தம் | தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மாத இறுதியில் மீதமுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| ஜனவரி 2007 | 2287 | 171 | 2458 | 52 | 2406 | 385 | 1 | 386 | 3 | 383 |
| பிப்ரவரி 2007 | 2406 | 51 | 2457 | 63 | 2394 | 383 | 7 | 390 | 6 | 384 |
| மார்ச் 2007 | 2394 | 51 | 2445 | 69 | 2376 | 384 | 5 | 389 | 8 | 381 |
| ஏப்ரல் 2007 | 2376 | 46 | 2422 | 88 | 2334 | 381 | 15 | 396 | 10 | 386 |
| மே 2007 | 2334 | 46 | 2380 | 54 | 2326 | 386 | 2 | 388 | 3 | 385 |
| ஜூன் 2007 | 2326 | 63 | 2389 | 87 | 2302 | 385 | 3 | 388 | 4 | 384 |
| ஜூலை 2007 | 2302 | 55 | 2357 | 89 | 2268 | 384 | 1 | 385 | 13 | 372 |
| ஆகஸ்ட் 2007 | 2268 | 81 | 2349 | 91 | 2258 | 372 | 8 | 380 | 10 | 370 |
| செப்டம்பர் 2007 | 2258 | 51 | 2309 | 97 | 2212 | 370 | 4 | 374 | 13 | 361 |
| அக்டோபர் 2007 | 2212 | 84 | 2296 | 80 | 2216 | 361 | 8 | 369 | 8 | 361 |
| நவம்பர் 2007 | 2216 | 66 | 2282 | 99 | 2183 | 361 | 7 | 368 | 2 | 366 |
| டிசம்பர் 2007 | 2183 | 74 | 2257 | 101 | 2156 | 366 | 1 | 367 | 24 | 343 |

[2008 ஏப்ரல் 8

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்:**

1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் நிறுவப்பட வேண்டும். தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்படுகின்றன. அவற்றுள் ஆறு மன்றங்கள் ஒருங்கிணைந்த மன்றங்களாகச் செயல்படுகின்றன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் நீதி முறை சார்புடைய அமைப்புகள் ஆகும். ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் நஷ்டஈடு கோரும் எந்த ஒரு நபரும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்குத் தொடரலாம். ஒவ்வொரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திலும் ஒரு தலைவரும், ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உறுப்பினர்கள் உள்ளனர்.

2007 ஆம் ஆண்டின் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| மாதம் | மாதத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மொத்தம் | தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஜனவரி 2007 | 7228 | 336 | 7564 | 306 | 7258 |
| பிப்ரவரி 2007 | 7258 | 315 | 7573 | 339 | 7234 |
| மார்ச் 2007 | 7234 | 331 | 7565 | 375 | 7190 |
| ஏப்ரல் 2007 | 7190 | 366 | 7556 | 381 | 7175 |
| மே 2007 | 7175 | 385 | 7560 | 320 | 7240 |
| ஜூன் 2007 | 7240 | 289 | 7529 | 357 | 7172 |
| ஜூலை 2007 | 7172 | 342 | 7514 | 341 | 7173 |
| ஆகஸ்ட் 2007 | 7173 | 314 | 7487 | 344 | 7143 |
| செப்டம்பர் 2007 | 7143 | 338 | 7481 | 332 | 7149 |
| அக்டோபர் 2007 | 7149 | 548 | 7697 | 356 | 7341 |
| நவம்பர் 2007 | 7341 | 262 | 7603 | 353 | 7250 |
| டிசம்பர் 2007 | 7250 | 260 | 7510 | 380 | 7130 |



2008 ஏப்ரல் 8]

மேலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கும் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர, அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டில், நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு 37 கூடுதல் பணியிடங்கள், குறைதீர் மன்றங்களின் செயல்பாட்டை வலுப்படுத்த, ஏற்படுத்தப்பட்டுள்ளன. நுகர்வோர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்த புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் பிரிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல், செங்கல்பட்டு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்த விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் கடலூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்காக புதியதாக ஒருங்கிணைந்த நுகர்வோர் குறைதீர் மன்றம் ஏற்படுத்தப்பட்டு, கிருஷ்ணகிரியில் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது.

**குறைதீர் மன்றங்களை கணினிமயமாக்கும் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், மாவட்ட குறைதீர் மன்றங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, ஒருங்கிணைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரை மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் நீங்கலாக, ஏனைய மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வன்பொருள் / மென்பொருள் மற்றும் அகன்ற தகவல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதுரை மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு கணினி வன்பொருள் / மென்பொருள் பொருத்தப் பட்டுள்ளன. மேலும், அகன்ற தகவல் தொடர்பு விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது. 2008, ஜூன் திங்கள் முதல் நேரடி தகவல் தொடர்புமூலமாக வழக்குகள் பற்றிய ஆவணங்களையும் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் கணினிமூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினிமூலம் ஒருங்கிணைக்கப்படும் இத்தகவல் தொடர்பு திட்டத்தினால், அன்றாடம் பொதுமக்கள் நீதிமன்ற நடப்புகளையும், தீர்ப்புகளையும், நிலுவை இனங்களையும் உடனடியாகத் தெரிந்து பயன்பெற வாய்ப்புள்ளது. இத்தகவல் தொடர்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின்மூலம் நுகர்வோர் மன்றங்கள், தகவல்களை பட்டியலிட்டு, விரைவாக வழக்குகள் குறித்த விவரங்களைப் பெறலாம்.

## இணைப்பு-III

*(178 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 12

## கூட்டுறவுத் துறை

## அறிவிப்புகள் - 2008-2009

### 1. பயிர்க் கடன் வழங்குதல் மற்றும் விவசாய சுய உதவிக் குழுக்கள் மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைத்தல்

2008-2009 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள்மூலம் ரூ.1,500 கோடி அளவிற்கு பயிர்க் கடன்கள் வழங்கப்படும் என்றும், 1 இலட்சம் விவசாயிகள் 10,000 சுய உதவிக் குழுக்களாக அமைக்கப்பட்டு ரூ.10 கோடி சுழல் நிதியாக வழங்கப்படும் என்றும், இக்குழுக்கள் கூட்டுப் பொறுப்பு குழுக்களாக அமைக்கப்பட்டு பயிர்க் கடன் வழங்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2008-2009-ல் பயிர்க் கடன் வழங்கும்போது குறைந்தபட்சம் 30 சதவீதம் இதுவரை கடன் பெறாத விவசாய உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

### 2. விவசாயிகளுக்கு அதிக அளவில் தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்

அறுவடைக் காலங்களில் விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி அடைவதையும், சேமித்து வைக்க வசதியில்லாத சிறு, குறு விவசாயிகள் இதனால் பாதிப்புக்குள்ளாவதையும் தடுக்க சேமிப்பு வசதி உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அதிக அளவில் தானிய ஈட்டுக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கூட்டுறவு அமைப்புகள்மூலம் மட்டும் ரூ.100 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படும்.

### 3. கூட்டுறவுக் கடன் கட்டமைப்புகளைப் புனரமைத்தல்

குறுகிய காலக் கடன் கட்டமைப்புகள் நலிவுற்ற நிலையில் உள்ளதால் அவற்றைச் சீரமைக்க பேராசிரியர் வைத்தியநாதன்

குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் குறுகிய காலக் கடன் அமைப்புகளின் 31-3-2004 வரை உள்ள குவிந்த நட்டம். மத்திய, மாநில அரசுகளால் ஈடுசெய்யப்படும்.

இதேபோல் நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்புகளும் பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரை அடிப்படையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. மத்திய கால / நீண்ட காலக் கடன் பெறுவது குறித்து திட்டம் தயாரிக்க தொழில்நுட்ப ஆலோசனை மையம் அமைத்தல்**

மத்திய கால மற்றும் நீண்ட காலக் கூட்டுறவு கடன் அமைப்புகளில் விவசாயம் மற்றும் பண்ணைசாரா தொழில் முனைவோருக்குத் திட்டம் தயாரிக்கவும், அவற்றை மதிப்பீடு செய்யவும், பயனாளிகளுக்கு உதவும் வகையில் ஒரு ஆலோசனை மையம் சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் நில மேம்பாட்டுக் கடன் உள்பட தோட்டக்கலைத் திட்டங்கள், காய்கறி வளர்ப்பு, பழத் தோட்டங்கள் அமைத்தல், தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள், உயர் தொழில் நுட்ப விவசாய உற்பத்தி, இயற்கை வேளாண்மை போன்ற தற்கால தேவைக்கேற்ப பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**5. அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்குதல்**

கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களுக்கு துரிதமான சேவை செய்யும் பொருட்டும், பல்வேறு நிலையிலுள்ள வங்கிகளை ஒருங்கிணைக்கவும் பிற வணிக வங்கிகளின் போட்டியினை எதிர்கொள்ளும் பொருட்டும் கூட்டுறவு வங்கிகள் படிப்படியாக கணினிமயமாக்கப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பணியைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு 2008 ஆம் ஆண்டிலேயே அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முழுமையாக கணினிமயமாக்கப்படும். இதற்கென மென்பொருளுக்கு ரூ.2 கோடி கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து செலவிடப்படும்.





**6. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஒருங்கிணைத்து தகவல் பரிமாற்றம் ஏற்படுத்துதல்**

சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஒருங்கிணைத்து அந்த மையங்களில் ஒளிரும் விளக்குப் பலகைகள் மூலம் பல்வேறு சந்தைகளில் நிலவும் விலை நிலவரம் குறித்தும், எதிர்கால விலை நிலவரம் பற்றியும் விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்படும். காலப் போக்கில் இத்தகைய விற்பனைச் சங்கங்கள் பல்பொருள் சந்தைகளோடு நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

**7. விவசாயிகளுக்குத் தரமான விதைகளை கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விற்பனை செய்தல்**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம். துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் மற்றும் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம்மூலமாக தரமான விதைகளை ரூ.10 கோடி அளவில் அதாவது தற்போது உள்ள அளவை விட இரண்டு மடங்காக்கி உற்பத்தி மற்றும் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படும்.

**8. 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை பயிர் மருத்துவ மையங்களாக மாற்றி பல்வேறு வகைப்பட்ட பயன்பாட்டு மையங்களாக்குதல்**

விவசாயத் தொழில் நுட்பம், பயிர்ப் பாதுகாப்பு, விலை விவரங்கள், பருவ கால முன்னறிவிப்பு, மண் வளப் பாதுகாப்பு போன்ற பல்வேறு விரிவாக்கப் பணிகளை ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கு வழங்கவும் விவசாய உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்தவும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பல்வேறு வகைப்பட்ட பயன்பாட்டு மையங்களாக 2008-2009 ஆம் ஆண்டில் செயல்படும்.

**9. மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைத்தல்**

தமிழ்நாட்டில் 19 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் செயல்பாடுகள் பல ஆண்டுகளாக நலிவுற்று அவை பெருத்த நட்டத்தில் உள்ளன. சோதனை முறையில் கொல்லிமலை பெரும்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரசு எடுத்த முயற்சியின் காரணமாக அப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கைக் கொள்முதல் செய்து அரவை ஆலைகளுக்கு விற்பனை செய்து இலாபம் ஈட்டி வருகிறது. இதேபோல, மற்ற சங்கங்களும் ஊக்குவிக்கப்பட்டு பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடித்து அவற்றின் செயல்பாடுகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மேலும் 6 மாவட்டங்களில் செயல்படுத்துதல்**

*2008-2009* ஆம் ஆண்டில் புதியதாக திருநெல்வேலி, கரூர், நாகப்பட்டினம், வேலூர், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய *6* மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

**11. திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

தமிழ்நாட்டில் உள்ள *23* மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், *22* மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் உள்ளன. சொந்தக் கட்டடம் இல்லாத திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு *2008-2009* ஆம் ஆண்டில் ரூ.*4.00* கோடி மதிப்பில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

**12. கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்**

*26* கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்க ·மூவர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு தனது அறிக்கையில் அவ்வச்சகங்களின் மேம்பாட்டிற்காக தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையின் அடிப்படையில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லாக் கடனாக ரூ.*3* கோடி அளித்து இவ்வச்சகங்களை நவீனமயமாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல்**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மல்லசமுத்திரம் கிளைககு கூடுதல் கிடங்கு தேவைப்படுவதால், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் *1,000* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய கிடங்கு ரூபாய் *32* இலட்சம்



மதிப்பீட்டில் கட்டப்படும். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தினால் மன்னார்குடியில், திருவாரூர் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் *33* இலட்சம் மதிப்பீட்டில் விதை சேமிப்புக் கிடங்கு கட்டப்படும்.

**14. கூட்டுறவு நியாய விலைக் கடைகளை சோதனை முறையில் சிறு பல்பொருள் அங்காடிகளாக மாற்றுதல்**

கிராமப்புற மக்களுக்கு மேம்பட்ட சேவை அளிக்கும் வகையில் *2008-2009* ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட *500* நியாய விலைக் கடைகளில் சங்கங்களின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்பட்டு அவற்றின் சூழலை புதுப்பொலிவூட்டி சிறு பல்பொருள் அங்காடிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**15. இணைப் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

விழுப்புரம் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.*60* இலட்சம் மதிப்பீட்டில் பகுதி II திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப்படும்.

**16. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தைக் கணினிமயமாக்குதல்**

கூட்டுறவுத் துறையின் பணிகளை ஒருங்கிணைத்து அதன் கண்காணிப்பை மேம்படுத்தவும், இத்துறையின் செயல்பாடுகளைச் சீரமைக்கவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.*35* இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

**17. திருச்சி சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை வைப்புதாரர்களுக்கு வைப்புத் தொகையினை திரும்ப அளித்தல்**

திருச்சி சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை வைப்புதாரர்கள் வைப்புத் தொகையினை திரும்பக் கேட்டு பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு ஒரு நிரந்தர முடிவு காண தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் இடர் உத்தரவாத நிதியிலிருந்து (Risk guarantee fund) ரூ.*5.00* கோடி வட்டியில்லாக் கடனாக திருச்சி சிந்தாமணி

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு வழங்கப்பட்டு, பொது மக்களுக்கு திருப்பி அளிக்க வேண்டிய வைப்புத் தொகை நிலுவை சுமார் ரூ.5.00 கோடி முழுவதும் வைப்புதாரர்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

**18. பெரியார் பல்கலைக்கழகத்திற்குக் கூட்டுறவு ஆராய்ச்சிக்கு நிதியுதவி அளித்தல்**

சேலம் மாநகரில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தில் கூட்டுறவு ஆராய்ச்சி செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான தனி நிதியம் ஏற்படுத்தப்படும்.

**19. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மகளிர் உறுப்பினர்களுக்கான வட்டியில்லா பங்குத் தொகை கடன், அரசின் பகுதி I திட்டத்தின்கீழ் வழங்கப்படுதல்**

(i) 2008-2009 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.250/- வீதம் ரூ.20.00 இலட்சமும், நகர கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.500/- வீதம் ரூ.5.00 இலட்சமும் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக வழங்கப்படும்.

(ii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்குத் தொகை கடனாக 2,000 உறுப்பினர்களுக்கு ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.10.00 இலட்சம் வழங்கப்படும்.

(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்குத் தொகைக் கடனாக 500 உறுப்பினர்களுக்கு ரூ.1,000/- வீதம் மொத்தம் ரூ.5.00 இலட்சம் வழங்கப்படும்.

(iv) நகர கூட்டுறவு வங்கி பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்குத் தொகைக் கடனாக 1,000 உறுப்பினர்களுக்கு ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.5.00 இலட்சம் வழங்கப்படும்.



(v) கூட்டுறவு வங்கிகளில் உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு வட்டி இல்லா பங்குத் தொகை கடனாக 1,000 உறுப்பினர்களுக்கு ரூ.500/- வீதம் மொத்தம் ரூ. 5.00 இலட்சம் வழங்கப்படும்.

மேற்படி வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் அரசின் பகுதி I திட்டத்தின்கீழ் வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் இவ்வுறுப்பினர்கள் கூடுதலாகக் கடன் பெற்று பயன் அடைவார்கள்.

**20. கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் எம்.பி.ஏ பட்டப்படிப்பு துவக்குதல்**

சென்னையிலுள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் மதுரையிலிலுள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையம் ஆகியவை தேசிய தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 2008-2009 ஆம் ஆண்டு முதல் எம்.பி.ஏ. பட்டப்படிப்பு துவக்கப்படும்.

**21. திருக்குவளையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருவாய்மூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது திருக்குவளையில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வங்கிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகத்துடன் இணைந்த கிடங்கு (Office *cum* Godown) ஒன்று நடப்பு ஆண்டில் கட்டப்படும்.

## இணைப்பு IV

*(170 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 13—

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## அறிவிப்புகள் 2008-2009

### 1. சென்னையில் இரண்டு புதிய மண்டல அலுவலகங்கள் தோற்றுவித்தல்

1980 ஆம் ஆண்டு வரை சென்னை நகரில் பொது விநியோகத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க 5 மண்டல அலுவலகங்கள் இயங்கி வந்தன. மண்டல அலுவலகங்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 1997 ஆம் ஆண்டில் 14 மண்டல அலுவலகங்களாக வளர்ந்துள்ளன. அப்போது குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 5 இலட்சம். தற்போது குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 21 இலட்சம். குடும்ப அட்டைகள் வழங்கும் பணிகளைத் திறம்படச் செயல்படுத்த, அதிக குடும்ப அட்டைகள் உள்ள தாம்பரம் மண்டலத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய மண்டலமும், அம்பத்தூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர் ஆகிய மூன்று மண்டல அலுவலகங்களைத் திருத்தி அமைத்துக் கூடுதலாக ஒரு புதிய மண்டல அலுவலகமும், ஆக 2 புதிய மண்டல அலுவலகங்கள் மிகை பணியிடங்களைச் சீரமைத்துக் கூடுதல் நிதிச்சுமையின்றி சென்னை நகரில் அமைக்கப்படும்.

### 2. குறைகள் பதிவு செய்ய கட்டணம் இல்லாத் தொலைபேசி இணைப்பு வசதி ஏற்படுத்துதல் (Toll free number)

பொது விநியோகத் திட்டத்தில் ஏற்படும் குறைபாடுகள், குடும்ப அட்டைகள் வழங்குவதில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றையும் நுகர்வோர் சட்டம் பற்றியும் புகார்கள் குறித்து உடனுக்குடன் பதிவு செய்து, குறைகளைக் களைய உரிய நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் கட்டணம் இல்லாத் தொலைபேசித் தொடர்பு இணைப்பு வசதி (Toll free number) சென்னை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் உரிய ஆலோசனைகளை உடனுக்குடன் பெறுவதோடு வணிக செய்முறை

சேவை மையம் (BPO Service) போல தொடர் சேவை வசதியை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி குறைதீர்க்கும் பணி சீரமைக்கப்படும்.

### 3. பொதுமக்களுக்கு உணவுப் பொருள் வழங்கல் துறையின் இணையதள சேவை

தற்போது இத்துறையில் செயல்படுத்தி வரும் மின் அணு நிர்வாகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளுக்கான மனுக்களை பொது மக்கள் ஆன்லைன்மூலம் பதிவு செய்யவும், குடும்ப அட்டைகளில் பெயர் மாற்றம், இடமாற்றம் முதலிய மாற்றங்களைப் பதிவு செய்யவும், பொது விநியோகத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தெரிவிக்கவும் மனுக்களின் மீதான நடவடிக்கை நிலைபற்றி இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளவும் வசதி ஏற்படுத்தப்படும். இந்த வசதி இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் செயல்முறைக்கு வரும்.

### 4. சென்னை நகரில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சோதனை அடிப்படையில் மின்னணு பட்டியல் இயந்திரங்கள் வழங்குதல்

சென்னை பெருநகர்ப் பகுதியில் சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் மொத்தம் 1,272 நியாய விலைக் கடைகளில் உள்ள குடும்ப அட்டைகள் குறித்த விவரங்கள் ஏற்கெனவே கணினிமூலம் நாளது தேதிவரை திருத்தி அமைத்து அன்றாடம் ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்கியதாக மாற்றி அமைக்கப்படும். அத்துடன் நியாய விலைக் கடைகளில் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, அவ்வப்போது விற்பனை செய்யப்படும் விவரங்கள் இணையதளம்மூலம் கண்காணிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

### 5. மாவட்டந்தோறும் பொது விநியோகத் திட்டத்திற்கென வட்ட அளவில் குறை தீர்க்கும் கூட்டம் நடத்துதல்

பொதுமக்கள் பொது விநியோகக் கடைகள் சம்மந்தமாக குறைபாடுகளைத் தெரிவிக்கவும், அவற்றை உடன் தீர்வு செய்யும் வண்ணம், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இரண்டாம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் உள்ளாட்சிப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகள் சம்பந்தமான குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்படும். இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார் பதிவாளர், கூட்டுறவு சங்க தனி



அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர், உள்ளாட்சி மன்ற உறுப்பினர் கலந்துகொள்வார்கள். பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு கண்டு குறைகளை ஏழு தினங்களுக்குள் தீர்த்து வைப்பார்கள். கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் தேதி முன்கூட்டியே சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் இராம நிர்வாக அலுவலர்மூலம் விளம்பரப்படுத்தப்படும். சென்னையைப் பொறுத்தளவில், ஒவ்வொரு மண்டலத்திலும் முன்கூட்டியே தேர்வு செய்யப்பட்ட அட்டவணையின்படி முன் அறிவிப்போடு இதே போன்ற குறை தீர்க்கும் கூட்டங்கள் மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமை அன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டங்கள் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர், கூட்டுறவு சார் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பகுதி அலுவலர் மற்றும் வார்டு உறுப்பினர் பங்கேற்புடன் நடைபெறும். மேற்கண்ட குறை தீர்க்கும் கூட்டங்களுக்கு மாவட்ட வழங்கல் அலுவலர், துணை ஆணையர்கள், கூட்டுறவு இணைப் பதிவாளர், துணைப் பதிவாளர் ஆகியோர் சிறப்புப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

### 6. இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்குதல்

இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்ட 2006-2007 ஆம் ஆண்டு 3 இலட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் 8 இலட்சம் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 31-3-2008 வரை 4.59 இலட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக 2008-2009 ஆம் நிதியாண்டில் மேலும் 8 இலட்சம் இலவச இணைப்புகள் இலவச எரிவாயு அடுப்புகளுடன் வழங்கப்படும்.

### 7. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறைக்கு நான்கு புதிய அலகுகள்

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துபவர்மீது குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை கண்காணித்து கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்தில் 16 அலகுகளாக இக்காவல் பிரிவு இயங்குகின்றது. இப்பணியைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் திருவாரூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 புதிய அலகுகள் அமைக்கப்படும். மதுரையில் கூடுதல் கண்காணிப்பாளர் பதவி

கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு உயர்த்தப்படும். இதற்கென 40 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**8. பறக்கும் படை பிரிவிற்கு செல்லிடத் தொலைபேசி வழங்குதல்**

மாவட்ட ஆட்சியாளர்களின்கீழ் இயங்கும் பறக்கும் படை தகவல் பரிமாற்றம் செய்து தங்கள் பணியைச் செவ்வனே செய்ய, சென்னை மற்றும் மற்ற மாவட்டங்களில் இயங்கும் பறக்கும் படை சிறப்புத் பிரிவிற்கு தலா ஒரு செல்லிடத் தொலைபேசி இணைப்பு வீதம் 36 இணைப்புகள் ரூ.3.07 இலட்சத்தில் பகுதி-II திட்டத்தில் வழங்கப்படும்.

**9. கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வழங்குதல்**

பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பாகக் கண்காணிப்பதற்கும், அத்தியாவசியப் பொருட்கள் கடத்துவதைத் தடுப்பதற்கும் சென்னை மற்றும் மற்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் மாவட்ட மற்றும் உணவு வழங்கல் அலுவலர்களின் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 12 புதிய ஈப்புகள் ரூ.55.20 இலட்சம் செலவில் பகுதி II திட்டத்தில் வழங்கப்படும்.

**10. கல்லூரிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல்**

பொது மக்களிடையே நுகர்வோர் உரிமைகள் குறித்த போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு திட்டமாக 1,000 பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோல் 2008-2009 ஆம் ஆண்டில் 500 கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்தபட்சம் 50 மாணவர்களைக் கொண்ட நுகர்வோர் மன்றங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு மன்றத்திற்கும் தலா ரூ.5,000 வீதம் ரூ.25 இலட்சம் விழிப்புணர்வுப் பணிகளுக்காக மைய அரசின் நிதியுதவி பெற்று வழங்கப்படும்.

**11. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டில் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும்



திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் மைய அரசிடம் பெற்ற நிதியுதவியில் ரூ.158 இலட்சம் செலவில் புதிய வளாகங்கள் அமைக்கப்படும்.

**12. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை நடத்த மாவட்டந்தோறும் குறிப்பிட்ட ஒரு நீதிமன்றத்திடம் ஒப்படைத்தல்**

இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955-ன்கீழ் பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இதன் காரணமாக, நிர்வாகத்துக்குக் காலவிரயமும், பொருட்செலவும் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக, "இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955"-ன்கீழ் உள்ள வழக்குகளை நடத்துவதற்காக, மாவட்டந்தோறும் ஒரு குறிப்பிட்ட நீதிமன்றமே இதில் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் நடத்த ஆவன செய்யப்படும்.

**13. நபார்டு வங்கி உதவியுடன் நெல் உலர்த்தும் களம் அமைத்தல்**

காவிரி பாசனப் பகுதி விவசாயிகள் பயன்பெற குறிப்பாக குறுவை பருவத்தில் மழை பெய்யும் காலங்களில் கொள்முதல் நிலையங்களில் நெல்லினை இறக்கி வைத்து விற்பனை செய்ய வசதி இல்லாத 25 இடங்களில் 2008-2009-ல் நெல் உலர்த்தும் களம் தலா ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**14. நபார்டு வங்கி உதவியுடன் நெல் கொள்முதல் நிலைய கட்டடங்கள் அமைத்தல்**

2006-2007 ஆம் ஆண்டு முதல் நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டும் பணி இந்த அரசால் மீண்டும் தொடங்கப்பட்டது. நுகர்பொருள் வாணிபக் கழக நிதியிலிருந்து ஆண்டுக்கு 10 நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு 10 இடங்களில் தலா ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.1.30 கோடி செலவில் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் அமைக்கப்படும்.

**15. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் புதிய கிட்டங்கிகள் கட்டுதல்**

அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து விநியோகம் செய்ய அறிவியல் பூர்வமாக கட்டப்படாத வாடகைக் கட்டடங்களுக்குப் பதிலாக நுகர்பொருள் வாணிபக் கழகம் படிப்படியாக புதிய

கட்டடங்களைக் கட்டி வருகிறது. 2008-2009 ஆண்டில் 1000 மெ.டன் கொள்ளவு கொண்ட கட்டடங்கள் தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில் பகுதி-II திட்டத்தில் கட்டப்படும். அதேபோல, திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டத்தில் 1000 மெ.டன் கொள்ளவு கொண்ட புதிய கிட்டங்கி ரூ.3.5 இலட்சம் செலவில் கழக நிதியிலிருந்து கட்டப்படும்.

### 16. கிட்டங்கிகளில் தானியங்கி இயந்திர இழுவை அமைத்தல்

கிட்டங்கிகளில் தற்போது மூட்டைகளை லாரிகளில் ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டுள்ள சுமை தூக்கும் தொழிலாளர்களின் சிரமங்களைக் களைய சென்ற ஆண்டு சோதனை முறையில் தானியங்கி இயந்திர இழுவை, சென்னை அண்ணாநகர் கிட்டங்கிகளில் அமைக்கப்பட்டது. அதேபோல, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் பயன்படுத்தாமல் இருந்த தானியங்கி இயந்திர இழுவையை மதுரை மாவட்டம் வி.கே.புரம் கிட்டங்கிகளில் நிறுவி பயன்படுத்தப்படுகிறது. இதனால், பொருட்களைக் கையாளும் நேரம் 50 சதவீதமாகக் குறைந்து உள்ளது. இதைத் தொடர்ந்து, நடப்பு ஆண்டில் திருவாரூர் கிட்டங்கி வளாகம், திருவான்மியூர் கிட்டங்கி வளாகம், காஞ்சிபுரம் கிட்டங்கி வளாகம், தஞ்சாவூர் அம்மாப்பேட்டை கிட்டங்கி வளாகம் போன்ற 4 இடங்களில் தலா ரூ.12.5 இலட்சம் செலவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் கழக நிதியிலிருந்து அமைக்கப்படும்.

### 17. நவீன அரிசி ஆலைகளில் புதிய கொதிகலன்கள் நிறுவுதல்

தற்போது நவீன அரிசி ஆலைகளில் உள்ள இயந்திரங்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றன. அவற்றின் அரவைத் திறனை அதிகப்படுத்தும் வகையில் நாகை மாவட்டம் சித்தர்காடு நவீன அரிசி ஆலையில் ரூ.140 இலட்சம் செலவில் புதிய கொதிகலன்கள் அமைக்கப்பட்டு நவீன அரிசி ஆலை மேம்படுத்தப்படும்.

### 18. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குக் கூடுதல் கிட்டங்கிகள் கட்டுதல்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் பல்வேறு பகுதிகளில் சேமிப்புக் கிட்டங்கிகளை பராமரித்து வருகிறது. ஒரு சில பகுதிகளில்



சேமிப்புக் கிட்டங்கிகளின் தேவைக் கூடுதலாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு 2008-2009 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் 2,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிட்டங்கி ரூ.100 இலட்சம் செலவிலும், கள்ளக்குறிச்சியில் 3,400 மெ.டன் கொள்ளளவுக் கொண்ட கூடுதல் கிட்டங்கி ரூ.115 இலட்சம் செலவிலும், திண்டுக்கல்லில் 2,000 மெ.டன் கொள்ளளவுக் கொண்ட கிட்டங்கி ரூ.77 இலட்சம் செலவிலும் இந்நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து கட்டப்படும்.

### 19. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணி புரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களின் கூலி உயர்வு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளிலும் நவீன அரிசி ஆலைகளிலும் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் 1-11-2005 முதல் 5 சதவீதம் கையாளுதல் கூலி உயர்வு வழங்கி ஆணை இடப்பட்டுள்ளது. தற்போதுள்ள வெளிச்சந்தை கூலி நிலவரத்தைக் கருத்தில் கொண்டு, இத்தகையப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்களின் கூலி 5 சதவீதம் உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 5,000-க்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள் மற்றும் 6,000-க்கும் மேற்பட்ட பருவ கால சுமை தூக்கும் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228405
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை _ 600 079

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.